# அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை

## தொகுதி 1

பதிப்பாசிரியர்கள்
டாக்டர் ஆ. தசரதன்
மொ. மருதமுத்து
மூ. பரிமணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்
# தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை

## தொகுதி 1

பதிப்பாசிரியர்கள்:
டாக்டர் ஆ. தசரதன்
மொ. மருதமுத்து
மு. பரிமணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Aracinar Kiḻttikaic Cuvaṭikaḷ Nūlakat Tamiḻc Cuvaṭikaḷ Viḷakka Aṭṭavaṇai Vol. 1 (A Descriptive Catalogue of the Tamil Manuscripts in the Government Oriental Manuscripts Library, Chennai). |
| Editors | : | Dr. A. Thasarathan<br>M. Maruthamuthu<br>M. Parimanan |
| Publisher | : | International Institute of Tamil Studies |
| First Edition | : | 1998 |
| Publication No. | : | 323 |
| Language | : | Tamil |
| Paper used | : | TNPL 17 kg. Creamove |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 11 points |
| No. of pages | : | xxiv + 476 |
| Price | : | Rs.110/- |
| No. copies | : | 1000 |
| Printed by | : | **Shri Vignesh Prints**<br>158/5, Lake View Road,<br>West Mambalam, Chennai-33.<br>Ph: 4748486 |
| Subject | : | Catalogue of Tamil Manuscripts |

Printed and published with the Financial Assistance from the Government of India, Ministry of Education & Culture, National Archives, Janpath, New Delhi, vide sanction letter F.No.31-1(16)/96 Grants dt.04-03-1997 and copyright vests with the Director, International Institute of Tamil Studiies, Chennai-113.

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113.

# அணிந்துரை

தமிழகத் தலைநகர் சென்னையில், 1968-இல் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது, பேரறிஞர் அண்ணா அவர்களால் உயர்தமிழ் ஆய்வுக்கு வழி வகுக்கும் வகையில் உருவாக்கப்பட்டதே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழக முதல்வராயிருந்த போது 1972-இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தன்னார்வ ஆய்வு நிறுவனமாகப் பதிவு செய்யப்பெற்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழாய்வுகள் பலவகைப்பட்டவை. இலக்கியம், மொழியியல், சமூகவியல், பண்பாட்டியல், அயல்நாட்டுத் தமிழர் இயல் இவற்றுடன் சுவடியியல் ஆய்வும் அடங்கும். தொன்மையான தமிழ் இலக்கியங்களையும், இலக்கணங்களையும், பிற சாத்திரங் களையும் நம் முன்னோர் ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்தனர். அவ்வாறு எழுதப்பெற்ற ஓலைச்சுவடிகளைத் தொகுத்துப் பதிப்பித்து அச்சிட்டு நூல்களாகத் தந்தவர்களுள் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர், சி.வை. தாமோதரம் பிள்ளை, ஆறுமுக நாவலர் முதலியோர் குறிப்பிடத்தக்க முன்னோடியாவர். இவர்களைப் போன்றோரின் முயற்சியால் நீரிலும், நெருப்பிலும், புதைகுழியிலும், புறக்கணிப்பிலும் அழிந்து போய் எஞ்சிய ஓலைச்சுவடிகள் பல நிறுவன நூலகங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஓலைச் சுவடிகளின் பெருமைகளை உலகுக்கு உணர்த்தும் வகையில் 1974 முதல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சுவடியியல் பட்டய வகுப்பைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. சுவடியியல் பட்டய வகுப்பு மாணவர்கள் ஆண்டு இறுதியில் நிறுவனச் சுவடியில் ஒன்றையோ பிற சுவடி நூலகங்களி லுள்ள ஒரு சுவடியையோ பெயர்த்தெழுதி, ஆய்வு செய்து நிறுவனத்திற்கு ஆய்வேடாக வழங்கி வருகின்றனர். இவ்வாய்வு ஏடுகளில் சில இந்நிறுவன வெளியீடாக வந்துள்ளன. மேலும் சுவடிகள் தொடர்பான கருத்தரங்குகளும், பயிலரங்குகளும் இந்நிறுவனத்தில் நடைபெற்று வருகின்றன.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்துடன் இணைந்து திங்கள் தோறும் சுவடியியல் கருத்தரங்கைத் தொடக்க காலத்தில் இந்நிறுவனம் நடத்திவந்தது. அதன்பின்னர் 1980 முதல் சுவடிப் பதிப்புகளை வெளியிடத் தொடங்கியது. இதுவரை 45 சுவடிப் பதிப்புகள் வெளிவந்துள்ளன. இந்நிறுவனத்தில் முனைவர் வே.இரா. மாதவன் அவர்கள் பதிப்பித்த கண் மருத்துவம் என்ற நூலுக்கும், முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்கள் பதிப்பித்த கருவூரார் பல திரட்டு, தடிவீரசுவாமி கதை - வன்னியராயன் கதை ஆகிய சுவடி நூல்பதிப்புகளுக்கும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் சிறந்த நூலுக்கான பரிசுகளை வழங்கியுள்ளது.

சுவடிகளை விளக்க அட்டவணை செய்து வெளியிடும் திட்டப்பணி இந்நிறுவனத்தில் 1983-இல் தொடங்கப் பெற்றது. இத்திட்டத்தின் பயனாகக் கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகள் முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்களால் அட்டவணை செய்யப் பெற்று, 'கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை (முதல்தொகுதி)' என்ற தலைப்பில் 1997-இல் நூலாக வெளிவந்தன. 1989-இல் 'Siddha Medical Manuscripts in Tamil' என்ற நூல் முனைவர் வே.இரா. மாதவன் அவர்களால் பதிப்பிக்கப் பெற்று நிறுவனத்தில் வெளியிடப்பெற்றது.

தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தயாரிக்கும் பணியின் தொடர்ச்சியாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள சுவடிகளைப் பாதுகாக்கவும், அட்டவணைப்படுத்தவும் 1991-இல் முனைவர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் நிறுவன இயக்குநராக இருந்தபோது தில்லியில் உள்ள ஆவணக் காப்பகத்திடமிருந்து ரூ.5,000 பெறப்பட்டது. முனைவர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களும், நிறுவனச் சுவடிகள் விளக்க அட்டவணை செய்யப் பெற வேண்டுமென்று விரும்பிய முன்னாள் இயக்குநர் பொறுப்பிலிருந்த முனைவர் அன்னி தாமசு அவர்களும் பாராட்டுக்குரியவர்கள். இந்நிறுவனச் சுவடிகள் மூன்று தொகுதிகளில் 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை' என்ற தலைப்பில் முனைவர் டி. மகாலட்சுமி அவர்களால் பதிப்பித்து நிறுவனத்தில் வெளியிடப் பெற்றுள்ளன.

1995-96-இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணை தயாரித்து அச்சிட்டு வெளியிடுவதற்குத் தில்லி தேசிய ஆவணக் காப்பகம் ரூ.30,000/- வழங்கியது. அந்நல்கையைத் தொடர்ந்து, 1996-97-இல் அரசினர் கீழ்த்திசைச்

சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகளை விரிவாக விளக்க அட்டவணை செய்து நூலாக அச்சிட்டு வெளியிட ரூ.40,000-ஐ, தில்லி தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது. அதன் பயனாக வெளிவருவதே இந்நூல். மிகவும் குறுகிய காலத்தில் விரிவாக இவ்விளக்க அட்டவணையின் முதல் தொகுதியைப் பதிப்பித்து வெளியிட்ட இதன் பதிப்பாசிரியர்களான முனைவர் ஆ.தசரதன், திரு மொ. மருதமுத்து, திரு மு. பரிமணன் ஆகியோரை மனமுவந்து பாராட்டுகிறேன்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகளை விரிவாக விளக்க அட்டவணை செய்து இந்நிறுவன வெளியீடாக வெளியிடுவதற்கு அனுமதி நல்கிய தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்களுக்கும், பல்லாற்றானும் இவ்வட்டணைப் பதிப்புக்கு உதவிகளை நல்கிய அந்நூலகக் காப்பாட்சியர் அவர்களுக்கும், அந்நூலகப் பணியாளர்களுக்கும் நிறுவனம் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை பதிப்புத் திட்டப்பணிக்கு மிகச் சிறப்பாக வழிகாட்டிய பேராசிரியர் முனைவர் பொற்கோ அவர்களுக்கும், பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு அவர்களுக்கும், பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் என் நன்றி.

இத்திட்டப்பணி தொடங்குவதற்கு அனுமதி அளித்தும் இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டியும் வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும், நிதி நல்கிய தில்லி தேசிய ஆவணக் காப்பகத்தாருக்கும் நன்றி.

இந்த அட்டவணையைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த விக்னேசு அச்சகத்தார்க்கும் நன்றி.

**இயக்குநர்**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | iii-v |
| பதிப்புரை | vii-xxiii |
| சுருக்கக் குறியீட்டு விளக்கம் | xxiv |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை | 1-444 |
| நூற்பெயரகராதி | 445-452 |
| பாட்டு முதல் தொடர் அகராதி | 453-454 |
| பொதுச் சொல் அகராதி | 455-476 |

# பதிப்புரை

தமிழர்கள் பனை ஓலையில் எழுத்தாணியால் எழுத அறிந்து கொண்டதன் காரணமாக, அவர்களின் பாரம்பரியப் பெருமைகளைப் பறைசாற்றும் இலக்கியங்கள், இலக்கணங்கள், நிகண்டுகள், காவியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், நாட்டுப்புறப் பாடல்கள், சோதிடக் குறிப்புகள், மருத்துவ, மாந்திரீகக் குறிப்புகள், யோகஞான தத்துவங்கள், இரசவாத வித்தைகள், வர்மக் கலைகள் போன்றவற்றை ஓலைகளில் எழுதி வைத்தனர். அவ்வாறு எழுதிவைக்கப்பெற்ற ஓலைச்சுவடிகளில் அழிந்தனபோக எஞ்சியவற்றுள் ஒரு பகுதியே நிறுவனங்களிலும் நூலகங்களிலும் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. இன்னும் சேகரிக்கப் பெறாதத் தமிழ்ச் சுவடிகள் பல்லாயிரம் இருப்பது தெரியவருகின்றது.

**சுவடி விளக்க அட்டவணைகள் வரலாறு**

தமிழ்ச் சுவடிகள் ஆய்வில் விழிப்புணர்ச்சி இந்நூற்றாண்டின் எண்பதுகளில்தான் ஏற்பட்டது என்பது மிகையாகாது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உ.வே. சாமிநாதயர் நூலகத்துடன் இணைந்து திங்கள்தோறும் ஓர் ஓலைச்சுவடியை ஆய்வு செய்து, அதை அச்சிட்டு வெளியிட்டது. அதற்கு முன்பே 1956, 1961, 1962, 1977, எனும் ஆண்டுகளில் உ.வே. சாமநாதையர் நூலகத் தமிழ் ஓலைச்சுவடிகள் ஆறு தொகுதிகளில் விளக்க அட்டவணை செய்யப்பெற்று அந்நூலக வெளியீடுகளாக வந்துள்ளன. அதன் பின் தஞ்சை சரசுவதி மகால் நூலகத் தமிழ்ச் சுவடிகளும் விளக்க அட்டவணை பெறத்தொடங்கின. கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் அட்டவணை செய்யப்பட்டன. இதே காலகட்டத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடிகளும் விளக்க அட்டவணை செய்யப் பெற்றுத் தொடர்ந்து அப்பணி நடந்து வருகின்றது. கல்கத்தா தேசிய நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளும், பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடத்துச் சுவடிகளும் அட்டவணை செய்யப்பெற்றன. ஆசியவியல் நிறுவனம் அந்நிறுவனச் சுவடிகளையும், உ.வே.சாமிநாதையர் நூலகத் தமிழ்ச் சுவடிகளையும், திருவாவடுதுறை ஆதீனச்

சுவடிகளையும், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தின் மருத்துவச் சுவடிகளையும் அட்டவணை செய்து ஆங்கிலத்தில் வெளியிட்டு வருகிறது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகளும் மூன்று தொகுகளில் அட்டவணைகளாக வந்துள்ளன. அண்மையில் அடையாறு நூலகச் சுவடிகளும் அட்டவணை செய்யப்பெற்றுள்ளன. இவ்வாறு நூலகங் களிலும் நிறுவனங்களிலுமுள்ள தமிழ்ச் சுவடிகள் அட்டவணை செய்யப்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

வெளிநாடுகளிலுள்ள தமிழ்ச் சுவடிகள், அந்நாட்டவர் களாலும், பேராசிரியர் அ. கிருட்டிணமூர்த்தி அவர்களாலும் தொகுக்கப் பெற்றன. பேராசிரியர் அ. கிருட்டிணமூர்த்தி அவர்கள் ஏறத்தாழ மூவாயிரம் சுவடிகளைக் கண்டறிந்து ஐந்து தொகுதிகளாகப் பகுத்து வைத்துள்ளார். மேலும் சில தன்னார்வ அமைப்புகளும் தனியார்களும் தமிழ்ச் சுவடிகளைத் தொகுத்து வைத்துள்ளமையும் தெரிய வருகிறது. தமிழ்ச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணை தயாரிக்கும் முயற்சிகள் அனைத்துக்கும் முன்னோடியாகச் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணைப் பணிகள் ஏற்பட்டுவிட்டன. 1912 ஆம் ஆண்டிலேயே அந்நிறுவனத் தமிழ்ச் சுவடிகள் சில அட்டவணை செய்யப்பெற்று முதல் தொகுதியாக வெளியிடப் பெற்றன.

**அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடிகள் அட்டவணைப் பணிகள்**

கர்னல் மெக்கன்சியாலும், டாக்டர் லெயிடன், வில்சன், சி.பி.பிரௌன் போன்ற அதிகாரிகளாலும் சேகரிக்கப்பெற்ற சுவடிகள் 'சுவடிகள் நூலகமாக' 1870-ல் மாநிலக் கல்லூரியில் முதலில் இடம் பெற்று, பின்பு 1939 இல் சென்னைப் பல்கலைக் கழக நூலக வளாகத்தில் தற்போதுள்ள பெயரில் அமைந்துள்ளன. காலந்தோறும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திற்குச் சுவடிகள் வந்த வண்ணமிருப்ப தாலும், அந்நூலகம் 1980க்குப் பின் இருக்கும் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழ் வருவதால் அத்துறையில் பணியாற்றும் மாவட்ட அலுவலர்கள்

சேகரிக்கும் சுவடிகளும் இந்நூலகத்திற்கு அனுப்பப் பெறுவதாலும் வேறு எங்கும் இடம் பெறாத அளவுக்கு அதிகமான சுவடிகளை இந்நூலகம் பெற்றுள்ளது. இங்குள்ள 16,500க்கு அதிகமான தமிழ்ச் சுவடிகளில் சில சுவடிகள் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் கி.பி.1911க்கு முன்பு அந்நூலகத்திற்கு வந்தடைந்த தமிழ்ச்சுவடிகள் அட்டவணை செய்யப் பெற்று "A Decriptive Catalogue of Tamil Manuscripts in the Government Oriental Manuscripts" என்ற பெயரில் வெளியிடப்பட்டன. இவ்வாறு பதினொரு தொகுதிகள் வெளியிடப் பெற்றுள்ளன. கி.பி.1911க்குப் பிறகு 1959 வரையில் அந்நூலகத்திற்கு வந்தடைந்த ஓலைச் சுவடிகள் A Triennial Catalogue of Manuscripts (மூவருட சுவடிவிளக்க அட்டவணை) என்ற தலைப்பில் 13 தொகுதிகள் வெளிவந்தன. அதன்பிறகு தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை எனப் பெயர் பெற்று வெளியிடப் பெற்று வருகின்றன. இவ்வாறு இதுவரை 30 தொகுதிகள் அட்டவணை நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. சுவடிகள் உள்ள பல நூலகங்களிலும் பல நிறுவனங்களிலும் சுவடி விளக்க அட்டவணைகள் வெளியிடப் பெற்றிருப்பதால் அவ்வட்டவணைகளின் அமைப்பினை அறிந்து கொள்வது தேவையாகின்றது.

### அ.கீ.சு.நூலகத்தில் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை அமைப்பு

வடமொழி இடம்பெறும் சுவடிகளின் விளக்க அட்டவணைகளின் அமைப்பிலேயே தமிழ்ச் சுவடிகளின் விளக்க அட்டவணைகளும் அமைந்துள்ளன என அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணையின் முகவுரை தெரிவிக்கின்றது.

> "It has been prepared mainly on the lines of the Sanskrit descriptive catalogue. To a brief description of the manuscript containing the work under notice is added a very brief indication of the nature of the subject dealt with in the work, and extracts from the work itself are given to enable one to obtain an idea of its nature, style and value. In order to make the

*catalogue useful even to those who have not much knowledge of English, a brief description of every work in Tamil is also given after the extracts"*

**(Preface: p.iii, A Descriptive Catalogue of Tamil manuscripts in the G.O.M.L. Vol.I. 1912).**

தொடக்க காலத்தில் மேற்காணுமாறு கூறியிருந்தாலும் அதற்கடுத்த காலகட்டங்களில் வெளியிடப்பெற்ற அட்ட வணைகள் அனைத்தையும் வைத்துப் பார்க்கும்பொழுது கீழ்க்காணும் பொது அமைப்பு காணப்படுகிறது.

## பொருள்வகைப் பாகுபாடு/தொடர்ச்சியாக

### D. எண்/R.எண்

### தலைப்பு

**(தலைப்பு தமிழிலும் ஆங்கில எழுத்திலும்)**

1. substance
2. size
3. pages
4. lines
5. character
6. condition
7. appearance
   complete
   summary
   beginning
   ending
8. குறிப்பு

**அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணையின் சிறப்புக்கள்** .

நூல் தலைப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும், உரோமன் எழுத்துப் பெயர்ப்பிலும் விளக்கங்கள் அமைந்துள்ளதும், சுவடி யாரிடமிருந்து எக்காலத்தில் வாங்கப்பட்டது என்ற குறிப்பும், பல தொடக்கப் பாடல்களும், முடிவுப் பாடல்களும் ஒன்றுக்கு மேலாக எழுதப்பட்டிருப்பதும், குறிப்பு என்ற பகுதியில் மாற்றுச் சுவடிகள் அந்நூலகத்திலிருந்தால் அதன்

விவரமும், சுவடிக் குறிப்பும் (Colophon), பல நூல்கள் ஒரு சுவடிக் கட்டில் இருந்தால் அவற்றின் பெயர்களும், அவை இடம் பெறும் இதழ்களின் எண்ணிக்கை, பக்க எண்கள், ஆங்கிலத்தில் குறிப்புகள் என இந்நூலகச் சுவடி விளக்க அட்டவணைகள் அமைந்துள்ளன. இவ்வட்ட வணைகளில் குறிப்பிடப்பெறும் 'D'எண்கள் கி.பி.1912 முதல் வெளியிடப் பெற்ற பதினொரு தொகுதிகளிலுள்ள தமிழ்ச் சுவடிகளைக் குறிக்கும் தொடர் எண்களாகும். அதைப்போன்று "R' எண்கள் மூவருட சுவடி விளக்க அட்டவணை (Triennial catalogue) யில் வரும் தமிழ்ச் சுவடிகளின் எண்களாகும். ஆயினும் அண்மைக்காலத்திலிருந்து வெளிவரும் அட்டவணைகளில் D, R வேறுபாடின்றித் தொடர் எண்கள் பெற்றுச் சுவடிகள் வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வட்டவணைகள் பெரும் பாலும் ஒரே கட்டமைப்புப் பெற்று இராயல் அளவில் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் நூற்பெயர்களின் அகரவரிசைகளை உரோமன் எழுத்துப் பெயர்ப்பில் இட்டிருப்பதும், அட்டவணையில் எழுத்தாளப் பெற்றுள்ள சுவடிகளிலும் விளக்கங்களிலுமுள்ள ஆசிரியர் பெயர் அகராதி, பொருளகராதி அல்லது பொது அகராதி (General Index_) போன்றவற்றை அமைத்திருப்பது அவ்வட்டவணை யின் சிறப்பைப் பறைச் சாற்றுகின்றது.

**தஞ்சை சரசுவதி மகால் நூலகச் சுவடி விளக்க அட்டவணைகள்**

தஞ்சையிலிருந்து மராட்டிய அரச பரம்பரையினர் தொகுத்த பல அரிய பொருள்களில் ஓலைச்சுவடிகளும் குறிப்பிடத் தக்கன. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலிருக்கும் தமிழ்ச் சுவடிகள் பெரும்பாலும் அட்டவணை செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறு அட்டவணை செய்யப்பெற்ற ஏறத்தாழ 1500க்கு மேலான தமிழ்ச் சுவடிகளில் மருத்துவச் சுவடிகளே அதிகமானவை. இருவேறு கட்டமைப்பில் வெளியிடப்பெற்ற இந்நூலக அட்டவணைகளில் கீழ்க்காணு மாறு சுவடிகள் விளக்கம் பெறுகின்றன.

சுவடி எண் :

சுவடித் தலைப்பு :

ஏடுகளின் எண்ணிக்கை :

பக்க வரிகள் :
சுவடி நிலைமை :
முன்னுரை (நூற்செய்தி) :
நூல் தொடக்கம் :
நூல் முடிவு :
Colophon :
குறிப்பு :

இந்நூலகம் தொடர்ந்து சுவடி விளக்க அட்டவணைகளை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**உ.வே. சாமிநாதையர் நூலகச் சுவடி விளக்க அட்டவணை அமைப்பு**

ஏறத்தாழ 2400 தமிழ்ச் சுவடிகளுள்ள உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் வெளியிடப்பெற்றுள்ள அட்டவணைகளில் சுவடிகள் கீழ்க்காணுமாறு விளக்கம் பெற்றுள்ளன.

வரிசை எண் :
தலைப்பு :
(அ) தமிழில் :
(ஆ) உரோமன் எழுத்தில் :
சுவடி எண் :
அளவு :
பக்கம் :
வரி :
நிலை :
தோற்றம் :
பூர்த்தி/அபூர்த்தி :

உ.வே. சாமிநாதையர் நூலகத் தமிழ்ச் சுவடிகள் ஆசியவியல் நிறுவனத்தால் அட்டவணை செய்யப்பெற்று ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன.

**தமிழ்ப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை அமைப்பு**

ஏறத்தாழ 5000 க்கு மேலான சுவடிகளைக் குறுகிய காலத்தில் சேகரித்த தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆறு தொகுதிகள், தொகுதிக்கு 500 சுவடிகள் வீதம் தமிழ்ச் சுவடி

விளக்க அட்டவணைகளை வெளியிட்டுள்ளது. இவ்வட்ட வணையின் அமைப்பு கீழ்க்காணுமாறு உள்ளது.

> *''சுவடி விளக்க அட்டவணைத் தொகுதிகள் ஆசிரியர் வகையினாலோ, நூல் பொருள் வகையினாலோ, காலவகையினாலோ முறை யாக்கப் பெற்றனவல்ல. நூலக வரிசை எண்ணில் அமைந்த வரிசை முறையிலேயே அடைவு செய்யப் பெற்றுள்ளன. பல்வேறு ஆசிரியர்களின் நூல்கள், பல்வேறு பொருளைச் சார்ந்த நூல்கள், பல்வேறு காலத்தில் மலர்ந்த நூல்கள் என இதன்கண் பலதரப்பட்ட நூல்கள் இடம் பெற்றுள்ளன....இது போன்றே இன்னும் பல தொகுதிகள் வெளிவந்த பின்பு ஆசிரியர் வாரியாகப் பொருள்வாரியாக நூல்கள் அடைவு செய்யப்பெற்றுத் தொகுதிகளாக வெளியிடப் பெறுதல் தகும். இப்போதைய தொடக்க நிலையில் இம்முயற்சியே போதுமெனக் கருதப்பெற்றமையும் ஈண்டுக் குறிக்கத் தகுவதாகும்.'' (பதிப்புரை: பக்.5)*

தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ச் சுவடிவிளக்க அட்டவணை முதல் தொகுதியின் முகவுரையில் (அமரர்) மு. சண்முகம் பிள்ளை பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

> *''...சுவடிகள் ஒவ்வொன்றையும் பற்றிய விரிவான செய்திகள் தரப்பட்டால்தான் குறித்ததொரு நூல் பற்றிய விவரங்கள் தெரிய இயலும்.... சுவடிகளைப் பெயரளவில் அறிவிப்பது சுவடிப்பெயர் அட்டவணையாகும். பெயரை மட்டும் கொண்டு ஒரு நூலை அளவிட்டுவிட முடியாது. நூலின் உள்ளடக்கமும் நன்கு தெளிவுற விரிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும். சுவடி விளக்க அட்டவணையில் நூலாசிரியர் பெயர், நூற் பெயர், சுவடியின் அமைப்பும் அதன் நிலையும், நூலின் தொடக்கம் முடிவு பற்றிய குறிப்புகள், நூலைப் பற்றி ஏடெழுதியோர் எழுதிய சிறப்புச் செய்திகள், அச் சுவடி பற்றிய பிற செய்திகள் முதலியன*

*எல்லாம் அமைதல் வேண்டும்.... இந்தச் சுவடி விளக்க அட்டவணை ஏனையோர் வெளியிட்ட செய்திகளை விடவும் அதிகமான செய்திகள் கொண்டதாயும், பார்ப்பவர்க்கு அவை தெளிவுறத் தெரியும் வகையிலும் வகைப்படுத்தி ஆக்கப் பெற்றுள்ளது. இந்தச் சுவடி விளக்க அட்டவணை ஏழு பொதுக் கூறுகளாகப் பகுத்து விவரங்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. அவையாவன: 1. நூலகக் குறிப்புகள்; 2. உள்ளீடு அதாவது நூல் விவரம்; 3. சுவடியின் தோற்றக் கூறுகள்; 4. சிறப்புச் செய்திகள்; 5. பிற செய்திகள்; 6. மாற்றுச் சுவடிகள் காணும் இடம்; 7. வெளியீட்டுச் செய்திகள்.''*

*(பக். xxxii - xxxiii, மேற்படி நூல்)*

**தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை அமைப்பு**

**மாதிரிப்படிவம்**

1. நூலகக் குறிப்புகள்
   - அ. தொடர் எண் :
   - ஆ. பொருப்பகுப்பு எண் :
2. உள்ளீடு: நூல் விபரம்
   - அ. நூலாசிரியர் :
   - ஆ. நூற் பெயர் :
   - இ. பொருள் :
   - ஈ. வடிவமும் அளவும் :
3. தோற்றக் கூறுகள்
   - அ. ஏடுகளின் எண்ணிக்கை :
   - ஆ. ஏடுகளின் நீளம், அகலம் :
   - இ. இருபக்கமும் எழுதப்பட்டுள்ளதா? :
   - ஈ. பக்கத்திற்கு எழுதப்பட்ட வரி :
   - உ. எழுத்து நிலை :
   - ஊ. சுவடியின் நிலைமை :
   - எ. முழுமையா அல்லது குறையா? :

4. சிறப்புச் செய்திகள்

அ. நூலின் தொடக்கம் :

ஆ. நூலின் முடிவு :

இ. சுவடி பற்றிய குறிப்புகள் :

முற்குறிப்பு :

பிற்குறிப்பு :

5. பிற செய்திகள் :

6. மாற்றுச் சுவடிகள் காணுமிடம் :

7. வெளியீட்டுச் செய்திகள்

குறிப்பு :

தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணைகள் விரிவான அமைப்பைப் பெற்றிருப் பினும் சுவடிப் பொருள் (summary) இடம் பெறாதிருப்பது ஏமாற்றமளிக்கிறது.

**கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை அமைப்பு**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பதிப்பித்து வெளியிட் டுள்ள கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணையில் கீழ்க்காணும் அமைப்பு உள்ளது.

எண் :

தலைப்பு :

பொருள் :

அளவு :

நிலை :

இதழ்கள் :

செய்யுள் எண்ணிக்கை :

குறிப்பு :

தொடக்கம் :

முடிவு :

குறிப்பு :

(அ) ஆங்கிலத்தில்

(ஆ) தமிழில்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை அமைப்பு**

அண்மையில் வெளிவந்த இவ்வட்டவணை கீழ்க்காணுமாறு அமைந்துள்ளது.

## மாதிரிப் படிவம்
## (பொருள் அடிப்படைப் பாகுபாடு)

### I. நூற்பெயர்: (வரிசை எண்ணுடன்)

அ. கட்டு எண் + நூல் எண்
ஆ. ஏடுகளின் எண்ணிக்கை
இ. அளவு
ஈ. வரிகள்
உ. சுவடியின் நிலை
ஊ. கையெழுத்தின் தன்மை
எ. சுவடி முழுமை / குறைவு
ஏ. அச்சான விவரம்
முற்குறிப்பு (இருப்பின் மட்டும்) (Colophon)
தொடக்கம் (காப்பு + நூலின் முதல்பாட்டு)
முடிவு (இறுதிப்பாடல்)
பிற்குறிப்பு (இருப்பின் மட்டும்) (Colophon)

### II. குறிப்புரை

1. நூற்பெயர் (சுவடியில் உள்ள வடிவம்)
2. செய்யுட்களின் எண்ணிக்கை
3. செய்யுளா? உரைநடையா? இரண்டும் கலந்ததா?
4. நூலின் சிறப்பு/நூலின் சுருக்கம்
5. நூலின் உட்தலைப்புகள்
6. நூற்செய்தியைக் கொண்டமைந்த உட்தலைப்புகள்
7. குறிப்பிட்ட ஒரு நூல் இவ்வட்டவணையில் வேறு இடங்களில் இடம் பெற்றிருப்பின் அதனைச் சுட்டுதல்

8. குறிப்பிட்ட அந்நூல் பிற அட்டவணைகளில் இடம் பெற்றிருப்பின் ஓரளவு சுட்டுதல்
9. அந்நூலை இவ்வட்டவணையிலுள்ள பிற நூல் களுடனும், வேறு அட்டவணைகளிலுள்ள நூல்களுட னும் ஒப்பிட்டு அது தொடர்பான சில ஆய்வுச் சிந்தனைகளைத் தருதல்.
10. மாற்றுச் சுவடிகள் உள்ள வேறு இடங்கள்
11. அச்சான நூல்களின் விபரம்
12. குறிப்பிட்ட நூல் தலைப்பை ஒட்டி வெளிவந்துள்ள அச்சு நூல் விபரம்
13. சுவடிப்பட்டய ஆய்வேடாக அளிக்கப்பெற்றிருப் பின் அதனையும், ஆய்வேடு நூலாக வந்திருப்பின் அதனையும் சுட்டுதல்.
14. நூலாசிரியர்
15. நூலாசிரியர் காலம்
16. நூலாசிரியரின் பிறநூல்கள்

**ஆசியவியல் நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை அமைப்பு**

ஆசியவியல் நிறுவனம் பிற நிறுவனங்கள், நூலகங்களி லுள்ள தமிழ்ச் சுவடிகளை அட்டவணை செய்து ஆங்கிலத்தில் வெளியிடுவதோடு அந்நிறுவனத்திலுமுள்ள தமிழ்ச் சுவடிகளையும் அட்டவணைப் படுத்தியுள்ளது. அவ்வட்டணை களின் மாதிரிப் படிவம் வருமாறு:

I. **Material Description**

1. Title : (Both in Roman Script and Tamil)
2. Author :
3. Whether the authorship is ascribed: or real
4. Comentator and his date (if it contains commentary) :
5. Script
6. Date of composition :

7. Whether desipherable :
8. Total no. of leaves :
9. No. of lines to each leaf :
10. Size of the manuscript (in cm) :
11. Complete/Incomplete
12. Physical condition :
13. Missing leaves or portions (beginning/end/intermittent) :
14. Plate where preserved (Institution/individual) :
15. Accession No.
16. If it is a copy, date of copying :
17. Name & nativity of the scribe/copyist :
18. Variant readings, if any :
19. Medium (Prose/verse/prictorial) :
20. No. of verses/chapters/pictures :

**II. Bibliographical Data**

1. Whether this mss is published. If yes,

a. Name of the editor

b. Place of publication publisher and date

c. Important eiditions If No.,

a. Whether a different version of this work is published

b. If so, whether this mss is consulted in that publication :

2. Whether it exists in any other form :

**III. Subject Description**

1. Subject of the text :
2. Genre :
3. Linguistic Peculiarities/style :
4. Whether original/adaptation/translation :
5. Historical/Social/literary importance if any :
6. Summary/abstract of the text :
7. Beginning (lines) :
8. Ending (lines) :
9. Colophon :

10. Place from where the mss is collected :
11. Name of the person from whom it is collected :

IV. Additional Information, If any :

ஆசியவியல் நிறுவனம் இவ்வாறு நான்கு பெரும் பகுதிகளில் சுவடி விளக்கத்தைக் கொடுத்திருந்தாலும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தமிழ்ச் சுவடி அட்டவணையில் இடம் பெறுவதைப் போல மாற்றுச் சுவடிகள் உள்ள விவரம் கொடுக்கப் பெறாதிருப்பது தெரிய வருகிறது.

## அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை அமைப்பு

நிறுவன நூலகங்களில் பாதுகாத்து வைக்கப்பெற்றிருக்கும் தமிழ்ச் சுவடிகள் மிக அதிக அளவில் இருப்பது அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் தான். இந்நூலகம் ஏறக்குறைய தொன்னூறு ஆண்டுகளில் வெளியிட்டுள்ள சுவடிகள் விளக்க அட்டவணைகளில் பல தொகுதிகள் இன்று கையிருப்பில் இல்லை. சுவடி விளக்க அட்டவணை தயாரிப்பில் அண்மையில் ஏற்பட்டுள் விரிந்த ஆய்வின் காரணமாக அச் சுவடிகள் தொடர்புடைய பல செய்திகளை யும் ஒருங்கே கொடுக்க வேண்டுமென்ற காரணத்தாலும், ஏற்கனவே அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் அட்டவணை செய்யப்பட்ட தமிழ்ச் சுவடிகளுக்கு விரிந்த அளவில் சுவடிவிளக்க அட்டவணை தயாரிக்கும் திட்டப்பணி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கப்பட்டது. இப்பணிக்காகச் சுவடிகள் விளக்க அட்டவணை மாதிரிப்படிவம் கீழ்வருமாறு தயாரிக்கப்பட்டது.

### மாதிரிப் படிவம்

I. சுவடி பற்றிய பொதுச் செய்திகள்

1. வரிசை எண் :
2. (அ) சுவடி எண் :
   (ஆ) சுவடிக் கட்டு எண் :
   (இ) புத்தாக்கத் தாள் சுவடி எண் :
   (ஈ) தாள் சுவடி எண் :
3. தலைப்பு :
   (அ) தமிழில் :
   (ஆ) உரோமன் எழுத்துப் பெயர்ப்பில்
   (இ) சுவடியில் உள்ள தலைப்பு

4. நூலாசிரியர் :
5. காலம் :
6. படியெடுத்தவர் :
   (அ) இடம் :
   (ஆ) காலம் :
7. உரையாசிரியர்
   (அ) இடம்
   (ஆ) காலம்
8. சுவடி உள்ள நிறுவனம் / நூலகம் :
9. சுவடியை வழங்கியவர் :
10. சுவடியைப் பெற்றுக் கொண்டவர்
   (அ) இடம் :
   (ஆ) காலம் :

**II. சுவடி அமைப்பு**

**அ. ஓலைச் சுவடி அமைப்பு**

1. தனிக் கட்டு / உட்கட்டு / தனி இதழ் :
2. மொழி: தமிழ் / கிரந்தம் / பிறமொழி :
3. எழுத்து நிலை :
4. இதழ்களின் எண்ணிக்கை :
5. அளவு :
6. துளை விவரம் :
7. சுவடிக் கட்டுமானம் :
   மூக்கு / கயிறு / நாராசம்
8. சுவடிக் கட்டை :
9. ஓலையின் வகை :
10. நரம்பு உள்ளது / இல்லாதது :
11. சுவடி நிலை நன்று / சிதைவு / நொறுங்கியது :
12. பக்கம் (பக்கங்களில் எழுத்துக்களின் நிலை) :
ஒரு பக்கத்தில் எழுதப்பட்டுள்ளதா?
இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளதா?
13. வரிகள் / பத்திகள் .
14. பா நடை / உரைநடை / பிற :
15. ஓலைகள் விடுபாடு :
   முதல் / நடு / இறுதி
16. நூல் முழுமை / குறை
17. மொத்த வரிகள் / பாடல்கள் / வேறு:

**ஆ. தாள் சுவடி அமைப்பு**

1. அளவு
2. பக்கங்கள்
3. வரிகள்

4. எழுத்து நிலை
5. படி எடுத்த நாள்
6. படி எடுத்தவர் பெயர்
7. திருத்தம் செய்யப்பட்ட விவரம்
8. புத்தாக்கம் செய்யப்பட்ட விவரம் (Restored)

III. **நூல் அமைப்பு**

1. நூல் பொருண்மைப் பிரிவு
2. இலக்கிய வகை
3. நூற் செய்தி
4. ஏட்டின் தொடக்கம்
5. நூல் தொடக்கம்
6. நூல் முடிவு
7. ஏட்டின் முடிவு
8. மூலம்/தழுவல்/மொழிபெயர்ப்பு
9. மொழிநடை
10. இலக்கிய/சமூக/வரலாற்றுச் சிறப்புச் செய்திகள்
11. சுவடிக் குறிப்பு (Colophon)

IV. **மாற்றுச் சுவடிகள்/வேறு படிகள்** (Variations)

1. இந்நூலகத்தில் மாற்றுச் சுவடிகள்
2. பிறநூலகங்கள்/நிறுவனங்களில் உள்ள மாற்றுச் சுவடிகள்
3. சார்புச் சுவடிகள்

V. **அச்சிட்ட விவரம்**

1. இந்தச் சுவடி அச்சிடப் பெற்ற விவரம்
2. வேறு பதிப்புகள் விவரம்
3. இந்தச்சுவடி அச்சிற்குப் பயன்பட்ட விவரம்

VI. **சிறப்புச் செய்திகள்**

இதில் ஆறுபெரும் பகுதிகளில் சுவடி விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. முதலாவதாக அமையும் சுவடி பற்றிய பொதுச் செய்திகள் என்ற பிரிவில் 10 பொருள்களில் செய்திகள் அமைக்கப்பெற்றுள்ளன. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக D எண்கள் பெற்ற சுவடிகள், R எண்கள் பெற்ற சுவடிகள், சில புத்தாக்கத் தாள்சுவடிகள், ஓலைச் சுவடிகளாக அல்லாது தாள்சுவடிகளாகவும் இடம்பெறுபவை என நான்கு வகையான சுவடிகள் இருப்பதால் 4 வகையான எண்கள் தரப்பெற்றுள்ளன. சுவடிகளின் நூற்தலைப்புகள் தமிழிலும் உரோமன் எழுத்துப் பெயர்ப்பிலும் இடம்

பெறுவதோடன்றிச் சுவடியில் முதலிலும் இறுதியிலும் தலைப்புகள் ஏதாவது எழுதப் பெற்றிருந்தால் அவை அவ்வாறே இவ் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. படியெடுத்தவர் பெயர், காலம், இடம் ஆகியவை சுவடிக்குறிப்பில் (Colophon) இருக்கின்றவாறு இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ளன. இவ் அட்டவணையில் இடம்பெறும் எல்லாத் தமிழ்ச் சுவடிகளும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளனவாதலாலும் அச்சுவடியிலேயோ அந் நூலகச் சுவடிகள் விளக்க அட்டவணைகளிலேயோ சுவடிக்குரியவர், இடம் அதை இந் நூலகத்திற்காகப் பெற்றுக் கொண்ட காலம் இருந்தால் அவையும் இவ்வட்டவணையில் இடம் பெறும்.

சுவடி அமைப்பு என்ற இரண்டாவது பகுதியில் ஓலைச் சுவடி, தாள் சுவடி, புத்தாக்கத் தாள் சுவடி (Restored) ஆகியவற்றின் புற அமைப்புகள் 17/8 உட்பிரிவுகளில் தரப்பெற்றிருக்கின்றன.

மூன்றாவதாக அமையும் நூல் அமைப்பு என்ற பிரிவில் பதினொரு பகுதிகளில் நூலின் உள்ளமைப்புகள் விளக்கப் பட்டுள்ளன. மாற்றுச் சுவடிகள், வேறுபடிகள் என்ற நான்காவது பிரிவில் எடுத்துக் கொண்ட சுவடியின் மாற்றுச் சுவடிகள் இந்நூலகத்தில் இருப்பின் அவற்றின் விவரமும், பிற நூலகங்களில் இருப்பின் அவற்றின் விவரமும் தெரிந்த அளவிற்குக் கொடுக்கப்பெற்றுள்ளன.

அச்சிட்ட விவரம் என்ற ஐந்தாவது பிரிவில் தெரிந்த அளவிற்குச் சுவடியின் பதிப்பு விவரம் தரப்பட்டுள்ளது.

இறுதியாக உள்ள சிறப்புச் செய்திகள் என்ற பிரிவில் எடுத்துக் கொண்ட சுவடி தொடர்பான நூற்செய்திகள், நூற் தலைப்புகள், அதனுடன் சேர்ந்துள்ள சுவடிகளின் பெயர்கள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

இவ்வாறு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளைப் பார்த்து மேற்காணும் விவரங்கள் இவ் அட்டவணையில் தெரிந்த அளவிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை செய்முறை விளக்கம்**

இங்கு வெளியிடப்படும் முதல் தொகுதியில் 255 சுவடிகளின் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இச்சுவடிகளின் முறைவைப்பில் ஒரு புதிய முறை அறிமுகப்படுத்தப்

பெற்றுள்ளது. சுவடி நூற்பொருள் அடிப்படையிலும் அவ்வப்போது கிடைக்கும் சுவடிகளின் தொடர்ச்சி அடிப்படையிலும் விளக்க அட்டவணைகள் இந்நூலகத்தில் தயாரிக்கப் பெற்றுள்ள நிலையிலிருந்து சற்று மாறுபட்டு, நூற்பெயர் அகரவரிசை அடிப்படையில் சுவடிகள் முறைவைக்கப் பெற்றுள்ளன. அதிலும் பாட்டு முதல் தொடர் அடிப்படையிலும், பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் நூல்கள் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. இவ்வாறு அகர வரிசையில் அமையும் சுவடிகள் அனைத்தும் அகத்தியர் பெயரிலேயே அமைந்தவை. அகத்தியராலேயே பாடப் பெற்றவை என இச்சுவடிகளைப் பாடிவைத்தோர் நம்புகின்றனர்.

இந்நூல்கள் பெரும்பாலும் வாதம், வைத்தியம், ஞானம் எனும் முப்பெரும் பிரிவுகளில் அடங்குவதாகத் தெரிகின்றது. இரசவாதத்திற்குரிய பொருள்கள் (கருக்குருக்கள், முப்பு, வழலை போன்றன), மருந்துப் பொருள்கள், மருந்து தயாரிப்பு தொடர்புடையன, சித்தர் தத்துவக் கொள்கைகளில் யோகம் ஞானம் பற்றியவை இம்முதல் தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

நூற்பெயரகராதி, பொதுச்சொல் அகராதி எனும் இணைப்புகள் அந்நூலக அட்டவணைகளில் இடம் பெற்றதைப் போன்றே இங்கும் இடம்பெற்றிருக்கின்றன.

**நன்றியுரை**

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச்சுவடிகள் விளக்க அட்டவணை தயாரிப்புத் திட்டப்பணியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கி, அப்பணிக்காக மத்திய அரசின் நல்கையைப் பெற்று, அத்திட்டப்பணி தொடங்கு வதற்காக நிறுவனத் தலைவரின் அனுமதியையும் பெற்று எங்களை இப்பணியில் ஈடுபடுத்திய நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றிக் கடப்பாடுடையோம். ஓலைச் சுவடிகளைப் பார்வையிடத் தந்தும், பல ஆக்க பூர்வமான கருத்துக்களை நல்கியும் எங்களுக்கு உதவிபுரிந்த அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகக் காப்பாட்சியர் முனைவர் சு. சௌந்தர பாண்டியன் அவர்களுக்கும், அந்நூலக அனைத்து நண்பர்களுக்கும் எங்கள் நன்றி. இத் திட்டப்பணியின் போது எங்களுக்கு அனைத்து வகையிலும் உதவி புரிந்த நிறுவன நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

**பதிப்பாசிரியர்கள்**

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அ.கீ.சு.நூ. | - | அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் |
| ஆ.நி. | - | ஆசியவியல் நிறுவனம் |
| உ.த.நி. | - | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் |
| சி.ம.மை.ஆ.நி. | - | சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம் |
| த.ச.ம.நூ. | - | தஞ்சை சரசுவதி மகால் நூலகம் |
| த.ப.க. | - | தமிழ்ப் பல்கலைக் கழகம் |
| தி.ஆ. | - | திருவாவடுதுறை ஆதீனம் |
| இ.R.No. | - | புத்தாக்கத் தாள் சுவடி எண் |
| ஈ.R.No. | - | தாள் சுவடி எண் |
| D. | - | (Manuscript No. in the Descriptive Catalogues of the Tamil Manuscripts in the Government Oriental Manuscripts Library, Chennai.) |
| R. | - | மூவருட விளக்க அட்டவணைகளில் சுவடி எண் (Manuscript No. in the Triennial Catalogues of Manuscripts in the Government Oriental Manuscripts Library, Chennai.) |
| T.D. | - | தமிழ்ச் சுவடிகள் கட்டு எண் |
| T.R. | - | தமிழ்ச் சுவடிகள் கட்டு எண் |
| —. | - | இல்லை |
| (பதி.) | - | பதிப்பு |

# அகத்தியர் 1

I. *1.* **1.** *2.* அ. R. 6214(a). ஆ. T.R. 2627. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சூத்திரம் *1.* ஆ. Akattiyar cūttiram 1. இ. அகஸ்த்தியர் சூஸ்திரம்*1. 4.*—. *5.*—. *6.*—. *7.*—. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-*5. 9.*—. *10.*—.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 1. 5.* 30 x 3 செ. மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* நன்று. *12. 1;* ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட்டுள்ளது. *13. 4* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 1* பாடல்.

ஆ. —.

III. *1.* செந்தூரம் செய்முறை பற்றிக் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* இதில் முதலாவதாகக் கலை வாணியை வணங்கி நாதம், இரசம், மனோசிலை, காரம், சாரம், சீனம், சாதிலிங்கம் இந்த ஏழு சரக்கையும் ஒன்றாய்க் கலந்து இரவியில் (சூரியனில்) உலரவைத்துக் கல்வத்தில் போட்டு ஆட்டி வில்லைதட்டிப் புடம் போடச் செந்தூரம் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

*4.* ஹரி ஓம் நன்றாக.

*5.&6.* ஆதிமுத லானகலைவாணி பாதம்
அனவரத கலியாணி சமைந்த நாதஞ்
சோதிரசந் தாரஞ்சிலை கார சாரந்
துலங்கவே சீனமொடு சாதி லிங்கம்
நீதியுட னேழுசரக் கதனிற் போட்டு
நீதிரவி உலரவைத்துக் கல்வத் தாட்டு
போதியுற வில்லைதட்டிப் புடத்திற் போடப்
பொருமியதுசெந் தூரம்செம்பில் தோன்று முத்தே.1

*7.* முற்றும்.

*8.* மூலம். *9.* பாட்டு எளிமையாகப் பாடப்பெற்றுள்ளது. முற்றே என்பது 'முத்தே' என வந்துள்ளது. *10.* அகத்தியர் சூத்திரம் ஒன்று என்ற இந்நூலில் ஓர் எண் சீர் விருத்தப் பாட்டு உள்ளது. *11.* இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. ஒரு பாடல் இவ்வாறு ஒரே நூலாகச் சுவடியில் கிடைப்பது அ.கீ.சு. நூலகத்தில் மட்டும்தான் என்பது தெரியவருகின்றது. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 2 R. 6214(b), அகத்தியர் சூத்திரம் 3 R. 6214(c), அகத்தியர் சூத்திரம் 4 R. 6214(d) முதலிய பல நூல்கள் அமைந்துள்ளன.

## அகத்தியர் 1

I. 1. **2.** 2. அ. R. 3630. ஆ. T.R. 1782. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 1. ஆ. Akattiyar cūttiram 1. இ. அகஸ்தியர் சூஸ்திரம் ஒன்று. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 20 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 1; ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட்டுள்ளது. 13. 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1 பாடல்.

ஆ. —.

III. 1. ஞானம் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம். 3. உண்ணும் போது உயிர் எழுத்தை உயர வாங்க வேண்டும். உறங்கும் போதெல்லாம் அவ்வாறே செய்ய வேண்டும். பெண் போகம் செய்யும்போதும் அவ்வெழுத்தையே நினைக்க வேண்டும். காய், இலை, பழம் இவற்றை உண்ணும் போதும் அதையே நினைக்கவேண்டும். தினமும் இப்படிச் செய்து வந்தால் மண்ணுழி காலம் மட்டும் வாழ்வார் என்று இந்நூல் கூறுகின்றது.

4. அகஸ்தியர் சூஸ்திரம் ஒன்று.

5.&6. உண்ணும்போ துயிரெழுத்தா லுயர வாங்கி
உறங்குகின்ற போதெல்லா மிதுவே யாகில்
பெண்ணும்பா லிந்திரிய மிடும்போ தெல்லாம்
பேணியுயிர மேல்வாங்கி அறிவ றிந்து

திண்ணாமா யிலைபிளவு அருந்தும் போதெல்லாஞ்
செயித்தாக்கால் நாள் தோறுஞ் செலுத்தவல் லார்க்கு
மண்மேலே யினியூழி காலம் வாழ்வார்
வருங்காலம் அறிந்திடினும் மரண மாகார். 1

7. தெட்சணாமூர்த்தி வாக்கியம் சூத்திரமணி முற்றும்.

8. மூலம். 9. பாடல் எளிமையான நடையில் அமைந் துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியர் சூத்திரம் ஒன்று என்ற இந்நூல் அகத்தியர் திருவாய் மலர்ந்தருளிய ஞானச் சுருக்கம் என்றும் கூறப்படுகின்றது. எண்சீர் விருத்தத்தில் ஒரே பாடல் மட்டும் உள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ப.க. எண் 574, சி.மா.மை.ஆ.நி. எண் 1340(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகஸ்தியர் ஞானச் சுருக்கம் 1, 'அகஸ்தியர் ஞான அமுதம்', தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உள்ள சுவடியில் இதுபோன்ற பாட்டில் பிரதி மற்றும் பாடவேறுபாடு காணப்படுகின்றன. சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள சுவடியில் 'அகத்தியர் சூத்திரம் 1' என்ற பெயரில் இந்நூல் காணப்படுகிறது. அதில் 'உயிரெழுத்தை உயர வாங்கி' என்ற பிரதிபேதம் உள்ளது. த.ப.க. சுவடியில் 'ஓர் எழுத்தை உயர ஏத்தி' எனப் பாடபேதம் காணப்படுகிறது.

## அகத்தியர் 1

I. 1. **3.** 2. அ. R. 254 (a). ஆ. T.R. 238. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 1. ஆ. Akattiyar ñāṉam 1. இ. அகத்திய னாயனாரருளிச் செய்த ஞானம் ஒண்ணு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை - 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிதைவு. 12. 1; ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ளது. 13. 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1 பாடல் .

ஆ. —.

III. 1. ஞானம் பற்றிய செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. இந்நூல் சிவபெருமானின் 51 அட்சரத்தின் சிறப்பினை ஒரே பாடலில் எடுத்துக்கூறுகிறது. இது காலம் கடந்த எழுத்து என்றும், உம்பர்க்குரிய உயிர் எழுத்து என்றும், பொன்மயமாகிய கயிலயங்கிரியைச் சேர்ந்த எழுத்து என்றும், இவ்வெழுத்தை உச்சரிப்போர்க்கு இறைவன் அருள்புரிவான் என்றும் கூறுகிறது.

4. —.

5. கம்பத் தெழுத்தோ கடையெ ழுத்தோ
காலமெல் லாங்கடந் தெழுத்தோ
உம்பர்க் குரியஉயி ரெழுத்தோ
ஒருகாலிரு காலுய ரெழுத்தோ
செம்பொற் கிரியைச் சேர்ந்தெழுத்தோ
சேர்ந்தோர்க் கென்றும் அருள்புரியும்
அன்பத்தோ ரட்க்ஷரத்தை ஒருமா அய்யா
அகரமுதல் அவ்வெழுத் தென்றார். 1

7. முற்றும்.

8. மூலம். 9. 'ஐம்பது' என்பது 'அன்பது' என்றும், வடமொழி 'க்ஷ' எழுத்து பெற்றும் எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் அமையும் இந்நூற் பாடல் வேறு நூல்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் ஞான அமுதம்,' தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. தாமரை நூலகம் வெளியிட்டுள்ள அகஸ்தியர் ஞான அமுதம் என்ற நூலில் 'அகஸ்தியர் மெய்ஞான சூத்திரம் 33' என்ற தொகுப்பு நூலின் காப்புப் பாடலாக இப்பாடல் அமைந்திருப்பது அறியத்தக்கதாகும்.

# அகத்தியர் 2

I. *1.* **4.** *2.* அ. R. 6214(b). ஆ. T.R. 2627. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சூத்திரம் *2.* ஆ. Akattiyar cūttiram 2. இ. அகஷ்த்தியர் சூஷ்த்திரம் *2. 4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-*5. 9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 1. 5.* 30 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* நன்று. *12. 2;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 4 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 2* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* இந்நூல் பற்பம் செய்யும் முறையைக் கூறுகின்றது. *2.* மருத்துவம். *3.* அகத்தியர் சூத்திரம் இரண்டு என்ற இந்நூலில் விந்து, நாதம் இவற்றுடன் சூதம், இலிங்கம், மனோசிலை, காரம், தாரம், பூரம், கெந்தி, பொரிகாரம், இலவணம் ஆகிய ஒன்பது சரக்குகளையும் கலந்து இரவியில் வைக்க வேண்டுமென்றும், பின்பு கல்வத்தில் இட்டு ஆட்டி, பூரணியைத் தியானித்து வில்லை தட்டி, ஓட்டில் வைத்து மேலோடு கொண்டு மூடி, சீலைசெய்து புடம் போட்டால் நலமான பற்பம் கிடைக்கும் என்றும் கூறப்படுகின்றது

4. ஹரி ஓம் நன்றாக.

5. மாதருமே ருதுவான போது நல்ல
மைந்தனே அவளோடே சேர்ந்து வாங்கு
போதமுட னுனதுவிந்து அவளுடைய நாதம்
பூரணமாய்ப் பீங்கானில் ரெண்டும் வாங்கிச்
சூதமொடு லிங்கமுடன் சிலையுங் காரஞ்
சுத்தமுள்ள தாரமுடன் பூரங் கெந்தி
நீதமுடன் பொரிகாரம் லவணஞ் சாரம்
நினவோடே ஒன்பதுவு மதிலே போடே. 1

6. போட்டபின்பு ரவியில்வைத்துக் கல்வத் தாட்டு
பூரணியைத் தியானித்து வில்லை தட்டி
நாட்டமுட னதையெடுத்து ஓட்டில் வைத்து
நலமான மேலோடு கொண்டு மூடி

ஆட்டமுடன் சீலைசெய்து புடத்தைப் போடு
அப்பனே செயபற்ப மாகும் பாரு
தீட்டமுடன் செம்புவெள்ளி ரெண்டிற் தாக்கு
சிவசிவா பத்தரைதான் மாத்து முற்றே. 2

7. அகஷ்த்தியர் ரண்டு முற்றும்.

8. மூலம். 9. முதல் பாட்டின் இறுதிச் சொல் இரண்டாம் பாட்டின் தொடக்கமாக அமைந்து 'அந்தாதி' அமைப்பில் உள்ளது; சொற்கள் பரிபாசையில் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சித்தர்கள் கண்டுபிடித்த மருந்துகளில் பற்பம் தயாரித்தலும் ஒன்றாகும். இம்மருந்து பலவித மருந்துச் சரக்குகளைச் சேர்த்துப் புடம் போட்டால் அது புடமாகி (நெருப்பாகி) இருக்கும். அதை நீற்றினால் பற்பமாகும்.

## அகத்தியர் 3

I. 1. **5.** 2. அ. R. 6214(c). ஆ. T.R. 2627. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 3. ஆ. Akattiyar cūttiram 3. இ. அகஷ்தீசர் சூத்திரம் 3. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 2; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 3 பாடல்கள் .

ஆ. —.

III. 1. பற்பம் செய்யும்முறை பற்றிக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் மூன்று என்ற இந்நூலில் எண்சீர் விருத்தப் பாடல்கள் 3 உள்ளன. கன்னியின் காமப்பாலை வாங்கிப் பீங்கானில் ஊற்றித் தாரம், கெந்தி, பூரம், இலிங்கம், இரசம் ஆகியவற்றைச் சேர்த்துக் கல்வத்திலிட்டு

ஆட்டி எடுத்து வில்லை தட்டி இரவியில் காயவைத்து எடுத்தால் பற்பமாகும் எனக் கூறப்படுகின்றது. இதைச் சிதம்பரத்தில் ஐயனோடே ஆதிகுரு கொடுக்க ஒரு மாத்து பத்து மாத்தாகும். இதைத் தகடுதட்டித் திரிகோணத்தில் பூசிப்புடம் போட, பற்பமாகும் என்றும் இந்நூல் கூறுகின்றது. அப் பற்பத்தைத் தின்றால் தேகமும் ஒளியுண்டாகும் என்கிறார்.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் சூஸ்திரம் மூன்று.

5. எட்டுரெண்டும் பத்தகார உகார மாகி
எண்ணியே ஆண்பெண்ணு மான வாருங்
கட்டுடனே சாதியவள் ரூப மாது
கன்னியவள் வாலையடா காமப் பாலை
தட்டுடனே அங்கென்று ரவியில் வாங்கி
தனித்ததொரு மதியில்விட்டுத் தகமை தீர்ந்து
பட்டுடனே யிப்படிநீ கலவி செய்து
பராபரைக்கிச் சுன்னமது குடுத்து வாங்கே. 1

6. பத்தான மாத்தெடுத்துத் தகடு தட்டு
பற்பமது திரிகோண செலத்திற் பூசி
அத்தருளால் புடம்போட பற்ப மாகும்
அதிகமுள்ள பற்பத்தைத் தின்று பாரு
சித்தருளால் தேகமதுபத் தரைதா னாகுஞ்
சிவன்சொன்ன செந்தூரம் வழலை கூட்டி
புத்தியுடன் வாலையடா தேகந் தேகம்
புதுமையிது வாகுமப்பா மூன்று முற்றே. 3

7. முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. சொற்கள் பரிபாசையில் எழுதப் பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் ஞான அமுதம்,' தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. 'அகத்தியர் 3' என்ற பெயரில் ஆசியவியல் நிறுவனத்தில் ஓர் ஏடு (எண் 509-a) உள்ளது. அது இந்நூலினின்றும் வேறுபட்டது.

# அகத்தியர் 5

I. 1. **6**. 2. அ. R. 238(e). ஆ. T.R. 222. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 5. ஆ. Akattiyar 5. இ. அகத்தியர் பாடியது 5 பாட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. M.R. Ry.M. கேசவப் பிள்ளை, நுங்கம்பாக்கம், சென்னை. 10. கி.பி. 1914-15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 36 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிதைவு. 12. 3; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 5 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அஷ்டமா சித்திகளும், இரசவாதத்திற்கான மருந்துகள் தயாரிக்கும் முறைகளும் கூறும் நூல். 2. அஷ்டமாசித்தி - இரசவாதம். 3. இந்நூலில் ஐந்து எண்சீர் விருத்தப் பாடல்கள் முழுமையாக உள்ளன. முதலாவதாக அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற அஷ்டமா சித்திகளை மந்திரத்தால் யோகியோர்களுக்கு உரைக்கும் முறைகள் கூறப்படுகின்றன. மேலும் தோசங்கள் ஏற்படும் நிலைகளையும் அவற்றைக் குணமாக்குவதற்கு உரிய வழிவகைகளையும் இந்நூல் கூறுகின்றது. இவற்றுடன் வகாரம், னகாரம், சிகாரம், உகாரம் போன்ற மந்திரங்களை மவுனமாக இருந்து உச்சரிக்கும் நிலைகளையும் கூறுகின்றது.இரசவாதத்திற்குரிய பொருள்களில் கந்தம் பற்றிக் கூறுகின்றது. கந்தம் நற்கந்தம், துர்க்கந்தம் என இரு வகைப்படும். கந்தத்துடன் உப்பு சேர்த்து அனலில் வைத்தால் அது திராவகம் ஆகும். இத்திராவகம் பல வகைக்கும் பயன்படுகிறது. மேலும் இலிங்கக்கட்டுக்குரிய முறை களையும் இந்நூல் கூறுகிறது. அரிதாரம், கந்தம் சேர்த்து அனலில் வைத்தால் இரசவாதத்திற்கான இலிங்கக் கட்டு கிடைக்கிறது. அதனுடன் கரியுப்பு, வெடியுப்பு சேர்த்துப்

புடம் போட்டால். இலிங்கக்கட்டு உருகும். அதனுடன் செம்பும் வெள்ளியும் சேர்த்தால் தங்கமுண்டாகும் என்று கூறுகிறது.

4. அகஸ்தியர் பாடியது 5 பாட்டு.

5. நாடியதோர் தந்திமுகன் றனைப் பணிந்து
நலமாக உரைத்திடுவோம் நந்தி பின்னும்
தேடியதோர் மந்திரத்தா லஷ்ட சித்தித்
திறமாக உரைக்கிறேன் யோகி யோர்க்குக்
கூடியதோர் கெந்தமதைச் சிதம்ப ரத்தில்
குணமான காலதனைக் கூட்டி மூட்டி
ஆடியதோர் அய்ம்புலனை மூலத் துள்ளே
அரகரா மூலகண பதியே காப்பு. 1

6. தோசமது தீர்வதற்குப் பீசங் கேளு
சொல்லுகிறே னகாரமொடு காரம் சேரு
வாசமுடன் மகாரமது சிகாரந் தானும்
வகாரமுடன் பிரணவத்தா னிலையே யாகும்
பாசமுடன் சேர்ந்து மவுன மாகில்
பாங்கான னாதவொலி சிதம்ப ரத்தில்
ஓசையுட னுறுதியா தியானித் தேறு
ஒருவருக்கும் விள்ளாதே அஞ்சு முத்தே. 5

7. அகத்தியர் பாடல் 5 எழுதி முகிந்தது முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ர-ற வேறுபாடில்லாது அமைந்துள்ளது. உ–ம் மந்திரத்தால் - மந்திறத்தால். யோகியோர்க்கும் - யோகியோற்க்கும். பிரணவத்தால் - பிறணவத்தால். 'மூற்றே' என்பது 'மூத்தே' எனப் பேச்சுவழக்கில் உள்ளது. 10. முற்காலத்தில் வாழ்ந்த சித்தர்களும், மருத்துவர்களும் தங்கள் முன்னோர்கள் செய்து வந்த மருத்துவ முறைகளையும், இரசவாத முறைகளையும் கற்று, அவற்றைச் செயற்படுத்தி, அவற்றைப் பிற்காலச் சந்ததியினர் முறையாகக் கையாள வேண்டுமெனச் சுவடிகளில் எழுதி வைத்தனர். 11. இல்லை.

IV. 1. T.D. 623. 2. ஆ.நி. எண்கள் 524, 656 (i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2.—. 3. இல்லை.

VI. இந்நூல் முடிந்தபின் 'வைத்தியக் குறிப்புகள்' என்ற தலைப்பின் கீழ் மூன்று செய்யுட்களும், 'சித்தாரூடம் —' 'கருக்குழம்பு' என்ற தலைப்பின்கீழ் ஒரு செய்யுளும் இரண்டு இதழ்களில் எழுதப்பட்டுள்ளன. அஷ்டமா சித்திகளை உச்சரித்து யோகம் செய்யுமுன், உடலைத்தூய்மைப் படுத்துவதற்கான மருத்துவமுறைகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. ஆசியவியல் நிறுவனச் சுவடியில் இரசவாதத்திற்கான இலிங்க சுத்தி முறைகள் இடம் பெறுகின்றன. 'அகத்தியர் 5' என்ற மற்றொரு சுவடி நஞ்சை நீக்கும் முறைகளைக் கூறுவதாக உள்ளது. அகத்தியர் பெயரில் '5 பாட்டு' என்ற முறையில் 'அகத்தியர் ஞானம் 5', (தாமரை நூலகம், 1993) என்பதும், 'அகத்தியர் ஞானச்சுருக்கம்' (தாமரை நூலகம், 1995) என்ற நூலும், 'அகத்தியர் நஞ்சு முறிவு 5' என்ற நூலும், 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை' (தாமரை நூலகம், 1996) என்ற நூலில் 'அகத்தியர் சஞ்சீவி எண்ணெய் 5', மேகத் தெண்ணெய் 5', 'அகத்தியர் குளிர்ச்சி எண்ணெய் 5', 'அகத்தியர் தீட்சைப்பாடல் 5', 'அகத்தியர் ஞான கக்கிஷம் 5', 'அகத்தியர் தைலச்சுருக்கம் 5' போன்ற பல நூல்களும் உள்ளன. ஆசியவியல் நிறுவனத்தில் 'அகத்தியர் 5' என்ற பெயரில் இரு சுவடிகள் உள்ளன.

அஷ்டமாசித்திகளாவன: அணிமா – ஆன்மாவைப் போலணுவாதல், மகிமா – மகத்தாதல், கரிமா – தன்னுடல் கண்டிப்பின்றாய்க் கண்டிப்புள்ளவற்றை உருவவல்லனாதல், இலகிமா – இலகுத்துவமாதல், பிராப்தி – வேண்டுவன அடைதல், பிராகாமியம் – நிறையுள்ளானாதல், ஈசத்துவம் – ஆட்சியுளனாதல், வசித்துவம் – தன்வசமாக்க வல்லவனாதல் என இவை விளக்கம் பெறுகின்றன.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. கருட பஞ்சாட்சரம்
b. இராசியறிதல் முதலியன.
c. நட்சத்திரமாலை முதலியன.
d. அகத்தியர் எட்டு.

f. அகத்தியர் வயித்தியக் கொம்மி.
g. ஸ்தம்பனச் சக்கரம் முதலியன
h. நீலகண்ட சாஸ்திரம்
i. ருது நூல் முதலியன.
j. சாமுத்திரிகா லட்சணம்
k. சோதிடம்
l. கணக்கதிகாரம், உரையுடன்
m. மனை வாஸ்து லட்சணம்
n. ஆருட முதலியன
o. மனை சாஸ்திரம்
p. கேதாரேஸ்வரர் பூசை
q. கேதாரிநோன்பினால் பேறுபெற்ற கதை.

## அகத்தியர் 5

I. 1.7. 2. அ. D. —. ஆ. T.D. 623. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 5. ஆ. Akattiya cūttiram 5. இ. அகஸ்த்தியர் சூஸ்த்திரம் 5. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 2. (77, 78 ஆம் ஓலைகள்). 5.27 x 2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 4; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 5 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்டமாசித்திகளையும், இரசவாதத்திற்கான மருந்து வகைகள் தயாரிக்கும் முறைகளையும் கூறும் நூல். 2. அட்டமா சித்தி - இரசவாதம். 3. வரிசை எண் 6 போன்றது.

4. —.

5. நாடியதோர் தந்திமுகன் தனைப்ப ணிந்து
நயமாக உரைத்திடுவேன் நந்தி பின்னும்
தேடியதோர் மந்திரத்தா லஷ்ட சித்தி
திறமாக வுரைக்கிறேன் யோகி யோர்க்கு

கூடியதோர் கெந்தமதைச் சிதம்ப ரத்தில்
குணமான காலதினை கூட்டி மூட்டி
ஆடியதோர் ஐம்புலனை வைத்துள் ளேதான்
அரகரா மூலகண பதியே காப்பு. 1

6. தோஷமது தீர்வதற்குப் பீசங் கேளு
சொல்லுகிறேன் அகாரமொடு உகாரஞ் சேரு
வாசமுடன் மகாரமது சிகாரந் தானும்
வகாரமுடன் பிரணவந்தான் நிலையே யாகும்
பாசமுடன் னீருசற்று மவுன மாகிப்
பாங்கான னாதஒலி சிதம்ப ரத்தில்
ஓசையுடன் உறுதியாய் தியா னித்து
ஒருவருக்கும் விள்ளாதே அஞ்சு முற்றே. 5

7. ..... ..... ..... .....
..... ..... ..... .....
உம்பர்க் கிரியிலு யிரெழுத்தோ
ஒருகாலிக் காலோ ரெழுத்தோ
செம்பொற் கிரியில் சேர்ந்தெ முத்தோ
சேர்ந்தோர்க் கென்றும் அருள்புரியும்
அன்பத்தோ ரட்சரத்தை ஓம்நமா
அய்யா அகார முதலவ் வெழுத்தென்றார்

அகஸ்த்திய மாமுனி 5 சூஷ்த்திரம் முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்புடன் கூடியன. பிழைகள், பேச்சு நடைச் சொற்கள், பாடபேதங்கள் உள. 10. அகத்தியர் பேரில் உள்ளது. இரசவாத வித்தை அகத்தியர், அகப்பேய்ச் சித்தர், கொங்கணர், உரோமரிசி முதலான பல சித்தர்கள் பெயர்களில் பாடப்பெற்றுள்ளது. இந்த இரசவாத வித்தையைப் புரிபவர்கள் தெய்வபக்தி, ஆசையற்ற நிலை, பிறப்பில் நல்ல கிரக அமைப்பு இவற்றுடன் திகழ்தல் வேண்டும் என்று கூறுவதிலிருந்து அதன் புனிதத் தன்மை விளங்குகின்றது. 11. இல்லை.

IV. 1. R. 238(e). 2. ஆ.நி.எண்கள் 524, 656(i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்தச் சுவடி நூல் தனி நூலாக D. எண் கொடுக்கப் பெறாமல் வேறு ஏடுகளுடன் சேர்ந்துள்ளது. இச் சுவடியில் ஏட்டின் இறுதியாக அமையும் பாடல் வரிசை எண் 3ல் இடம் பெறும் பாடலை ஒத்துள்ளது.

## அகத்தியர் 6

I. 1. **8**. 2. அ. R. 254(d). ஆ. T.R. 238. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 6. ஆ. Akattiyar 6. இ. அகஸ்திய நாயனார் அருளிச்செய்த சூத்திரம் ஆறு. 4. —. 5.—. 6.—. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை - 5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 2; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 6 பாடல்கள்.

ஆ.—.

III. 1. முப்பு தயாரிக்கும் முறையைக் கூறும் நூல். 2. மருத்துவம் - முப்பு. 3. இந்நூலில் முப்பு செய்து அதன் மூலம் நீண்ட நாள் உயிர் வாழக்கூடிய காயகற்பம் தயாரித்தல் முறை முதலில் கூறப்படுகிறது. அக் காயகற்பத்தை முறையாக உண்டு வந்தால் உடம்பு பொன் உடம்பாக மாறும் என்றும் அதனால் ஏழு பிறப்புகள் எடுக்கும் வாழ்நாட்கள் அனைத்திற்கும் இப்பிறப்பே போதுமானது என்றும் இந்நூல் விளக்கமாகக் கூறுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக அகஸ்திய னாயனார் அருளச் செய்த சூத்திரம் ஆறு.

5. பாடுகிறேன் சூட்சமது ஆறி னுள்ளே
பண்பான பிள்ளைகட்(க்)கு அடக்கித் தானே
ஊடுகிறேன் இரண்டெழுத்துஞ் சராசரந் தானாச்சு
உத்தமனே மனோன்மணித்தாய் இருந்த வீடு

ஆடுநீ அகாரமது மேலே தாக்கு
அண்டமெல்லாம் படைத்ததொரு ஆயிதாளைத்
தேடியேஒன் றாக்கிச்சித்த ரெல்லாம் பாரு
திறந்துவிட்டேன் ஞானத்தின் திறவு தானே. 1

6. பாரப்பா அங்கோணம் யெழுத்து னாலும்
பராபரத்தின் ஒளிகாட்டும் பாரு பாரு
ஆரப்பா விந்துவிட யெழுத்தே யாடும்
ஆச்சரியம் வேறொன்றால் ஆடா தப்பா
காரப்பா பெரியோரைப் பனிரெண் டாண்டு
கருத்தறிந்து திறங்கண்டு கைதான் ஈவார்
வேரப்பா வேதைக்கி இதுதான் ஆறு
வேதாந்தி யானாக்கால் செய்ய நன்றே. 6

7. முற்றும் திருச்சிற்றம்பலம் குருவாழ்க.

8. மூலம். 9. முன்னிலையாரிடத்துச் செய்திகளைக் கூறுவது போன்று பாடல்கள் அமைந்துள்ளன. அந்தாதி அமைப்பு; பேச்சு வழக்குச் சொற்கள் பயின்று வருகின்றன. 10. முப்புவால் பல மருந்துப் பொருள்கள் தயாரிக்கும் முறைகள் பல தனி நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. சி.ம.மை.ஆ.நி. எண் 739, த.ச.ம.நூ. எண்கள் 236(f), 430(h), 496(m). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. 'அகத்தியர் 6' என்ற இந்நூல் 'அகத்திய நாயனார் அருளிச்செய்த சூத்திரம் ஆறு' என்ற பெயரில் காணப்படுகிறது. சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள சுவடியில் 'அகத்தியர் சூத்திரம் 6' என்ற பெயரில் இந்நூல் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. 'அகத்தியர் 6' என்ற அடிப்படையில் வேறு நூல்களாக, 'அகத்தியர் ஞான அமுதம்' (தாமரை நூலகம், 1995) என்ற நூலில் 'அகத்தியர் சூத்திர ஞானம் 6' என்ற நூலும், 'பதினெண் சித்தர்கள்' வைத்திய சில்லறைக் கோவை (முதல்பாகம்) தாமரை நூலகம், 1996) என்ற நூலில் 'அகத்தியர் ஞானம் 6', 'அகத்தியர் வாதச்சுருக்கம் 6' என்பன குறிப்பிடத் தக்கவை.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு.

a. சுந்தரானந்தர் சூத்திரம்.
b. சுந்தரானந்தர் பூஜாவிதி.
c. சுந்தரானந்தர் தீட்சாவிதி.
e. அகத்தியர் சூத்திரம் முதலியன.
f. அகத்தியர் யோகம் பதினாறு.
g. அகத்தியர் சூத்திரம்பதினாறு.
h. அகத்தியர் உபதேசஞானம் ஐம்பத்தொன்று.
i. அகத்தியர் ஞானம் நூறு.
j. அகத்தியர் பூரண சூத்திரம் இருநூறு.
k. அகத்தியர் பரிபூரணம் ஐம்பத்தொன்று.
l. கயிலாச சட்டைமுனி வாதநூல் ஆயிரம்.
m. சடாக்கரக்கோவை நூற்றெட்டு.
n. கொங்கணர் துருசி குரு முப்பத்தொன்று.
o. சொக்கநாதர் சூத்திரம்.

## அகத்தியர் 8

I. 1. **9**. 2. அ. R. 238 (d). ஆ. T. R. 222. இ.—. ஈ. —. 3. அ. அகத்தியர் 8. ஆ. Akattiyar ettu. இ. அகஸ்திய நாயனார் 8. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. M.R. Ry. M. கேசவப்பிள்ளை, நுங்கம்பாக்கம், சென்னை. 10. கி.பி. 1914-15 .

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 36 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. தெளிவு. 12. 3; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7-8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித வாழ்வை அதிகரிக்கச் செய்யும் மருந்தை மந்திரங்களோடு தொடர்பு படுத்திக் கூறும் நூல். 2. மந்திரம் - மருத்துவம். 3. அகத்தியர் எட்டு என்ற இந்நூலில்

சிவத்திற்குரிய மந்திர உச்சாடனங்களை முறைப்படிக் கூறி, வாழ்வாங்கு வாழ மருந்துகள் கூறப்படுகின்றன. பதினாறு மாற்றுள்ள காரீயம் எடுத்து அதிலிருந்து நாதம் வாங்கவேண்டும். அதோடு பூநீறும் சேர்த்துச் சாடியுள் இட்டு மருந்து செய்து கொள்ள வேண்டும். இதனை உண்போர்க்கு வயது 125 ஆகும். இவ்விதம் வயது வளர்ப்போர் உயர் ஞானம் பெற யோகம்வழி நின்று சுழிமுனையில் இறை ஒளியைக் காண முயல வேண்டும் என்று இந்நூல் கூறுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக அகஸ்தியர் யெட்டு.

5. தெரிசனமாம் சிவாயவசி சிங்வங் உங்கென்று
திரும்பவேஅறி வது கிலியுமங்கென் றோது
சரிகையொடு கிரியையது யோக ஞானந்
தப்பாது கிலியுஞ் சவ்வென் றேதான்
பரிசையொடு பூரணத்தி லியங்கு வாயு
பார்க்கையிலே ஓம்சிவாய வசியென்றோது
துரியமடா துரியத்தி லப்பு முப்புச்
சுட்டினேன் பாறையுப்புச் சொல்லி னேனே. 1

6. சுழியான அகாரமே உகார மாச்சு
சூஷ்சமா யெழுத்தெல்லாம் யிதனா லாச்சு
அழியாத பேரின்ப மிதனா லாச்சு
அனைத்துயிர்க்கும் பிறப்பிறப் பிதனா லாச்சு
வழியாக யிதுகண்டு சேர்ந்தார் சித்தர்
வழியறியா மூடரென்றாற் கழுதை மாடு
ஒளியான சோதிமணி யிதுவே யாகும்
உயர்வற்ற நாகமணி யெட்டு முத்தே. 8

7. அகஸ்திய நாயனார் அருளிய எட்டு முற்றும்.

8. மூலம். 9. மந்திர உச்சாடனச் சொற்கள் பாடல்களில் இடை இடையே விரவி வருகின்றன. எண்சீர் ஆசிரிய விருத்த அமைதிக்கு உட்பட்டே இச்சொற்கள் கையாளப்பட்டுள்ளன. பாடல்கள் ஆடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன. 10. இந்நூற்பாடல்களில் கூறப்படும் செய்திகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் சித்தர்கள் கொள்கைகளுடன் தொடர்புடையன. இரசவாதம் முப்புடனும் தொடர்புடையது. 11. இல்லை.

IV. 1. T.D.623, R.4859, R.2485. 2. ஆ.நி.எண் 656(h), த.ப.க. எண்கள் 734, 1903. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் 'அகத்தியர் சூத்திரம் 8' என்றும் பெயர் பெறுகின்றது. முப்புடன் தொடர்புடைய மந்திரச் சொற்களாகச் 'சிவாய வசி சிங் வங் உங்' என்பன வருவதிலிருந்து முருந்தும் மந்திரமும் இணைந்து செல்வன எனத் தெரிகிறது. ஆ.நி.404 (d) இல் உள்ள 'அகத்தியர் 8' என்ற மற்றொரு சுவடி 'ஆறாதார யோகம்' பற்றிக் கூறுவது. அதன் பாடல்கள் இங்குப் பேசப்படுகின்ற நூலினின்றும். வேறுபட்டிருக்கின்றன. அதைப் போன்றே ஆ.நி. 509(c), 560 எனும் எண்ணுள்ள சுவடிகள் 'அகத்தியர் 8' என்ற பெயரில் இருந்தாலும் முற்றிலும் வேறுபட்டவை. மேலும் த.ச.ம.நூலகத்திலுள்ள 'அகத்தியர் 8' என்ற மற்றொரு சுவடி இரசவாதம் பற்றிப் பேசுகின்றது. பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை முதல்பாகம் (தாமரை நூலகம், 1996) என்ற நூலில், 'அகத்தியர் ஞானம் 8', 'அகத்தியர் 8' என்ற பெயரில் பல நூல்கள் உள்ளன.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. கருட பஞ்சாட்சரம்
b. இராசியறிதல் முதலியன.
c. நட்சத்திரமாலை முதலியன.
e. அகத்தியர் ஐந்து.
f. அகத்தியர் வயித்தியக் கொம்மி.
g. ஸ்தம்பனச் சக்கரம் முதலியன
h. நீலகண்ட சாஸ்திரம்
i. ருது நூல் முதலியன.
j. சாமுத்திரிகா லட்சணம்
k. சோதிடம்
l. கணக்கதிகாரம், உரையுடன்
m. மனை வாஸ்து லட்சணம்

n. ஆருட முதலியன

o. மனை சாஸ்திரம்

p. கேதாரேஸ்வரர் பூசை

q. கேதாரிநோன்பினால் பேறுபெற்ற கதை.

## அகத்தியர் 8

I. 1. **10**. 2. அ. D.—. ஆ. T.D. 623. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 8. ஆ. Akattiyar 8. இ. அகஸ்தியர் சுவாமி எட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஒரளவு தெளிவு. 4. 3. 5. 27 x 3 செ. மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிதைவு. 12. 5; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள் .

ஆ. —.

III. 1. மனிதர்களின் வாழ்நாளை அதிகரிக்கச் செய்யும் காய கற்பம் போன்ற மருந்துகள் செய்யும் முறைகள் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 9 போன்றது.

4. —.

5. திரிபுரைதான் சிவயசிவ சிங்அங் உங்கென்று
திரும்பவே அறிவிலியு மங்கென் றோது
சரிகையொடு கிரிகையது ஞான மப்பா
தப்பாது உங்கிலியும் சவ்வென் றோது
பரிசமொடு பூரணத்தி லியங்கும் வாய்வு
பார்க்கையிலே ஓம்சிவய வசியென் றோது
துரியமடா துரியத்தில் அப்பும் உப்பும்
சொல்லுறேன் பாறைஉப்பை சொல்லு றேனே. 1

6. சுழியான அகாரமே முகார மாச்சு
குற்றமில்லா முதலெழுத்து மிதனுள் ளாச்சு
அழியாத பொருளதுவும் யிதனுள் ளாச்சு
அனைத்துயிர்க்கும் பிறப்பிறப்பு மிதனுள் ளாச்சு

வழியாக யிது மூன்றுஞ் சேர்ந்தார் சித்தர்
வழியறியா மூடனென்றால் கழுதை மாடு
ஒழியாகுஞ் சோதிமணி யிதுவே யாகும்
உயர்வற்ற னாகமணி கிரீடந் தானே. 8

7. முற்றிற்று. தெட்சணாமூர்த்தி கிருபை.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பு; பிரதி வேறுபாடு, பாடவேறுபாடுகள் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. தெட்சணாமூர்த்தி என்ற பெயர் ஏட்டின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அகத்தியருக்குத் 'தட்சணாமூர்த்தி' என்ற பெயரும் வழங்குவது பல நூல்களிலிருந்து தெரியவருகிறது. 11. இல்லை.

IV. 1. R. 238(d). R. 2485, R. 4859. 2. சி.ம.மை.ஆ.நி. எண் 656 (h), த.ப.க.எண்கள் 734, 1903. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. 1. இந்தச் சுவடிக்கு D எண் இல்லை; இந்தச் சுவடிக் கட்டில் 79, 80, 81a ஆகிய எண்கள் உள்ள ஓலைகளில் இந்நூற் பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன. சித்த மருத்துவத்துள், அதிகநாள் வாழ்வைத் தரவல்ல மருந்தாகக் காயகற்பம் திகழ்கிறது. இதைச் சாகா மருந்து என்பர். இம்மருந்தை முறையாகத் தயாரித்து உண்பவர்கள் பல ஆண்டுகள் உயிருடன் இருந்து அணிமா, மகிமா, லகிமா போன்ற சித்திகளையும் கைவரப்பெற்றிருப்பர்.

## அகத்தியர் 8

I. 1. 11. 2. அ. R. 4859. ஆ. T.R 2113. இ. —. ஈ —. 3. அ. அகத்தியர் சோதிமணி சூத்திரம் 8. ஆ. Akattiyar cōtimaṇi cūttiram 8. இ. அகஷ்த்தியர் சோதிமணி சூஷ்த்திரம் எட்டு. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 20 x 4 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை.

9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 4; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனிதர்களின் நோய்களை நீக்கி அவர் தம் வாழ்நாளை அதிகரிக்கச் செய்யும் மருந்துகள் இந் நூலில் கூறப்படுகின்றன. 2. மருத்துவம். 3. வரிசை எண் 9 போன்றது.

4. —.

5. ..... சிவயவசிங் அங்வங் கென்று
திரும்பவே அறிகிலியும் மங்கென் றோது
சரிகையொடு கிரிகையது ஞான மப்பா
தப்பாது உங்கிலியும் சவ்வென் றோது
பரிசமொடு பூரணத்தில் இயங்கும் வாய்வு
..... ..... ..... .....
துரியமடா துரியத்தில் அப்பும் உப்பும்
சுட்டுகிறேன்பாறையுப்பைச் சொல்லு றேனே. 1

6. சுழியான அகாரமே உகார மாச்சு
குத்தமில்லா முதலெழுத்து மிதனுள் ளாச்சு
அழியாத பொருளாவி யிதனுள் ளாச்சு
அனைத்துயிர்க்கும் பிறப்பிறப்பு யிதனுள் ளாச்சு
வழியாக யிதுமூன்றும் சேர்ந்தோர் சித்தர்
வழியறியான் மூடனென்ற கழுதை மாடு
ஒளியாகுஞ் சோதிமணி யிதுவே யாகும்
உயரவைத்த நாகமணி கிரீடம் தானே. 8

7. அகஷ்த்தியர் சோதிமணி சூஷ்த்திரம் முடிந்தது.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியிலும், பாடபேதங்கள் பெற்றும் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பேரில் பாடப் பெற்ற இந்நூலில் உடலுக்கு ஒளிதரும் மணியாக மருந்து செயல்படுவதால் அகத்தியர் சோதிமணி சூத்திரம் என்று இந்நூலுக்குப் பெயர் வழங்கப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. R.238(d), R.2485, T.D.623. 2. ஆ.நி.எண் 656 (h), த.ப.க. எண்கள் 734, 1903. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் சோதிமணிச் சூத்திரம் 8 என்னும் இந்நூல் பல்வேறு நிறுவனங்களில் ஓலைச் சுவடிகளில் காணப் பெறுகிறது. பாடல்கள் பிரதி வேறுபாடுகள், பாட வேறுபாடுகள் கொண்டிலங்குகின்றன. இச் சுவடிக்கட்டில் இந்நூலுடன் அகத்தியர் 50 (R.4859), சட்டைமுனி சூத்திரம் (R.4860), மந்திரங்கள் (R.4861), கமலமுனி சூத்திரம் (R.4862), அகத்தியர் சூத்திரம் (R.4862-a) ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் 8

I. 1. **12**. 2. அ. R. 2485. ஆ. T.R. 1364. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 8. ஆ. Akattiyar 8. இ. அகஸ்தியர் எட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. மிகவும் கடினம். 4. 2. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 4; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ.—.

III. 1. மனிதர்களின் நோய்களை நீக்கி நீண்ட நாள் வாழ வைக்கும் மருந்துகள் பற்றிய நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 9 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக அகஸ்தியர் எட்டு.

5. தெரிசனமாம் சிவாயவசி சிங்வங் அங்உங்கென்று
திரும்பவே அறிகிலியு மங்கென் றோது
சரிகையொடு கிரியையது யோக ஞானந்
தப்பாது கிலியுஞ் சவ்வென் றேதான்

பரிசையொடு பூரணத்தி லியங்கு வாயு
பார்க்கையிலே ஓம்சிவாய வசியென் றாக்கால்
துரியமடா துரியத்தி லப்பு முப்புச்
சூட்டினேன் பாறையுப்புச் சொல்லி னேனே. 1

6. சுழியான அகாரமே உகார மாச்சு
சூஷ்சமா யெழுத்தெல்லாம் யிதனா லாச்சு
அழியாத பேரின்ப மிதனா லாச்சு
அனைத்துயிர்க்கும் பிறப்பிறப் பிதனா லாச்சு
வழியாக யிதுகண்டு சேர்ந்தார் சித்தர்
வழியறியா மூடரென்றாற் கழுதை மாடு
ஒளியான சோதிமணி யிவளே யாகும்
உயர்வரத னாகமணி எட்டு முற்றே. 8

7. தெட்சணாமூர்த்தி சோதிமணி சூத்திரம் முற்றும் குருவே துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பிழைகள் மலிந்துள்ளன. 10. அகத்தியர் பேரிலும், தட்சணாமூர்த்தி பெயரிலும் பாடப்பெற்றுள்ளது. இதுவும் 'சோதிமணி' எனப் பெயர் பெறுகின்றது. 11. இல்லை.

IV. 1. R.238(d), R.4859, T.D.623. 2. ஆ.நி. 656 (h), த.ப.க. எண்கள் 734, 1903. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் பல்வேறு நோய்களுக்கான மருந்து முறைகளைக் கூறினாலும் 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்து மந்திரமான சிவமந்திரத்தின் பெருமையினையும், அம்மந்திரத் தைக் கடைப்பிடித்து ஒழுகி, வாழவேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறுவதிலிருந்து இந்நூலின் சிறப்பினை அறியலாம்.

# அகத்தியர் 10

I. 1. 13. 2. அ. R. 7876. ஆ. T.R.—. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 10. ஆ. Akattiyar cūttiram 10. இ. அகஸ்தியர் சூஸ்திரம் பத்து. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ. சு. நூ., சென்னை-5. 9.—. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 15 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 7; இரு பக்கங் களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள் 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரித்தல் பற்றிக் கூறும் நூல் 2. முப்பு - மருத்துவம். 3. இந்நூல் முப்பு, இரசவாதம் பற்றிச் சொல்வதாகவும், இலட்சம் பாடல்களைச் குறுக்கி 300 ஆகவும், பின் 50 ஆகவும், பின் 16 ஆகவும், பின் 13 ஆகவும், பின் 10 ஆகவும் கூறுவதாக அமைகிறது. இதிலிருந்து, இது சுருக்கப்பட்ட நூலாகும் எனத் தெரிகிறது. இதில் வாதம் செய்ய யோகம், பூசை முதலியவை இன்றியமையாதன என்கிறார் ஆசிரியர். அண்ட ஓட்டைச் சுத்தி செய்து, கல்சுண்ணம் கூட்டி, அமுரியுடன் கலக்கிக் காய்ச்சிப் படிகம், உப்பு, காரம், சாரம், வெள்ளைகூட்டி, கல்வத்திலிட்டு, எருக்கம்பால் விட்டு, மைபோல் அரைத்து, வில்லை செய்து, காயப்போட்டுப் புடம் போடவேண்டும். மறுபடியும் ஒரு முறை காயப்போட்டு எடுக்க நீர்த்துப் போகும். அதோடு நாகம் சேர்த்தால் கட்டியாகும். இதைச் செம்பு வெள்ளியுடன் 1/8 பாகம் சேர்க்கவேண்டும். பின் வங்கம் சேர்க்க வேண்டும் என்றும் கூறுகிறது.

4. அகஸ்தியர் சூஸ்திரம் பத்து.

5. பாரப்பா வாதியென்றால் பூசை வேணும்
பாங்கான சிவம்வேணும் தியானம் வேணும்
நேரப்பா வாசியென்றால் யோகம் வேணும்
நேராக லெட்சியத்தை நிறுத்த வேணும்

காரப்பா குருபதத்தைக் காக்க வேணும்
கைகட்டித் தொழில்முறைக ளறிய வேணும்
சாரப்பா சாஸ்திரமுஞ் சூஸ்திர முந்தான்
சார்வாகப் பார்த்திருந்து வாதம் பாரே. 1

6. போமடா கரியோட்டில் ஊதும் போது
புகழாகக் கண்விட்டு ஆடு மாடும்
ஆமடா நல்லுப்பைக் கூட்டி யூத
நல்லதொரு வயிரமணி போலே யாடும்
நாமடா ஆணவத்தால் வெளியில்(ப்) போட்டால்
நாடாதே கள்ளனென்ற மானி டர்க்கு
தாமடா யிதுவெல்லாம் நீத்துக் கொண்டு
தாரணியில் விள்ளாதே யடக்க முத்தே. 10

7. தெட்சணாமூர்த்தி அருளிச் செய்த சூஸ்திரம் பத்து முற்றும்.

8. மூலம். 9. பாடல்களில் பேச்சு வழக்குச் சொற்களும் அந்தாதி அமைப்பும் அமைந்துள்ளன. ற - ர வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. (எ.டு.) கரியோட்டின் - கறியோட்டின். 10. பதினெண் சித்தர்களும் முப்பு தயாரித்தலைப் பற்றிச் சொல்கின்றார்கள். இருப்பினும் அகத்தியர் முப்பு என்றால் சிறப்பாகக் கருதப்படுகின்றது. 11. இல்லை.

IV. 1. R. 2486, R.168(d), D.2319. 2. ஆ.நி.எண் 656(g). 3. இல்லை.

V. 1.இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. 1. இந்நூல் அகத்தியர் சூத்திரம் பத்து என்றும், அகத்தியர் முப்பு சூத்திரம் 10 என்றும் வழங்கப்படுகின்றது. ஆ.நி. 509 (d) இல் குறிக்கப்படும் 'அகத்தியர் சூத்திரம் 10' என்ற பெயரிலுள்ள சுவடி இரசவாதம் பற்றிக் கூறுவதாகக் காணப்படுகிறது. அதிலுள்ள பாடல்களும் முற்றிலும் மாறுபட்டனவாகத் தெரிகின்றன. ஆயின் ஆ.நி. 404 c இல் காணப்படும் 'அகத்தியர் 10' என்ற மற்றொரு சுவடியின் பாடல்கள் இங்குப் பேசப்படும் பாடல்களுடன் ஒத்துள்ளன. அவையும் முப்பு-இரசவாதம் பற்றியே பேசுவதாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

# அகத்தியர் 10

I. *1.* **14.** *2.* R. 2486. T.R. 1364. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் *10.* ஆ. Akattiyar 10. இ. தெட்சணாமூர்த்தி பத்து. *4.* — *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவின்மை. *4. 3. 5.* 28 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* சிதைவு. *12. 5;* இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *8* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 10* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* முப்பு தயாரித்தல் பற்றிக் கூறும் நூல். *2.* முப்பு - மருத்துவம். *3.* வரிசை எண் *13* போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக தெட்சணாமூர்த்தி பத்து.

5. பாரப்பா வாதியென்றால் பூசை வேணும்
பரிவான சிவம்வேணும் தியானம் வேணும்
நேரப்பா வாதியென்றால் யோகம் வேணும்
நேராக லட்சியத்தை நிறுத்த வேணும்
காரப்பா குருபதத்தைக் காக்க வேணும்
கைகட்டித் தொழில்முறைக ளறிய வேணும்
சாரப்பா சாஷ்திரமுஞ் சூத்திரமுங் கண்டு
சார்வாகப் பார்த்திருந்து வாதம் பாரே. 1

6. போமடா கரியோட்டில் யூதும் போது
போச்காகக் கண்விட்டு ஆடு மாடும்
ஆமடா நல்லுப்பைக் கூட்டி யூத
நல்லதொரு வயிரமணி போலே ஆடும்
நாமடா ஆணவத்தால் வெளியில் போட்டேன்
நாட்டாதே கள்ளனென்ற மானிடர்க்கும்
தாமடா யிதுவெல்லா மறிந்து கொண்டு
தாரணியில் விள்ளாதே அடக்க முற்றே. 10

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள் மிகுதி; பாடல்கள் அந்தாதியில் உள்ளன. 10. அகத்தியர் பேரில் பாடப் பெற்றுள்ளது. அகத்தியர்க்குத் 'தெட்சணாமூர்த்தி' என்ற பெயரும் உள்ளதை இந்நூற் தலைப்பு மூலம் அறிய முடிகின்றது.11. இல்லை.

IV. 1. R.7876, R.168(d), D.2319. 2. ஆ.நி.எண் 656 (g). 3. இல்லை.,

V. 1.இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. 'அகத்தியர் ஞான அமுதம்' (தாமரை நூலகம், 1995) என்ற நூலில் 'அகத்தியர் குழம்பு 10' என்ற நூலும், 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை' (தாமரை நூலகம், 1996) என்ற நூலில், 'அகத்தியர் வகார சூத்திரம் 10', 'அகத்தியர் அடுக்குநிலைப் போதம் 10' என்ற நூல்களும் பத்து என்ற அடிப்படையில் அமைந்த நூல்களாகும்.

## அகத்தியர் 10

I. 1.15. 2. அ. R. 168 (d). ஆ. T.R. 152. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 10. ஆ. Akattiyar cūttiram 10. இ. அகத்தீசரருளிய சூஸ்திரம் 10. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி. 10. 1914-15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 30 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 6; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் முப்பு பற்றிக் கூறுகின்றது. 2. முப்பு - மருத்துவம். 3. வரிசை எண் 13 போன்றது.

4. அகத்தியர் அருளிச்செய்த சூஸ்த்திரம் பத்து.

5. பாரப்பா வாதியென்றால் பூசை வேணும்
பரிவாகச் சிவம்வேணும் தியானம் வேணும்
நேரப்பா வாசியென்றால் யோகம் வேணும்
நேராக லட்சியத்தில் நிறுத்த வேணும்
காரப்பா குருபதத்தைக் காக்க வேணும்
கைகாட்டித் தொழில்முறையா யறிய வேணும்
சாரப்பா சாஷ்த்திரத் திரமும் பார்த்துக்
கருவங்கள் பார்த்துநீ வாதம் பாரே. 1

6. போமடா கரியோட்டி லூதும் போது
புகழாகக் கண்விட் டாடு மாடும்
நாமடா நல்லுப்பைக் கூட்டி யூத
நல்லதொரு வயிரமணி போலே யாகும்
ஆமடா யாணவத்தால் வெளியே போட்டால்
அடங்காதே கள்ளரென்ற மானிடர்க்கு மப்பா
தாமடா விதுவெல்லா மறிந்து கொண்டு
தாரணியில் விள்ளாதே அடக்க முற்றே. 10

7. வேலும் மயிலும் துணை.

8. மூலம். 9. பாடல்கள் முன்னிலையாரை அழைத்துக் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. அமுரி, அண்ட ஓடு போன்ற பரிபாஷைகள் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 2319, R. 7886, R. 2486. 2. ஆ.நி.எண் 656 (g). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), 'அகத்தியர் முப்பு சூத்திரம்', பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் 'அகத்தியர் முப்பு சூத்திரம் 10' என்ற பெயராலும் அழைக்கப்படுவதைத் தாமரை நூலகத்தாரின் பதிப்பிலிருந்து அறிய முடிகிறது. இதனால் அகத்தியர் 10, அகத்தியர் சூத்திரம் 10, அகத்தியர் முப்பு 10 என்பவை ஒரே பொருள் பேசுவன என்பதறியலாம்.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. சுந்தரானந்தர் விநோத சூத்திரம்.
b. போகநாதர் சூத்திரம் எட்டு.
c. சட்டைமுனி நாயனார் சூத்திரம் எட்டு.
e. அகத்தியர் முப்பு பதினாறு.
f. அகத்தியர் ஊழிக்காற்று விபரம்.
g. பஞ்சாட்சரம்.
h. வைத்தியமுறை.
i. அகத்தியர் உட்கருவு சூத்திரம்.
j. சட்டைமுனி தர்க்கம்.
k. அகஸ்தியர் சாஸ்திரம் இருபது.

## அகத்தியர் 10

I. *1.* **16**. *2.* அ. D. 2319. ஆ. T.D. 905. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சூத்திரம் *10*. ஆ. Akattiyar cūttiram 10. இ. அகஸ்த்தியர் சூத்திரம் பத்து. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* ஓரளவு தெளிவு. *4. 2. 5.* 40 x 2 செ.மீ. *6.* ஒரு துளை. *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* நொறுங்கியது. *12. 3;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்துக்கு *6* வரிகள். *14.* விருத்தம். *15.* முதல் ஓலை ஒடிந்துள்ளது. *16.* முழுமை. *17. 10* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* இந்நூல் முப்பு பற்றிக் கூறுகின்றது. *2.* இரசவாதம். *3.* வரிசை எண் *13* போன்றது.

*4.* —.

5. பாரப்பா வாதியென்றால் பூசை வேணும்
பாங்கான சிவம்வேணும் யோகம் வேணும்
..... ..... ..... .....
..... ..... ..... .....

காரப்பா குருபதத்தைக் கார்க்க வேணும்
கைகாட்டித் தொழில்முறையா யறிய வேணும்
..... ..... ..... .....
கருவங்கள் பார்த்துநீ வாதம் பாரே. 1

6. போமடா கரியோட்டி லூதும் போது
புகழாகக் கண்விட்டு ஆடு மாடும்
னாமடா நல்லுப்பைக் கூட்டி யூத
நல்லதொரு வயிரமணி போலே யாகும்
னாமடா ஆணுவத்தால் வெளியில் போட்டேன்
னாட்டாதே கள்ளரென்ற மானிட ருக்கு
தாமடா யிதுவெல்லா மறிந்து கொண்டு
தாரணியில் விள்ளாதே அடக்க முற்றே. 10

7. —.

8.மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடபேதங்கள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இரசவாதிகளை 'வாதிகள்' என்று இந்நூல் கூறுகின்றது. 11. இல்லை.

IV. 1. R. 168(d), R. 7876, R. 2486. 2. ஆ.நி.எண் 656(g). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.)'அகத்தியர் முப்பு சூத்திரம்', பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. 'முப்பு' பற்றிப் பல எண்ணிக்கைகளில் பாடல்கள் இருந்தாலும் 'இலட்சம் பாடல்கள்' இருப்பதாகத் தெரியவில்லை.

## அகத்தியர் 14

I. 1. **17.** 2. அ. R. 175(g). ஆ. T.R. 159. இ.—. ஈ. —. 3. அ. அகத்தியர் 14. ஆ. Akattiyar 14. இ. அகஸ்திய சுவாமி சொன்ன ரசமணி பதினான்கு. (தட்சிணாமூர்த்தி ரஸமணி பதினான்கு). 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. 1914-15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 27 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு 12. 6; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள் 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசமணி செய்யும் விதமும் ஞான மார்க்கம் பற்றிய செய்திகளையும் கூறும் நூல். 2. ஞானம் - இரசவாதம். 3. அகத்தியர் பதினான்கு என்னும் இந்நூலில் அகத்திய மாமுனிவர் அருளியதான ஞான உபதேசம் பற்றிய செய்திகளும், ஞான உபதேசம் கேட்கும்முன் இரசமணி என்ற மருந்து தயாரிக்கும் முறையும் கூறப்படுகின்றன. இந்நூல் முதலாவதாகப் பார்வதி, கணபதி, நந்தி போன்ற தெய்வங்களை வணங்கிப் பின் இரசமணி என்ற குளிகை செய்வதைப் பற்றிக் கூறுகிறது. இக் குளிகையை உண்டு, முறையாக ஞானம் பயில வேண்டும் என்றும் அது வலியுறுத்துகிறது. மேலும், இம் முறையின் பேரில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு மட்டும்தான் இதைச் சொல்லவேண்டும்; மற்றவர்களுக்குச் சொல்லக் கூடாது என்ற கட்டளையையும் இடுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக அகஸ்த்திய சுவாமி சொன்ன
இரசமணி பதினான்கு.

5. ஆதியந்த மில்லாத சின்மயத்தின் பாத
மகண்டபரி பூரணமா மாத்தாள் பாதஞ்
சோதிநிற மாகிநின்ற கிணேசன் பாதஞ்
சொற்றனக்கு மெட்டாத சூஷ்மா சூஷ்மம்
வீதியென்ற பராபரத்தின் னந்தி பாதம்
வேதாந்த சாஷ்திரத்தின் வெளியின் மார்க்கஞ்
சோதியென்னும் பராபரத்தி னடனஞ் செயித
சுடரொளியின் பாதமது காப்புத் தானே. 1

6. பார்க்கவே யிம்முறையைச் சொன்னா யானால்
பாழான ரசமெய்தும் பாரு பாரு
கார்க்கவே சீஷனுட மனதைக் கண்டு
கைமுறையாய்ச் சொல்லிவிடு ஞான மார்க்கம்

யேற்கவே ரசமணியின் மார்க்கம் தானும்
யென்மக்காள் சொல்லிவிட்டேன் யோக மார்க்கம்
சேர்க்கவே யிம்முறையை யுனக்குச் சொன்னேன்
செழுங்கருணைப் பதினான்கு சிறக்க முற்றே.

7. அகஸ்திய சுவாமி சொன்ன ரசமணி பதினான்கு முற்றும். குருவேதுணை. 5592

8. மூலம். 9. தாழ்ந்த நடை. ர- ற, ள-ழ வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. பிழைகள் மலிந்த நடை. 10. முற்காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் ஞானம் பற்றிய தெளிவு பெற்றுப் பல்லாண்டுகள் மண்ணுலக மக்களுக்குச் சேவை செய்து வந்ததை இது போன்ற நூல்களின் மூலம் அறிய முடிகின்றது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ப.க. 970, ஆ.நி. 509 (e). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய சில்லறைக் கோவை (முதல்பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இரசம் என்பதைப் பாதரசம் என்றும் கூறுகின்றார்கள். இது வெள்ளி போல் பளபளப்பான திரவப் பொருள் ஆகும். தொட்டால் கையில் ஒட்டாது; கனமானது. நெருப்பில் வைத்தால் ஆவியாகப் போய்விடும். இது ஐரோப்பா, அமெரிக்கா, திபேத், சீனா முதலிய நாடுகளில் கனிமங்களாக வெட்டி எடுக்கப்படுகிறது. இந்துக்கள் இதைச் சிவ வீரியம் என்பர். இதை மருந்துகளில் உபயோகிக்கையில் இதற்குள்ள எண்வகைத் தோஷங்களை நீக்கத்தக்க சுத்தி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் பயன்படுத்தினால் பல விகாரங்களை உண்டாக்கும். நம்நாட்டுச் சித்தர்கள் இந்த இரசத்தைப் பல மூலிகை முதலிய பொருள்களிலிருந்து பெறுகின்றார்கள். அதன் மூலம் இரசகற்பூரம், இரசபதங்கம், இரச செந்தூரம், இரசபற்பம் போன்ற பல மருந்துகள் செய்து மக்களின் பிணிகளை அகற்றி வந்தார்கள்.

அகத்தியர் 14 என்ற இந்நூல் 'அகஸ்திய சுவாமி சொன்ன இரசமணி பதினான்கு', 'தட்சிணாமூர்த்தி இரசமணி பதினான்கு' என்ற பெயர்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.

இச்சுவடிக்கட்டிலுள்ள உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. உரோமரிஷி சுருக்கம் பதினாறு.
b. அகத்தியர் கலை ஞானச் சுருக்கம் - 12.
c. அகத்தியர் சூத்திரம் பன்னிரெண்டு.
d. சூரியானந்தர் சூத்திரம் பதிமூன்று.
e. போகர் சூத்திரம் பதினாறு.
f. சட்டைமுனி பூரண சூத்திரம் இருபத்தைந்து.
h. அகத்தியர் வழலை முப்பது.
i. அகத்தியர் யோகம் பதினாறு.
j. அகத்தியர் மெய்ச் சுருக்கம் ஐம்பத்தொன்று.
k. மகா காரண பஞ்சாக்கரம்.
l. சட்டைமுனி தர்க்கம்.
m. ஆத்திச் சூடி வெண்பா.

## அகத்தியர் 16

I. 1. **18.** 2. R.4731(a). ஆ. T. R. 2086. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 16. ஆ. Akattiyar 16. இ. அகஷ்தியர் 16. 4. —. 5. —. 6. —. 7. —. 8. —. அ.கீ.சு. நூ., சென்னை-5, 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 28 x 2 செ. மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 12; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 18 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஈளை, காசம், எலிகடி, பித்தப்பாண்டு போன்ற பல வகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் 16 என்ற இந்நூலின் முதற் பாடலில் அரிதாரம் மண்ணாகவும், சவ்வீரம் நீராகவும், கெவுரி தேயுவாகவும், வெள்ளை வாயுவாகவும், இலிங்கம் ஆகாசமாகவும் கூறப்படுகின்றன. அரிதாரக்கட்டி வாங்கி அதைச் சுண்ணாம்பில் வைத்துச் சுத்தி

செய்து ஈளை, காசம், எலிகடிகள், விஷம், பித்தப் பாண்டு, குளிர்காய்ச்சல், மகோதரம் போன்ற நோய்களுக்குக் கொடுத்தால் குணமாகும் என்று இந்நூல் கூறுகின்றது. சவ்வீரக் கட்டி வாங்கிச் சுத்திசெய்து மிளகில் சேர்த்து அரைத்துச் சுவாசகாசம், நீராமை, வீக்கம், எட்டு வகைக் குன்மம், இளைப்பு, நெஞ்சடைப்பு இவற்றுக்குக் கொடுத்தால் அவை குணமாகும். மேலும், சூலை, வயிற்றிற் கெண்டை, நீரிழிவு, போன்ற நோய்களுக்கும் கொடுத்து வந்தால் குணமாகும் என்று இந்நூல் கூறுகின்றது. கெவுரியைச் சுத்தி செய்து சுக்கின் தண்ணீரில் கலந்து நெல் எடைக்கு மேல் கொடுத்து வந்தால் தோஷம், சுரம் போகும் என்றும் கரும்புக்கட்டியில் வைத்துக் கொடுக்க சொறி, கிரந்தி, அரிகிரந்தி, மேகம், வயிற்றுவலி, இவையெல்லாம் போகும் என்றும் கூறுகின்றது. வெள்ளைப் பாஷாணத்தைப் பாங்காக எருக்கம் பால் விட்டு ஆட்டிச் சிறுபயறு அளவு உருண்டையைச் சாப்பிட்டு வந்தால் பெருவயிறு, உள் மாந்தை போன்ற நோய்கள் குணமாகும் என்றும் வேப்பிலைச் சாற்றில் கொள்ள சோகை போன்ற நோய்கள் தீரும் என்றும் கூறுகின்றது. மேலும் இலிங்க தோசம், சன்னிதோசம், நெஞ்சடைப்பு, வயிற்றெரிவு, வயிற்றிலூதல், சூலை, பித்தம், காசம், பித்த காமாலை போன்ற நோய்களுக்கு மருந்துகள் செய்யும் விதமும் மருந்துகள் சுத்தி செய்து பயன்படுத்தும் முறைகளும், ஆவிகள் பிடித்துக் குணமாகும் நிலைகள் போன்ற பல வித மருத்துவ முறைகளையும் இந்நூல் கூறுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் பதினாறு.

5. அரிதாரம் பிருதிவி யாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு மாகும்
பெரிதான கெவுரியது தேய்வு மாகும்
பின்னையொரு வெள்ளையுமே வாய்வு மாகும்
அரிதான லிங்கமது ஆகாச மாகும்
அதுகளெல்லாம் பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே யென்னு லப்பா
சித்தரையா சொன்னவித்தை செகத்தில் பாரே. 1

6. துத்தங்கால் துரிசுகால் துகையில்
ஒன்ப துவகை யதுவும்
மெத்த அரைத்துப் பொடியாக்கி
வேரை ஒன்பதாய்க் கிழிக்கட்டி

பத்தியுடனே கவீபபந்தி பருத்த
புளிப்பன் சீராய்த் தீயில்
நித்தமோ ருஞ்சோறு முண்டு
நிரையளவு கையீரனா லரைநாள். 18

7. அகஸ்தியர் வயித்திய சூஸ்திரம் முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பிழைகள் அதிகம். ற- ர வேறுபாடில்லை. பேச்சுவழக்கும் பயின்று வருகின்றது. பாடவேறுபாடுகள் உள்ளன. 10. அக்காலத்தில் மருந்துகள் செய்வதற்கான மூலப் பொருள்களை முறையாகச் சுத்தி செய்த பின்புதான் நோய்களுக்கான மருந்துகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக் கின்றன. இந்நூலில் மட்டும் 18 பாடல்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. 11. இல்லை.

VI. 1. D.1902, D.1903, R.145(e), R.163(a), R.945(e), R.1079, R.2541, R.3613, R. 3692, R.3723, R.9052. 2. த.ப.க. எண். 734 த.ச.ம.நூ.எண்.185(b) உ.த.நி.எண.487:742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. 'அகத்தியர் சூத்திரம் 16' (ஆ.நி.எண் 509-f), என்ற நூலிலுள்ள பாடல்கள், இதிலிருந்தும் முற்றிலும் மாறுபட்டுள்ளன. அங்குத் 'தங்கபூரகம்' செய்யும் முறை கூறப்பட்டுள்ளது. மேலும் 16 என்ற விருத்தப்பா அடிப்படையில் அகத்தியர் பெயரிலும் பிற பெயர்களிலும் பல நூல்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு: அகத்தியர் முப்பு தீட்சை 16 (அகத்தியர் முப்பு சூத்திரங்கள், தாமரை நூலகம், 1993), அகத்தியர் பூர்வ பட்சம் பூசாவிதி 16, அநாதி நாதரென்ற நாதாந்தச் சித்தர் சூத்திரம் 16, வால்மீகர் சுத்த ஞானம் 16, (அகத்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், 1995), அகத்தியர் தர்க்க சங்கிரகம் 16, அண்டக்கல் முப்பு சுண்ணம் 16, முப்பு கெந்தகத் தயிலம் 16, பச்சைவெட்டு வைத்திய சூத்திரம் 16 (பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம் 1996). இச் சுவடிக்கட்டில் அகத்தியர் 16 என்ற நூலுடன் அகத்தியர் வைத்திய சிந்தாமணி என்ற நூலும் (R.4731) உள்ளது.

# அகத்தியர் 16

I. 1. **19.** 2. அ. R. 145 (e). ஆ. T.R. 129. இ. 3. அகத்தியர் வயித்தியம் 16. ஆ. Akattiyar vayittiyam 16. இ. அகத்திய சுவாமியார் வயித்தியம் பதினாறு. 4. —. 5. —. 6. காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன். 7. —. 8. அ. கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும், பயனும் கூறப்பட்டுள்ளன. 2. மருத்துவம். 3. வரிசை எண் 18 போன்றது.

4. —.

5. அரிதாரம் பிரிதிவி(யாய்) ஆகி நிற்கும்
ஆனதோர் சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயு வாகும்
வரிதான லிங்கந்தான் ஆகாச மாகும்
வருந்தியே பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே என்னு லப்பா
சித்தியாய்ச் சொன்னவித்தை செகத்தில் பாரே. 1

6. ஏத்திடு சன்னி தோஷம்
எழும்பிடுங் குஷ்ட ரோகம்
பார்த்திடும் பரங்கிச் சூலை
பலகடி முதலா யுள்ள
கோர்த்திடில் கண்ட மாலை
குன்மங்கள் முதலாய்த் தீரும்
போற்றிடு தீரு மென்றே
பொருப்புமேல் இருந்தோர் சொன்னார். 16

7. சிவகிருபை யுண்டாகவும்.

8. மூலம். 9. அந்தாதி யாகவும் பேச்சுமொழிச் சொற்கள் கலந்தும் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. பாடல்கள் எண்சீர் விருத்தத்திலும் அறுசீர் விருத்தத்திலும் உள்ளன. 11. விய வருஷம் மார்கழி மாதம் காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகத்திய மகாமூர்த்தி வயித்தியம் பதினாறு எழுதி நிறைவேறியது. முற்றும்.

IV. 1. D. 1902, D.1903, R.163(a), R.945(e), R. 1079, R. 2541, R.3613, R.3692, R.3723. R.473(a), R. 9052. 2. த.ப.க.எண் 734, த.ச.ம. நூ.எண் 185(b), உ.த.நி.எண்.487:742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர், சூத்திரம் 16, பச்சை 16, பச்சைவெட்டு 16 என்று பல பெயர்களில் அழைக்கப் படுவதிலிருந்து இதன் சிறப்பை அறிய முடிகிறது.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. தன்வந்திரி முன்னூறு.
b. கொங்கணர் நடுக்காண்டம்.
c. சட்டைமுனி கற்பங்கள்.
d. அகத்தியர் வாத சூத்திரம் நூறு.
f. அகத்தியர் களங்கு அறுபது.
g. சுந்தரானந்தர் சூத்திரம்.
h. நந்திதேவர் தண்டகம்.
i. சொரூபானந்தருப நிடதம்.
j. கௌசிக முனிவகார சூத்திரம்.
k. வாலைக் கும்மிப் பாடல்.

## அகத்தியர் 16

I. 1.20. 2.அ. R. 3723. ஆ. T.R. 1817. இ. —. ஈ. —. 3. அகத்தியர் சூத்திரம் 16. அ. அகஷ்த்தியர் பதினாறு. ஆ. Akattiyar cūttiram 16. 4. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 22. 5 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 8; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது.. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகை நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும், பயனும் கூறப்பட்டுள்ளன. 2. மருத்துவம். 3. வரிசை எண் 18 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக.

5. **அரிதாரம் பிருதிவி(யாய்) யாகி நிற்கும்**
**ஆனதொரு சவ்வீர மப்பு மாகும்**
பெரிதான கெவுரியது தேய்வு மாகும்
பின்னுமொரு வெள்ளையதே வாய்வு மாகும்
அரிதான லிங்கமா காச மாகும்
வருந்தியே பச்சையுட னாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே யின்னூ லப்பா
சித்தரய்யா சொன்னவித்தை செகத்தில் பாரே. 1

6. யே(ற்) றிடில் சன்னி தோஷம்
எழும்பிடில் குஷ்ட்ட ரோகம்
பார்த்திடில் பரங்கி சூலை
பலகடி முதலா யுள்ள
கோத்திடில் கண்ட மாலை
குன்மங்கள் முதலாய்த் தீரும்
போற்றிடில் தீரு மென்று
பொருப்புமே லிருந்து சொன்னார். 16

7. அகஷ்த்திய மாமுனி பட்சைவெட்டுப் பதினாறு முற்றும்.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பிழைகள் மிகுதி. பாடபேதங்கள் உள்ளன. வடமொழி எழுத்துகள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இந்நூல் `அகத்தியர் வைத்தியம் 16' என்றும் `அகத்தியர் பாடல் 16' என்றும் பெயர் பெறுகிறது. 11. இல்லை.

IV. 1. D. 1902, D.1903, R.163(a), R.945(e). R. 1079, R. 2541, R. 145(e), R.3613, R.3692, R.4731(a), R-9052. 2. த.ப.க.எண் 734, த.ச.ம. நூ.எண் 185(b), உ.த.நி.எண் 487:742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் 16 பாடல்களைப் பெற்றிருப்பினும் பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் பல வகை மருந்துகளைச் சொல்லிச் செல்வதால் பெரிய நூலின் தரத்தினைப் பெறுகின்றது.இச் சுவடிக்கட்டில் அகத்தியர் 16 என்ற நூலுடன் அகத்தியர் சூத்திரம் 48 (R.3725), அகத்தியர் குறுநூல் (R.3726), அகத்தியர் வைத்திய சூத்திரம் 205 (R.3727), அகத்தியர் பூரண சூத்திரம் (R.3728) முதலிய பல நூல்களும் உள்ளன.

## அகத்தியர் 16

I. 1. **21**. 2. அ. R. 3613. ஆ. T.R. 1780. இ. —. ஈ.—. 3. அ. அகத்தியர் பச்சை வெட்டு 16. ஆ. Akattiyar paccaivettu 16. இ. அகத்தியர் பாடல் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ.,சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 19 x 3 செ. மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 12; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ.—.

III. 1. பலவகை நோய்களுக்கான மருந்துகள் தயாரிப்பும், பயனும் இந்நூலில் கூறப்படுகின்றன. 2. மருத்துவம். 3. வரிசை எண் 18 போன்றது.

4. —.

5. அரிதாரம் பிருதிவியே யாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரியோ தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளையோ வாயு வாகும்

வரிதான லிங்கமது ஆகாச மாகும்
வருந்தியே பச்சையுடன் மாட்ட லாகுந்
தெரியாத வயித்தியரே யென்னூல் பாரே
சித்தரய்யா சொன்னவித்தை சிகத்தில் பாரே. 1

6. ஏத்திடில் சன்னி தீரும்
எழும்பிடில் குட்டந் தீரும்
பாத்திடில் பரங்கி தீரும்
பாருவை சூனியந் தீருங்
கோர்த்திடுங் கண்ட மாலை
குன்மங்கள் முதலாய்த் தீரும்
ஏத்திடும் வியாதிக் கெல்லாம்
ஏழுநாள் பத்திய மாமே. *16*

*7.* முற்றும் குரு பாதந்துணை.

*8.* மூலம். *9.* பாடல்கள் அந்தாதியில் அமைந் துள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் வந்துள்ளன. செகம் என்பது சிகம் என வருதல் காண்க. *10.* அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. சீடருக்கு குரு கூறுவது போலுள்ளது. *11.* இல்லை.

IV. 1. D. 1902, D.1903, R.145(e), R. 163(a), R.945(e), R. 1079, R.2541, R.3692, R.4731(a), R. 3723, R.9052. *2.* த.ப.க.எண் *734*, த.ச.ம.எண் 185(b), உ.த.நி.எண் *487:742*. *3.* இல்லை.

V. *1.* இல்லை. *2.* எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, *1996*. *3.* இல்லை.

VI. இந்நூல் *16* பாடல்களைப் பெற்று விளங்கினாலும் இறுதிப்பாடலான `ஏத்திடில் சன்னி தீரும்...' என்ற பாடல் பல்வேறு பிரதிவேறுபாடுகளைக் கொண்டதாக அமைகிறது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் *16* என்ற இந்நூலுடன் அகத்தியர் குழம்பு வாகடம், அகத்தியர் சூத்திரம் *36*, அகத்தியர் சூத்திரம் *205*, அகத்தியர் வைத்திய சூத்திரம் *150*, அகத்தியர் பூரண சூத்திரம் *48* முதலிய பல நூல்களும் உள்ளன.

# அகத்தியர் 16

I. *1.* **22.** *2. அ.* R. 3692. *ஆ.* T.R. 1800. *இ.* —. *ஈ.* —. *3. அ. அகத்தியர் சூத்திரம் 16. ஆ.* Akattiyar 16. *இ. அகஷ்த்தியர் சூத்திரம் 16. 4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9.* —. *10.* —.

II. *அ. 1.* னிகட்டு. *2.* தமிழ். *3.* ஓரளவு தெளிவு. *4. 8. 5.* 14 x 3 செ.மீ. *6.* ஒரு துளை. *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* நொறுங்கியது. *12. 16* ; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *6* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 16* பாடல்கள்.

*ஆ.* —.

III. *1.* பலவகை நோய்களுக்கான மருந்துகளும் அவற்றின் பயனும் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* வரிசை எண் *18* போன்றது.

4. —.

5. அரிதாரம் பிருதிவியாய் ஆகி நிற்கும்
ஆனதோர் சவ்வீரம் அப்பு மாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயு வாகும்
வரிதான லிங்கமா காச மாகும்
வருந்தியே பச்சையுடன் மாட்ட லாகுந்
தெரிந்தொரு வயித்தியரே யின்னூ லைப்பார்
சித்தரய்யா சொன்னவித்தை சிகத்தில் பாரே. 1

6. ஏத்திடில் சன்னி தோசம்
எழும்பிடில் குட்டந் தீரும்
பாத்திடப் பரங்கி தீரும்
.... சூனியமுந் தீரும்
கோர்த்திடுங் கண்ட ...
... முதலாத் தீரும்
ஏர்த்திடு ....
மேழுநாள் பத்திய மாமே. 16

7. —.

8. மூலம். 9. பாடல்களில் பிழைகள் மிகுதி. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. பல பிரதிகள் இந்நூலுக்கிருக்கின்றன. 11. இல்லை.

IV. 1. D. 1902, D.1903, R.145(e), R. 163(a), R.945(e), R. 1079, R.2541, R.3613, R.4731(a), R. 3723, R.9052. 2. த.ப.க.எண்.734, த.ச.ம.எண் 185(b), உ.த.நி.எண்.487:742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூற் சுவடி மிகவும் சிதைந்துள்ளது. இந்நூலை அகத்தியர் பெயரில் பாடியவர். அவரைச் சித்தரய்யா எனக் கூறுவதைக் காண்க. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் 16 என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 12, அகத்தியர் வைத்தியம் 1500 ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் 16

I. 1. **23**. 2. அ. R. 163(d). ஆ. T. R. 147. இ. —. ஈ.—. 3. அ. அகத்தியர் பச்சை 16. ஆ. Akattiyar paccai 16. இ. அகஸ்தியர் பச்சை 16. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. 1914-15 ஆம் ஆண்டில் சென்னை திருவல்லிக்கேணி காதிர் பைக் சாகிபுவிட மிருந்து பெற்ற சுவடி இது.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 33 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 10 ; இறுதி ஏட்டின் பின்பகுதி 1 வரி மட்டும் உள்ளது. மற்ற பக்கங்கள் முழுவதிலும் முழுமையாக எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பில் தோன்றும் வியாதிகளுக்கு மருந்துகள் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 18 போன்றது.

4. அகஷ்தியர் பச்சை 16.

5. அரிதாரம் பிருதிவி யாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு மாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயு வாகும்
விருவதான லிங்கமா காச மாகும்
மெனமந்த பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியனே யென்னு லப்பா
சித்தரைய்யா சொன்னவித்தை செகத்தில் பாரே. 1

6. செய்யடா சன்னியோடு சுரதோ ஷம்போம்
சுகசன்னி வாய்வுபித்தம் சிலேற்ப னந்தான்
நய்யடா காசமொடு யீளை சூளை
நலமான பாண்டுமகோ தரமாங் குன்மம்
பைய்யடா காமாலை சோகை மூர்ச்சை
பத்திவரும் கிரிசனங்கள் நீர டைப்பு
வைய்யடா இன்னும்வெகுநோய்க ளெல்லாம்
மகத்தான சஞ்சீவி பஞ்ச முத்தே. 16

7. அகஸ்தியர் வயித்திய முத்தும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் உள்ளன; பேச்சு வழக்குச் சொற்கள் மிகுதி; பிழைகள் அதிகம். 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இந்நூலின் இறுதிப்பாடல் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 1902, D.1903, R.145(e), R.945(e), R. 1079, R.2541, R.3613, R.3692, R. 3723, R.473(a), R.9052.. 2. த.ப.க.எண் 734, த.ச.ம.எண் 185(b), உ.த.நி.எண் 487:742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் 16, அகத்தியர் சூத்திரம் 16, சென்னை திருவல்லிக்கேணி காதிர் பைக் சாகிபுவிடமிருந்து பல மருத்துவ ஓலைச்சுவடிகள் வாங்கப்பெற்றிருப்பது ஆங்காங்கே ஆங்கிலத்தில் எழுதப்பெற்றிருக்கும் அ.கீ.சு. நூலகக் குறிப்புகளிலிருந்து தெரிகிறது.

இச்சுவடிக்கட்டிலுள்ள நூல்கள் பின்வருமாறு:

a. சுந்தரானந்தர் சூத்திரம்.
b. போக ராகர சுண்ணம்.
c. உரோமரிஷி ஐம்பத்தொன்று.

## அகத்தியர் 16

I. 1. **24**. 2. அ. R. 2541. ஆ. T.R. 1391. இ. —. ச. —. 3. அ. அகத்தியர் வைத்தியம் 16. ஆ. Akattiyar vaittiyam 16. இ. அகத்தீசர் வயித்தியம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அக.கீ.சு.நூ., சென்னை - 5. 9. —. 10. —.

II. அ. 1.உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 7. 5. 18 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 14; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 17 பாடல்கள்.

III. 1. பல்வேறு நோய்களைப் போக்கும் மருந்துகளைக் கூறும் நூல் . 2. மருத்துவம். 3. வரிசை எண் 18 போன்றது.

4. —.

5. அரிதாரம் பிருதிவியாய் யாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரியது தேய்வு மாகும்
பின்னையொரு வெள்ளையது வாயு வாகும்
வரிதான லிங்கமா காச மாகும்
வருந்தியே பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே யென்னு லப்பா
சித்தரையா சொன்னவித்தை செகத்தில் பாரே. 1

6. சொன்னதோர் சூத்தி ரத்தின்
சூட்சமாய் யிந்த நூல்தான்
முன்னமே சொன்ன நூல்களில்
முக்கிய மிந்த நூல்தான்
அன்னமே பூதி நாறாக
அடக்கினார் சாத்தி ரத்தை
இன்னமு மிதுக்குப் பாதி
பாதியா யுரைசெய் தோமே. 17

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் உள்ளன. பாடபேதங்கள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 1902, D.1903, R.145(e), R. 163(a), R.945(e), R. 1079, R.3613, R. 3692, R.3723, R.4731(a), R. 9052.. 2. த.ப.க.எண் 734, த.ச.ம.எண் 185(b), உ.த.நி.எண் 487:742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலின் இறுதிப்பாடல் இதே நூலின் மற்ற பிரதிகளினின்றும் வேறாக அமைந்துள்ளது.

## அகத்தியர் 16

I. 1. **25**. 2. அ. D. 1902. ஆ. T.D. 743. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய சூத்திரம் 16. ஆ. Akattiyar vaittiya cūttriram 16. இ. வயித்திய சூஷ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ. சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 35 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 5; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. மூன்றாவது ஓலையில் ஒரு பக்கம் மட்டும் எழுதப்படவில்லை. 13. பக்கத்திற்கு 7 வரிகள் 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல்வேறு நோய்களை நீக்குவதற்குரிய மருந்துகள் கூறப்பட்டுள்ளன 2. மருத்துவம் 3. வரிசை எண் 18 போன்றது. மேலும், இந்த நூலில் உடம்பில் ஏற்படும் ஈளை, காசம், எலிகடி, பித்த ரோகம், பாண்டு, குளிர்காச்சல் முதலான பல்வேறு நோய்களை நீக்குவதற்குரிய மருந்துகளும் அவற்றைத் தயாரிப்பதற்குரிய பொருள்களும் கூறப் பெற்றுள்ளன.

4. —.

5. அரிதாரம் பிருதிவியாய் ஆகி நிற்கும்
ஆனதோர் சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயு வாகும்
விரிவான லிங்கமா காச மாகும்
வருத்தியே பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே யின்னூ லைப்பார்
சித்தரய்யா சொன்னவித்தை செகத்தில் பாரே. 1

6. ஏத்திடில் சன்னி தோஷம்
எழும்பிடில் குஷ்ட ரோகம்
பாத்திட பரங்கிச் சூலை
பலகடி முதலா யுள்ள
கேர்த்திடில் கண்ட மாலை
குன்மங்கள் முதலாய்த் தீரும்
போத்திடில் தீரு மென்றே
பொருப்பின்மேலி ருந்து சொன்னார். 16

7. சற்குரு பாதந்துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் உள்ளன. பிழைகள் மிகுதி. 10. அகத்தியர் 16 என்னும் இந்நூலிற்குச் சூத்திரம் 16, அகத்தியர் வைத்தியம் 16, அகத்தியர் வைத்திய சூத்திரம் 16, அகத்தியர் பச்சை 16, அகத்தியர் பச்சைவெட்டு 16 என வேறு பெயர்களும் வழங்கிவருகின்றன. 11. இல்லை.

IV. 1. D. 1903, R. 145 (e), 163 (a), R.945(e) R. 1079, R. 2541, R. 3613, R 3692, R. 3723, R. 4731(a), R. 9052. 2. த.ச.ம.எண் 185(b), உ.த.நி.எண் 487:742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. 1. இச்சுவடிக் கட்டில் D. 1889 என்ற எண் இடப்பெற்ற அகத்தியர் பூரண சூத்திரம் 216 என்ற நூல் முதலில் உள்ளது. அதன் பின் 50 ஆம் ஓலையிலிருந்து இந்த நூல் தொடங்குகிறது.

# அகத்தியர் 16

I. *1.* **26**. *2.* அ. D. 1903. ஆ. T.D. 749. இ. —. ஈ. —. *3.* அ. அகத்திய வைத்திய சூத்திரம் *16.* ஆ. Akattiya vaittiya cūttiram 16. இ. அகஸ்த்திய னாயனாரருளிச்செய்த வயித்தியம் பச்சை வெட்டு பதினாறு. *4.* —. *5.* —. *6.* புதுச்சேரி தில்லை சிதம்பரம். *7.* —. *8.* அ.கீ.சு. நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* ஓரளவு தெளிவு. *4. 3.* *5.* 28 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிதைவு. *12. 6;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 7 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 16* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* பல்வேறு நோய்களை நீக்குவதற்குரிய மருந்துகள் கூறப்படுகின்றன. *2.* மருத்துவம். *3.* வரிசை எண் *18* போன்றது.

4. —.

5. அரிதாரம் பிருதிவி யாகி நிற்கும்
மானதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயு வாகும்
அரிதான லிங்கமே ஆகாஷ மாகும்
வருந்தியே பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே யின்னூல் பாரு
சித்தரையா சொன்னவித்தை செகத்தில் பாரே. 1

6. ஏத்திடில் சன்னி தோஷம்
எழும்பிடில் குட்டம் தீரும்
பாத்திடில் பரங்கிச் சூலை
பலகடி முதலா யுள்ள
கோத்திடில் கண்ட மாலை
குன்மங்கள் முதலாய்த் தீரும்
போர்த்திடில் தீரு மென்று
பொருப்பின்மே லிருந்து சொன்னார். 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் உள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் மிகுந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. 11. அகஸ்தியனா ரருளிச் செய்த பச்சை வெட்டு பதினாறு புதுச்சேரி தில்லைச்சிதம்பரம் யெழுதி முடிந்தது முற்றும்.

IV. 1. D. 1902, R. 145 (e), R. 163 (a), R. 1079, R. 2541, R. 3513, R. 3692, R. 3723, R. 4731 (a), R. 9052, R. 945(e). 2. த.ச.ம.எண் 185(b), உ.த.நி.எண் 487:742, த.ப.க.எண்734. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. 1.இந்நூல் வைத்திய சூத்திரம் 16, வைத்தியம் 16, பச்சை வெட்டு 16 என்ற பல பெயர்களில் சித்தர்களாலும் மருத்துவர்களாலும் பயன்படுத்தப் பெற்ற செய்தியினை அறியமுடிகின்றது.

## அகத்தியர் 16

I. 1. **27**. 2. அ. R.945(e). ஆ. T.R. 764 இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம் 16. ஆ. Akattiyar vaittiyam 16. இ. அகத்தியர் பாடல் வயித்தியம் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 21 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிதைவு. 12. 11; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம் 3. வரிசை எண் 18 போன்றது.

4. அகஸ்தியர் பாடல் வயித்தியம் பதினாறு.

5. அரிதாரம் பிருதிவி யாகி நிற்கும்
ஆனதோர் சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயு வாகும்
வரிதான லிங்கமா காச மாகும்
வருந்தியே பச்சைதான் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே யின்னூ லைப்பார்
சித்திரைய்யா சொன்னவித்தை செகத்தில் பாரே.1

6. ஏத்திடில் சன்னி தோஷம்
எழும்பிடில் குட்டம் தீரும்
பாத்திடில் பரங்கி தீரும்
பார்வைசூ னியமுந் தீரும்
கோத்திடில் கண்ட மாலை
குன்மங்கள் முதலாய்த் தீரும்
யேத்திடில் வியாதிக் கெல்லாம்
யேழுநாள் பத்திய மாகும்
போர்த்திடில் தீரு மென்று
பொருப்பின்மே லிருந்து சொன்னார். 16

7. அகத்திய சுவாமி வயித்தியம் பதினாறு முகிந்தது. முற்றும்.

8. மூலம். 9. பாடபேதங்கள் மிகுதி. பிழைகள் மலிந்துள்ளன. பாடல்கள் அந்தாதியில் உள்ளன. வடமொழி எழுத்துக்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11.இல்லை.

IV. 1. D. 1902, D. 1903, 145 (e), R. 163 (a), R. 1079, R. 2541, R. 3613, R. 3692, R. 3723, R. 4731 (a), R. 9052. 2. த.ச.ம.எண் 185(b), உ.த.நி.எண் 487:742, த.ப.க.எண் 734. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. 1.இந்நூல் இறுதிப்பாடலில் நான்கு அடிகளுக்குப் பதிலாக ஐந்து அடிகள் வந்துள்ளதைக் காண்க.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. திருமூலர் வைத்தியம் அறுநூறு.
b. திருமூலர் திருமந்திர சூத்திரம் இருநூறு.
c. திருமூலர் வாலை தீட்சை.
d. அகத்தியர் வயித்திய சூத்திரம் ஐம்பது.

## அகத்தியர் 16

I. 1. **28**. 2. அ. R. 9052. ஆ. T.R. 3288. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பச்சை வெட்டு 16. ஆ. Akattiyar paccai vettu 16. இ. அகஸ்தீசுவரர் அருளிச்செய்த பச்சை வெட்டு பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவில்லாதது. 4. 4. 5. 35 x 2.5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிதைவு. 12. 8; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் உள்ள பித்தம், பாண்டு போன்ற பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் போன்றது.

4. ஹரிஓம் நன்றாக குருவாழ்க அகஸ்தீசரருளிச் செய்த பச்சை வெட்டு பதினாறு.

5. அரிதாரம் பிருதிவி யாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயு வாகும்
விருதான லிங்கமா காச மாகும்
மெனமந்த பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியனே யென்னு லைப்பார்
சித்தரையா சொன்னவித்தை செகத்தில் பாரே. 1

6. செய்யடா சன்னியோடு சுரதோ சம்போம்
சுகசன்னி வாய்வுபித்தம் சிலேற்ப னந்தான்
நய்யடா காசமொடு யீளை சூளை
நலமான பாண்டுமகோ தரமாங் குன்மம்
பைய்யடா காமாலை சோகை மூர்ச்சை
பத்திவரும் கரிசனங்கள் நீர டைப்பு
வைய்யடா யின்னும்வெகு நோய்க ளெல்லாம்
மகத்தான சஞ்சீவி பச்சை முத்தே. 16

7. அகத்தியர் வயித்தியம் முற்றும்.

8. மூலம். 9. பாடபேதங்கள் உள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் விரவியுள்ளன. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 1902, D. 1903, R. 145 (e), R. 163 (a), R.945(e), R. 1079, R. 2541, R. 3613, R. 3692, R. 3723, R. 4731(a), 2. த.ச.ம.எண் 185(b), த.ப.க.எண் 734, உ.த.நி.எண் 487:742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. 1.இந்நூல் இச்சுவடி நூலகத்தில் R.163(a), R.1079 போன்றதாகும். இம் மூன்று நூல்களிலும் இறுதிப்பாடலானது ஒன்றாக அமைந்துள்ளது.

## அகத்தியர் 16

I. 1. **29**. 2. அ. R. 1079. ஆ. T. R. 796. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பச்சை 16. ஆ. Akattiyar paccai 16. இ. அகத்தியர் வயித்தி ..... 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 28 x 2 செ.மீ. 6. இரு துளைகள் உள்ளன. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 11; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பில் தோன்றும் வியாதிகளுக்கு மருந்துகள் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 18 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக அகத்தியர் வயித்திய .....

5. அரிதாரம் பிருதிவி யாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேயு வாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாயு வாகும்
விருதான லிங்கமா காச மாகும்
மெனமந்த பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியனே யென்னு லப்பா
சித்தரையா சொன்னவித்தை செகத்தில் பாரே. 1

6. செய்யடா சன்னியோடு சுரதோ சம்போம்
சுகசன்னி வாய்வுபித்தம் சிலேற்ப னந்தான்
நய்யடா காசமொடு யீளை சூளை
நலமான பாண்டுமகோ தரமாங் குன்மம்
பைய்யடா காமாலை சோகை மூர்ச்சை
பத்திவரும் கரிசனங்கள் நீர டைப்பு
வைய்யடா யின்னும்வெகு நோய்க ளெல்லாம்
மகத்தான சஞ்சீவி பச்சை முத்தே. 16

7. அகத்தியர் வயித்தியம் முற்றும்.

8. மூலம். 9. பாடபேதங்கள் மிகுதி; அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 1902, D. 1903, R. 145 (e), R. 163 (a), R.945(e), R. 2541, R. 3613, R. 3692, R. 3723, R. 4731(a), R.9052. 2. த.ப.க.எண்.734, உ.த.நி.487:742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை,' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. பச்சை என்ற பெயரில் நோய்களைத் தீர்ப்பனவாகப் பச்சைக் கடுக்காய், பச்சைக் கற்பூரம், பச்சைக் குங்குமப்பூ, பச்சைத் திப்பிலி வேர், பச்சை நாவி, பச்சைப்பயிறு, பச்சைப்பாக்கு, பச்சைப்புறாக் கறி, பச்சையாற்று நீர், பச்சையிளநீர், பச்சை வஸ்திரம், பச்சை விலாமிச்சிவேர் என்பன கண்டறியப்பட்டுள்ளன. (வைத்திய மூலிகை அகராதி)

## அகத்தியர் 36

I. *1.* **30**. *2. அ.* R. 8836. *ஆ.* T.R. 3152. *இ.* —. *ஈ.*—. *3. அ. அகத்தியர் 36. ஆ.* Akattiyar 36. *இ. அகத்திய நாயன் 36. 4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9.* —. *10.* —.

II. *அ. 1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 16. 5.* 20x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* சிறு சிதைவு. *12. 32;* இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 7 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 36* பாடல்கள்.

*ஆ.* —.

III. *1.* ஞான மார்க்கம் பற்றிக் கூறும் நூல். *2.* யோகம், ஞானம். *3.* இந்நூல் யோக, ஞான முறைகளையும், ஞானத்தை அடைய ஞானிகள் உண்ணும் கற்பங்கள் குறித்த செய்திகளையும் கூறுகிறது. மேலும் சிவபூசை, சத்தி பூசை, சரியை, கிரியை, யோகம், ஞானம் இவற்றினை விளக்கமாக இந்நூல் எடுத்துரைக்கிறது. பலசித்தர்கள் கஞ்சா, எருக்கம்பால், எட்டி, தளைவேர்ப்பட்டை என இவற்றை உண்டு மோனநிலை அடையக் கூறி மக்களைத் திசைதிருப்பும் இழிவான நிலையைச் சாடுகிறது. இதனைத் தவிர்த்து உடம்பின் அடிப்படை நோய்களான வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகியவற்றிலிருந்து விடுபட முதன்முதலில் ஞானநெறியில் செல்வோர் முயலவேண்டும் என்றும், ஞானத்திற்கு முந்திய நிலைகளில் காணப்படும் சரியை, கிரியை, யோகம் ஆகிய நெறிமுறைகளை நன்கு உணர்ந்தவனே ஞான நெறிக்குப் பக்குவப்பட்டவனாகிறான் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக அகத்தியனாயன் முப்பத்தாறு.

**சொல்லும் காலத் துவங்கும்நூல் முப்பத்தாறாய்**
**அல்லும் பகலும் அறிவுணர் - நல்ல**
**குணபதியாம் பூரணத்திற் கூடியென்றும் வாழுங்**
**கணபதியின் பாதமலர் காப்பு.**

5. நூலென்று சொல்வதற்கு அறிவு வேணும்
நுழைந்துஅதைப் பார்ப்பதற்கு மவுனம் வேணும்
மாவென்று காண்பதற்குப் புத்தி வேணும்
மறவாமல் மகிழ்ந்திருக்க சித்தம் வேணும்
மேவென்று சொல்லுதற்கு அநுராகம் வேணும்
வெளிமுதலைப் பார்த்திருக்கத் திரேகம் வேணும்
பாவென்று ருசுகாட்டக் கருத்தான் வேணும்
பத்தியாய் அறிவிருந்த பக்தி யோர்க்கே. 1

6. தானென்ற கருக்குருவுந் தன்னைக் காணத்
தப்பாமற் இந்நூலை வைத்து நீயே
ஏனென்று பார்த்தாக்கா லிந்நூல் கிட்டும்
எங்கேயோ யென்றவர்க்கு யிடுக்காய் நிற்கும்
தேனென்று கண்டுபரன் மெச்சிக் கொண்டு
திடமென்றார் நானுமிது தீர்க்க மென்று
கோனென்ற யிந்நூலை யுலகில் விட்டேன்
குறிப்பறிய நூல்முப்பத் தாறு முற்றே. 36

7. —.

*8. மூலம். 9. பாடபேதங்கள் மிகுதி; அந்தாதியில் அமைந்த பாடல்கள்; பிழைகள் மலிந்துள்ளன; பாடல்கள் எளிய நடையில் உள்ளன. 10. அகத்தியர் பேரில் பாடப் பெற்றுள்ளது. 11. இல்லை.*

IV. *1.* R. 192(h). *2. சி.ம.மை.ஆ.நி. எண்கள்* 446(e), 739(v), 760(c), 1033(b). *3. இல்லை.*

V. *1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் பரிபூரண ஞானம் 35', அகத்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.*

VI. *சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தில் 'அகத்தியர் ஞானம் 36 என்ற பெயரில் ஒரு நூல் காணப்படுகிறது. இப்பிரதி பாடவேறுபாடு நிரம்பியதாக அமைந்துள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 'அகத்தியர் 36' என்ற பெயருள்ள வேறொரு சுவடி நூல் உள்ளது.*

# அகத்தியர் 36

I. *1.* **31**. *2.* அ. R. 192(h). ஆ. T.R. 176. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் ஞானம் *36.* ஆ. Akattiyar ñāṉam 36. இ. அகத்தியர் ஞானம் முப்பத்தாறு. *4.* —.*5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை - *5. 9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* ஓரளவு தெளிவு. *4. 8. 5.* 28x3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை .*10.* நரம்பில்லாதது. *11.* சிறு சிதைவு. *12. 16;* இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *8* வரிகள். *14.* வெண்பா/விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 37* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* ஞான மார்க்கத்தைப் பற்றிக் கூறும் நூல். *2.* யோகம், ஞானம். *3.* வரிசை எண் *30* போன்றது.

4. சொல்லு அறிவாய்த் துலங்குநூல் முப்பத்தாறு
அல்லும் பகலு மறிவிலுணர் - நல்ல
கணபதியாம் பூரணத்திற் நாட்டியென்றும் வாழும்
கணபதியின் பாதமலர்க் காப்பு.

5. நூலென்று சொல்லுதற் கறிவு வேணும்
நுழைந்ததைப் பார்ப்பதற்கு மவுனம் வேணும்
மாவென்று காண்பதற்குப் புத்தி வேணும்
மாறாமல் மகிழ்ந்திருக்கச் சித்தம் வேணும்
மேவென்று சொல்லுதற்கு அனுராகம் வேணும்
வெளிமுதலைப் பார்த்திருக்கத் திரேகம் வேணும்
பாவென்று ருசுக்காட்டக் கருத்தான் வேணும்
பத்தியா ரறிவிருந்த பக்தி யோர்க்கே. 1

6. தானென்ற கருக்குருவுந் தன்னைக் காண
தப்பாம லின்னூலை வையகத்துக் கீய
யேனென்றே பார்த்தாக்கா யின்னூலைக் கிட்டு
மெங்கையோ வென்றவர்க்கு யிடுக்காய் நிற்குந்
தேனென்றே கண்டுபரன் மெச்சி மெச்சி
திடமென்றோ னானுமிது தீர்க்க மென்று
கோனென்றே னின்னூலை யுலகில் விட்டான்
குறிப்பறிய னூல்முப் பத்தாறு முற்றே. 37

7. —.

8. மூலம். 9. பேச்சுவழக்கு, அந்தாதி அமைப்புடன், ர-ற, ள-ழ வேறுபாடில்லாது பாடல்கள் அமைகின்றன. 10. ஞான நெறிகளைக் கூறும் அகத்தியர் பெயரில் அமைந்த நூல்களினின்றும் வேறாக 'ஒரு வரி - ஒரு கருத்து' எனச் செறிவாகவும் அதே நேரத்தில் தெளிவாகவும் செய்திகளைக் கூறும் பாங்கில் இந்நூல் அமைந்துள்ளது இதன் தனித்தன்மையாகும். 11. இல்லை.

IV. 1. R.8836. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 446-c, 739-v, 760-c, 1033-b. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் ஞான அமுதம்,' தாமரை நூலகம், சென்னை 1995, 3. இல்லை .

VI. இந்நூல், அகத்தியர் ஞானசூத்திரம் 36 என்றும், அகத்தீசர் ஞானம் 36 என்றும் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப் படுகின்றது. தாமரை நூலகத்தார் இந்நூலை 'அகஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய பரிபூரண ஞானம் 35' என்கிற பெயரில் பதிப்பித்துள்ளனர்.

## அகத்தியர் 51

I. 1. **32**. 2. அ. R. 2230. ஆ. T.R. 1264. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 51. ஆ. Akattiyar 51. இ. அகத்தியர் அன்பத்தி ஒன்று. 4. —. 5. —. 6. கிருஷ்ண சுவாமிப் பிள்ளை சித்தவைத்தியர். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 21. 5. 23 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 42; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்துக்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 48 பாடல்கள்.

ஆ.—.

III. 1. மந்திரத்தைச் சொல்லிச் செபம் செய்து, நோய், தோசம் முதலியவற்றை மருந்துகள் விலக்குதல் பற்றிக் கூறும்

நூல். 2. மருத்துவம், மாந்திரீகம். 3. அகத்தியர் ஐம்பத்தொன்று என்ற இந்நூலில் முதலாவதாகப் பக்தியுடன் பார்வதி தேவியையும் குருமுனியையும் வணங்க வேண்டும் என்று கூறப்படு கின்றது. முறைப்பாடு, ஏவல், பில்லி, சைத்தான், தெய்வகுற்றம், சரீர துன்பம் இவற்றின் குணம், குறிகள் நீங்குவது பற்றியும் அதற்கு மீண்டும் உமையவளை வணங்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. மேலும் பில்லி, சூனியம் பற்றி இந்நூல் விரிவாகக் கூறுகின்றது. சூனியம் செய்வார்கள் ஆண் பெண் இருபாலாரிலும் உண்டு. ஆணைச் சூனியக்காரன் என்றும் பெண்ணைச் சூனியக்காரி என்றும் கூறுகிறது. தனக்கு வேண்டாதவர்களின் செயல்களை முடக்கக் கொடிய தேவதைகளின் மூலம் இவ்வித்தைகளைத் தெரிந்த குருவை வைத்துச் சூனியம் செய்ய வேண்டும். மேலும் ஒருவருக்குப் பில்லி சூனியத்தால் இழைத்த தீங்கை மருந்தால் நிவர்த்தி செய்வதற்குப் பொறிசில் வேர் எழுமுள்வேர் சென்னக்கரிவேர், நறுமுன்னை, வெங்காயத் தொட்டி, நிலப்பனை வேர், குறுக்கத்தி வேர் இவைகளைச் சந்தனம் போல் அரைத்து உள்ளுக்குக் குடிக்கவும் மேலுக்குத் தேய்க்கவும் சூனியம் போய் விடும் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. அரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
அகத்தியர் அம்பத்தி ஒன்று ஸ்ரீராம ஜெயம் -
திருச்சிற்றம்பலம்.

5. பத்தியுடன் பார்வதியே போற்றி செய்து
பதிவான குருமுனிதான்(ப்) பாரி லோர்க்குச்
சத்தியமாய் முறைப்பாடு ஏவல் பில்லி
சயித்தானம் தெய்வகுத்தம் சரீர துன்பம்
புத்தியென குணம் குறிகள் நீங்கும் நேர்மை
முறையுடனே சொல்லென்று முனிந்து கேட்க
வாவென்ற யுமையவள்தான் மனம கிழ்ந்து
வண்மையுடன் வய்யகத்தில் மானிடர்க்கு
வகைசொன்னாளே.

6. பாரப்பா கரையான அதாணத்தி இதுவேயாகு
மகண்டகண்ட மந்திரத்தைக் கருத வேண்டாம்
பகையான உமையவளைத் தியானம் செய்து
பார்தனிலே யிந்தவித்தை ஆடிப் பாரு

யெட்டுதிசை அஷ்டகர்மம் யிதுக்கீ டுண்டோ
யென்மகனே உன்கொடுமை மாந்திரீகர் அடிமை
பாவார் மகிழ்ச்சியால் பாடினேன் அன்பதுக்குள்
முனிதப்பாமல் உலகத்தோர் மகிழ்ந்து வாழ்க. 48

7. அய்யனார் கோவிலுக்கு பிராது எழுதுகிற முறை என்பது.

8. மூலம். 9. த்த, ற்ற வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளது. இறுதியி லுள்ள 4 ஏடுகளில் படங்கள் காணப்படுகின்றன. ஐம்பது என்பது அன்பது வருதல் காண்க. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இந்நூலை உமையவள் அகத்தியர்க்குக் கூறியதாக அறிய முடிகிறது.11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. — 3. இல்லை.

VI. அக்காலம் முதல் இக்காலம் வரை பில்லி சூனியம் என்னும் வித்தை செய்பவர்கள் இருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும் போது பல காலங்களாக இதன் பயன்பாடு ஒரே தன்மையில் உள்ளதை அறிய முடிகிறது.

## அகத்தியர் 100

I. 1. **33**. 2. அ. R. 3729. ஆ. T.R. 1817. 3. அ. அகத்தியர் 100. ஆ. Akattiyar 100. இ. அகஷ்த்தியர் நூறு. ஈ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 12. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 24; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ.—.

III. 1. செந்தூரம், செயநீர், வங்கபற்பம் முதலான பலவகை மருந்துப் பொருள்களின் தயாரிப்பைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. கறியுப்புக்கட்டு, நவதோண வாலை, இரசக்கட்டு, வழலை, வங்கபற்பம், நவலோக மாரணம்,

யேகமூலிக்குச் செந்தூரச் செயநீர், மெழுகுச் செயநீர், வன்னி சுத்தி சாரம், செம்பு சுத்தி, நவச்சாரம், அரிதாரக் கட்டு, துருசுக் கட்டு முதலான மருந்துகளைச் செய்யும் முறைகளையும் மற்றும் துருசுக் குரு, தேவிபூசை, சூதமணி, வழலை கிடைக்குமிடம், வங்கநீர், வங்கசுத்தி, பற்பம், சாரக்கட்டு, பச்சிலைக்குரு, மெழுகுவகை, இலேகிய வகை, உப்புக்கட்டு, தாளகக்கட்டு, நாக பற்பம், சூதக்கட்டு, இலிங்கக்கட்டு முதலான இரசவாதத்திற்கான மருந்து முறைகளும் கூறப் பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக. குருவே துணை.

5. பூரணமாஞ் சுழினைநடுக் கமல மீதே
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமாய் யெனையாண்ட பராபரனைப் போற்றிக்
கட்டாக வாதத்தில் லட்சங் காப்பு
தாரணமாய்ப் படுபாதி குறுக்கிச் சொன்னேன்
சார்வாக ஆயிரத்திரு நூறு சூஷ்த்திரம்
வாரணமாய்க் குறுக்கிவைத்த சூஷ்த்திரம் நூறின்நூல்
வகைதோணக் கருக்குருவும் வகுத்தேன் பாரே.11

6. மனம்வேறு பூரணமே யென்று பூண்டு
வாழ்வதல்லால் மற்றொன்றுஞ் செய்யா தய்யா
மனம்வேறு தட்டுண்டால் எல்லாம் போச்சு
மாய்கையுற்றுத் திரிந்தலைவான் மாள்வா ரய்யோ
மனம்வேறு சாதகமாய்ச் சாஷ்த்திரத்தைப் பார்த்து
மனம்பிலக்கக் குருவினிடம் வணங்கிக் கோர்த்து
மனம்வேறு வாராது சித்தி முத்தி
வாய்க்குமே சூஷ்த்திரந்தான் நூறு முற்றே. 100

7. சிவகடாட்ச முண்டாக. குருபாதமே கெதி, காந்திமதி சகாயம், அகிலாண்டேசுபரி துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பாடபேதங்கள் மிகுந்துள்ளன. 10. இந்நூல் அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. இதற்கு தட்சிணாமூர்த்தி அருளிய வகார சூத்திரம் 100 என்றும் பெயர் உள்ளதால் இரசவாதத்திற்குரிய வகாரம் பற்றிப் பேசுகிறது எனத் தெரிந்து கொள்ளலாம். 11. இல்லை.

IV. 1. R. 145 (d), R. 278 (b), R. 4203. 2. உ.த.நி.எண்கள் 494:752, 574:931. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இலட்சம் பாடல்களைக் குறுக்கி 1200 பாடல்களாகவும், பின் அவற்றை மீண்டும் குறுக்கி 100 பாடல்களாகவும் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. உலகத் தமிழராச்சி நிறுவனத்தில் உள்ள சுவடியில் இந்நூல் அகத்தியர் வாத சூத்திரம் 100 என்ற பெயரில் காணப்படுகிறது. இரசவாதத்திற் கான கருக்குருக்கள்: கருவங்கம், தங்கம், நாகம், துருசு, அயம் என்பன. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் 100 என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 150, அகத்தியர் சூத்திரம் 50 ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் 100

I. 1. **34**. 2. அ. R. 145(d). ஆ. T.R. 129. 3. அ. அகத்தியர் வாத சூத்திரம் 100. ஆ. Akattiyar vāta cūttiram 100. இ. அகஸ்தியர் சூஸ்திரம் வாதம் நூறு. ஈ. —. 4. —. 5. —. 6. காளத்தி செட்டிக் குமாரன் சுப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 20. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 40; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. செந்தூரம், செயநீர், வங்கபற்பம் போன்ற பலவகை இரசவாத மருந்துகளைத் தயாரிக்கும் முறையைக் கூறும் நூல். 2. இரசவாதம் - மருத்துவம். 3. வரிசை எண் 33 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக.

5. பூரணமாம் சுழினைநடுக் கமல மீதே
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமாய் எனையாண்ட பராபரனைப் போற்றி
கட்டாக வாதத்தில் லட்சங் காப்புத்

தாரணமாய்ப் படுபாதி குறிக்கிச் சொன்னேன்
சார்வாக ஆயிரத்திரு னூறு சூஸ்த்திரம்
வாரணமாய்க் குறிக்கிவைத்தேன் சூஸ்த்திரம் நூறில்
வகைதோன்றக் கருக்குருவும் வகுத்தேன் பாரே. 1

6. மனம்வேறு பூரணமே யென்று பூண்டு
வாழ்வதல்லால் மற்றொன்றும் நீசெய் யாதே
மனம்வேறு தட்டுண்டால் எல்லாம் போகும்
மாய்கையுத்துத் திரிந்தலைவான் மாள்வா னய்யோ
மனம்வேறு சாதகமாய்ச் சாத்திரத்தைப் பாத்து
மனம்போல குருவினிடம் வணங்கி நின்றால்
மனம்வேறு மாறாது சித்தி முத்தி
வாய்க்குமே சூத்திரந்தான் நூறு முற்றே. 100

7. அகஸ்தியர் சுவாமியார் வாதசூத்திரம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. சில பாடல்களில் யமகம் வந்துள்ளது. பேச்சுவழக்குச் சொற்கள் கலந்துள்ளன. உற்று என்பது உத்துஎனவும் பார்த்து என்பது பாத்து எனவும் வருவது காண்க. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூலுக்கு வாதசூத்திரம் என்றும் பெயர் இருப்பதால் இது இரசவாதம் பற்றிய நூல் எனத் தெரிந்து கொள்ளலாம். 11. காளத்தி செட்டிக் குமாரன் சுப்பன் எழுதி நிறைந்தது. முற்றும்.

IV. 1. R. 3729, R. 278(b), R. 4203. 2. உ.த.நி.எண்கள் 494:752, 575:931. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல், அகத்தியர் சூத்திரம் 100, அகத்தியர் ரசவாதம் 100, அகத்தியர் வாத சூத்திரம் 100 ஆகியபெயர்களில் அழைக்கப்படுகிறது.

## அகத்தியர் 100

I. 1. **35**. 2. அ. R. 278(b). ஆ. T.R. 262. 3. அ. அகத்தியர் சூத்திரம் 100. ஆ. Akattiyar cūttiram 100. இ. அகஸ்தியர் சூத்திரம் னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 21. 5. 26 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 42; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. செந்தூரம், செயநீர், வங்கபற்பம் முதலான பலவகை இரசவாத மருந்துகளைத் தயாரிக்கும் முறையைக் கூறும் நூல். 2. இரசாவதம் - மருத்துவம். 3. வரிசை எண் 33 போன்றது.

4. —.

5. பூரணமாம் சுழினைநடுக் கமல மீதே
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமாய் யெனையாண்ட பராபரனைப் போற்றிக்
கட்டாக வாதத்தின் லட்சங் காப்பு
தாரணமாய்ப் படுபாதி குறுக்கிச் சொன்னேன்
சார்வாக ஆயிரத்திரு நூறு சூத்திரம்
வாரணமாய்க் குறிக்கிவைத்த சூத்திரம் நூறில்
வகைதோணக் கருக்குருவும் வகுத்தேன் பாரே. 1

6. மனம்வேறு பூரணமே யென்று பூண்டு
வாழ்வதல்லால் மத்தொன்றுஞ் செய்யா தய்யா
மனம்வேறு தட்டுண்டா லெல்லாம் போச்சு
மாய்கையுற்றுத் திரிந்தலைவான் மாள்வா னய்யோ
மனம்வேறு சாதகமாய்ச் சாத்திரத்தைப் பார்த்து
மனம்பிலக்கக் குருவினிடம் வணங்கி நின்றால்
மனம்வேறு வாராது சித்தி முத்தி
வாய்க்குமே சூத்திரந்தான் நூறு முத்தே. 100

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. குறுக்கி என்பது குறிக்கி, குருக்கி என்றும், மற்றொன்று என்பது மத்தொன்று என்றும் பேச்சு வழக்காக வந்துள்ளன. பாட வேறுபாடுகளும் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. இரசவாத நூலை `வாத சூத்திர நூல்' என்பது வழக்கு. 11. இல்லை.

IV. 1. R. 3729, R.145(d), R. 4203. 2. உ.த.நி.எண்கள் 494:752, 574:931. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. மனத்தூய்மையுடன் வாழ்ந்தால் நிலையான வாழ்க்கை கிடைக்கும். மனத் தடுமாற்றத்துடன் வாழ்ந்தால் மாய்கை யுற்று, திரிந்தலைந்து மாளுகின்ற நிலை ஏற்படும். எனவே இதுபோன்ற நல்ல நூல்களைப் படித்துக் குருவை வணங்கி வந்தால் சித்தியும், முத்தியும், கிடைக்கும் என்பது சித்தர் நூல்களின் சாரம் எனலாம்.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. அகத்தியர் தண்டகம்.
c. கொங்கனர் தண்டகம்.
d. திருமூலர் தண்டகம்.
e. சுந்தரானந்தர் தண்டகம்.
f. போகநாயனார் பாடல் எழுநூற்றுப் பனிரெண்டு.

## அகத்தியர் 100

I. **1.36**. 2. அ. R. 4203. ஆ. T.R. 1860. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ரஸவாதம் 100. (வகாரசூத்திரம்). ஆ. Akattiyar rasavātam 100. இ. அகத்தீசுபரர் சூத்திரம் 100. ஈ.—. 4. —. 5. —. 6. அ. முத்துவீரப்பன். ஆ. —. 7. — 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 44. 5. 18 x 3 செ. மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 88; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. செந்தூரம், செயநீர், வங்கபற்பம் போன்ற பலவகையான இரசவாதப் பொருள்களைத் தயாரிக்கும் முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம் - இரசவாதம். 3. வரிசை எண் 33 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக.

5. பூரணமாஞ் சுழினைநடுக் கமல மீதே
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
காரணமாய் யெனையாண்ட பரனே போற்றி
கட்டாக வாதத்தில் லெட்சங் காப்பு
தாரணமாய்ப் படுபாதி குறுக்கிச் சொன்னேன்
சார்வாக ஆயிரத்திரு நூறு சூஷ்த்திரம்
வாரணமாய்க் குறுக்கிவைத்த சூஷ்த்திரம் நூறு
மாருதம்போல் கருக்குருவும் வகுத்தேன் பாரே. 1

6. மனம்வேறு பூரணமே யென்று பூண்டு
வாழ்வதல்லால் மத்தொன்றுஞ் செய்யா தய்யா
மனம்வேறு தட்டுண்டா லெல்லாம் போச்சு
மாய்கையுற்றுத் திரிந்தலைவார் மாள்வா ரய்யோ
மனம்வேறாய்ச் சாதகமாய்ச் சாத்திரமும் பாத்து
மனம்பிலக்கக் குருவினிடம் வணங்கி நின்றால்
மனம்வேறும் வாராது சித்தி முத்தி
வாய்க்குமே சூஷ்த்திரந்தான் நூறு முத்தே. 100

7. தெட்சணாமூர்த்தியருளிய வகார சூஷ்த்திரம்.

8. மூலம். 9. பாட பேதங்கள் வந்துள்ளன. வடமொழி எழுத்துக்கள் பயின்றுள்ளன. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இரசவாதத்திற்கான மருந்துப் பொருள்களைக் 'கருக்குருக்கள்' என்றும், இரசவாத நூலை வகாரச் சூத்திரம் என்றும் கூறுவதும் உளது. 11. சித்தார்த்தி வருடம் வைகாசிமாதம் 8ஆம் தேதி சோமவார நாள் ரேவதி, நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் எழுதி முகிந்தது முற்றும். முத்துவீரப்பன் சுவடி.

IV. 1. R.3729, R.145(d), R.278(b). 2. உ.த.நி.எண்கள் 494:752,574:931. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. தமிழில் இரசவாதம் என்னும் வகார சூத்திர நூல்கள் அகத்தியர், அகப்பேய்ச்சித்தர், உரோம முனி ஆகியோர் பெயர்களில் வழங்குகின்றன. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் 100 என்ற இந்நூலுடன் அகத்தியர் ஞானம் 100 என்ற நூலும் அமைந்துள்ளது.

# அகத்தியர் 125

I. *1.* **37**. *2.* அ. R. 189(d). ஆ. T. R. 173. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் *125*. ஆ. Akattiyar 125. இ. அகத்தியர் பஞ்சபட்சி *205* காட்சிப்பாடம். *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* ஆ.கி.சு.நூ., சென்னை-*5*. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 29*. *5*..29 x 3 செ.மீ. *7.* கயிறு. *8.* பிளைவுட். *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* ஓரளவு தெளிவு. *12. 58*; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *7-8* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 125* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* அஷ்ட கரும மாந்திரீக முறைகளின் நிலைகளைச் சுட்டிக் கூறும் நூல். *2.* மாந்திரீகம். *3.* 'அகத்தியர் *125*' என்ற இந்நூலில் உச்சாடன முறைகள், பஞ்சபட்சி விபரம், அட்சரத்தின் மாறல், வடுகன் தியானம், பட்சிகளின் சாபம், வல்லூறுக்கு மூலிகை, ஆந்தைக்கு மூலிகை, அமரபட்ச விதிமுறைகள், தியானம், பலவகை எண்ணெய்கள், அனுபானங்கள், முலை எழும்ப, முலை மறைய வசியம், புருஷ வசியம், ஆமணக்கு வசியம், காட்டேரி மந்திரம், சாமுண்டி மந்திரம் போன்ற பல்வேறு நிலைகள் கூறப்படுகின்றன. பலாப் பலகை மீது பத்மாசனம் விரித்து தென்மேற்கு முகமாகயிருந்து சூரிய கலை, சந்திரகலை நாடிகளைச் சேர்த்துச் சுழிமுனைக்கு ஏற்றினால் அங்கே சோதி பிரகாசிக்கும்; அந்தச் சோதியை மனக்கண்ணால் பார்த்து ஓம் - யங் - வய நமசியென்று பவள மணியால் உருவேற்ற உச்சாடனம் சித்தியாகும்; வல்பிணிகள் விலகும்; நினைத்த படி நடக்கும் என்று இந்நூல் கூறுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை அகஸ்தியர் பஞ்சபட்சி *205* காட்சிப் பாடம்.

5. திருமகள் கையிலை வாழுஞ்
செகநாதர் தேவிக் கீந்த
கருவளர் மாந்தி ரீகம்
கச்சியின் பீடம் பாட

மருமக ளான சோதி
மலர்த்திரு பாதம் போற்றி
உருவில்லா னுருவு மில்லா
னுமைமகள் காப்புத் தானே. 1

5. தோஷமடா வருனூலின் சொன்ன வித்தை
துடிக்கட்சிப் பீடமது துணிந்து சொன்னேன்
தோஷமடா சகாகைவித்தை ஓம்பஞ்ச நேசா
சுறுசுறு ஆங்காரி உருகு உருகு
தோஷமடா கொன்றுவர சுவாமி யானைச்
சொல்லடா கருத்தடவ சுருக்கு மேத்த
தோஷமடா யிம்முறையை வெளிவி டாதே
சூஷ்திரந்தா னூற்றிருபற் றைந்து முற்றே. 125

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் முன்னிலையாரை அழைத்துக் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. ற - ர வேறுபாடில்லாது வருகிறது. கருவளர் என்பது கறுவளர் என வந்துள்ளது. ற்ற என்பது த்த-வாக வந்துள்ளது. வடமொழி எழுத்துக்கள் பயின்றுள்ளன. 10. 'பஞ்சபட்சி காட்சிப் பாடம் 205', என்ற நூலிலிருந்து 125 பாடல்களை எடுத்து 'அகத்தியர் 125' என்று கொடுக்கப்பட்ட சுருக்க நூலாகும் இது. பாடல்கள் அறுசீர் விருத்தத்திலும் வந்துள்ளன. ஈசன் உமையவளுக்குக் கூற, அது அகத்தியர் பெயரில் பாடப்பெற்றதாகத் தெரிகிறது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. சி.ம.மை.ஆ.நி. எண் 575 a. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பஞ்சபட்சி சாத்திரம் என்ற நூலில் ஐந்து பறவைகளின் பெயர்கள் வந்துள்ளன. அவை: மயில், காகம், ஆந்தை, வல்லூறு, கோழி ஆகியனவாம். இப்பட்சிகளின் விவரம், மூலிகை இவற்றின் அமர பட்சி விதிமுறைகள் ஆகியவற்றையும் விரித்துக் கூறுகின்றது.

# அகத்தியர் அட்ட கருமம்

I. 1. **38**. 2. அ. R.6136. ஆ. T.R.2587. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் அட்ட கர்மக் கோவை. ஆ. Akattiyar aṭṭa karmak kōvai. இ. அகத்தியர் அஷ்ட கர்மம். ஈ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 45. 5. 35 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 90 ; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15 இறுதி. 16. குறை. 17. 166 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்டகருமமும் அதற்குப் பயன்படும் பல வகையான மூலிகைகள் பற்றியும் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. அட்டகருமக் கோவை என்ற இந்நூலில் முதலாவதாகக் கடவுள் வாழ்த்தும், அதன்பின் மூலிகைகள் நோயைக் குணமாக்க மட்டுமின்றி அட்ட கருமங்களுக்கும் பயன் படுத்தப்படும் முறையும் கூறப் படுகின்றன. அட்டகருமத்திற் குரிய மூலிகைகளும் மந்திரங்கள் உருவேற்றும் முறைகளும் கூறப்படுகின்றன. இலட்சுமி தேவிக்குரிய மந்திரம் இலட்சம் முறை செபிக்க வேண்டும். ஊமத்தம் பூ, காய், ஆலம் விழுது, நன்னாரி வேர், கண்டங்கத்தரி வேர், கறுப்புக் காக்கரணை, வெள்ளைக் காக்கரணை, திருகுகள்ளி, செங்கத்தாரி, ஆடுதின்னாப்பாளை, திருமேனி, சிறியாநங்கை, கோழியாவிரை, சங்கம் வேர், பாதிரிப்பூ, கார்த்திகைக் கிழங்கு, காஞ்சுரை, கொடுவேலி, நச்சுப்பு போன்றவை மற்ற கர்மங்களுக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள். இவற்றைக் கொண்டு மை தயாரித்து மயேந்திர ஜாலம், பில்லி சூனியம் வைத்தல், அகற்றுதல் செய்யலாம் என்றும் கூறப்படுகின்றது. அட்டகருமங்களுக் குரிய காலங்களும் இச்சுவடியில் விளக்கப் பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக அகஸ்தியர் அஷ்ட கர்மம்.

5. அண்டமெனுங் கேசரத்தின் அருளே காப்பு
ஆனந்த மாகிநின்ற உமையாள் காப்பு
பிண்டமெனும் அஷ்டகர்மம் கோர்வை யாக
... மான பஞ்சகர்த்தான் கணங்க ளஞ்சில்

பிண்டமெனும் குண்டலியாள் அண்ட பிண்டம்
பலவிதத்துடனே யொட்டெட்டும் நன்றாய்ச் சொல்வேன்
சண்டமாருதம் போலே பொருள்க ளெல்லாம்
சாத்தினேன் நன்றாகச் சாத்தி னேனே. 1

6. போத்தியென்ற சாரணையை வாங்கத் தானும்
பொருந்தியதோர் சங்கிராந்தி நாளில் சென்று
ஆத்தி யென்னுங் கட்டிமந்தி ரந்தான்
அறைந்திடவே ஐயப்பா பரிவான ஆனந்தி
மாத்தியே மகானுக்கு வல்லி யென்று
மகாதேவி யெனச்சொல்லி மூலம் வாங்கி
நேத்தியென்ன பொடிசெய்து நித்தங் கொள்ளு
நிலைத்தெந்த ஆய்தமும் தையத்தி டாது. 166

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் அமைந்துள்ளது; மந்திரச் சொற்கள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. ர - ற, ள - ழ வேறு பாடில்லாது வருகின்றன. 10. அட்ட கருமமான வசியம், மோகனம், உச்சாடனம், தம்பனம், பேதனம், ஆகர்ஷணம், வித்துவேஷனம், மாரணம் முதலானவை சித்தர்களின் செயல்பாட்டில் இருந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது.

11. முத்துச் சாத்தான்பிள்ளை ஏடு.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. — 3. இல்லை.

VI. அட்ட கருமங்களுள், வசியம் பலவித மூலிகைகள், கருக்கள், சேர்ந்த மையினால் வசமாக்கல். அது லோகவசியம், ராஜவசியம், ஸ்திரீவசியம், புருஷவசியம், மிருகவசியம், பூத பிரேத வேதாள வசியம் என்பன. இவை மந்திர தந்திரங்களால் வேறுபடும். மோகனம் - மனத்தைக் கவர்தல், இதுவும் அவ்வாறே கருக்கள், மூலிகைகள் சேர்ந்த மையினால் தேவர்களையும், பூத பிரேத பைசாசங்களையும், மனிதரையும் மோகிப்பச் செய்தல். உச்சாடனம் - துரத்தல். இது தன்வசப்பட்ட தேவதைகளைப் பகைவர் மீது துன்பப்படுத்தி ஏவுதல். தம்பனம் - பகைவனையும் தானெண்ணிய பொருள்களையும். இருந்தநிலை பெயராது தப்பிக்கச்

செய்தல். அது ஜலஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம், வாயுஸ்தம்பம், வாக்குஸ்தம்பம் முதலிய பலவற்றைச் செய்யும். பேதனம் - நட்புக்கொண்ட இருவரைப்பிரித்தல். ஆகருஷணம் தான் நினைத்த பொருள் எவ்விடத்து இருப்பினும் காண்போர் முன்வரச் செய்வது. வித்து வேஷணம் - இது ஒருவருக்கொருவரை விரோதிகளாக்குங் கருமம். மாரணம் - தான் எண்ணினவனுக்கு மரணத்தை உண்டாக்குவது.

## அகத்தியர் அட்ட கருமம்

I. 1. **39**. 2. அ. R. 942(f). ஆ. T. R. 761. இ. —. ஈ.—. 3. அ. அகத்தியர் அட்ட கருமம். ஆ. Akattiyar atta karumam. இ. அகஸ்தியர் அஷ்ட கருமத்துக்கு பஞ்சாட்சரம் 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3.தெளிவு. 4. 6. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 12; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15 இல்லை. 16. 10 முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஒருவரை வசியப்படுத்துவதற்கான பில்லி, சூனியம் போன்ற மாந்திரீக வேலைகளைச் செய்யும் முறைகளைக் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. அகத்தியர் அட்ட கருமம் என்ற இந்நூல் வசியம், மோகனம், உச்சாடனம், தம்பனம், பேதனம், ஆகர்ஷணம், வித்து வேஷணம், மாரணம் என்னும் எட்டு கருமங்களைப் பற்றி உரைக்கின்றது. இக்கருமங் களுக்குரிய மூலிகைகள், மந்திரங்கள், உருவேற்றும் முறைகள் முதலானவை கூறப்படுகின்றன. மேலும் ஒருவரைப் பில்லி, சூனியம் போன்ற மாந்திரீக வேலைகளைச் செய்து அவரை முழுமையாகச் செயல்படாதவாறு செய்வதற்கான நிலை களையும் மந்திரங்களையும் இந்நூல் கூறுகின்றது. இறுதியாகப் படமும், மந்திரமும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

4. அகஸ்திய நாயனார் அருளிச் செய்த அஷ்ட கர்மத்துக்கு பஞ்சாக்ஷரம் குருவே துணை.

5. ஆதியான பராபரனைப் போற்றி செய்து
அம்மையவள் உலகத்தோர் பிழைக்க வேண்டி
நீதியாய் மாந்திரீக சக்கர மூலியை
நிசமாக உரையுமென்று அரனைக் கேட்க
சோதியே உமையவளே நீகே ளென்று
சொல்லுகிறேன் பஞ்சாக்ஷரத்தின் சூரூபந் தன்னை
வாதியாம் பெரியோர்க்கும் புத்தியுள் ளோர்க்கும்
மன்னவர்க்கும் யிதுவாகும் வகைவே றில்லை. 1

6. நீராய்ப்போகும் மஞ்சனத்தில் அகப்ப டாது
நிலையான கருமவித்தை என்றில் லாது
தாரான யிம்மைமறுமை யிரண்டு மூன்று
குருவான அன்பத்தொன் றுருவே யேற்று
வாரான குருபதத்தை மறந்தி டாதே
வஞ்சனைக்கும் குலைகளுக்கும் போர்ப்ப டாதே
நேரான கோடிவித்தை யாடிப் பாரு
செப்பினேன் பத்துக்குள் தெளிந்து முத்தே. 10

7. உச்சாடனம்: சவ்வும் சவ்வும் கிலியும் ஐயும் சிவா.

8. மூலம். 9. மனிதன் படம் சக்கரம், யந்திரம் போன்றவையும் ஓலைகளில் 4,5,6, 7 ஆம் பக்கங்களில் படங்களும் வரையப்பட்டள்ளன. பாடல்கள் அந்தாதி அமைப்பில் உள்ளன. 10. எந்திரங்கள் வரையப் பெற்று நூல் விளக்கம் பெறுகின்றது. அகத்தியர் பெயரில் மாந்திரீகமும், சோதிடமும் பாடப்பெற்றுள்ளன. இந்த நூற்பொருளை ஈசன் உமையவளுக்கு உரைக்க அது அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது.11. இல்லை.

IV. 1.R. 942(f). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. — 3. இல்லை.

VI. இந்நூலகச் சுவடி எண். R. 6136 என்ற நூ லிலிருந்து இது வேறானது. இதில் அட்டகருமங்கள் பற்றிய செய்தியும் பஞ்சாட்சரத்தின் மகிமையும் சிறப்பாகப் பேசப்படுகின்றன. சில மந்திரச் சொற்கள் வருமாறு: சிதம்பரம் நாள், பத்தி, முன்னமை, மோஷம், வசியம், தோஷவசியம், சூனியம் போக மாரணம்.

நமசிவாய
மசிவயந
வயநமசி
நமசிவய
சிவயகம்

போன்ற மந்திரங்களும்,

ஹயாவிக்கி ஆலாத்தியில் சக்கரம், கற்பூரம் த.... போட்டு கொலுத்துவது.

ஓம், அய், உங், சிவ, வய
யங், ங்ய் டிங் சர்வநூபம்
நசிமசி சகல வியாதி நசிமசி
சகலகிரகம் மசிமசி சகல வல்லி
சூனியம் நசிமசி நசிமசி நசிமசி

என்பனவும் எடுத்தாளப் பெற்றுள்ளன.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. புலிப்பாணி சாலத்திரட்டு இருநூறு.
b. புலிப்பாணி முனிவர் சிதம்பர சக்ரபூசை இருபத்தைந்து.
c. புலிப்பாணி முனிவர் சிமிழ்வித்தை இருப்தைந்து.
d. புலிப்பாணி முனிவர் பலதிரட்டு 100.
e. அகத்தியர் மாந்திரீகம் ஐம்பது.
g. அகத்தியர் அட்டகர்ம பஞ்சாட்சரம் பத்து.
h. புசண்ட மகரிஷி ஞானம் எண்பது.
k. பதஞ்சலி முனி ஞானம் ஐம்பத்தாறு.

## அகத்தியர் அட்ட கருமம்

I. 1. **40**. 2. அ. R. 942 (g). ஆ. T. R. 761. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் அட்ட கருமம். ஆ. Akattiyar atta karumam இ. அகஸ்தியர் செய்த பஞ்சாட்சர அஷ்ட கருமம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 25 x 3 செ.மீ. 6. இருதுளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை

ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 7; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஒருவரை வசியப்படுத்துவதற்குப் பில்லி, சூனியம் போன்ற மாந்திரீக வேலைகளைக் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. வரிசை எண் 39 போன்றது.

4. ஸ்ரீதேவி சகாயம். குருவே துணை. அகஸ்திய நாயன் அருளிச்செய்த பஞ்சாட்சரம் அஷ்ட கர்மம்.

5. ஆதியாம் பராபரனைப் போற்றி செய்து
அம்மையவள் பூலோகத்தோர் பிழைக்க வேண்டி
நீதியாம் மாந்திரீக சக்கர மூலியை
நிசமாக உரையுமென்று அரனைக் கேட்க
சோதியே உமையவளே நீகே ளென்று
சொல்லுகிறேன் பஞ்சாசரத்தின் சூரூபந் தன்னை
வாதியாம் பெரியோர்க்கும் புத்தியுள் ளோர்க்கும்
மன்னவர்க்கும் யிதுவாகும் வகைவே றில்லை. 1.

6. நீராய்ப்போகும் மஞ்சனத்தில் அகப்ப டாது
நிலையான கருமவித்தை என்றில் லாது
தாரான யிம்மைமறுமை யிரண்டு மூன்று
குருவான அன்பத்தொன் றுருவே யேற்று
வாரான குருபதத்தை மறந்தி டாதே
வஞ்சனைக்கும் கொலைகளுக்கும் போய்ப்ப டாதே
நேரான கோடிவித்தை யாடிப் பாரு
செப்பினேன் பத்துக்குள் தெளிந்து முற்றே. 10

7. சிதம்பரச் சக்கரம்
ய - ந - ம - சி - வ
6 - 10 - 18 - 14 - 3
நீயும் ஐயும் கிளியும், சவ்வு, கிளியும், யூ
ஓ. அ. இ. உ. எ.

8. மூலம். 9. மந்திர எழுத்துக்கள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் மாந்திரீகமும், சோதிடமும் பாடப்

பெற்றுள்ளன. இந்த நூற்பெயரில் `பஞ்சாட்சரம்' எனக் குறிப்பிட்டதற்கேற்ப நூலினுள்ளும் பஞ்சாட்சர மகிமை பேசப்படுகின்றது. 11. இல்லை.

IV. 1. R. 942(e). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் வசியம், மோகனம், தம்பனம் முதலான அட்ட கருமங்களைக் கூறுவதிலிருந்து அக்காலத்தில் மக்களிடையே இவை பயன்பெற்று வந்த நிலையை அறிய முடிகின்றது. அகத்தியர் அட்ட கருமம் என்ற பெயரில் வரிசை எண் 38-ல் காணப்பெறும் நூல் இதனின்றும் முற்றிலும் வேறுபட்டது.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. புலிப்பாணி சாலத்திரட்டு இருநூறு.
b. புலிப்பாணி முனிவர் சிதம்பர சக்ரபூசை இருபத்தைந்து.
c. புலிப்பாணி முனிவர் சிமிழ்வித்தை இருப்தைந்து.
d. புலிப்பாணி முனிவர் பலதிரட்டு 100.
e. அகத்தியர் மாந்திரீகம் ஐம்பது.
f. அகத்தியர் அட்டகர்ம பஞ்சாட்சரம் பத்து.
h. புசண்ட மகரிஷி ஞானம் எண்பது.
k. பதஞ்சலி முனி ஞானம் ஐம்பத்தாறு.

## அகத்தியர் அவிழ்த சாரம் 60

I. 1. **41**. 2. அ. R. 3411. ஆ. T.R. 1732. இ. R.No.5429, ஈ —. 3. அ. அகத்தியர் அவிழ்தசாரம். ஆ. Akattiyar avilta cāram. இ. அகஸ்திய முனிவர் அருளிச்செய்த அவிழ்த சாரம் 60. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ. கீ.சு. நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. நன்று. 4. 13. 5. 32 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 25; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 61 பாடல்கள்.

ஆ. 1.30 x 24 செ.மீ. 2. 14. 3. பக்கத்திற்கு 24 வரிகள். 4. ஓரளவு தெளிவு. 5. —. 6. —. 7. —.8. கி.பி.1954-55 இல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் அவிழ்தசாரம் என்ற இந்நூலில் நம் உடம்பில் உள்ள வாத, பித்த, சிலேட்டுமத்தின் குணங்கள், வாய்வுவகை, உமிழ் நீர்க்குறி, வயிறுமாந்தம், மேகம், வாய்வினால் வரும் வியாதி, சுரம், சன்னி மூலம், கிராணி வகைகள், கண்நோய்கள் ஆகியவைகளின் அறிகுறிகள், தன்மைகள், ஆகியவற்றை நீக்குவதற்கான மருந்து செய்முறைகள் கூறப்படுகின்றன. அம்மருந்துகளாவன: காந்த செந்தூரம், லோக செந்தூரம், அப்பிரக செந்தூரம், மண்டூர செந்தூரம், அமிர்த சஞ்சீவி மாத்திரை, மேகாதி குளிகை, ஆனந்த வயிரம் போன்றவையாம். நீரிழிவுக்குக் கசாயம், சயத்துக்குக் கண்டங்கத்திரி நெய், திப்பிலி நெய், ஏலாதி நெய், பெரும்பாட்டுக்கு நெய், அசுவகெந்தி நெய், கற்பூரவல்லி நெய், குழந்தைகளுக்குப் பொன்முசுட்டை நெய், பஞ்சகவிய நெய், சுக்கில நெய், குட்டம், குறை நோய்களுக்குக் களிம்பு, கண் நோய், தலை நோய்களுக்கு மருந்து செய் முறைகள் மேலும் பலவகையான மருந்துசெய் முறைகளும் கூறப்படுகின்றன.

4. அகஸ்திய முனிவர் அருளிச் செய்த அவிழ்தசாரம் 60. கணபதி துதி விருத்தம்.

5. ஆதியாங் கணேசன் காப்பு
அறுநூற்றுக் கருவை யெல்லாஞ்
சோதியாம் ஆயி பாதம்
துணையென வுட்கொண் டோதி
நீதியாந் திரட்டுச் சூத்திரம்
நிலைத்த வாகடமாய்ச் சொல்ல
வாதமாம் பிணிகள் தீர
மருந்தொடு குணத்தைக் கேளே. 1

6. பற்ப மினிக்கேள் பறந்திடு நோயெல்லாம்
அற்ப மீதென்று அசடரே யெண்ணாதீர்
கற்ப மீதாகும் கர்ம வினையறும்
நுட்பம தெல்லாம் நுகர்ந்தனன் முற்றே. 61

7. அகத்திய முனிவர் அருளிச்செய்த அவிழ்தசாரம் முற்றிற்று. குருபாதம் துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பிழைகள் மலிவு. ர- ற, ள- ழ வேறுபடில்லாது வருகின்றது. 10. அவிழ்தம் என்பது ஔடதம் என்றும் கூறப்படும். இந்நூல் ஒரு திரட்டு நூல் என்பதும், மருந்து வாகடமாக இது செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிகின்றது. 11. இல்லை.

IV. R.4488. 2.—. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் அவிழ்தசாரம் என்ற இந்நூல் பல்வேறு மருந்துப் பொருள்களின் தயாரிப்பினைக் கூறுகிறது. அவிழ்தம் என்றால் 'மருந்து' ஆகும். 'சாரம்' என்பது பயன் ஆகும். எனவே அவிழ்தசாரம் என்பது மருந்துகளின் பயன் என்ற பொருளைப் பெறுகின்றது.

## அகத்தியர் அவிழ்த சாரம் 60

I. 1. **42.** 2. அ. R. 4488. ஆ. T.R. 1983. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் அவிழ்தசாரம் 60. ஆ. Akattiyar avi̱tacāram 60. இ. அகஸ்தியர் அவிழ்தசாரம் அறுபது. 4.—. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவில்லை. 4. 12. 5. 27 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நொறுங்கியது (சிதைவு). 12. 24; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 61 பாடல்கள்.

ஆ. —.

III. 1 பல்வகை நோய்களுக்கு மருந்து செய்முறைகளையும், பயன்களையும் இந்நூல் கூறுகின்றது. 2. மருத்துவம். 3. வரிசை எண் 41 போன்றது.

4. —.

5. ஆதியாங் கணேசன் காப்பு
அறுநூறுக் கருவை யெல்லாம்
சோதியாம் ஆயி பாதம்
துணையென வுட்கொண் டோதி
நீதியாந் திரட்டுச் சூத்திரம்
நிலைத்த வாகடமாய்ச் சொல்ல
வாதமாம் பிணிகள் தீர
மருந்தோடு குணத்தைக் கேளே. 1

6. பற்ப மினிக்கேள் பறந்திடு நோய்யெல்லாம்
அற்ப மீதென்று அசடரே யெண்ணாதீர்
கற்ப மிதாகுங் கர்ம வினையறும்
நுட்பம தெல்லாம் நுகர்ந்தனன் முற்றே. 61

7. முற்றிற்று. அகஸ்திய முனிவர் அருளிச்செய்த அவிழ்த சாரம் முற்றும். கடவுள் துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரிலும், பல்வகை விருத்தப் பாக்களிலும் இந்நூல் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 3411. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அவிழ்தசாரம் என்று பெயர் பெற்றுள்ள இந்நூல், செந்தூரம், கசாயம், பல்வேறு நெய்கள் முதலிய மருந்துப் பொருள்களின் தயாரிப்பினைக் கூறுவதோடு, அம்மருந்துகள் குணப்படுத்தும் நோய்களின் பெயர்களையும் அடுக்கடுக் காகக் கூறிச்செல்கிறது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் அவிழ்த சாரம் 60 என்ற இந்நூலுடன் திருமூலர் குணவாகடம் என்ற நூலும் உள்ளது.

## அகத்தியர் அறுசுவை நிகண்டு

I. 1. **43**. 2. அ. R. 4906. ஆ. T. R. 2137. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் அறுசுவை நிகண்டு. ஆ. Akattiyar aṟucuvai nikaṇṭu இ. சட்ரச நிகண்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 39. 5. 22 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 78 ; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 13. வெண்பா. 15. இறுதி. 16. குறை. 17. 283 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் மருந்து தயாரிப்பு, வாசியோகம் முதலான செய்திகளைக் கூறுகின்றது. 2. மருத்துவம். 3. அகத்தியர் அறுசுவை நிகண்டு என்ற இந்நூல் பால், தேன், வெண்ணெய், பரங்கிப்பட்டை, பனம்பழம், பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், பொன்னாவரை, இந்துப்பூ, கல்லுப்பு, ஆடாதோடை, சீரகம், சடாமஞ்சி, ஊமத்தை, சந்தனம், குங்குமப்பூ, இலுப்பைப்பூ, கற்பூரம், முசுமுசுக்கை, குங்குலியம், சுக்கு, மிளகு, திப்பிலி, எலுமிச்சம் பழம், இலவங்கப் பத்திரி, கிராம்பு முதலியவற்றின் குணங்களையும், நீர்க்கட்டு, கல்லடைப்பு, தலைவலி, வாய்வு, மூலம் போன்ற நோய்களுக்கு மருந்துகள் செய்யும் விதங்களையும், மருந்துகள் உட்கொள்ளும் முன் வாசியோகம் செய்யும் நிலைகளையும் தெளிவாக உணர்த்துகிறது.

4. ஹரிஓம் நன்றாக அகத்தியர் சட்ரச நிகண்டு.

5. பூவார் சிரகிரியில் பொன்னிவர் வாழத்
தாமாவா ரணமுகனை வாழ்த்தியே - நாவார்
ஆறுசுவை நேர்நிகண்டி னாரியத்தைச் செந்தமிழாய்
றேறுசுவை செய்தேன் தெரிந்து. 1

6. நல்லநவச் சாரமதை நற்சுண்ணத்தைக் குழைத்து
வல்லமையாய் நாசியினில் வைத்தேத்த - கொல்லவே
வந்ததலை வலியும்வன் மூர்ச்சை வாய்வுகளும்
முந்திடுநீ ரேத்தமும்போ மோடி. 283

7. —.

8. தழுவல். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. ள - ழ வேறுபாடில்லாது பிழைகளுடன் எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் இப்பூவுலக மக்கள் நோய் இல்லாமல் வாழ, ஆரியத்தில் இருந்த அறுசுவை நிகண்டைச் செந்தமிழில்

செய்தார் என்று கூறுவதாக அமைந்துள்ளது. இந்நூலில் தற்காலச் சொல்லகராதிகளைப் (நிகண்டைப்) போல் சொற்களை எடுத்து அதற்குப் பொருள் கூறாமல், மருத்துவக் கருத்துக்களைத் தொகைப் படுத்திக் கூறுவது இதன் சிறப்பாகும். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ச.ம.நூ. எண்கள் 212(a), 214(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இவ்வேட்டுச் செய்திகள் அகத்தியர் சூத்திர நிகண்டு, அகத்தியர் நிகண்டு, அகத்தியமாமுனி அருளிச் செய்த நிகண்டு 116, அகத்தியர் நீற்றின பற்ப வகைகள், அகத்தியர் சுவாமி நிகண்டு 116 எனப் பல்வேறு சுவடி நூலகங்களில் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளன. இந்நூலிற்குச் சட்ரச நிகண்டு என்ற பெயரும் உண்டு என்பதைத் த.ச.ம.நூ. சுவடிகளிலிருந்தும் தெரிகிறது. அறுசுவைகளாவன: 1. மதுரவர்க்கம், 2. அமிலவர்க்கம், 3. இலவணவர்க்கம், 4. கசப்புவர்க்கம், 5. உரைப்புவர்க்கம், 6. துவர்வர்க்கம். மதுரவர்க்கமாவன: பால், வெண்ணெய், நெய், எண்ணெய், பனம்பழம், பேரீச்சம்பழம், நன்னாரி, இலுப்பைப்பூ, கீரை வகைகள், தானிய வகைகள், கிழங்கு வகைகள் போன்றன. அமிலவர்க்கமாவன: தயிர், மோர், கள், நாரத்தை, இலந்தை, புளியாரை போன்றன. இலவணவர்க்கமாவன: இந்துப்பு, மணலுப்பு, கல்லுப்பு, நவச்சாரம், வெங்காரம் போன்றன. கசப்புவர்க்கமாவன: ஆடாதோடை, பேய்ப்புடல், கடுகுரோகிணி, இலைக்கள்ளி, காட்டாமணக்கு, ஊமத்தை, நொச்சி போன்றன. உரைப்புவர்க்கமாவன: சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், இலவங்கம், கிராம்பு, செந்தூரம் முதலியன. துவர் வர்க்கமாவன : அரக்கு, வில்வம், கடுக்காய், நெல்லி, நாவல், அத்தி, ஆல் முதலியன. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் அறுசுவை நிகண்டு என்ற இந்நூலுடன் அனுபவ வைத்தியம் என்ற நூலும் உள்ளது.

## அகத்தியர் ஆறாதாரம் 8

I. 1. **44**. 2. அ. R. 280 (n). ஆ. T. R. 263. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஆறாதாரம் 8. ஆ. Akattiyar ārātāram 8. இ. அகஸ்தியர் அருளிச்செய்த எட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 24 x 2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 7; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான மார்க்கம் தொடர்பான செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம் . 3. அகத்தியர் ஆறாதாரம் 8 என்ற இந்நூலில் முதலாவதாகத் தேவி, நந்தி, சிவன் போன்ற தெய்வங்கள் துதிக்கப்படுகின்றன. பின்பு நம் உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப் பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறனுள் காற்றை எப்படிச் சுவாசிக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. ஓம் மூலாதாரம் - கணபதி வல்லபை. ந - சுவாதிஷ்டானம் பிரம்மா, சரஸ்வதி. ம- மணிப்பூரகம் - விஷ்ணு - லட்சுமி. சி. அனாகதம் - ருத்திரன் - பார்வதி. வ- விசுத்தி - மகேஸ்வரன் - மகேஸ்வரி. ய - ஆக்ஞை - சதாசிவம், மனோன்மணி. இம்முறையிலேயே ஆறு ஆதாரங்களில் மனம் வைத்து அந்தந்தத் தேவதைகளைப் பூசித்து இஷ்ட சித்திகளைப் பெறவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. கணபதி முதல் சதாசிவம் ஈறாக உள்ள தெய்வங்கள் ஆண்டவனின் ஆணையால் உயிரைச் செலுத்தும் வல்லமை பெற்றவை என்றும், இவை இயக்கும் பூத தத்துவங்களை யார் புரிந்து கொண்டார்களோ அவர்களே தத்துவத்தைக் கடந்து ஆன்மாவாகிய தன்னைத் தெரிந்து தானாகவே நின்று ஆண்டவனை அறிந்து சிவஞானத்தை எய்துவர் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. அகஸ்தியர் அருளிச் செய்த யெட்டு.

5. சோதியென்ற பராபரையாள் தேவி பாதம்
சொற்பெரிய னாதாக்கள் பாதம் போற்றி
நீதியெனும் யெனையாண்ட னந்தி பாதம்
நின்னகத்தில் வைத்துனான் போற்றி றைஞ்சி

பாதிமதி தரித்தசிவ நின்ற மார்க்கம்
பார்மக்கா ளுன்னுள்ளே பரிந்து காட்ட
ஆதியெனும் நின்றபர மூலத் துள்ளே
ஆத்துமாவாய் நின்றகண பதியே காப்பாம். 1

6. பாரப்பா சடலத்தி லொண்ணீர் பற்றி
பரவியே கெட்டலைந்து போக வேண்டாம்
ஆரப்பா வாதமாவே சூட்சப் பார்வை
அப்பனே யதிலிருக்கும் விபர மெல்லாம்
சேரப்பா ஒன்றுமில்லை வீடு மாகும்
சிறந்துநின்ற தந்தியதோர் ஆமே யாகும்
வீரப்பா ஒன்றுமில்லை தந்தி கண்டால்
மெய்ஞான போதகமும் முற்று முற்றே. 8

7. திருச்சிற்றம்பலம் குருவாழ்க.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ர-ற, ள-ழ வேறுபாடுகள் இல்லாது எழுதப்பட்டுள்ளது. பாரப்பா, கேளப்பா என்று முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. சித்தர்களால் சொல்லப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் கொள்கைகளில் யோகம் என்பது பயிற்சியின் அடிப்படையில் அமைவது. யோகம் செய்வோர்கள் நம் உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய பகுதிகளில் காற்றை நிறுத்திப் பயிற்சி பெற்று நீண்ட நாள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்று அவர்களின் நூல்களில் இருந்து அறிய முடிகிறது. 11. இல்லை.

IV. 1. R. 199(i), R.199(j). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் ஆறாதாரம் என்னும் இந்நூல் அகத்தியர் ஞானம் 8 என்றும் வழங்கப்பெறும். அகத்தியர் ஞானம் 8

என்ற பெயரில்தான் தாமரை நூலகம் இந்நூலைப் பதிப்பித்துள்ளது. இந்நூலில் உண்மை அறிவின் நல்லுரைகள் பலவாறு சொல்லப்படுகின்றன. ஆறாதாரங்களில் ஒன்றான மூலாதாரம் என்பது பிறப்புறுப்புக்கும் மலவாய்வுக்கும் இடையில் உள்ள நான்கிலைத் தாமரை போலிருக்கும் சக்கரமாகும். சுவாதிட்டானம் என்பது மூலாதாரத்துக்கும் கொப்பூழ்க்கும் இடையே உள்ள தூரமாகும்.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு :

a. சிதம்பரச் சக்கரம்.
b. அகத்தியர் இராமபர அஷ்டகர்மா.
c. நவக்கிர காம்சம்.
d. அங்க நியாச சுரநியாசம்.
e. ஆத்திச்சூடி வெண்பா.
f. மூலகுரு சுருக்கம்.
g. தச்சிணாமூர்த்தி சக்கர முதலியன.
h. புவனேசுவரி யகவல் முதலியன.
i. விக்கினேசுவராஷ்டகம்.
j. அகத்தியர் யோகம் பதினாறு.
k. தட்சிணாமூர்த்தி ரசமணி பதினாங்கு.
l. அகத்தியர் ஞானம்பன்னிரெண்டு.
m. அகத்தியர் கற்பமுறை சூத்திரம் பத்து.
o. ஞானதீட்சைச் சுருக்கம் ஐந்து.
p. போகர் சூத்திரம் பதினாறு.
q. அகத்தியர் யோகநீதி பதினாறு.
r. கமலமுனி ஞானச் சுருக்கு பதினைந்து.
s. உரோமரிஷி சூத்திரம் பதினாறு.
t. உரோமரிஷி சுருக்கம் பதினாறு.
u. அகத்தியர் பூரண சூத்திரம் பதினாறு.
v. திருமூலர் ஞானச் சுருக்கம்.
w. ஊர்வசி இரத்தினச் சுருக்கம்.
x. உரோமரிஷி கற்பமுறை இருபது.
y. உரோரிஷி சூத்திரம் இருபத்தைந்து.
z. அகத்தியர் வழலை மூப்பது.

a,1 அகத்தியர் கலை ஞானச் சுருக்கம் பன்னிரெண்டு.

b.1. அகத்தியர் கலை ஞானச் சுருக்கம் பன்னிரெண்டு

c.1 மச்சமுனி ஞானம் மூன்றுகாண்டம்.

d.1. அகத்தியர் சூத்திரம் பத்து.

e.1. அகத்தியர் சவுக்காரத் திறவுகோல் பதினாறு.

f.1 நந்திதேவர் வாத சூத்திரம் முப்பது.

g.1 அகத்தியர் புனை சுருட்டு பதினெட்டு.

h.1. மாணிக்கவாசகர் ஞானத்தாழிசை.

## அகத்தியர் ஆறாதாரம் 8

I. *1.* **45**. *2.* அ. R. 199 (i). ஆ. T.R. 183. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் ஆறாதாரம் *8.* ஆ. Akattiyar ārāṯāram 8. *4.* —. *5.* —. *6.* —. காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 2. 5.* 32 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* சிதைவு. *12. 4;* இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *7* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 8* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* ஞானமார்க்கம் தொடர்பான செய்திகளைக் கூறும் நூல். *2.* ஞானம். *3.* வரிசை எண் *44* போன்றது.

4. ஹரி ஓம் நன்றாகவும்.

5. சோதியெனும் பராபரையாய் தேவி பாதம்
சொற்பெரிய நாதாக்கள் பாதம் போத்தி
வீதியெனும் எனையாண்ட நந்தி பாதம்
விண்ணகத்தில் வைத்துயான் தொழுதி றைஞ்சி
பாதிமதி தரித்தசிவன் நின்ற மார்க்கம்
பார்மக்கா ளென்றுள்ளே பரிந்து காட்ட
ஆதியெனும் நின்றபர மூலத் துள்ளே
ஆத்துமமாம் நிறைந்துநின்ற கணபதியே
காப்பாம். 1

6. பாரப்பா செடத்தில்வே றொன்றைப் பத்தி
பரவியே கெட்டலைந்து போக வேண்டாம்
மாரப்பா ஆற்றுமாவைச் சூட்சப் பார்வை
அப்பனே யதிலிருக்கும் விபர மெல்லாம்
சேரப்பா வொன்றுமில்லை வீடு மாகுஞ்
சிறந்துநின்ற தந்தியதே மாமே யாகும்
வீரப்பா ஒன்றுமில்லை தந்தி கண்டால்
மெஞ்ஞான போதகமும் அமுர்த முற்றே. 8

7. திருச்சிற்றம்பலம் துணையுண்டாதாகவும் சிவ சண்முக மெய்ஞ் ஞானதேசிகன் திருவடி வாழ்க.

8. மூலம். 9. பாடபேதங்கள் மிகுந்து காணப்படுகின்றன. பேச்சு வழக்குச் சொற்கள் பயின்று வந்துள்ளன. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. சித்தர்கள் மருத்துவச் செய்தியோடு தத்துவச் செய்திகளையும் கூறுவர். 11. சார்வரி வருடம் ஆவணி மாதம் 25 காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதினது.

IV 1. R. 280(n), R. 199(i). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. ஆறாதாரங்களில் ஒன்றான மணிப்பூரகம் என்பது, நாபித்தானத்தைக் குறிக்கும். விசுத்தி என்பது அடிநாவிடம் ஆகும்.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு :

a. அகத்தியர் சௌமிய சாகரச்சுருக்கம் முன்னூறு.
b. திருமுறை நாயனார் வாத சூத்திரம் முன்னூறு.
c. கணக்கதிகாரம் உரையுடன்.
d. திருமூல நாயனார் நிகண்டு முன்னூறு.
e. புலிப்பாணி பலதிரட்டு நூறு.
f. கொங்கண நாயனார் கடைக்காண்ட சூத்திரம்.
g. சுப்பரமணியர் ஞான சூத்திரம் நூறு.
h. அகத்தியர் ரசமணி சூத்திரம் பதினான்கு.
j. நிதி நிட்சேப விபரம்.

k. சிவாக்கியார் நாடி பரிக்ஷை முப்பத்திமூன்று.

l. அகத்தியர் ஆறாதாரம் எட்டு.

m. நீலகண்ட வாலை சூத்திரம் ஐம்பது.

n. அகத்தியர் ஞான காவியம் ஆயிரம்.

## அகத்தியர் ஆறாதாரம் 8

I. *1.* **46**. *2.* அ. R. 199. (j). ஆ. T.R. 183. இ. —. ஈ —. *3.* அ. அகஸ்தியர் ஆறாதாரம் *8.* ஆ. Akattiyar ārātāram 8. *4.* —. *5.* —. *6.* காளத்தி செட்டி குமாரன் சுப்பன். *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 2.* *5.* 31 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிதைவு. *12. 4;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *7* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 8* பாடல்கள்.

ஆ. —.

III. *1.*ஞான மார்க்கம் தொடர்பான செய்திகளைக் கூறும் நூல். *2.* ஞானம். *3.* வரிசை எண் *44* போன்றது.

*4.* —.

5. சோதியெனும் பராபரையாய் தேவி பாதம்
சொற்பெரிய நாதாக்கள் பாதம் போத்தி
வீதியெனும் எனையாண்ட நந்தி பாதம்
விண்ணகத்தில் வைத்துயான் தொழுதி றைஞ்சி
பாதிமதி தரித்தசிவன் நின்ற மார்க்கம்
பார்மக்கா ளென்றுள்ளே பரிந்து காட்ட
ஆதியெனும் நின்றபர மூலத் துள்ளே
ஆத்துமமாம் நிறைந்துநின்ற கணபதியே காப்பாம். 1

6. பாரப்பா செடத்தில்வே றொன்றைப் பத்தி
பரவியே கெட்டலைந்து போக வேண்டாம்
மாரப்பா ஆத்துமாவைச் சூட்சப் பார்வை
அப்பனே அதிலிருக்கும் விபர மெல்லாம்

சேரப்பா வொன்றுமில்லை வீடு மாகுஞ்
சிறந்துநின்ற தந்தியதே மாமே யாகும்
வீரப்பா ஒன்றுமில்லை தந்தி கண்டால்
மெஞ்ஞான போதகமும் அமுர்த முற்றே. 8

7. —.

8.மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்கள் கலந்துள்ளன. பாரப்பா, கேளப்பா எனவும், போற்றி என்பது போத்தி எனவும் வருவது காண்க. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. சார்வரி வருஷம் ஆவணிமாதம் 25 தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகஸ்திய னாயனாரருளிச் செய்த ஆறாதார மெழுதி நிறைவேறியது. தேவிசகாயம், சிவசண்முக மெய்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

IV. 1. R. 280(n), R. 199(i). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. ஆறாதாரங்களில் எஞ்சியவற்றுள் அநாகதம் என்பது இருதய கமலம். இது 12 இதழ்க் கமலம் என்றும், முக்கோண வடிவம் உடையது என்றும் கூறப்படுகிறது. இறுதியாக உள்ள ஆஞ்ஞை என்பது வலாடத் தானம். இது முன்றிதழ்க் கமலம் என்றும், வட்டவடிவமானது என்றும், படிக நிறம் கொண்டது என்றும் கூறப்படுகின்றது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் ஆறாதாரம் 8 என்ற இந்நூலுடன் அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 300, அகத்தியர் இரசமணிச் சூத்திரம் 14, அகத்தியர் ஞானகாவியம் 1000 ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் இந்திரசாலம் 1200

I. 1. **47**. 2. அ. R. 4777. ஆ. T.R. 2111. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் இந்திரசாலம் 1200. ஆ. Akattiyar intiracālam 1200. இ. அகஸ்தியர் இந்திர ஜாலம் ஆயிரத்து இருநூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ. சு. நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 201. 5. 39 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 402; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. நடுப்பகுதியில் சில ஏடுகள் இல்லை. 16. குறை. 17. 1032 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வைத்திய அகராதி, மருந்துகள், வித்தைகள், மந்திரங்கள் முதலான செய்திகளைக் கூறும் நூல். 2. மருத்துவம், ஜாலம், மந்திரம். 3. அகத்தியர் இந்திர ஜாலம் என்ற இந்நூலில் முதலாவதாக விழிநோய், மூலநோய், சூலை நோய் முதலானவற்றுக்கு மருந்துகள் செய்யும் முறை கூறப் படுகிறது. நூற்பெருமையுடன் தொடங்கும் இவ்வேட்டில் முப்புவின் விபரமும், சுன்னங்களாகிய துருசுச் சுன்னம், இரச சுன்னம், அரிதாரச் சுன்னம், வீரச் சுன்னம், கற்பூரச் சுன்னம், காந்தாரச் சுன்னம் ஆகியவைகளும், பற்பங்களாகிய இரச பற்பம், தாமிரபற்பம், கந்தகபற்பம், வீரபற்பம் போன்றவை யும், அரிதாரம், பொரிக்காரம், கல்லுப்பு போன்றவையும், மேகவெட்டை, அரையாப்பு போன்ற நோய்களுக்கான எண்ணெய் வகைகளுள் கரிசாலை எண்ணெய், விளக் கெண்ணெய், புண் வகைகளுக்குரிய எண்ணெய் வகைகளும் கூறப்பட்டுள்ளன. மேலும் தைல வகைகளாக வெள்ளை ஆவாரைத் தைலம், சிவன் வேம்புத் லைம், வேப்பம் பட்டைத் தைலம் போன்றவை செய்முறைகளும் கூறப்படுகின்றன. வசிய மருந்துகளாக மதன வாச இலேகியம், ஊர்க்குருவி வசியமருந்து, குந்துருக்க மருந்து போன்றவையும் சொல்லப் பட்டுள்ளன. பிசாசு ஓட்ட, பிள்ளை பெற மருந்துகளும், பாம்பு விசம் தீர்க்க, காமாலை நோய்தீர பற்பம் செந்தூரம், தைலம், கற்பங்களும் சொல்லப்படுகின்றன. பச்சைக் கற்பூரம், பாஷாணம், நாகம், சூதம், ஆகியவற்றைச் சுத்தி செய்தல், கட்டுதல், மோடி வித்தை, கண்கட்டு வித்தை மாரணம், வசியம், ஆகர்ஷணம் இவற்றுக்கு மை தயாரித்தல், பூசை செய்தல், உச்சாடன முறை, குறளிவித்தை, குட்டிச் சாத்தான் ஏவல் ஆகிய செய்திகளும் கூறப்படுகின்றன.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் இந்திரஜாலம் ஆயிரத்திருநூறு.

5. காரணமே மூலவட்டந் தன்னில் நிற்குங்
கணபதியும் வல்லபையும் தேவர் காப்பு
'பூரணமாம் பாரபரையுஞ் சிவனும் நந்தி
பொருந்திநின்ற பஞ்சகர்த்தாள் கணங்கள் காப்பு
வாரணத்தி லேறுவிளை யாடு மெந்த
மன்னுகுரு வருள்சிறந்த குமரன் காப்பு
நாரணனும் நான்முகனும் அறியா நின்ற
நலமான வேதாந்தம் காப்புத் தானே. 1

6. சித்திபெறும் தேவரிசி குகைகள் தோறும்
திருவருளால் அடக்கிவைத்து இந்த நூலைப்
பத்தியுடன் பூசைசெய்து வரையுள் தாண்டி
பலன்பெற்றார் மென்மேலும் மவுன மப்பா
முத்திபெறுந் தவயோகி ஆனா லிந்த
மொழிதப்பா துலகினிலே நடந்தா யானால்
சத்தியருள் சகலசித்துங் கைக்குள் ளாகும்
சத்தியந்தா னிந்தநூல் காண்ட முத்தே. 1200

7. மாந்தீரிகம் நாலாங்காண்டம் முகிந்தது முத்தும். பொதிகா சலன் துணை, ஞான சத்திதாள் திருவடிவாழ்க, மவுன தேசிகன் திருவடி வாழ்க, மாசிலாமணி தேசிகன் திருவடி வாழ்க.

8. மூலம். 9. பாடபேதங்கள், பிழைகள் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல் ஆயினும் வினோத செயல்களைக் கூறுகின்றது. 11. விபவ வருடம் புரட்டாசி மாதம் 13 ந் தினத்தில் யெழுதி முடிந்தது. முற்றும்.

IV. 1. R.4919, R. 4696, R.6124, R.6991. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 261, 789, 1026, 1085, த.ப.க. எண்கள் 288, 2349. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. இரத்தின முதலியார் & சன்ஸ், (பதி.) 'அகத்தியர் நாலுகாண்டம் ஜால வைத்திய காவியம் 1200', கலைக்கியான முத்திராக்ஷர சாலை, சென்னை, 1920. 3. இல்லை.

VI. அகத்தியர் இந்திரசாலம் 1200 என்ற இந்நூலானது நான்கு காண்டங்களாக அமைந்துள்ளது. முதல் காண்டம் வைத்திய காண்டம் எனவும், இரண்டாம் காண்டம் வாத காண்டம் எனவும், மூன்றாம் காண்டம் ஜாலவித்தை காண்டம் எனவும், நான்காம் காண்டம் மாந்திரீகக் காண்டம் எனவும் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காண்டமும் 300 பாடல்களைப் பெற்று, நான்கு காண்டங்களும் மொத்தம் 1200 பாடல்களைப் பெற்றிலங்குகின்றன. அகத்தியர் இந்திர சாலம் 1200 என்ற இந்நூல் அ.கீ.சு. நூலக மூவருடச் சுவடி விளக்க அட்டவணை R. 250 ஆம் எண்ணினைப் போன்ற பிரதியாகும்.

## அகத்தியர் இந்திரசாலம் 1200

I. *1.* **48**. *2.* அ. R. 6991. ஆ. T.R. 2813. *3.* அ. அகத்தியர் இந்திரசாலம் ஆறு காண்டம். ஆ. Akattiyar intiracālam ārukāṇṭam *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* 110. *5.* 24 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* மிகவும் சிதைவு. *12.* 220; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 8 வரிகள். *14.* வெண்பா, விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17.* 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவம், விநோத வித்தைகள், மந்திரங்கள் போன்றவற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம், வாதம், மந்திரம், சாலம். 3. வரிசை எண் 47 போன்றது.

4. சீரொரு சால வித்தை சிவன்குரு வருளிச் செய்த
ஓரொரு கருவைச் சும்மா உலகமீ துரைக்க லுற்றேன்
பேரொரு வருக்கு மீசன் பின்வரு மென்ற தாலே
ஆரொரு வரையா னாலும் அகத்தினில் அடக்கி
வைய்யே. 1

5. மிகவும் சிதைவு.

6. குறிவென்பா ரிந்திர கண்டி கோகர்ண நூறு
அறிவுண்டாம் காலமவை யடக்க - பிரிவுக்கு
தெட்சணியை யாருச்சி கால மாட்டியிக்
கடைச்சனி நூறு முற்றும். 100

7. சாலவெண்பா முற்றும். குரு பாதமே கெதி.

8. மூலம். 9. பேச்சுவழக்குச் சொற்கள் மிகுந்துள்ளன. 10. காண்டத்திற்கு 200 பாடல்கள் வீதம் ஆறு காண்டங்கள் அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளன. இறுதி இரு காண்டங்கள் நூறு, நூறு பாடல்களாக அமைந்துள்ளன. 11. இல்லை.

IV. 1. R. 4777, R. 4919, R. 6124, R. 4696. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 1409(b), 1383(c), த.ப.க. எண் 288, 2349. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர் சாலசூத்திரத் திரட்டு,' பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. இந்நூல் வெண்பாக்களால் ஆனதால் சாலவெண்பா எனப் பெயர் பெறுகின்றது. இச்சுவடிக் கட்டில் இந்நூற் பாடலுக்கு முன் 5 காப்புப் பாடல்கள் உள்ளன.

## அகத்தியர் இந்திரசாலம் 1200

I. 1. **49**. 2. அ. R. 4919. ஆ. T.R. 2143. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் இந்திரசாலம் 1200. ஆ. Akattiyar intira cālam 1200. இ. அகத்தீசுரனார் இந்திரசாலம் ஆயிரத்திரு நூறு .4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 192. 5. 31 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 384; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவ, மந்திர, தந்திரங்கள் நிறைந்த செய்தி களடங்கிய பாடல்களைக் கொண்ட நூல். 2. மருத்துவம், சாலம், மந்திரம் மற்றும் வாதம். 3. வரிசை எண் 47 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக.

5. காரணமே மூலவட்டந் தன்னில் நிற்கும்
கணபதியும் வல்லபையுந் தேவர் காப்பு
பூரணமாம் பராபரையும் சிவனும் நந்தி
பொருந்திநின்ற பஞ்சகர்த்தாக் கணங்கள் காப்பு
வாரணமா மேரிவிளை யாடு மெந்தன்
மன்னுகுரு வருள்சிறந்த குமரன் காப்பு
நாரணனும் நான்முகனும் அறியா நின்ற
நலமான வேதாந்தக் காப்புத் தானே. 1

6. சித்திபெருந் தேவரிஷிக் குகைகள் தோறும்
திருவருளா லடக்கிவைத்து யிந்த நூலைப்
பத்தியுடன் பூசைசெய்து வரையுள் தாண்டிப்
பலன்பெற்றார் மென்மேலும் மவுன மப்பா
முத்திபெருந் தவயோகி ஆனா லிந்த
மொழிதப்பா துலகினிலே நடந்தா யானால்
சத்தியருள் சகலசித்துங் கைக்குள் ளாகுஞ்
சத்தியந்தா னிந்தநூல் காண்ட முற்றே. 1200

7. அகத்தீச நாயனாரருளிச் செய்த 1200 ல் வயித்திய காண்டம் 300, வாத காண்டம் 300, சாலக் காண்டம் 300, மாந்திரீக காண்டம் 300. காண்டம் நான்குக்கு விருத்த துகை 1200.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடப் பேதங்கள் மிகுதி. 10. இந்நூலில் காண்டத்திற்கு 300 பாடல்கள் வீதம் 4 காண்டங்கள் உள்ளன. 11. இல்லை.

IV. 1. R. 4777, 2. R. 4991, R. 6124, R.4696. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 409(b), 1383(c), த.ப.க. எண் 288, 2349. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), `அகத்தியர் சால சூத்திர திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை ,திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. சில இந்திரசால நூல்கள் காண்டத்திற்கு 200 பாடல்கள் வீதம் ஆறு காண்டங்களாக அமைந்திருப்பதும் தெரிய வருகின்றது. அகத்தியர் இந்திரசாலம் 1200 என்ற இந்நூல் அ.கீ.சு. நூலக மூவருடச் சுவடி விளக்க அட்டவணை R. 4777 ஆம் எண்ணில் விளக்கப்பட்டது போன்றதாகும்.

## அகத்தியர் இந்திரசாலம் 1200

I. 1. **50**. 2. அ. R. 6124. ஆ. T.R. 2578. இ. —. ஈ. —. 3. அ.அகத்தியர் இந்திரசாலம். ஆ. Akattiyar intiracālam. இ. அகஷ்த்தியர் சாலம் முன்னூறிலிருந்து பேர்த்தெடுத்த வைத்தியம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 67. 5. 28 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 134; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. முதலிலும் இறுதியிலும். 16. குறை. 17. 460 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல வினோத மந்திர, தந்திரச் செய்திகளைக் கொண்ட நூல். 2. மருத்துவம் மற்றும் சாலம் 3. வரிசை எண் 47 போன்றது.

4. —.

5. நில்லென்று சொன்னீரே பூரணமே அய்யா
நீயென்றும் நானென்றும் வேறோ யில்லை
சொல்லொன்றுந் தப்பாது யென்குருவே அய்யா
சோமநிதி சூரியநிதி யார்தான் காண்பார்
கல்லென்ற கயிலாசங் கண்ட பேர்கள்
கருவாகா யிருநிதியுங் கண்டே கொள்வான்
வில்லென்ற ஒளிதனிலே விதங்கள் மெத்த
வேதாந்தச் சாத்திரமே அறிவான் பாரே. 380

6. பார்க்கவே அப்பிரகம் வாங்கி மைந்தா
பண்பாகப் பொடித்ததனைப் பதனம் பண்ணி
யேற்கவே விபூதியுடன் கலந்து கொண்டு
யெள்ளளவு தானெடுத்துக் கையில் வைத்து
மூர்க்கமுள்ள மூடர்முன்னே ஊது ஊது
மோசமுள்ள அப்பிரக அதுதான் சென்று
சேர்க்கையுடன் கண்ணதிலே யிந்து வீழுஞ்
செனத்திலே கர்ணமென்ன கசக்கு வானே. 840

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடபேதங்கள் மிகுதி. 10. இந்நூல் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 4777, 2. R. 4991, R. 4919, R.4696. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 409(b), 1383(c), த.ப.க. எண் 288, 2349. 3. இல்லை.

V. வே. ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), `அகத்தியர் சால சூத்திர திரட்டு', பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3.இல்லை.

VI. இந்நூலில் இடம்பெறும் பாஷாணம் என்பது ஓர் உயிருக்குச் சேதம் அல்லது அபாயத்தைத் தரக்கூடிய பொருளாகும். இது வைத்தியத்தில் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை மூலிகை வர்க்கபாஷாணம், தாது வர்க்க பாஷாணம் ஆகும்.

## அகத்தியர் இந்திரசாலம் 1200

I. 1. **51.** 2. அ. R. 4696. ஆ. T.R. 2071. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 200. ஆ. Akattiyar cuttiram 200. இ. அகத்தியர் ஆயிரத்திருநூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை - 5. 9.—. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 17. 5. 22 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நர்ம்பு இல்லாதது. 11. நன்று. 12. 34; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. நடு மற்றும் இறுதி. 16. குறை. 17. 66 பாடல்கள்.

ஆ.—.

III. 1. மருத்துவம், வாதம் தொடர்பான செய்திகள் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 47 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை.

5. காரணமாய் மூலவட்டந் தன்னில் நிற்கும்
கணபதியும் வல்லபையும் தேவர் காப்பு
பூரணமாய் பராபரையும் சிவனும் நந்தி
பொருந்திநின்ற பஞ்சகர்த்தா கணங்கள் காப்பு
மாரணமாந் தேறிவிளை யாடு மெந்தன்
மன்னுகுரு அருள்சொரிந்த குமரன் காப்பு
நாரணனும் நான்முகனும் மறியா நின்ற
நலமான வேதங்கள் காப்புத் தானே. 1

6. பாரப்பா இன்னமொரு .....லே பணந்தான்
பண்பாகத் தையிலெனைப் பிடிங்கிக் கொண்டு
நேரான லிங்கமதில் பூசி ...
..... ..... .....
..... ..... .....
..... ..... .....
ஆரவிட்டுத் திரியோடே புலரும் போது
ஆடுமையாய் நீட்டுவாள் பாரு பாரே. 66

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பட்டுள்ளன; பாட பேதங்கள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 477, R.6991, R.4919, R.6124. சி.ம.மை. ஆ. நி. எண்கள் 261, 789, 1026, 1085, த.ப.க.எண் 288, 2349.

இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார் & வே.கந்தசாமி முதலியார் (பதி.) அகத்தியர் சால சூத்திரத் திரட்டு, பரப்பிரம்ம முத்திராஷர சாலை, திருவெண்காடு, 1873.3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் இந்நூல் மட்டுமின்றி 'அகத்தியர் வாத காவியம் 1200', மேலும் 'அகத்தியர் வாதத் திறவுகோல் 48' என்ற நூல்களும் காணப்படுகின்றன. கருவூரார், கொங்கணர், புலத்தியர் ஆகிய சித்தர்களின் பெயர்களில்

அமைந்த கருவூரார் வாதகாவியம், கொங்கணர் வாதகாவியம் 3000, புலத்தியர் வாத சூத்திரம் 300 ஆகிய நூல்களும் காணப்படுகின்றன. இச்சுவடிக்கட்டில் அகத்தியர் இந்திரசாலம் 1200 என்ற இந்நூலுடன் அகத்தியர் பொதிகை 50, அகத்தியர் சூத்திரம் 50, அகத்தியர் சூத்திரம் 100 முதலிய பல நூல்களும் அமைந்துள்ளன.

## அகத்தியர் உட்கரு சூத்திரம் 48

I. 1. **52**. 2. அ. R. 265 (e). ஆ. T.R. 249. இ. —. ஈ. —. அ. அகத்தியர் உட்கருவு சூத்திரம் 48. ஆ. Akattiyar uṭkaruvu cūttiram 48. இ. அகஸ்திய மாமுனிவர் அருளிய உட்கருவு சூஸ்திரம் 48. 4. —. 5. —. 6. தட்சிணா மூர்த்தி பிள்ளை, பெரியண்ணன். 7. —. 8. அ.கீ.சு. நூ., சென்னை-5. 9.மைசூர். M.R. Ry. K. அரங்கசாமி அய்யங்காரிடமிருந்து பெறப்பட்டது. 10. 1915-16.

II. அ 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 11. 5. 36 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 22; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 48 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்வதற்குரிய நுட்பத்தையும் சில மருந்துகளையும் கூறும் நூல். 2. இரசவாதம் - மருத்துவம். 3. அகத்திய மாமுனி யருளிச்செய்த உட்கருவு சூத்திரம் என்ற இந்நூல் முதலாவதாக, சிவன், கணபதி, உமை, மனோன்மணி கந்தன், முதலான தெய்வங்களை வணங்கி வகார மார்க்கம் பற்றிக் கூறுகின்றது. இதற்கு அண்ட பிண்ட வளமை அறிய வேண்டும் என்றும், அண்டம் என்றால் ஒவ்வொருவரும் ஒரு பொருள் சொல்கின்றனர் என்றும், அவர்கள் கொள்ளும் பொருள் வகைகள் பற்றியும் ஆசிரியர் கூறுகின்றார். எழுத்தில் வகாரம் சிகரம் போன்றது. ஆகாசம் நெருப்புப் போன்றது. நாதாந்தம் வெளி போன்றது. பூநீறைச் சிறுநீரில் கலக்கி அதைத் தெளிவாக இறுத்துத் தீயெரிக்க வேண்டும். இது வகாரம் பெற வழியாகும். அதன்போது காலை, மதியம்,

மாலை என மூவேளையும் பூசையில் அமர வேண்டும். வகாரமார்க்கத்தால் யோக சித்தி, ஞான சித்தி பெறுவர். வகார மார்க்கம் செய்யத் தவநெறி, சிவத்தின்தயவு, கூர்ந்த மதி, வெற்றிக் குரிய விதி, ஆணவமின்மை, குருவை மதித்துப் போற்றுதல் போன்ற செய்திகள் இடம்பெற்றுள்ளன. மேலும், பிண்டம் (கருப்பம்) பற்றியும், அதனால் வழலை முடித்துக் கருக்கள் கூட்டுதலும், செயனீர் கட்டு, பொற்குதிரை, சுண்ணம் ஆகியவை பற்றியும் கூறுகின்றது. ஆறாதார யோகத்தில் நின்று முப்பு எடுக்கும் விபரம், யோகம் கைகூடியதால் யோகிகள் செய்யும் வித்தைகள் பற்றிய குறிப்புகளும் கூறப்படுகின்றன. மேலும் கருவழலை, தெரிவு, வேதைக்குப் பிண்டமாவி அறிதல், பல்வகைக் கருக்கள், கொங்கணர் மறைப்பு, கோசபீசம், பல் சுண்ணம், உப்புக் கூட்டு, வீரம், புடம் போடும் முறைகளும் கூறப்படுகின்றன.

4. ஹரி ஓம் நன்றாக அகத்திய மாமுனியருளிச் செய்த கருமான சூத்திரம்.

5. வாதமென்ற னூல்களெல்லா மொடிக்கி யொன்றில்
மாட்டவே சிவன்மைந்தன் கணபதியுங் காப்பு
நாதமென்ற வுமையவளுஞ் சிவனுங் காப்பு
னாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
வேதமென்ற பொருள்களெல்லா மொடுக்க மாக்கி
வேதாந்த சொரூபமாங் கந்தன் காப்பு
ஆதியந்த மாகிநின்ற வொடுக்க மெல்லம்
அடிமுடியி லொடிங்கிசை தானு மாமே. 1

6. கூட்டுகின்ற கருவறிந்து கூட்ட வேணுங்
கூட்டாவிட்டால் குலையுண்டு திரிய வேணும்
மாட்டுகின்ற யினமறிந்து மாட்ட வேணும்
மடக்குவழி யறிந்தல்லோ மடக்க வேணும்
நாட்டுகின்ற வித்தையெல்லாம் பாம்பு நஞ்சு
நலமான கருவிதுதான் நன்றாய்ப் பாரே
பூட்டுகின்ற பூட்டெல்லாம் மிதுதா னென்று
புகழ்ந்திட்டே னுலகுக்குச் சுஷ்திரந்தான் முத்தே. 48

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பாட பேதங்கள் காணப்படுகின்றன. பேச்சு வழக்குச் சொற்கள்

பயின்று வந்துள்ளன. ற-ர, ள-ழ வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் புலத்தியருக்கு வகார மார்க்கம் கூறுவது போல நூல் அமைக்கப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 4746, R. 168. 2. த.ப.க. சுவடி எண்கள் 289,514, 901. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலுக்குத் 'தட்சிணாமூர்த்தி 48' என்ற பெயரும் உண்டு. வாதம் என்பது இரச வாதத்தையும், மும்பிணிகளில் ஒன்றாகிய வாத நோயையும் குறிக்கும்.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. அகத்தியர் வைத்திய சூத்திரம் எண்பத்தொன்று.
b. அகத்தியர் பரிபாஷை.
c. உரோம ரிஷி சூத்திரம் ஐந்நூறு.
d. தன்வந்தரி நிகண்டு முன்னூறு.

## அகத்தியர் உட்கரு சூத்திரம் 48

I. 1. 53. 2. அ. R. 168 (i). ஆ. T.R. 152. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் உட்கருவு சூத்திரம் 48. ஆ. Akattiyar utkaruvu cūttiram 48. 4.—. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 11. 5. 30 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 22; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 48 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்வதற்கான நுட்பத்தையும் சில மருந்துகளையும் கூறும் நூல். 2. இரசவாதம் - மருத்துவம். 3. வரிசை எண் 52 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக தெட்சணாமூர்த்தி 48.

5. வாதமென்ற னூல்களெல்லா மொடிக்கி யொன்றில்
மாட்டவே சிவன்மைந்தன் கணபதியுங் காப்பு
நாதமென்ற வுமையவளுஞ் சிவனுங் கப்பு
னாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
வேதமென்ற பொருள்களெல்லா மொடுக்க மாகி
வேதாந்த சொரூபமாம் வடுகன் காப்பு
ஆதியந்த மாகிநின்ற வொடுக்க மெல்லா
மடிமுடிவி லொடுங்கிசை தானு மாமே. 1

6. கூட்டுகிற கருவறிந்து கூட்ட வேணுங்
கூட்டாவிட்டால் குலையுண்டு திரிய வேணும்
மாட்டுகிற யினமறிந்து மாட்ட வேணும்
மடக்குவழி யறிந்தல்லோ மடக்க வேணும்
னாட்டுகிற வித்தையெல்லாம் பாம்பு நஞ்சு
நலமான கருவிதுதான் நன்றாய்ப் பாரு
பூட்டுகிற பூட்டெல்லாம் மிதுதா னென்று
புகழ்ந்திட்டே னுட்கருவு சூஷ்திரந்தான் முத்தே. 48

7. —.

8. மூலம். 9. பாட வேறுபாடுகள், பிரதிவேறுபாடுகள். உலா முன் பிரதியில் கந்தன் காப்பு என வருகிறது. இப்பிரதியில் வடுகன் காப்பு என வந்துள்ளது. 10. அகத்தியர் உபதேசம் செய்வது போல் உள்ளது. 11. அகத்தியர் உட்கரு சூத்திரம், 48 முடிந்தது குவிற்சற் பேட்டையில் எழுதினது. அய்யாக்கண்ணு நூல். குரு முன்னிற்கவும்.

IV. 1. R. 4746, R. 265. 2. த.ப.க.எண்கள் 289,514, 901. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலிற்குக் 'கருமான சூத்திரம்' என்பதும் பெயர். கருமானம் என்பது தாழ்ந்த உலோகங்களை உயர்ந்த உலோகமாக்கும் வித்தையான இரசவாதம் பற்றிக் கூறுவதால் கருமான சூத்திரம் என்ற பெயரிலும் இந்நூல் வழங்கப் படுகிறது.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. சுந்தரானந்தர் விநோத சூத்திரம்.
b. போகநாதர் சூத்திரம் எட்டு.
c. சட்டைமுனி நாயனார் சூத்திரம் எட்டு.
d. அகத்தியர் சூத்திரம் பத்து.
e. அகத்தியர் முப்பு பதினாறு.
f. அகத்தியர் ஊழிக்காற்று விபரம்.
g. பஞ்சாட்சரம்.
h. வைத்தியமுறை.
j. சட்டைமுனி தர்க்கம்.
k. அகஸ்தியர் சாஸ்திரம் இருபது.

## அகத்தியர் உட்கரு சூத்திரம் 48

I. *1.* **54.** *2.* அ. R. 4746. ஆ. T.R. 2097. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சூத்திரம் *48*. ஆ. Akattiyar Cūttiram 48. இ. அகஷ்த்தியர் சூஷ்த்திரம் *48*. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கி.சு.நூ., சென்னை – *5*. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 18. 5.* 31 x 2 செ.மீ. *6.* ஒரு துளை. *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிறு சிதைவு. *12. 36;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 5 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 48* பாடல்கள்.

ஆ. -----.

III. *1.* இந்நூல் இரசவாதம் செய்வதற்குரிய மருந்துகளைக் கூறுகிறது. *2.* இரசவாதம் - மருத்துவம். *3.* வரிசை எண் 52 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக அகஸ்தியர் சூஸ்திரம் *48*.

5. வாதமென்ற நூல்களெல்லாம் ஒடிக்கி ஒன்றில்
மாட்டவே சிவன்மைந்தன் கணபதியுங் காப்பு
நாதமென்ற உமையவளும் சிவனுங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு

வேதமென்ற பொருள்களெல்லாம் ஒடுக்க மாக்கி
வேதாந்தச் சொரூபமாம் வடுகன் காப்பு
ஆதியந்த மாகிநின்ற ஒடுக்க மெல்லாம்
அம்முடியி லொடுங்கினது தானு மாமே. 1

6. கூட்டுகிற கருவறிந்து கூட்டவேணும்
கூட்டாட்டால் குலையுண்டு திரிய வேணும்
மாட்டுகிற யினமறிந்து மாட்ட வேணும்
மடக்குவழி அறிந்தல்லோ மடக்க வேணும்
நாட்டுகிற வித்தையெல்லாம் பாம்பு நஞ்சு
நலமான கருவிதுதான் நன்றாய்ப் பாரு
பூட்டுகிற பூட்டெல்லாம் மிதுதா னென்று
புகழ்ந்திட்ட உள்கருசூத் திரந்தான் முற்றே. 48

7. குரு பாதமே துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துளளன. ர, ற / ள, ழ வேறுபாடு இல்லாது வருகின்றது. 10. 'அகத்தியர் சூத்திரம் 48' என்ற பெயர் இந்நூலுக்கு இருந்தாலும் பொருளமைதியைக் கொண்டு' உட்கரு சூத்திரம்' என்று கொள்ளப்பட்டது. இந்நூல் 'வாதத் திறவுகோல் 48' என்ற பெயரிலும் வழங்கப் படுகின்றது. 11. இல்லை.

IV. 1. R.168 , R.265. 2. த.ப.க. எண்கள் 289, 514, 901, 1041 a, 1078-b, 82.a, 1137. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. — 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் வாதத் திறவுகோல் 48 என்ற பெயரில் பல நிறுவனங்களில் உள்ள சுவடிகளில் காணப்படுகின்றது. திறவுகோல் என்பது இங்கு வாயில், வழி என்ற பொருளில் வருகிறது. திறவுகோல் என்ற பெயரில் இராமதேவர், பதஞ்சலி, பதினெண் சித்தர் முதலானோர் ஞானம், வாதம், வைத்தியம், நாதாந்தம் ஆகிய பொருண்மைகளில் நூல்கள் இயற்றி யுள்ளனர். இந்நூல் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் வாதத் திறவுகோல் 48 என்னும் தலைப்பில் தொடர் எண் 1072-இல் உள்ளது. இச்சுவடிக்கட்டில் அகத்தியர் உட்கரு சூத்திரம் என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 46, அகத்தியர் சூத்திரம் 15, அகத்தியர் சூத்திரம் 25 ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் உபதேச ஞானம் 51

I. *1.* **55.** *2.* அ. R. 254 (h). ஆ. T.R 238. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் உபதேச ஞானம் **51** ஆ. Akattiyar upatēsa gñāṉam 51. இ. அகஸ்தியர் உபதேச ஞானம் ஐம்பத்தொன்று. *4.* —. *5.* —. *6.*—. *7.* —. *8.* அ.கீ.சு. நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 13.* 5. 23 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* சிதைவு. *12. 26;* இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *8* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17.* 52 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அகத்தியர் பெயரால் அமைந்த அட்டகர்ம மாந்திரீக முறைகளைக் கூறும் நூல். 2. மாந்திரீகம் 3. கணபதியை வாழ்த்திச் சிவனைத் தியானம் செய்தல், காயசித்தி பெற தியானம் செய்யக்கூறுதல், தியானத்திற்குச் சுழிமுனையில் எண்ணத்தை ஒடுக்கக் கூறுதல், தாம்பிரத்தை இரசவாதம் புரிந்து தங்கமாக்கும் வித்தை, உலக வசியம், அரசர் முதல் மக்கள் வரை யாவரையும் வசியம் செய்யும் வழிமுறைகள், ஆமை ஓட்டு மை தயாரித்து ஆகாசம், பூமி, பதாளம், இவற்றில் நடைபெறும் நிகழ்வுகளைக் காணுதல், சித்திரமாக உருமாற்றம் செய்யும் வித்தை போன்ற பல செய்திகளை இந்நூல் கூறுகின்றது.

4. அகஸ்திய நாயனார் அருளிச் செய்த உபதேசம் ஞானம் ஐம்பத்தொன்று.

5. அரியான முதலெழுத்தை யறிய மாட்டார்
அப்பாலும் நகர்ப்பட்ட ணத்தைக் காணார்
அரியான முதலெழுத்தே சிவமுஞ் சத்தி
ஆச்சரியம் நகாரமடா பூமி யாச்சு
சரியான பதினெட்டு யெழுத்துக் கெல்லாம்
தானந்தம் ஆதியென நின்ற தாலே
விரியாமல் விரிந்துபரப் பிரம மாகி
வேதாந்த சாத்திரமாய் விளங்குந் தானே. 1

6. அறிவாய்நீ அன்பத்தின் ஒன்றே சூட்சம்
ஆதிமுத லந்தம்வரை மூலஞ் சொன்னோம்
குறியான தீக்குறியின் கருவைக் கண்டு
குருபாத முத்திபெறக் குறியுஞ் சொன்னோம்
நெறியான நிஷ்ட்டைமுதல் தியானஞ் சொல்லி
நீயறிய நாமென்ற நிலையுஞ் சொன்னோம்
அறிவாய்நீ யென்றுனக்கு உறுதி சொல்லி
ஆணையிட்டுக் குடுத்தகுறி அறிவாய் முற்றே. 52

7. சிவமயம்.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பும், பேச்சுவழக்குச் சொற்களும் பாடல்களில் பயின்று வந்துள்ளன. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. ஆ. நி. எண் 656(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), `பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலின் வேறொரு பிரதியைத் தாமரை நூலகம் 'அகத்தியர் கேசரி குருநூல் 54' என்னும் பெயரில் பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை என்ற நூலில் பதிப்பித்துள்ளது. இதிலிருந்து, இந்நூலிற்கு அகத்தியர் கேசரி குருநூல் என்ற பெயரும் உண்டு என்பதை அறியமுடிகிறது.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. சுந்தரானந்தர் சூத்திரம்.
b. சுந்ரானந்தர் பூஜாவிதி.
c. சுந்தரானந்தர் தீட்சாவிதி.
d. சுந்தரானந்தர் ஐம்பத்தொன்று.
e. அகத்தியர் ஞானம் முதலியன.
f. அகத்தியர் யோகம் பதினாறு.
g. அகத்தியர் சூத்திரம் பதினாறு.
i. அகத்தியர் ஞானம் நூறு.
j. அகத்தியர் பூரண சூத்திரம் இருநூறு.
k. அகத்தியர் பரிபூரணம் ஐம்பத்தொன்று.
l. கயிலாச சட்டைமுனி வாதநூல் ஆயிரம்.

m. சடாக்கரக்கோவை நூற்றெட்டு.

n. கொங்கணர் துரிசி குரு முப்பத்தொன்று.

o. சொக்கநாதர் சூத்திரம்.

## அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரம்

I. *1.* **56**. *2.* அ. D. 2453. ஆ. T.D. 961. இ. R.No. 6303. ஈ. —. *3.* அ. அகத்தியர் ஊழியகற்றுச் சூத்திரம் ஆ. Akattiyar ūḻikkaṟṟuc cūttiram. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு. நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 4. 5.* 22 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* நன்று. *12. 8;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *8*-வது பக்கம் ஒரு சொல் மட்டுமே இடம் பெற்றுள்ளது. *13.* பக்கத்திற்கு *6, 7* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 9* பாடல்கள்.

ஆ. *1.* 30 x 24 செ.மீ. *2. 4. 3.* பக்கத்திற்கு *24* வரிகள். *4.* தெளிவு. *5. 15.7. 1956. 6.* வஜ்ரவேலு. *7.* K.. சாரதா, J. சந்திரமௌலீஸ்வரன். *8.* கி.பி.*1956*-ல் புத்தாக்கம் செய்யப் பட்டது.

III. *1.* மனித உடம்பில் ஏற்படும் ஊழி என்ற காற்றின் இயல்பு பற்றிக் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரம் என்ற இந்நூலில் ஊழிக்காற்று என்பது நச்சுக்காற்று என்று சொல்லப்படுகின்றது. இந் நச்சுக்காற்று மனித உடம்பில் மை போலக் கறுத்துக் காணப்படும் என்றும், ஆயின் அது கண்ணுக்குப் புலப்படாது என்றும் கூறி அதன் இயல்பும், போக்கும் முறையே கூறப்படுகின்றன. மேலும் கசாயம், சுண்ணம், சியமளாதேவி வசியம், விசக்காய்ச்சல் நோய் விவரங்கள் அதற்கான மூலிகை மருந்து செய்தல், தாக வறட்சி நீக்க மருந்து, நச்சுக்கொடி சுருங்க சுண்ணம் ஆகிய செய்திகளும் இந்நூலுள் அமைந்துள்ளன.

4. —.

5. கேளப்பா ஊழியென்ற காத்தைச் சொல்வேன்
கெடியான சாமளா தேவி யாலே
காளப்பா மைபோலே கருத்தி ருக்கும்
கண்ணுக்குத் தோத்தாது கடின மேத்தும்

வாளப்பா காத்தினுட விபர மெல்லாம்
மைந்தனே சொல்லுகிறேன் வண்மை யாய்க்கேள்
பாழப்பா பன்றிவிடு முலக மெல்லாம்
பரிவுத்த மாயிருந்தால் பறக்கும் பாரே. 1

6. சேதியொன்று சொல்லுகிறேன் தெளிவாய்க் கேளும்
செகந்தனிலே சாமளா தேவி யாலே
நீதியுடன் சதிர்காண்டம் பார்வை யிட்டு
நெறியுடனே தேவிதன்னை வசியஞ் செய்தால்
சோதியுடன் வந்ததொரு ஊழி யுந்தான்
சொல்லுகிறேன் போகுமடா துன்பந் தீரும்
வீதியுடன் மூதண்டங் கொண்டு வந்தால்
என்மகனே வூழியது ஒதுங்கிப் போமே. 9

7. —.

8. மூலம். 9. அந்தாதியில், பாடபேதங்களுடன் பாடல்கள் உள்ளன. சாமளாதேவி என்ற தெய்வப் பெயர் பாடல்தோறும் இடம்பெற்றுள்ளது. 10. இந்நூலுக்கு ஊழிக்காற்று சூத்திரம் என்றும் பெயர் உள்ளது. ஊழிக்காற்று என்பது உலக அழிவின் முடிவில் வீசக்கூடிய காற்று என்று பொருள் உண்டு. நம் உடம்பை முறையாகப் பேணாவிட்டால் ஊழிக்காற்று உலகை அழிப்பது போல் நோயான ஊழி உடம்பை அழித்து விடும் என்ற அனுமானத்தின் பேரில் இந்நூலுக்கு இப்பெயர் வந்திருக்கலாம். மேலும் சாமளாதேவி என்ற பெண் தெய்வப் பெயர் பாடல் தோறும் வருவதால் இப் பெண்தெய்வம் வழிபாட்டுத் தெய்வமாக இருந்திருக்கலாம் என நம்பலாம். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலுக்குப் பின்னும் முன்னும் இடம்பெறும். சுவடிகளில் இவற்றைப் பிரதி செய்த நாள் கி.பி. 1840 ஆம் ஆண்டு என உள்ளது. அதனால் இந்த நூலும் அக் கால கட்டத்தையொட்டியதாக அமையலாம். இந்த நூலுடன் வேறு சில மருத்துவ நூல்களும் சேர்ந்து 330 ஓலைகள் கூடியதாக ஒரு கட்டாக உள்ளன. அவை வருமாறு:

1. கொங்கணர் கடைக்காண்டம் 500 (D.2450),
2. சல்லியநூல் உரையுடன் (D. 2451),
3. பஞ்சாட்சரப்பத்து (D. 2452),
4. வைத்திய நூல் வசனம் (D. 2454),
5. கைலாசமூர்த்தி வாத நூல் 300 (D. 2455),
6. சுந்தரானந்தர் அதீத சூத்திரம் 36.

இவை முறையே 1 முதல் 156, 157 முதல் 189, 190 முதல் 193, 198 முதல் 207, 208 முதல் 309, 310 முதல் 330 வரை ஓலை எண்கள் பெற்றுள்ளன. அகத்தியர் ஊழியகற்றுச் சூத்திரம் 194 ஆம் ஓலை முதல் 197 ஆம் ஓலை வரை எழுதப் பெற்றுள்ளது. இந்நூலுக்கென 1 முதல் 4 எண்கள் ஏட்டில் தனியாக ஓரிடத்தில் இடப்பட்டுள்ளன. ஆயினும் தொடர்ச்சியாக 194, 195, 196, 197 எனும் எண்களையும் இந்நூல் கொண்டுள்ளது. ஆதலால் இச்சுவடிக் கட்டில் இடம் பெறும் 6 நூல்களும் தொடர்புடையவை எனக் கொள்ளலாம்.

இந்நூல்களில், கொங்கணர் கடைக்காண்டம் 500, பஞ்சாட்சரப் பத்து, கைலாசமூர்த்தி வாதநூல் 300 ஆகிய மூன்று நூல்களுக்குச் சுவடிக் குறிப்புகள் (Colophons) தனித்தனியே உள்ளன. அக்குறிப்புகளிலிருந்து இச்சுவடிக் கட்டு நூல்கள் முறையே கி.பி.1840 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் தேதி (சார்வரி ஆண்டு வைகாசி மாதம் 27 ஆம் நாள்) அதே ஆண்டு (மார்கழி மாதம் 18 ஆம் நாள்) அதே ஆண்டு மே மாதம் 15 ஆம் தேதி ஆகிய தேதிகளில் எழுதி முடிந்ததாகக் காணப்படுவதையும், இச்சுவடிக்கட்டு ஐதர்சாகிபு என்பாருடையது என்றும் அவர் திருச்சிராப்பள்ளிக் கோட்டையிலிருக்கும் அப்துல் காதர் சமேதார்க் குமாரன் என்பதும், அதை எழுதியது சென்னையிலிருக்கும் ஆனைக்குச்சேரி தாவீதுவாத்தி என்பதும் தெரிய வருகின்றன.

## அகத்தியர் எழுவகைத் தோற்றம்

I. 1. **57**. 2. அ. R. 941 (d). ஆ. T. R. 760. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் எழுவகைத் தேற்றம். ஆ. Akattiyar eḷuvakait tōṟṟam. இ. அகத்தியர் அருளிச் செய்த எழுவகை தோத்தம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 21 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிதைவு. 12. 6; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உயிர்களின் ஏழுவகைத் தோற்றம் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் அருளிச் செய்ததாகக் கூறப்படும் இந்நூலில் உயிர்களின் எழுவகைத் தோற்றம் பற்றியும் ஞானம் பற்றியும் கூறப்படுகின்றது. முதலாவதாகத் தேவர்கள் மனிதர்களாகப் பிறப்பர் என்றும், மனிதர்களே மனிதர்களாகப் பிறப்பர் என்றும், பறவைகளும் மனிதர்களாகப் பிறக்கும் என்றும், தாவர இனங்களும் மனிதர்களாகப் பிறக்கும் என்றும், பூமியிலே ஊர்ந்து செல்லும் சீவராசிகளும் மனிதர்களாகப் பிறக்கும் என்றும், நீரில் வாழக் கூடிய அனைத்து உயிர்களும் மனிதர்களாகப் பிறக்கும் என்றும் ஏழு வகையான பகுப்பில் உள்ள உயிர்களின் தோற்றம் கூறப்படுகின்றது.

4. அகஸ்தியர் அருளிச் செய்த யெழுவகைத் தோத்தம்.

5. நலந்திகழுந் தேவர்களு மனித ராவார்
நாடறிய மனிதர்களும் மனித ராவார்
விலங்கினோடு பறைவகளும் மனித ராவார்
மிக்கமுள்ள தாவரமும் மனித ராவார்
நிலந்தனிலே வூர்வனவும் மனித ராவார்
நீர்வாழும் சாதிகளும் மனித ராவார்
குலங்கள்தனை யின்னதென்று கூற வென்றால்
குணங்களினா லவர்கு லத்தைக் கூற லாமே. 1

6. யீன்றேனுஞ் சிறியரேனும் பெரிய ரேனும்
யிருநிலத்தி லருளுடைய குருவந் தெயரில்
வ.. மெல்லாஞ் சென்றவர்தம் மடியில் சார்ந்து
வன்னியெனக் குபதேச மருள வென்ன

ஆனபுக ழுபதேசஞ் செய்து அம்மா
அரனயன்மா லறியாத அருளுந் தந்து
வூனமெனும் மெழுபாவிக் கடலை நீக்கி
வுன்பர்தொழும் யின்பநெறி யுரைப்பர் தாமே. 10

7. முற்றும். குருபாதாரவிந்தமே துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. நடைதாழ்ந்தது. ர-ற வேறுபாடில்லாது அமைந்துள்ளது. தோற்றம் என்பது தோத்தம் என வருவது காண்க. 10. உயிர்கள் ஏழு பிறவிகள் எடுக்கும் என்ற அடிப்படையில் பாடப்பெற்றது இந்த நூல். 11. குரோதனா வருடம் வைகாசி மாதம் குருவாரம் 3 ஆம் தேதி எழுதி முடிந்தது.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. உயிர்களின் தோற்றம் பற்றித் தொல்காப்பியம் (மரபியல்), திருக்கலம்பகம், திருப்பாவை போன்ற பல நூல்கள் கூறியிருக்கின்றன. அதேபோல் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நூல் உயிர்களின் தோற்றம் பற்றி விரிவாகக் கூறுகின்றது.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. அகத்தியர் வயித்திய ரத்தினச் சுருக்கம்.
b. அகத்தியர் பால வாகடம். -100.
c. அகத்தியர் பால வாகடம் 21.
e. பாலாம்பிகையகவல்.

## அகத்தியர் கர்ம காண்டம் 36

I. 1. **58**. 2. அ. R. 5823. ஆ. T. R. 2497. இ. —. ஈ.—. 3. அ. அகத்தியர் கர்ம காண்டம் 36. ஆ. Akattiyar karma kāṇṭam 36. இ. அகஸ்தியர் அருளிச்செய்த கருமக் காண்டம் முப்பத்தாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு. நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 7. 5. 37 x 3செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை.

*10.* நரம்பு இல்லாதது. *11.* சிதைவு. *12. 18;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 8 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 36* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* நாம் செய்த பழம் வினையின் காரணமாகத் தோன்றும் நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* அகத்தியர் கர்ம காண்டம் *36* என்ற இந்நூலில் நாம் முற்பிறப்பிலோ அல்லது இப்பிறப்பின் முன்பகுதியிலோ உயிர்வதை செய்திருந்தால் மேக நோய் உண்டாகும் என்றும், அதை நிவர்த்தி செய்யும் உபாயங்களும் கூறப்படுகின்றன. நீரின் வகை இருபதும், அவற்றின் குணங்களும், உயிர் உள்ள பூச்சிகளை நெருப்பிலிடல், கொழுப்பை அரிதல், மரங்களைத் தோலுரித்தல், சூரியனை வணங்காமை ஆகியவற்றால் சுரநோய் வரும் என்றும் கூறப்படுகிறது. இவற்றிற்கான நிவர்த்தியும் கூறப்படுகிறது. தாய் தந்தை மனம் நோகச் செய்தல், பொய், வம்பு ஆகியவற்றால் பாண்டு ரோகம் வரும் என்றும், இவற்றிற்கு நிவர்த்தி தீர்த்தமாடி நெய் விளக்கு இடுதல், அன்னதானம், கோதானம் செய்ய வேண்டும் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக அகஸ்தியர் கர்மகாண்டம் முப்பத்தாறு.

5. ஆதியந்தங் கடந்துநின்ற அருதி காப்பு
அப்புறத்தே நின்றபரா பரமே காப்பு
சோதியந்தத் துள்ளிலங்குஞ் சுடரே காப்பு
சொரூபநிரா மயமான சுழியே காப்பு
நீதியெங்கு மாய்நிறைந்த பரையே காப்பு
நிராமயமெஞ் ஞானமனோன் மணியே காப்பு
ஓதியந்த வேதமுடி ரீங்கா ரத்தில்
ஓமெனவே நின்றகுரு கணேசன் காப்பே. 1

6. கருதினேன் பதினெண்பேர் பாடல் தேர்ந்து
கர்மவினை தானகன்று கடாட்சம் முண்டாய்
கருதினேன் அரனுமையாள் சொல்லக் கேட்டு
கயிலாச வர்க்கவரை பெருக வேண்டி
கருதினேன் னுலகமதில் நல்லோர்க் காகக்
கருமிகளு மிதையறிந்து செய்ய வேதான்
கருதினோ மாதிபரா பரத்தை நோக்கிக்
கர்மசூஷ்த் திரமுப்பத் தாறு முற்றே. 36

7. குருவே துணை சிவமயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் உள்ளன. ற - ர, ள - ழ வேறுபாடில்லாமல் பாடல்கள் உள்ளன. தன்னை நோக்கிச் சொல்வது போல் அமைக்கப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இந்நூல் அகதியர் கர்ம காண்டம் 300ன் சுருக்கமாகும்.11. இல்லை.

IV. 1. இல்லை 2. —. 3.இல்லை.

V. 1. இல்லை 2. —. 3.இல்லை.

VI. அகத்தியர் கர்மகாண்டம் என்ற பெயரில் இந்நூல் மட்டுமின்றி அகத்தியர் கர்ம சூத்திரம் 150 அகத்தியர் கர்மகாண்டம் 300 என்ற நூல்களும் காணப்படுகின்றன.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **59**. 2. அ. R.923. ஆ. T. R.743. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கர்ம சூத்திரம் 300. ஆ. Akattiyar karma cūttiram 300. இ. அகஸ்தியர் அருளிய கன்ம சூத்திரம் முன்னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. தென்மலபாரைச் சேர்ந்த ஷோரனூர் M.R. RY. P.S. சுவாமிநாத பட்டரிடமிருந்து கி.பி. 1927-28 இல் பெறப்பட்ட சுவடி. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 56. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 111; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 301 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முற்பிறவியில் அல்லது இப்பிறப்பின் முற்பகுதியில் நாம் செய்த தீய வினையின் காரணமாக நோய்கள் உண்டாகும் என்றும், அந்நோய்கள் என்னென்ன என்பதும், அந்நோய் களைத் தீர்க்க வழி என்ன என்பதையும் விரிவாகக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் கர்ம சூத்திரம் என்ற

இந்நூலில் உயிர்வதை செய்தால் மேகநோய் உண்டாகும் என்றும், இதற்குக் கன்ம நிவர்த்தி 100 குடம் நீர் எடுத்து நந்திக்கும், கணேசனுக்கும், அரசமரத்தின் வேருக்கும், அபிசேகம் செய்து 100 முறை வலம் வந்து சிவபூசை, விஷ்ணு பூசை, பசுதானம், ஓமம், சாந்தி ஆகியவற்றைத் தினம் 10 முறை செய்ய வேண்டும் என்றும் முதலில் கூறப்படுகிறது. அடுத்து மேக இராசாங்கமும் அப்பிரக செந்தூரம் தயாரிக்கும் முறையும், தலைமுழுக எண்ணெய் செய்யும் முறையும் கூறப்படுகின்றன. மேலும் நீரின் வகைகள் இருபதும் அவற்றின் பெயர்கள் இருபதும் அந்நீரின் வாசனையும், சுவையும், அதனில் வரும் நோயும் இடம்பெற்றுள்ளன. வாங்கிய கடனைக் கொடுக்காததால் காசம் உண்டாகும் என்றும், அதற்கு நிவர்த்தி ஒரு மண்டலம் கன்னியர்க்கு அன்னதானம், வஸ்திரதானம் செய்தல் வேண்டும் என்றும், அதற்கு மருந்து தாளக பற்பம், இரச பற்பம், வேப்பரிசி, அழிஞ்சிவிதை, பேய்ச்சுரை வித்து, முருங்கை வித்து, தகரை வித்து, வில்வ வித்து, புரசம் வித்து, வசம்பு, கொடிவேலி போன்ற பல பொருள்களால் செய்யும் தைலம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதை ஒரு மண்டலம் பூச 18 குட்டம் தீரும் என்றும் இந்நூல் கூறுகிறது. இந்நோய் வரக் காரணம் தாய் தந்தையை நோகச் செய்தல், தெய்வ வடிவை அழித்தல் போன்றவையாம். அடுத்தவன் குடியைக் கெடுத்தல், பிறர் பசித்திருக்க உண்ணுதல், நல்லோரைப் பழித்தல் ஆகியவற்றால் எட்டு வகைக் குன்மம் வரும் என்றும் அவற்றை நீக்க வழி வகைகளும் கூறப்பட்டுள்ளன. ஊர்வன பறப்பனவற்றைக் கொல்வதால் வலிவரும் என்றும் இதற்கு நாகபிரதிஷ்டை செய்து சிவனுக்கும், நந்திக்கும் தலந்தோறும் ஒரு மண்டலம் பூசை செய்து அன்னதானம், வஸ்திரதானம், கோதானம் முதலியவற்றைச் செய்ய வேண்டும் என்றும் இந்நூல் கூறுகின்றது. இவ்வாறாகத் தொடர்ந்து நோய் உண்டாகும் காரணமும் அதை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளும் சொல்லப்பட்டுள்ளன.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் அருளிய கன்ம சூத்திரம் 300.

5. பூரணமாய் மும்மூலம் பொறியிற் சூடாய்
புகையெழுப்பி மேகமதாய்ச் சிரசில் சூடாய்
காரணமாய் நீர்கலந்து பீனிசம்போல் கொள்ளும்
கனலெழுந்தே வாய்வுமுத லெட்டு மெல்லாம்
சீரணமாய்ப் போகாது வாத பித்தம்
சிலேற்பனந்தான் மூன்றாலே நோய்க ளெல்லாம்
தாரணமாய்த் திசைவாய்வில் மூன்று வாய்வில்
சமானனொடு பிராணனொடு யனுபானந் தானே. 1.

6. சித்தியுண்டாம் மவுனத்தில் செல்லு வோர்க்குத்
தெளிவான மனதுரிமை யறிவி னோடும்
பத்தியாய் நிலைத்தபின்பு பாவம் போச்சு
பஞ்சபொறி புலனாண்மை பறந்து போச்சு
புத்தியாய்ப் பிழைப்பதற்குச் சாரஞ் சொல்லு
புகழான மனவாசி வாய்வு வேகம்
முத்தியா யிருவினையு மற்ற தேசி
முதலான சொர்க்கபத முத்தி தானே. 301

7. பூரண கடாச்சம் உண்டாகவும், தேவி சாமுண்டி துணை,
தெண்டாயுதபாணி துணை, வேலும் மயிலும் துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்களும் பயின்று வருகின்றன. ர - ற, ழ - ள வேறுபாடில்லாது வருகின்றன. 10. கருமம் என்பது நாம் முற்பிறவியில் அல்லது இப்பிறப்பின் முற்பகுதியில் செய்த வினைகள். அவ்வினைகளை நல்வினை, தீவினை என்று கூறுகின்றோம். அவ்வினைகளின் பயனாக வாய்வு, மேகம், சளி, குன்மம், குட்டம், வலி, பீனிசம், செவிநோய், கண்நோய், தலைநோய், சூல்நோய், கிராணி, சுரம், பாண்டு, கரப்பான் ஆகிய அனைத்தும் வருகின்றன என்று சித்தர்கள் கூறுகின்றார்கள். 11. இல்லை.

IV. 1. R.5(b), R.75(a), R.9041, R.1081, R.4683, D.1871. 2. உ.த.நி.எண் 487: 740, சி.ம.மை.ஆ.நி.எண் 751(j), த.ப.க.எண் 589. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. பொன்னுச்சாமி முதலியார் (பதி.), 'கர்ம காண்டம் 300', வித்தியா வினோத அச்சுக்கூடம், சித்தூர், 1833. 3. இல்லை.

VI. இக் கன்ம காண்டம் பல பதிப்புகள் வந்துள்ளது. பல ஏடுகளிலும் எழுதப்பட்டுள்ளது. நோய்நாடி மருந்து கொள்ளுதல் மட்டும் தமிழரின் நோக்கமல்ல. நோய் முதல் நாடுதலே நோக்கம். பாவ புண்ணியங்களில் பெரும் நம்பிக்கையுடைய நாடு இந்திய நாடு. இதனால் இயற்கையாகவே பெரியோரைப் பழிக்கக்கூடாது. பசுமாட்டுக்குப் புல் தர வேண்டும். கன்றுக்கு விட்டது போக மீதிப் பாலைக் கறக்க வேண்டும்; பூ, பிஞ்சுகளை வெட்டக்கூடாது என்று சொல்லப்பட்டும், அதன்படி நடக்க வேண்டும் என்றும் பெரியோர்கள் கட்டளையிட்டார்கள். இவையெல்லாம் முப்பிறவி வினை இப்பிறவியில் வரவொட்டாமல் செய்வதற்குரிய வழிமுறைகளாம்.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. 60. 2. அ. D. 1871. ஆ. T.D. 732. இ. R.5(b). ஈ. —. 3. அ. அகத்தியர் கர்ம காண்டம் 300. ஆ. Akattiyar karma kāṇṭam 300. இ. அகஷ்த்தியரருளிச் செய்த வாகடம். கர்ம காண்டம் முன்னூறு. 4. —. 5. —. 6. எல்லப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை -5. 9. —. 10.—.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 45+1=46. 5. 37 x 3 செ. மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை (வர்ணம்). 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. ஓரளவு சிதைவு. 12. 80; 46 ஆம் எண்ணுள்ள ஓலையிலிருந்து 85 ஆம் ஓலை வரை இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 85 ஆம் ஓலையில் ஒரு பக்கமே எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 11 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. 1. 21 x 16 செ.மீ . 2. 275. 3. பக்கத்திற்கு 20 வரிகள். 4. நன்று. 5. J. ரங்காச்சாரி. 6. 6-1-1945. 7. T.N. வெங்கடாசலம் 8. 1945 ல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III. 1. முற்பிறவியில் அல்லது இப்பிறப்பின் முற்பகுதியில் நாம் செய்த தீய வினையின் காரணமாக நோய்கள் உண்டாகுமென்றும், அந்நோய்கள் என்னென்ன என்பதும் அந்நோய்களைத் தீர்க்க வழி என்ன என்பதையும் விரிவாகக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 59 போன்றது.

4. —.

5. பூரணமா யுள்மூலம் பொறியிற் சூடாய்ப்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசிற் சூடாங்
காரணமாய் நீரெழும்பிப் பீனசம்போற் கொள்ளுங்
கனலெழுந்தே வாயுவதாங் கபால மெல்லாஞ்
சீரணமாய்ப் போகாது வாத பித்தஞ்
சிலேற்ப னந்தான் மூன்றாலே நோய்க ளெல்லாந்
தாரணையாய்த் திசைவாய்வில் மூன்று வாய்வுச்
சமானனொடு பிராணனுடன் பானந் தானே. 1

சித்தியுண்டாம் மவுனத்திற் செல்லு வோர்க்குத்
தெளிவான மனதுரிமை யறிவி னோடு
பத்தியாய் நிலைத்தபின்பு பாபம் போச்சு
பஞ்சபொறிப் புலனாண்மை பறந்த தய்யா
புத்தியாய்ப் பிழைப்பதற்குச் சாராதே சொல்லு
புகழான மனவாசி வாய்வு வேகம்
முத்தியா யிருவினையு மற்ற தேகி
முதலான சொக்கர்பதம் முத்தி தானே. 300

7. —.

8. மூலம். 9. பீழைகள் மலிந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்களும் பாடபேதங்களும் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. முன்னூறு முற்றும் எல்லப்பன் கையெழுத்து.

IV. 1. R.5813, R.6093, R.4455, R.3674, R.246 (b) R. 923, R. 5 (b), R. 75(a), R. 1081, R. 4683, R. 9041, பிரதி வேறுபாடு உண்டு. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை 2. அகத்தியர் கர்ம காண்டம் 300, எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இதனுடன் அகத்தியர் வைத்திய சூத்திரம் என்ற நூல் (D. 1897) உள்ளது. 303 பாடல்கள் இந்நூலில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டாலும் 300 ஆம் பாட்டே 303 ஆகக் காட்டப்படுகிறது. இந்த நூல் சித்தர் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றை விளக்கியும், முக்கியமாக மருத்துவச் செய்திகளைக் கூறியும் அமைந்துள்ளது. கருமங்களுக்கு ஏற்பநோய்கள் உண்டாகும் என்பதும், அந்நோய்களுக்குரிய மருந்துவகைகளும், அம் மருந்துகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களை யும் கூறிச்செல்கிறது. வாகடம் தொடர்பான செய்திகளையும் வரிசைப்படுத்துகிறது.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **61**. 2. அ. —. ஆ. T.R. 8. இ.—. ஈ. R. No. 5(b). 3. அ. அகத்தியர் வைத்திய கர்ம காண்டம் 300. ஆ. Akattiyar vaittiya karma kāṇṭam 300. இ. அகஷ்த்தீசுரர் கர்மம் சூஷ்த்திரம் முன்னூறு. 4.—. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை -5. 9. —. 10. —.

II. —.

ஆ. 1.21 x 16 செ.மீ. 2. 276. 3. பக்கத்திற்கு 12 வரிகள். 4. நன்று. 5. 6.1.1945. 6. J. ரெங்காச்சாரி 7. T.N. வெங்கடாச்சாரி. 8. 6.12.1910 இல் பெறப்பட்ட தாள் சுவடி.

III. 1. முற்பிறவிகளில் அவரவர் செய்த வினைகளுக்கு ஏற்ப இப்பிறவியில் நோய்களைப் பெறுவர் என இந்நூல் கூறுகிறது. 2. மருத்துவம். 3. வரிசை எண் 59 போன்றது.

4. —.

5. பூரணமா யுள்மூலம் பொறியில் சூடாய்
புகையெழுப்பி மேகமதாய் சிரசில் சூடாம்
காரணமா நீரெழுப்பிப் பீனிசம்போற் கொள்ளுங்
கனலெழுந்தே வாயுவதாங் கபால கபால மெல்லாம்
சீரணமாய் போகாது வாத பித்தஞ்
சிலேற் பனந்தான் மூன்றாலே நோய்களெல்லாம்
தாரணாய்த் திசைவாய்வில் மூன்று வாயுச்
சமானனொடு பிராணனுடன் பானன் றானே. 1

6. சித்தியுண்டாம் மவுனத்திற் செல்லு வோர்க்குத்
தெளிவான மனதுரிமை யறிவி னோடு
பத்தியாய் நிலைத்தபின்பு பாவம் போச்சு
பஞ்சபொறி புலனாக பறந்த தய்யா
புத்தியாய்ப் பிழைப்பதற்குச் சாராதே சொல்லு
புகழான மனவாசி வாயு வேகம்
முத்தியா யிருவினையும் மற்ற தேசி
முதலான சொக்கர்பத முத்தி தானே. 303

7. முந்நூறு முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பிலும், பிழைகள் மலிந்தும், பாடபேதங்கள் நிறைந்தும் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்று தாளில் எழுதப்பட்ட சுவடி. 11. எல்லப்பன் கையெழுத்து.

IV. 1. R.75(a), R. 9041, R.1081, R.4683, R.923, D.1871. 2. உ.த.நி. எண் 487:740, சி.ம.மை.ஆ.நி.எண் 751(j), த.ப.க. எண் 589. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் கர்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. அகத்தியர் கர்ம காண்டம் 300 என்ற நூலானது அகத்தியர் கர்ம சூத்திரம் 150, அகத்தியர் கர்ம காண்டம் 36 என்ற பெயர்களில் சுருக்கியும் வழங்கப்படுகிறது.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **62**. 2. அ. R. 75(a). ஆ. T.R. 64. இ.—. ஈ.—. 3. அ. அகத்தியர் வைத்தியம் கர்மகாண்டம் 300. ஆ. Akattiyar vaittiyam karma kāṇṭam 300. இ. அகஸ்த்தியர் கர்ம சாஸ்திரம் குண வாகடம். 4.—. 5. — 6. — 7. — 8. அ.கீ.சு.நூ., சென்னை -5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 67.5. 38 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 73; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 302 பாடல்கள்.

III. 1. பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 59 போன்றது.

4. அகஸ்த்தியர் கர்ம சூஸ்திரம் குணவாகடம். அகஸ்தியர் குருபாதம் துணை. குருகடாச்சம் உண்டாக வேணும்.

5. பூரணமா யுள்மூலம் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசில் சூடாம்
காரணமா நீரெழும்பிப் பீனிசம்போற் கொள்ளும்
கனலெழுந்தே வாயுவதான் கபால மெல்லாம்
சீரணமாய்ப் போகாது வாத பித்தஞ்
சிலேற்பனந்தான் மூன்றாலே நோய்க ளெல்லாம்
தாரணமாய்த் திசைவாய்வில் மூன்று வாய்வில்
சமானனொடு பிராணனொடு யனுபானந் தானே. 1

6. சித்தியுண்டாம் மவுனத்திற் செல்லு வோர்க்குத்
தெளிவான மனதுரிமை யறிவி னோடு
பத்தியாய் நிலைத்தபின்பு பாவம் போச்சு
பஞ்சபொறி புலனாண்மை பறந்து போச்சு
புத்தியாய்ப் பிழைப்பதற்குச் சாரஞ் சொல்லு
புகழான மனவாசி வாயு வேகம்
முத்தியா யிருவினையு மற்ற தேசி
முதலான சொக்கர்பத முத்தி தானே. 301

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. 10.அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது.11. மீனாட்சி யம்மன் கிருபாகிடாச்சம் உண்டாக வேணும ஸ்ரீராமஜெயம்.

IV. 1. D.1871, R.923, R.5(b), R.9041, R.1081, R.4683. 2. உ.த.நி. எண் 487: 740, சி.ம.மை.ஆ.நி. எண் 751(j), த.ப.க. எண் 589. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் கர்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. கர்மங்களைப் பற்றி அகத்தியர் பெயரிலன்றிச் சட்டைமுனி , உரோமமுனி போன்றோர் பெயர்களிலும் நூல்கள் பாடப்பெற்றுள்ளன.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. *1.* **63.** *2.* அ. R. 9041. ஆ. T.R. 3283. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் கர்ம காண்டம் *300.* ஆ. Akattiyar karma kāṇḍam 300. இ. அகஸ்தியர் கர்ம காண்டம் முன்னூறு. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை -5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* 46. *5.* 36 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* மிகவும் சிதைவு. *12.* 91; இருபக்கங்களும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *8* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17.* 301 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* உடம்பில் தோன்றும் பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளைக் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* வரிசை எண் 59 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் கர்மகாண்டம் முன்னூறு. வியாதி வருகிற விபரம் வருமாறு. குருவே துணை.

5. பூரணமா யுள்மூலம் பொறியில் சூடாம்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசில் சூடாம்
காரணமாய் நீர்கலந்து பீனிசம்போல் கொள்ளும்
கனலெழுந்தே வாய்வுமுத சிலேட்டும மெல்லாம்
சீரணமாய்ப் போகாது வாத பித்தம்
சிலேற்பனந்தான் மூன்றாலே நோய்க ளெல்லாம்
தாரணமாய்த் திசைவாய்வில் மூன்று வாய்வில்
சமானனொடு பிராணனொடு யனுபா னந்தான். 1

6. சித்தியுண்டாம் மவுனத்தில் செல்லு வோர்க்குத்
தெளிவான மனதுரிமை யறிவு னோடும்
பத்தியாய் நிலைத்தபின்பு பாவம் போச்சு
பஞ்சபொறி புலனாண்மை பறந்து போச்சு
புத்தியாய்ப் பிழைப்பதற்குச் சாரஞ் சொல்லு
புகழான மனவாசி வாய்வு வேகம்
முத்தியா யிருவினையு மற்ற தேசி
முதலான சொர்க்கபத முத்தி தானே. 301

7. குருகடாச்சம் உண்டாக வேணும்.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் மிகுந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 5(b), R. 75(a), R. 923, R. 1081, R. 4683, D. 1871 2. உ.த.நி. எண் 487:740, சி.ம.மை.ஆ.நி. எண் 751(j), த.ப.க. எண் 589. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் கர்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. கர்ம காண்டம் என்ற நூல்களில் முன்னூறு பாடல்களையன்றி 36 பாடல்கள் எனச் சுருக்க நூல்களும் உள.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **64**. 2. அ. R. 1081. ஆ. T.R. 798. இ.—. ஈ —. 3. அ. அகத்தியர் வைத்திய சூத்திரம் 300. ஆ. Akattiyar vaittiya cuttiram 300. இ.அகத்தியர் வைத்திய சாஸ்திரம் முன்னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8.அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 38. 5. 33 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 76; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. நடுப்பகுதி. 16. குறை. 17. 215 பாடல்கள் மட்டும் உள்ளன. (38 முதல் 123 வரை உள்ள பாடல்கள் இல்லை.)

ஆ. —.

III. 1. மனிதர்கள் செய்கின்ற நன்மை தீமைக்கேற்றவாறு நோய்கள் உண்டாகும் என்று கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 59 போன்றது.

4. அகஸ்தியர் அருளிச் செய்த வயித்திய சூஸ்திரம் மூன்னூத்தஞ்சு.

5. பூரணமாய் மும்மூலம் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாம் சிரசில் சூடாம்
காரணமாய் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்து வாயுவானால் சூலை ரோகம்
மாரணமாம் வாதத்தில் எழுந்த ரோகம்
மதியதொரு பித்தத்தால் கிராணி யாச்சு
தீரணமாம் வாயுவினால் குன்ம மாச்சு
சார்ந்தசிலேற் பனம்கூடி வசியம தாச்சு. 1

6. சிற்றியுண்டால் மவுனத்தில் செல்லு வோர்க்குத்
தெளிவான மனதுரிமை அறிவி னோடும்
பற்றியினிந் துற்றபின்பு பாவம் போச்சு
பஞ்சபொறி புலனாண்மை பற்றா தய்யா
புற்றியாய்ப் பிழைப்பதற்குச் சாரஞ் சொல்லு
புகழான மனவாசி வாய்வு வேகம்
முத்தியா யிருவினையும் மற்ற தேசி
முதலான சொர்க்கபத முத்தி தானே. 301

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன; பேச்சு வழக்குச் சொற்கள் மிகுந்துள்ளன. 10. இந்நூலின் தலைப்பில் அகத்தியர் கர்ம காண்டம் 300 என்பதற்குப் பதிலாக அகத்தியர் அருளிச் செய்த வயித்திய சாஸ்திரம் இருநூத்தஞ்சு என்று தவறாக தலைப்பு கொடுக்கப் பட்டுள்ளது. 11. முகம்மதுல்லா குமாரன் மகம்மது மீரான் குமாரன் பீரு மகம்மதுக்கு கர்மகாண்டம் .. சூரனல்லூரிலிருக்கும் காசீம் யெழுதி நிறைந்தது முத்தும். துன்முகி வருசம் சித்திரை மாதம் 4ம் தேதி யெழுதியது முகிந்தது முற்றும். அல்லாவே துணை.

IV. 1. R. 5(b), R. 75(a), R. 923, R. 4683, R. 9041, R. 1871. 2. உ.த.நி.எண் 487:740, சி.ம.மை.ஆ.நி.எண் 751(j), த.ப.க. எண் 589. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் கர்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. 'கர்ம காண்டம் 300' எனும் பெயரையன்றி, 'கன்ம சூத்திரம் 300', 'வைத்திய சூத்திரம் 300', 'கர்ம காண்ட சூத்திரம் 300', 'அனுபோக சூத்திரம் 300', 'வைத்திய கர்ம காண்டம் 300' எனப் பல பெயர்களில் இந்நூல் வழங்கப்படுகிறது.

இச் சுவடிக்கட்டில் பின்வரும் நூல்கள் உள்ளன.

a. அகஸ்தியர் வயித்திய சூத்திரம் இருநூற்றைந்து.
c. ஞருநாடி.
d. மதனநூல் கொக்கோகம்.
e. திருமறைக்காட்டீசுவரர் துதி.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **65**. 2. அ. R. 4683. ஆ. T.R. 2067. இ.—. ஈ.—. 3. அ. அகத்தியர் கர்ம காண்டம் 300. ஆ. Akatiyar karma kāṇṭam 300. இ. அகஸ்தியர் முனி அருளிச் செய்த வயித்திய சாஸ்திரம் இருநூத்தைஞ்சு. 4. ஈ.—. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை -5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 69. 5. 32 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 138; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 302 பாடல்கள்.

ஆ. —.

III. 1.உடலில் தோன்றும் பல்வேறு நோய்களுக்கான மருந்துமுறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 59 போன்றது.

4. ஆதியந்த மில்லாத பூரணத்தை நோக்கி
அடுத்துநின்ற யென்மனத்தாய் பதத்தைப் போற்றி
பாதியந்த மாகிநின்ற உமையாள் சொல்ல
பாங்கான சின்மயத்தின் கருணை யாலே

ஓதியந்த வாகடமாம் நூலுக் கெல்லாம்
உயர்வைத்த நாகமணிக் கிரீடம் போல
சாதியந்த குணத்தோடு மயூர வேதஞ்
சாத்தினேன் வடநூலுக் கெதிர்தான் காணே. 1

5. பூரணமாம் மும்மூலம் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாஞ் சிரசில் சூடாம்
காரணமாய் நீரொக்கும் பீனிசம்போற் கொள்ளும்
கனலெழுந்து வாயுவதான் கபால மெல்லாம்
சீரணமாய்ப் போகாது வாத பித்தம்
சேத்துமந்தான் மூன்றாலே நோய்க ளெல்லாம்
தாரணையாந் திசைவாயுவில் மூன்று வாய்வு
சமானனோடு பிராணனும் பரன்றான் றானே. 2

6. சித்தியுண்டாம் மவுனத்தில் செல்பெரி யோர்க்கும்
திறமான மனதுரிமை அறிவி னாலே
பத்தியாய் நினைந்தபின்பு பாவம் போச்சு
பஞ்சப்பொறி புலனாண்மை பறந்து போச்சு
எத்திசையுங் கொண்டாடு மிந்த நூலில்
எளிதாக எல்லோர்க்கும் ஈய வேண்டாம்
முத்தியாய் யிந்தநூல் வர்க்கம் நாலும்
மோக்ஷமாம் முன்னூத்தி ஒன்று முத்தே. 301

7. அகத்திய சுவாமிகள் பாதாரவிந்தமே துணை. குருவே துணை. அகத்தியர் அருளிச் செய்த கர்ம காண்டம் 300 எழுதி நிறைவேறியது.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன; பேச்சு வழக்குச் சொற்கள் மிகுந்து, பாட வேறுபாடுகளுடன் நூல் அமைந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. 11. இல்லை. Ca. 17. 25651

IV. 1. R. 5 (b), R. 75 (a), R. 923, R. 1081, R. 9041, D. 1871. 2. உ.த.நி.எண் 487:740, சி.ம.மை.ஆ.நி. எண் 751(j), த.ப.க. எண் 589. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் கர்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இந்த நூலின் தொடக்கத்தில் உள்ள தலைப்பில் 205 பாடல்கள் எனத் தலைப்பிடப் பெற்றாலும் இறுதிப் பாடல் 301ஆம் பாடலாகவும், ஏட்டின் முடிவில் 300 பாடல்கள் எழுதி நிறைவேறியது எனக் குறிப்பிடப்பட்டிருப்பது காணத்தக்கது. இச் சுவடிக்கட்டில் இந்நூலுடன், குதம்பைச் சித்தர் பாடல் (R.4684) சிவவாக்கியர் பாடல் (R.4685) ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **66.** 2. அ. R. 3674. ஆ. T.R.1792. இ. —. ஈ. —. 3. அகத்தியர் கர்ம காண்டம் 300. ஆ. Akattiyar karma kāṇṭam 300. இ. அகஸ்தியர் கர்ம காண்ட சூத்திரம் முன்னூறு. 4.—. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 57. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 114; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 302 பாடல்கள்.

ஆ. —.

III. 1. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்து செய்யும் முறைகளும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் அனுபோக சூத்திரம் என்ற இந்நூலில் கடவுள் வாழ்த்துப் பாடலிலே வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்றையும் கூறி அவற்றின் நாடிகளை அறியும் முறைகள் கூறப்பட்டுள்ளன. நோய்களின் மிகுதியால் ஏற்படும் விளைவுகள், நோய்களின் தன்மைகளை நாடிபார்த்து அறிதலோடு உமிழ்நீர், மலம், சிறுநீர் இவற்றாலும் அவற்றை அறியும் நிலைகளையும் ஆசிரியர் கூறுகின்றார். 21 வகைமேக நோய்கள், மகோதரம், பெரும்பாடு, சூலை, குன்மம், கெர்ப்ப வாய்வு, கெர்ப்ப சன்னி போன்ற நோய்களின் பொதுக் குணங்களும் கூறப்படுகின்றன. அரப்பொடி, அப்பிரகம், தாம்பிரம், காந்தம், நிமிளை, துத்தம், குக்கல், கற்பூரச் சிலை, நேர்வாளம் போன்ற சரக்குகளின் சுத்தி முறைகளும்

கூறப்படுகின்றன. உள்மாந்தையைத் தீர்க்கும் கண்டாத்திரி நெய், பெரும்பாட்டு நோயைத் தீர்க்கும் நிலைப் பனைநெய், குன்ம நோயைத் தீர்க்கும் கொம்மட்டிக் குழம்பு, சன்னிக்கான ஆனந்த வயிரவன் மாத்திரரை, கரப்பான் நோய்க்கான பரங்கிப்பட்டை இரசாயனம், நீர்க்கோவை நோய்க்கான சிலோதாரை யுண்டை, பிளவை நோய்க்கான அருளாதி கசாயம், தாப சுரம், வாந்தி, பித்தம், நெஞ்செரிப்பு, கிறுகிறுப்பு, தலைநோவு, அக்கினி மாந்தம், மலக்கட்டு, காந்தல் ஆகிய பல்வேறு நோய்களுக்கான நார்த்தங்காய் லேகியம் போன்ற பல மருந்துகளும், மருந்து செய்முறைகளும் பயனும் கூறப்படுகின்றன.

4. —.

5. பூரணமாய் மூலமுதல் ஆறா தாரம்
புரியட்டம் திசைவாய்வு நாடி மூன்று
காரணமாய் இடைபின்னாய்ச் சுழினை யாகிக்
கலந்துநின்ற வாதபித்தஞ் சிலேற்ப னமுமாக
வாரணமாய்ச் சடத்தினுள்ளே தத்து வங்கள்
மனம்புத்தி யாங்காரம் சித்தத் தாலே
மாரணமாய் நடத்திவைத்த கர்மத் தாலே
வந்துதடா நோய்களெல்லாம் மானுடர்க் காமே. 1

6. வரிசையாய்ச் சொல்லுகிறேன் கணைக ளேது
மாந்தமோ சுளிதுரப்பு வலிக ளேது
பரிசனமாய்க் கரப்பனோடு பரங்கி யேது
பட்சியொடு பறவையுட தோச மேது
தெரிசனமாங் கண்களிவை வருவ தேது
தீர்க்கமடா சிறுவருக்குத் தேவா மிர்தம்
கரிசனமா மின்னூல் கர்மங் கர்மங்
கட்டான மருந்துவகைக் கணக்கு முற்றே. 302

7. குருபாதமே கெதி.

8. மூலம். 9. அந்தாதியிலும் பாடபேதங்கள் மிகுந்தும் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. ஆயினும் வரிசை எண்கள் 59 முதல் 65 வரை உள்ள கர்ம காண்ட நூல்களிலிருந்து வேறுபடுகிறது. 11. இல்லை.

IV. 1. R. 5831, R. 6093, R. 4455. R. 246(b). 2. தி.ஆ.எண்359 (a), த.ப.க. எண் 2409, சி.ம.மை.ஆ.நி.எண்கள் 158, 147(b), உ.த.நி.எண் 512:785. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் கன்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இதனுடன் அகத்தியர் சூத்திரம் 205 (R. 3663), அகத்தியர் வைத்தியம் 50 (R.3672) ஆகிய நூல்களும் காணப்படுகின்றன. கன்ம காண்டம் 300 என்ற பெயரில் அமைந்துள்ள இந்நூல், 'பூரணமாய் மும்மூலம் பொறியிற் சூடாய்' எனத் தொடங்கும் கன்ம காண்டம் 300 என்ற நூலின்றி வேறாக அமைந்துள்ளது.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **67**. 2. அ. R. 246 (b). ஆ. T.R. 248. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் அனுபோக சூத்திரம். ஆ. Akattiyar aṉupōka cūttiram. இ. அகஸ்திய ரருளிய அனுபோக சூஸ்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ. கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 49. 5. 38 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 98; இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. 3 ஆம் ஏடு பாதியில் ஒடிந்துள்ளது. இறுதி ஏடு ஓரம் சிதைந்துள்ளது. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்து செய்யும் முறைகளும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம் . 3. வரிசை எண் 66 போன்றது.

4. அகத்தியர் அருளிச் செய்த அனுபோக சூத்திரம்.

5. பூரணமா மூலமுத லாறா தாரம்
புரியந்தந் திசைவாய்வு நாடி மூன்றும்
காரணமா யிடைபின்னாஞ் சுழிமுனையு மாகி
கலந்துநின்ற வாதபித்த சிலேத்பனமு மாகி ..

மாரணமாய்ச் சடத்தினுள்ளே தத்து வங்கள்
மனம்புத்தி யாங்காரஞ் சித்தத் தாலே
வாரணமாய் நடத்திவித்த கர்மத் தாலே
வந்ததடா நோய்களெல்லாம் மானுடர்க் காமே. 1

வரிசையாய்ச் சொல்லுகிறேன் தாரணைக ளேது
மாந்தமொடு சுழிதுறப்பு வலிக ளேது
பரிசனமாய்க் கரைப்பனோடு பரங்கி யேது
பச்சியுடன் பறவையுட தோஷ மேது
தெரிசனமாம் கணங்களிவை வருவ தேது
தீர்க்கமடா சருவருக்கும் தேவாமிர்த மாகும்
கரிசனமா மின்நூலின் கர்ம தர்மம்
கட்டான மருந்துவகை கணக்கு முற்றே. 300

7. ஸ்ரீராம அகஸ்தியர் ...

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன; பேச்சு வழக்குச் சொற்கள் உள்ளன. ற-ர, ள-ழ வேறுபாடு இல்லாது எழுதப்பட்டுள்ளது. பிழைகள் மலிந்துள்ளன. 10. அகத்தியர் அனுபோக சூத்திரம் என்ற இந்நூல் நம் உடம்பில் உள்ள வாதம், பித்தம், சிலேத்துமங்களின் தன்மையைக் கூறுகிறது. இவற்றின் அடிப்படையில் வாதநாடி, பித்தநாடி, சிலேத்தும நாடிகளையும் கூறுகின்றது. இந்நாடிகளின் மூலம் நம் உடம்பில் உள்ள நோய்களை அறிந்து அந்நோய்களின் தன்மைக்கேற்ப மருந்துகள் செய்து நம் சித்த மருத்துவர்கள் நோய்களைப் போக்கிவந்தார்கள். 11. இல்லை.

IV. R.3674, R.4455, R.5831, R.6093. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 147(b), 158, த.ப.க. எண் 2409, உ.த.நி. 512:785. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. துரைசாமி முதலியார் (பதி.), 'கன்ம காண்டம்,' புவனேஸ்வரி அச்சுக்கூடம், சென்னை, 1929; எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), 'அகத்தியர் கன்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. அகத்தியர் கர்ம காண்டம் 300 என்ற இந்நூல் அகத்தியர் அனுபோக சூத்திரம் என்னும் பெயரிலும் வழங்கப்படுகிறது.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. *1.* **68**. *2.* அ. R. 5831. ஆ. T.R. 2501. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் கர்ம சூத்திரம் கடைக்காண்டம் 300. ஆ. Akattiyar karma cūttiram kaṭaikkāṇṭam 300. இ. அகஷ்த்தியர் கர்ம சூத்திரம் கடைக்காண்டம் 300. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை – 5. *9.* —. *10.*—.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* 45. *5.* 34 x 4 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* நன்று. *12.* 90; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 8 வரிகள். *14.* விருத்தம். *15.* இறுதி. *16.* குறை. *17.* 296 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* முற்பிறவிகளில் அவரவர் செய்த வினைகளுக்கு ஏற்ப இப்பிறவியில் நோய்களைப் பெறுவர் என இந்நூல் கூறுகிறது. *2.* மருத்துவம். *3.* வரிசை எண் 66 போன்றது.

4. —.

5. பூரணமாய் மூலமுதல் ஆறா தாரம்
புரியஷ்ட திசைவாய்வு நாடி மூன்று
காரணமாய் இடைமன்னாய் சுழிமுனை யாகிக்
கலந்துநின்ற வாதபித்த சிலேற்பன மாகி
மாரணமாய்ச் சிடத்துள்ளே தத்துவங்க ளாகி
மனம்புத்தி ஆங்காரச் சித்தத் தாலே
வாரணமாய் நடத்திவித்த கர்மத் தாலே
வந்துதடா நோய்களெல்லாம் மானிடர்க் காமே. 1

6. தானென்ற நாடிநிலை அறிய வேணும்
சடத்தினுள்ளே நோய்குணங்க ளறிய வேணும்
வானென்ற காலங்க ளறிய வேணும்
மருந்தினுட பதமறிந்து துவக்க வேணும்
நானென்ற சாபத்தின் நிவர்த்தி வேணும்
நலமான வடுகனுக்குப் பூசை வேணும்
கோனென்ற குருவினிரு பாதம் போற்றிக்
குணமாக நடந்தவனே குருபுத்திர னாமே. 296

7. —.

8. மூலம். 9.அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடபேதங்கள் மிகுதி. வடமொழி எழுத்துக்கள் பயின்று வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 6093, R. 4455, R.3674, R.246(b). 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 158, 147(b), உ.த.நி. எண் 512:785, த.ப.க. எண் 2409, தி.ஆ.எண் 359(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் கர்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இதனுடன் அகத்தியர் குழம்பு (R.5834), தட்சிணாமூர்த்தி பூரண சூத்திரம் (R.5837) ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **69**. 2. அ. R. 6093. ஆ. T.R. 2558. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கர்ம காண்டம் நடுக்காண்டம் 300. ஆ. Akattiyar karma kāṇṭam naṭukkāṇṭam 300. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 66. 5. 22 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 132; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 11 வரிகள். 14. விருத்தம்.15. இல்லை. 16. முழுமை. 17. 301 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முற்பிறவிகளில் அவரவர் செய்த வினைகளுக்கு ஏற்ப இப்பிறவியில் நோய்களைப் பெறுவர் என இந்நூல் கூறுகிறது. 2. மருத்துவம். 3. வரிசை எண் 66 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக.

5. பூரணமாய் மூலமுதல் ஆறா தாரம்
புரியட்ட திசைவாய்வு நாடி மூன்றாய்க்
காரணமாய் யிடைபின்னாய்ச் சுழினை யாகிக்
கலந்துநின்ற வாதபித்தஞ் சிலேற்பன மாகி

மாரணமாய்ச் செடத்தினுள்ளே தத்து வங்கள்
மனம்புத்தி யாங்காரஞ் சித்தத் தாலே
வாரணமாய் நடத்திவித்த கர்மத் தாலே
வந்துதடா நோய்களெல்லாம் மானுடர்க் காமே. 1

6. வரிசையாய்ச் சொல்லுகிறேன் கணைக ளேது
மாந்தமொடு சுழிதுரத்தல் வலிக ளேது
பரிசமாங் கரப்பனோடு பரங்கி யேது
பட்சியுட பறவையுட தோச மேது
தெரிசனமாங் கணங்களிலே காண்ப தேது
தீர்க்கமடா சிறுவருக்குத் தேவர் அமுர்தங்
கரிசனமா யின்னூலின் கர்மந் தருமம்
கட்டாக மருந்துகர்ம காண்ட முத்தே. 301

7. குமரன் துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன: பிழைகளும் பாடபேதங்களும் வந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் கலந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 5831, R. 4455, R.3674, R.246(b). 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 147(b), 158, உ.த.நி.எண் 512:785, த.ப.க. எண் 2409, தி.ஆ.எண் 359(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் கர்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற கர்ம காண்டமானது முதற் காண்டம், நடுக் காண்டம், கடைக் காண்டம் என முறையே 300 பாடல்கள் வீதம் பெறுவதால் பெரிய நூலாகவும் இது திகழலாம் எனத் தெரிகிறது.

## அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **70**. 2. அ. R. 4455. ஆ. T.R. 1962. இ.—. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 300. ஆ. Akattiyar cūttiram 300. இ. அகஷ்த்தீசுரர் கர்மம் சூஷ்த்திரம் முன்னூறு. 4.—. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 25. 5. 37 x 3 செ. மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 50; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. நடு (இரண்டாவது ஏட்டிலிருந்து 28 ஆம் ஏடுவரை காணப்பெறவில்லை). 16. குறை. 17. 140 பாடல்கள் மட்டும். (6 வது பாடலிலிருந்து 164 ஆம் பாடல் வரை இல்லை).

ஆ. —.

III. 1. முற்பிறவிகளில் அவரவர் செய்த வினைகளுக்கு ஏற்ப இப்பிறவியில் நோய்களைப் பெறுவர் என இந்நூல் கூறுகிறது. 2. மருத்துவம். 3. வரிசை எண் 66 போன்றது.

4. —.

5. பூரணமாய் மூலமுதல் ஆறா தாரம்
புரியட்ட திசைவாய்வு நாடி மூன்றுங்
காரணமாய் இடைபின்னாய்ச் சுழினை யாகி
.... வாதபித்தஞ் சிலேற்ப னமுமாய்
வாரணமாய் சடத்தினுள்ளே தத்து வங்கள்
மனம்புத்தி யாங்காரச் சித ....
.... ய் நடத்திவைத்த கர்மத் தாலே
வந்ததடா நோய்களெல்லாம் மனுடற் காமே. 1

6. வரிசையாய்ச் சொல்லுகிறேன் கணைக ளேது
மாந்தமொடு சுழிதுரப்பு வலிக ளேது
பரிசனமாய்க் கரப்பானோடு பரங்கி யேது
பட்சியோடு பறவையுட தோச மேது
தெரிசனமாங் கணங்களிவை வருவ தேது
தீர்க்கமடா சருவர்க்குத் தேவா அமுர்தங்
கரிசனமாம் இன்னூல் கர்மங் கர்மங்
கட்டான மருந்துவகை கணக்கு முற்றே. 302

7. சூஷ்த்திரம் முகிந்தது முற்றும். தெட்சணாமூர்த்தி பாதாரவிந்தமே கெதியே துணை.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பிலும் பிழைகள் மலிந்தும் பாடபேதங்கள் நிறைந்தும் பாடல்கள் உள்ளன. பேச்சு மொழிச் சொற்கள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.6093, R.5831, R.3674, R.246(b). 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 158, 147(b), உ.த.நி. எண் 512:785, த.ப.க. எண் 2409, தி.ஆ.எண் 359(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் கர்ம காண்டம் 300', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இந்நூல் அ.கீ.சு.நூலகத்தின் மூவருடச் சுவடி விளக்க அட்டவணை R.5, R.149 ஆகிய எண்களில் வந்துள்ள பிரதிகளைப் போன்றதாகும். இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன் அகத்தியர் பூரண சூத்திரம் என்ற நூலும் (R.4455-a) உள்ளது.

## அகத்தியர் கரிசல் 300

I. 1. **71**. 2. அ. R. 2294. ஆ. T.R. 1290. இ. —. ஈ. — . 3. அ. அகத்தியர் கரிசல் 300. ஆ. Akattiyar karical 300. இ. அகத்திய சுவாமி கரிசல் முன்னூறு. 4. —. 5. —. 6. — . 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 36. 5. 33 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 71; இருபக்கமும் முழுமையாக எழுதப் பட்டுள்ளது. 13. 7 வரிகள். 14. விருத்தம், ஆசிரியம், வெண்பா வகைகள். 15. நடு, இறுதி. 16. குறை. 17. 64 பாடல்கள்.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் கரிசல் முன்னூறு என்ற இந்நூலில் முதலாவதாக வாழ்த்து, வணக்கப் பாடல்களாக 18 குறள் வெண்பாக்கள் உள்ளன. அடுத்து மருந்துகள் சுத்தி செய்யும் முறைகள், பாதரசபற்பம், சாதிலிங்க பற்பம், சீவரசபற்பம், வெள்ளீய பற்பம், காரிய பற்பம், துத்தனாகப்பற்பம், தாம்பிரப் பற்பம், இரும்புப் பற்பம், வெங்கல பற்பம், காரசாரப் பற்பம், வழலைப் பற்பம், தாளகபற்பம், தங்க

பற்பம், பஞ்ச பாஷாண பற்பம், நவரெத்தின பற்பம், பஞ்சலவண பற்பம்,அப்பிரக பற்பம் போன்ற பற்ப வகைகள் செய்யும் விதமும், சவுக்காரச் சுண்ணம், சலாகைக் கற்பூரம் போன்ற பலவகைக் கற்பூரம், வீரவைப்பூ, மாத்திரை இலட்சணம், குலாவாகுக் குளிகை, சகல மேகத்துக்கும் வாய்வு, இராட்சதன் விரோசனம், கிராணிக்குக் கபாடம், அக்கினி மாரணம், சுயமக்கினி, பித்த லோக பூபதி, சுராபானம், சந்திரவுதையம், கோடாசுளி மாத்திரை போன்ற மருந்துகள் தயாரித்தலும் பயன்படுத்தும் முறையும் கூறப்பட்டுள்ளன.

4. ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை. அகத்தீசுபர சுவாமி அருளிச் செய்த கரிசல் முன்னூறு.

பூரணி மாமலை மகலருள் புதல்வன்
தாரணி மாமத கரிமுக னடிபணிவாம்
.. வாழ்த்து வணக்கம்.
அமுர்தமதி யணிசடையின் விடைய ரெம்தம்
அடிகளிணை யடிபணி வாம்.

5. பார்புக ழினியொரு சேரொடு சுத்திசெய்
நீரழ லுப்பொடு செங்கலி லிட்டெரி
மேலிடு கட்டெரி சுடுதழல் தணி லெடு
சாலிடு நீரினை யெடுசரி நிறையவே
யெடுவிடு சங்கநீர திலேயரை ரவியில்வை
கடுமதி நிறமது காசரை யிருகால்
நீர்தனி லிடுநா ளெழுதில் வெகுரணம்
வெற்கெடு மிறவினைச் சூலைகள் வெடிசூலைகள்
தினபடு மருக்கிற நதிகள் பலவகைசேர
புண்படு ரெனவிப் புருகள புளவைகள்
வாதம் படுவண் டுண்டுமரை யாப்பு
விதமான மேகமுதிர் வாய்வுகள் நெஞ்சடை
வலிரணம் வயர்வலி தேயுந்துடை
ரணஞ்சிரை ரணம்முதலாம்
ரணமதிப் வருவேயருனூத்தும்
வெகுகுண மிகுபாத ரசமதை உள்ளிடக்
களிகடு கருவேல கருநெலி னுவல்வலி
தீயநீர் வைத்திடுகாப் பளிவாய்வேக மத்துவிடும்
வைத்திடு மருகுதிய ரஷநீர்முளகுடனிட்டு
வெண்ணையை அதிலிடு குடிரசவேக மது அடிபடும்
பதிகுண பாதரச பற்ப மதற்கே. 1

6. சன்னி ஆனந்த பயிரவம்
அண்ட மதிர சன்னி வயிரவ உண்டை தன்னை
வுரைக்கப் பொறினாதம் சிவப்பு இஞ்சியுடன்
திப்பிலி ஐந்து முவப்பு மேடப் பாலுறவதை
முச்சாமம் கொடுவேலி காயி நீரிலரை

முச்சாமம் கொடுவேலி காய் நீரிலரைத்து முச் சாமம் மலைக் குண்டிபோ லுண்டைசெய்து உலத்தி விட்டு மூலைப் பாலில் இஞ்சிச் சார் சேர்த்து வேரண்ட கொம்பின் நீர் கடுகு, வுள்ளி நீர், முருங்கப்பட்டை நீரினிலிட பதினேழு புடமா கும். அனுபானம் உண்ண திவிட்டி, வாதசுரம், கும்பின் நதிரி தொடசன்னி, பொருத்தமெட்டு, வாதசன்னி யோங்கி ஒளிந்திடும் மட்ட வயிரவ சன்னி ஆனந்தமே-64.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் கண்ணியாகவும், பிழைகளுடனும் உள்ளன. இடையில் உரை நடையும் கலந்து வருகின்றது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ப.க. எண் 5. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இங்குக் கூறப்பட்டுள்ள மருந்து செய்முறைகளை அகத்தியர் கட்டளையிட்டுச் சொல்வதுபோல் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன.

## அகத்தியர் கருக்கிடை 12

I. 1. **72**. 2. அ. R.156. ஆ. T.R. 134. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கருக்கிடைச் சூத்திரம் 12. ஆ. Akattiyar karukkiṭaic cūttiram 12. இ. அகஸ்தியர் கருக்கிடைச் சூத்திரம் பன்னிரெண்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. M.R.Ry. M. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. 1914 - 15.

II அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 22 x 2 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. இடது ஓரம் சிதைவாக உள்ளது. 12. 11; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு பற்றியும் உடம்பில் தோன்றும் நோய்களுக்கு மருந்துகள் செய்து அந்நோய்களைப் போக்கும் முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் கருக்கிடைச் சூத்திரம் என்ற இந்நூலில் கடவுள் வணக்கம் கூறிப் பின்பு ஆயிரத்தெட்டு இதழ்களையுடைய தாமரைப் பூ தலையின் உச்சி என்றும், தியானத்தின் மூலமே யோக ஞானம் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது. மேலும் முப்பு செய்வதற்கான பூநீறைத் தசமி திதியில் வாங்கி, வழலை செய்ய வேண்டும். இத்துடன் அக்கினி, வாயு, நீர், நாதம், விந்து சேர்த்து வெயிலில் உலர்த்தி, பத்து முறை காய்ச்சினால் இவ்வுப்பு கிடைக்கும். இதற்கு சிவனுப்பு, உவருப்பு, விந்து; இலிங்கம், சுடர், பளிங்கு, அகாரம், மகாரம், சருகு, சீவநித்திரசம், வாசி, மூலம் எனும் பெயர்கள் உள. சத்தியுப்பிற்குச் சிகாரம், சிவன், சீவன், பால், தயிர், கங்கை, ஊசிநீர், செயநீர், அப்பு, பிரணவத்தின் நீர் எனப் பல பெயர்கள் கூறப்படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்தியர் கருக்கிடை சூஸ்திரம் பன்னிரெண்டு.

5. சீர்பெருகு வேதாந்த மூலத் துள்ளே
செயலறிந்து மனமடங்குந் துரிய வீட்டின்
நீர்பெருகுங் கார்மறிந்து துண்டு வாசி
நேரறிந்து நிலைசெலுத்தி முனையி லேறி
பேர்பெருகுங் கேசரியைக் கண்டு போற்றிப்
பேசாம லொடுங்கிநின்ற பெரியோர் பாதம்
நேர்பெருகும் நெஞ்சில்வைத்துத் தொழுது நித்தம்
நிச்சயமாய்ச் சொல்லுகிறேன் முப்பைத் தானே. 1

6. வாவென்பான் வாசியென்ற குதிரை மேலே
வங்குசிங்கு லகரம்பூட்டி யேறி னோரை
மேவென்பான் தாலையுந்தான் யெட்டில் சேர்த்து
மெய்யறி ..... வெளியைக் காட்டி

மாவென்பான் துரியமணி பூரத் துள்ளே
வந்தமந்த நாதசத்தி மவுன மூலம்
ஓவென்பான் உகாரத்தின் னொளியைப் பாரு
உற்றொடுங்கி பன்னிரண்டு மொன்றாய்
முற்றே. 12

7. அகஸ்தியர் சூஸ்திரம் 12 முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பாடபேதங்கள் உள்ளன. முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் பாடல்கள் அமைந்துள்ளன. ழ/ள, ர/ற வேறுபாடில்லாமல் எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியர் கருக்கிடை 12 என்றும், அகத்தியர் கருக்கிடை சூத்திரம் என்றும் இதற்குப் பெயருண்டு. 11. இல்லை.

IV. 1. R. 267(n). 2. த.ப.க. எண் 1193. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் இந்நூல் மட்டுமின்றி அகத்தியர் கருக்கிடை நிகண்டு என்ற பெரிய நூலும் பாடப்பெற்றுள்ளது.

## அகத்தியர் கருக்கிடை 12

I. 1. **73**. 2. அ. R. 267 (n). ஆ. T.R. 251. இ. —. ஈ. —. 3. அகத்தியர் கருக்கிடைச் சூத்திரம் 12. ஆ. Akattiyar karukkiṭaic cūttiram 12. இ. சுப்பிரமணிய ரருளிச் செய்த 12. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 4 ; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு பற்றியும் உடம்பில் தோன்றும் நோய்களுக்கு மருந்துகள் செய்து குணப்படுத்தும் முறைகளையும் கூறும் நூல். 2 மருத்துவம். 3. வரிசை எண் 72 போன்றது.

4. —.

5. சீர்பெருகு வேதாந்தத் துள்மூ லத்தின்
செயலறிந்து மனமடங்குந் துரிய வீட்டில்
நீர்பெருகும் மகாரமாறித் துண்டு வாசி
நேரறிந்து நிறைசெலுத்தி முனையி லேறிப்
பேர்பெருகுங் கேசரியைக் கண்டு போற்றிப்
பேசாமற் சித்தறிந்த பெரியார் பாதம்
நேர்பெருகுஞ் நெஞ்சில்வைத்துத் தொழுது போற்றி
நிச்சயமாய்ச் சொல்லுகிறே னுப்பைத் தானே.

6. வாவென்பான் வாசியென்ற குதிரை மேலே
வங்குசிங்கு லகரம்பூட்டி ஏறி னாலே
மேவென்பான் தாலையுந்தான் எட்டில் சேர்த்து
மெய்யறிந்த சித்தனாலே வெளியைக் காட்டி
மாவென்பான் துரியமணி பூரத் துள்ளே
வந்தமர்ந்த நாதசத்தி மௌன மூலம்
ஓவென்பான் உகாரத்தில் ஒளியைப் பாரு
உற்றொடுங்கிப் பன்னிரெண்டு மொன்றாய்
முற்றே. 12

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள் மிகுதி. பேச்சு வழக்குச் சொற்கள் உள்ளன. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் இந்நூல் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.156. 2. த.ப.க. எண் 1193. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடியில் முதல் ஏட்டில் இந்நூல் சுப்பரமணியர் அருளிச் செய்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. கொங்கணர் முதற் காண்டம் நாற்பத்தொன்று.
b. அகத்தியர் வழலை பதினாறு.
c. தட்சிணாமூர்த்தி வழலை முப்பது.

d. கொங்கணர் முதற் காண்டம் நாற்பத்தொன்று.
e. அகத்தியர் முப்பு ஐம்பது.
f. அகத்தியர் சூத்திரம் நாற்பத்தெட்டு.
g. உரோமரிஷி சூத்திரம் இருபத்தைந்து.
h. அகத்தியர் வழலை முப்பது.
i. அகத்தியர் கலைஞானச் சுருக்கம் பன்னிரெண்டு.
j. அமரானந்தர் சூத்திரம் பதினாறு.
k. உரோமரிஷி நாயனார் சூத்திரம் ஐம்பது.
l. உரோமரிஷி சூத்திரம் பதினாறு.
m. உரோமரிஷி சுருக்கம் பதினாறு.
o. கூர்மானந்தர் சூத்திரம் ஐம்பத்தொன்று.
p. அகத்தியர் முப்பு பதினாறு.
q. அகத்தியர் புஷ்ப மாலிகை ஐம்பத்தொன்று.

## அகத்தியர் கருக்கிடை 65

I. 1. **74**. 2. அ. R. 4533. ஆ. T.R. 1999. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கருக்கிடைச் சூத்திரம் 65. ஆ. Akattiyar karukkiṭaic cūtttiram 65. இ. அகத்தீசுபரர் கருக்கிடைச் சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 15. 5. 20 x 3 செ. மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 30; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம. 15. இல்லை. 16. முழுமை. 17. 65 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானமார்க்கம், கரு விபரம் போன்றவற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம் மற்றும் ஞானம். 3. சகலவிதமான கரு விபரங்களையும் ஞான மார்க்கம் பற்றியும், மூலாதாரம், கருக்குரு, மெய்ஞானம், மற்றும் வாதவகைகளின் விபரங்களையும் விரிவாக இந்நூல் கூறுகிறது.

4. ஹரி ஓம் நன்றாக.

5. ஆனந்த மாகிநின்ற குருவின் பாதம்
அகண்டபரி பூரணமா மாத்தாள் பாதந்
தானந்த மாகிநின்ற கிணேசன் பாதம்
சகலகரு விபரமெல்லாம் சொல்லும் மார்க்கம்
வானந்த மாகிநின்ற மூலா தாரம்
மருவிநின்ற வாதவகை யறியு மார்க்கந்
தேனந்த மாகயின்னூல் விபரந் தன்னைத்
தேர்ந்துநீ பாத்தெடுத்துத் தேறு வாயே. 1

6. நிகழ்த்திறேன் குருவினுட மார்க்கங் கண்டு
நேராகக் கருக்குருவின் சூத்திரம தாக
விளைத்திடுமே பயிரதுபோல் விளைவு மாகும்
மெஞ்ஞான வாதவகை விபரஞ் செய்யும்
..... ..... ..... .....
..... ..... ..... .....
பிழைத்திடுவாய் சூத்திரந்தான் கேளு கேளு
பெருமையடா நீயறிந்து பேசு வாயே. 65

7. அகத்தீசுவரர் பாடல் சுருக்கம் அறுபத்தஞ்சு முகிந்தது முற்றும். மீனாட்சி துணை.

8. மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்கள் பயின்றுள்ளன. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. இந்நூல் அகத்தியர் கருக்குரு 1000 என்ற நூலின் சுருக்கமாகும். இப்பொருண்மையில் இந்நூல் மட்டுமன்றி 'அகத்தியர் கருக்கிடைச் சூத்திரம் 12', 'அகத்தியர் கருக்கிடை நிகண்டு 16' என்ற நூல்களும் உள. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. அகத்தியர் கருக்கிடைச் சூத்திரம் 12, அகத்தியர் கருக்கிடை நிகண்டு 16 ஆகியவை சார்புச் சுவடிகளாக அறியப்படுகின்றன.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச் சுவடிக்கட்டில் இந்நூலுடன், மந்திரம் என்ற நூலும் (R.4533-a) உள்ளது. வாத வகைகளாவன: இளம்பிள்ளை வாதம், காட்டுவாதம், கரஸ்தம்ப வாதம், குதிவாதம், திமிர் வாதம், வாதகாசம், வாதகுன்மம், வாதக்கிராணி, வாதசூலை, வாதநாடி என்பன.

# அகத்தியர் கருக்குரு 1000

I. 1. **75**. 2. அ. D. 2448. ஆ. T.D. 960. இ. R..... ஈ. —. 3. அ. அகத்தியர் கருக்குரு 1000. ஆ. Akattiyar karukkuru 1000. இ. அகஷ்த்தியர் கருக்குரு ஆயிரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 156. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 312; இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 6, 8, 9 வரிகள். 15. 21, 111, 112, 146, 147, 152 ஆகிய ஓலைகள் தவறியுள்ளன. 16. குறை. 17. 711 ஆம் பாடலில் ஒரு பகுதிவரை உள்ளது.

ஆ. 1. 30 x 23 செ.மீ. 2. 251. 3. பக்கத்திற்கு 24 வரிகள். 4. தெளிவு. 5. கி.பி.1955. 6. T. கோபால கிருஷ்ணன். 7. —. 8. கி.பி. 1955-56ல் புத்தாக்கம் செய்யப்பெற்ற நூல்.

III. 1. ஞானம், வாதம், மருத்துவம், அட்டகருமம் போன்ற வற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம்-ஞானம், வாதம். 3. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூல் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றைக் கூறுவதோடு, மருத்துவச் செய்திகளான பூரணம், வாதம், கருக்குரு, உப்பு வகைகள், சுண்ணவகைகள், நவலோகங் களை உருக்குவதற்குரிய இரச வகைகள், அவற்றைத் தயாரிக்கும் முறைகள் போன்ற வற்றைக் கூறுகிறது. கருக்குரு என்பது உருச்செய்தல் என்றும், இரசவாதத்திற்குரிய சரக்குகள் என்றும் பொருள்படும். மூலிகைக்குரிய மருத்துவச் செயல்பாடு குறித்துச் செய்யப்படும் மந்திர உச்சாடனத்திற்கு உருச் செய்தல் என்பது பொருள். ஒவ்வொரு சித்தரும் தத்தம் மருந்துகளை இன்னின்னவாறு பூசித்துச் செயலாக்கம் செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பது கருக்குரு (கரு+உரு) என வழங்கப் படுகிறது. உப்பு வகைகளாவன: அமரியுப்பு, இந்துப்பு, கந்தக உப்பு, கல்லுப்பு, கரியுப்பு, கறுத்த உப்பு, காய்ச்சுப்பு, சவட்டுப்பு, காருப்பு, சங்காரகளத்துப்பு, பொட்லுப்பு, வெடியுப்பு, மரவுப்பு, வழலையுப்பு, வளையலுப்பு எனப் பலவாம். சில உப்புக்களால் மூலம், அட்டகுன்மம், அனலால் ஏற்படும் வாதம், கண்டமாலை, கமம், வல்லக்கட்டி எனும்

நோய்கள் போகும் எனக் கூறப்படுகின்றது. உப்புநீரால் குடல்வாதம் போகும் என்றும், உணவு செரிக்கும் என்றும் கூறப்படுகிறது. இதைப்போன்றே, சுண்ண வகைகளால் தீரும் நோய்களும் குறிப்பிடப்படுகின்றன. இரசவாதக் கருக்குருக்களின் வகைகளும் பயன்பாடும் கூறப்படுகின்றன.

4. —.

5. (... ) மெஞ் ஞானச் சோதி பாதஞ்
செப்பரிய கிணேசனொடு கந்தன் காப்பு
அருவுருவா மாதியந்த வெளியு ..
யகண்டுநின்ற சின்மயத்தின் பாதம் போற்றிப்
பரிவுடைய பூரணத்தில் சூட்சா சூட்சப்
பதியிருந்த மனோன்மணித்தாய்ப் பாதம் போற்றிக்
க (..) வயித்திய சூத்திரந்தான் பாரே. (1)

6. ஆச்சென்ற வாதிகட்கு யிதுமுன் வேணும்
மல்லாட்டால் குருமுடிக்கச் சுண்ண மாகா
வாச்சென்ற நவலோக முருக்க வேண்டில்
வச்சிரமாங் ... ..... (711)

8. மூலம். 9. பிழைகள் மலிந்த நடை. கணேசன் என்பது கிணேசன் என வருதல் காண்க. 10. அகத்தியர் பெயரில் அமைந்துள்ளது. அகத்தியர் கருக்கிடை 12, அகத்தியர் கருக்கிடை 65 என்பன இந்நூலுடன் தொடர்புடையன. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. முதல் ஓலை முறிந்துள்ளது. பெருநூல் எட்டு காண்டத்துள் சுருக்கி 800 பாடல்களாகச் செய்ததாகப் பாட்டு 2ல் கூறப்பட்டிருப்பதால் இந்த நூலான அகத்தியர் கருக்குரு 800 பாடல்களே பெற்ற நூலாக இருக்கவேண்டும். இதற்கு வைத்திய சூத்திரம் என்றும் ஒரு பெயருண்டு என்பதை முதல் பாடலிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

# அகத்தியர் கருப்பக்கோள்

I. 1. **76**. 2. அ. D. 2400. ஆ. T.D. 935. இ. R. 6293. ஈ. —. 3. அ. அகத்தியர் கருப்பக்கோள். ஆ. Akattiyar karuppakkōḷ. இ. அகஷ்த்தியர் கெர்ப்பக்கோள். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நொறுங்கியது. 12. 8; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 17. முழுமை. 17. 11 பாடல்கள்.

ஆ. 1. 33 x 20 செ.மீ. 2. 5. 3. 25. 4. தெளிவு. 5. 14.7.1956 - 30.7.1956. 6. K.N. இராஜேஸ்வரி. 7. J. சந்திர மௌலீஸ்வரன், B. வஜ்ரவேலு. 8. 30. 7. 1956.

III. 1. பெண்களின் மலட்டுத் தன்மையையும், அதை நீக்கும் முறையையும் கூறுவது. 2. மருத்துவம். 3. சில பெண்களுக்கு மலட்டுத் தன்மை ஏற்படும். அப்படியான மலட்டுத் தன்மையின் இயல்பு, அதை நீக்குதற்குரிய மருந்துகளையும் அம்மருந்துகள் செய்யும் முறை, அவற்றைப் பயன் படுத்தும் முறை பற்றியும் இச் சுவடிப் பாடல்கள் கூறுகின்றன. கருப்பப் பை அடைத்திருந்தால் விந்து அங்குப் போகாது; அப் பையில் வாய்வு நிரம்பியிருந்தாலும் விந்து சேராது; கருப்பப்பையில் தசை வளர்ந்திருந்தாலும் விந்து செல்லாது; கருப்பப்பையில் புழுக்கள் இருந்தாலும், சோறை கட்டினாலும், கருக்குழி மதித்திருந்தாலும் விந்து சேராது. இவ்வாறு ஆறு வகையான காரணங்கள் மலட்டுத் தன்மைக்குக் கூறப்படுகின்றன. இவற்றை நீக்கும் மருந்துகளும் கூறப் படுகின்றன. அகத்தியர் பெயரில் பாடல் பெற்ற ஒரு நூலின் ஒரு பகுதியாக இப்பாடல்கள் இருக்கலாமெனத் தெரிகிறது.

4. —.

5. பாரப்பா பெண்மலடாங் கெற்(ப்)பக்கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
ஆரப்பா பெண்மலடே ஆர்க்கு மல்லால்
அப்பனே ஆண்மலடு ஆரு மில்லை
னேரப்பா தவிசிருந்தும் பொருளை யீந்தும்
னேரான தில்லையரும் சூலை யாலே
வேரப்பா தேவதையா லேழாங் கெற்பம்
வரிந்துநன்றாய்ப் புகலுகிறேன் விரும்பிக் கேளே. 1

6. தானென்ற பத்தியத்தைச் சூஷத்தில் சொல்வேன்
சாதகமுங் கூடியதொரு பாக மாகும்
வேனென்று புளியாரைச் சீய்க்காய்க் கொழுந்து
மேலான நெல்லிக்காய் அருநெல் லிக்காய்
தானென்ற வெள்ளாடு முசல் ஆமையாகும்
திறமாகு ஊர்க்குருவி காடை மானாம்
தூதுவளை துவரைபொன் னாங்கா ணியாகும்
சொல்லுகிறேன் குளிந்தசலம் கிட்டலாகா மையிந்தனே. 11

7. குருபாதம் துணை.

*8. மூலம். 9. பிழைகள் மலிந்த நடை. அந்தாதியில் பாடப்பெற்றுள்ளது. கர்ப்பம் என்பது கற்ப்பம் என்றும், கெற்ப்பம் என்றும் வருதல் காண்க. 10. அகத்தியர் பெயரில் அமைந்த நூல். புலத்தியருக்குக் கூறுவதுபோல் அமைந்துளது. 11. இல்லை.*

IV. *1.* R. 5812(b), R. 1079(g). *2. த.ச.ம.நூ. எண்கள்* 131, 243(a). 3. *இல்லை.*

V. *1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996.*

VI. *இந்த நூலுடன் வேறுசில சுவடிநூல்களும் உள்ளன. இந்நூலுக்கு அகத்தியர் கற்பசூத்திரம் என்ற பெயரும் விளங்குவதைக் காணலாம்.*

## அகத்தியர் கருப்பக்கோள்

I. *1.* **77**. *2.* அ. R. 5812. (b). ஆ. T.R. 2495. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் கருப்பக்கோள். ஆ. Akattiyar karuppakkōḷ. இ. அகஷ்த்தியர் கருப்பக்கோள். *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.*ஓரளவு தெளிவு. *4. 8. 5.* 12 x 4 செ. மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* மிகவும் சிதைவு. *12. 16;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *8* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 14* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* ஆண், பெண் மலடாவதற்கான காரணங்களும் அம்மலட்டுத் தன்மையைப் போக்கும். மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. *2.* மருத்துவம். *3.* இதில் ஆண், பெண் மலட்டுக் குறிகள், தசை வளர்ச்சி, வாயு கிருமி, சோறை (இரத்தம்) மதர்ப்பு முதலானவைகளின் குறிகளும் அவற்றிற்கான மருந்துகளும் பத்தியங்களும் கூறப் பட்டுள்ளன. கருக்குழியில் ஏற்படுகின்ற ஆறு வியாதி, மற்றும் குணம் கூறப்படுகின்றன.

*4.* —.

*5.* பாரப்பா பெண்களுக்குக் கற்பக் கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
பாரப்பா ஆண்மலடே யாகும் யாகும்
அப்பனே பெண்மலடு யில்லை யில்லை
நேரப்பா தவசிருந்து பிள்ளை யில்லை
நேர்மையென்ன ஆறுவகை .. யுண்டு
பேரப்பா ஆசாங்கம் நான்வகையாய்ச் சொல்ல
புலத்தியனே உங்களுக்குப் புகலு றேனே. 1

*6.* ஆமப்பா தேன்சிறு கீரை யாகும்
ஆவின்பால் நெய்யோடாகும் சிறுபய றாகும்
மாகுமப்பா தூதுவளை சமூல மாகும்
வாகுமப்பா தித்தித் .. வார மாகும்

மாகாகா புளித்து வர்ப்பு ..
வகைகளெல்லா தமாகும்
ஆத்தாளைப் பூசித்த மதுவுமா கும்மே. 14

7. குருபாதமே துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. புலத்தியருக்குக் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 2400, R. 1079 (g). 2. த.ச.ம.நூ. எண்கள் 131, 197 (a), 243 (a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. சில மிகைப் பாடல்கள் இந்நூலில் வந்துள்ளன. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் கருப்பக்கோள் என்ற இந்நூலுடன் அகத்தியர் கர்ம நிவர்த்தி 32, பல்லி விழும் பலன், துடி நூல், தும்மற் காதல், மாட்டு வாகடம் ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் கருப்பக்கோள்

I. 1. **78**. 2. அ. R. 1079 (g). ஆ. T.R. 796. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கற்ப சூத்திரம். 12. ஆ. Akattiyar karpa cūttiram 12 . இ. அகஸ்தியர் அருளிச்செய்த கற்ப சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 28 x 2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 8; இரண்டு பக்கங்களிலும் முழுமையாக எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சில பெண்களின் மலட்டுத் தன்மைகளையும் அவற்றை நீக்கும் முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 77 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் அருளிச்செய்த கற்ப சூத்திரம்.

5. பாரப்பா பெண் மலடாங் கர்ப்பக் கோளின்
பருவமதைச் சொல்லுகிறேன் பண்பால்(த்) தானே
யாரப்பா வாண்மலடே யாகு மல்லால்
அப்பனே பெண்மலடு யாது மில்லை
நேரப்பா ... ..... ...
நேரான திவலையது சூலுங் காணும்
..... ..... .....
விரித்து நன்றாய் ... விரும்பிக் கேளே. 1

6. மதுவாகும் குளிர்ந்தசலங் கிட்டா வாகா
மைந்தனே கொதித்தண்ணீர் மிகவு மாகும்
..... .... ....
தானிந்த நூல்(ப்)பார்த்துப் பாரு பாரு
யதுவாகு மிதுவாகு மென்று யெண்ணி
..... ..... ..... .....
.... ..... ....
புத்தி சித்தி முத்தி முதல் புனித மாமே. 12

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரால் பாடப்பெற்றுள்ள கருப்பக் கோள் நூல்கள் 11,12,14, 16 எனப் பலவகைப் பாடல்கள் பெற்று அமைந்துள்ளன. 11. இல்லை.

IV. 1. D.2400, R. 5812 (b). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. கருப்பக் கோளில் மூன்று வகையான நூல்கள் இருப்பது தெரியவருகின்றது.

## அகத்தியர் கரும நிவர்த்தி 32

I. *1.* **79.** *2.* அ. R. 5812 (a). ஆ. T.R. 2495. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் கரும நிவர்த்தி சூத்திரம் *32.* ஆ. Akattiyar karma cūttiram 32. இ. அகஸ்தியர் கறும நிவர்த்தி முப்பத்திரண்டு. *4.* —. *5.* —. *6.* ஆறுமுக நாயக்கன். *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* ஓரளவு தெளிவு. *4. 12. 5.* 12 x 4 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* மிகவும் சிதைவு. *12. 24;* இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *7* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 33* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* கருமங்களுக்குப் பரிகாரம் செய்வது பற்றிக் கூறும் நூல். *2.* மாந்திரீகம். *3.* அட்டகர்மங் களைப் பயன்படுத்தி ஒருவரை வசியம் செய்து அவர்களுக்கு கெடுதலைச் செய்யும் மந்திரங்களை நீக்குவதற்குரிய செய்திகளை இந்நூல் கூறுகிறது. முதலில் பல தெய்வங் களையும் வணங்குவதன் மூலம் கரும நிவர்த்திக்குத் தெய்வங்களின் துணையையும் இந்நூலாசிரியர் நாடுகின்றார்.

*4.* —.

*5.* பூரணமே தெய்வமென்ற .... ப் போற்றி
புகழ்பெரிய மூலகண பதியே காப்பு
வாரணமா யெனையாண்ட நாதாந் தத்துள்
வாழுமனோன் மணித்தாயார் பாதம் போற்றி
காரணமாம் .... .... ...
.... .... ... ..
..... ..... .... ....
... ..... ....

*6.* கருத்தாகக் கருமத்தின் நிவர்த்தி சொன்னோம்
கண்டுமிந்த முறைப்படியே செய்வாய் திட்டம்
மறுத்தாறு வாயினாலே பழுது சொல்லும்
மாறுவார்மெத்தப் பூமிதனில் மடைய ருண்டு

சிறுத்துமே அவன்குடில் மற்குக் காளாய்
சிலகர்மத் தாலழுந்திச் சாபத் தாலே
தரித்திரங்கள் தனையடைந்து மாய்வா யென்று
சாற்றினேன் குறுமுனினூ லெண்ணாங்கு
முற்றே. 33

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந் துள்ளன. பிழைகள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற கரும நூல்கள் பல உள்ளன. அவற்றுக்கு மாற்றாக இந்நூல் உள்ளது. அகத்தியரைக் குறுமுனி என இந்நூல் கூறுகிறது. 11. சுக்கில வருஷம் கார்த்திகை மாதம் 3 ம் தேதி திங்கட் கிழமை துவாதெசியும் ரேவதி நட்சத்திரமுங் கூடின சுபதினத்தில் எழுதி முகிந்தது. ஆறுமுக நாயக்கன் மகன் வேங்கடபதியுடைய கர்ம நிவர்த்தி ஏடு. ஆறுமுக நாயக்கன் கையெழுத்து.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. 1. இந்நூல் வசியம், மோகனம், தம்பனம் முதலான அட்டகர்மங்களின் செயல்களால் பாதிக்கப்பெற்றவர்க்கு அக்கருமங்களை நீக்கி அவர்கள் மீண்டும் நலமடைய உதவும் முறைகளைக் கூறுவதால் இந்நூல் மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைந்துள்ளது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் கரும நிவர்த்தி 32 என்ற இந்நூலுடன் பல்லி விழும் பலன், அகத்தியர் கருப்பக்கோள், துடி நூல், தும்மற் காதல், மாட்டு வாகடம் முதலிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் கருமானம்

I. 1. **80**. 2. அ. R. 6222. ஆ. T.R. 2631. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கருமானச் சூத்திரம் 32. ஆ. Akattiyar karumāṉac cūttiram 32. இ. அகத்தீசர் கருமானச் சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 20. 5. 26 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 40; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 15 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 60 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரித்தலையும், மந்திரம் (சூனியம்) செய்யும் முறையையும் இந்நூல் கூறுகின்றது. 2. மருத்துவம் மற்றும் மந்திரம். 3. இந்நூலில் சூனியத்தின் இயல்பும் அதனை நீக்கும் வழிகளும் முதலில் கூறப்படுகின்றன. அழிஞ்சிப்பட்டை, உப்பிலிவேர் இவற்றைக் கூட்டி காடி வார்த்து அரைத்துக் கொடுத்தால் சூனியத்தால் வரும் தச வில் பூட்டு என்னும் நோய் போகும். அழிஞ்சில் என்பது ஒரு மரம். இது கிராணித் திரவியம் தயாரிக்க உதவுகிறது. உப்பிலி என்பது ஒரு இரண்டுச் செடியாகும். மேலும் பல்வேறு நோய்களுக்கு மருந்து தயாரிக்கும் முறையையும் பயன்படுத்தும் முறைகளையும் இந்நூல் கூறுகிறது. வாலை, மூலம், வில்பூட்டு தந்திரம், வில்பூட்டைத் திறக்கும் வித்தை ஆகியனவும் கூறப்படுகின்றன. மூலநோய் பலவகை. அவை யாவன: மூலவாயு, மூலாக்கினி, மூலக்கிராணி, இரத்த மூலம், உள் மூலம், சீழ் மூலம், வறள் மூலம் எனப்படும். இம் மூலநோய்கள் நீங்குவதற்குரிய மருந்து வகைகளும் இந்நூலில் கூறப்படு கின்றன. சூனியங்களில் சில வகைகள் வருமாறு: அதிசார சூனியம் நான்கு வகைப்படும். வாகாதிசாரம், பித்தாதி சாரம், சிலோத்துமாதி சாரம், திரிதோசாதி சாரம் என்பன. இவை இந்நூலில் விளக்கப்படுகின்றன.

4. —.

5. கருமானச் சாத்தாவின் கோவில் வைய்த்த
காரிகையே சூனியத்தின் குணமே தென்னில்
சுருபமது பூனைபோல் நாய்போல் காணும்
கரம்பிடிக்கும் கண்குழியும் கண்பஞ் சாகும்

கருமந்திப் போல்(க்) காணும் கைகால் காந்தும்
கண்மஞ்சள் பூத்திருக்கும் வெளுக்கு மேனி
குருவான நாக்கதுதான் குழறிப் பேசும்
குறிப்பறிய செவியோசை கேளா தாமே. 1

6. கூட்டிய யெண்ணை தானும் குளிரவே வடித்துக் காய்ச்சி
நாட்டமாய்ச் சிரசில் தேய்த்துச் செவியதனில் நன்றாய் வாறு
மேட்டியா யிருந்தி டாதே விட்டிட புகைதான் கேளு
காட்டில்வாழ் பன்றி விட்டை கருமயி லிறகு தானே. 60

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள் காணப்படுகின்றன. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியரின் பெயரில் பாடப் பெற்றுள்ளது. இந்நூலுக்கு அகத்தியர் சூனியத் திறவுகோல் என்ற பெயரும் உண்டு. 11. இல்லை.

IV. 1. 4546, R 6146. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சூனியத் திறவுகோல் என்பது பிறரால் வைக்கப்பட்ட பில்லி சூனியத்தை அகற்றுதலாகும். இந்நூல் அகத்தியர் கருமானச் சூத்திதரம், அகத்திதயர் சூனியத் திறவுகோல் என இருவகைகளில் வழங்குவதைக் காண முடிகிறது.

## அகத்தியர் கருமானம்

I. 1. **81**. 2. அ. R. 4546. ஆ. T.R. 2009. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கருமானச் சூத்திரம் 32. ஆ. Akattiyar karumāṉac cūttiram 32. இ. அகஷ்த்தியர் கருமானச் சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 44. 5. 15 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 88; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. ஏட்டு எண்கள் 39, 40, 42 மற்றும் இறுதி ஏடுகள் இல்லை. 16. குறை 17. 72 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரித்தலையும், மந்திரம் செய்யும் முறையையும் கூறும் நூல். 2. மருத்துவம் மற்றும் மந்திரம். 3. வரிசை எண் 80 போன்றது.

4. ஈச னடியார் யிருதையம் கலங்கிடில்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் கோவில் மதிலு மிடிந்திடும்
நாசம தாகும் நமனந்தி ஆணையே.

5. கருமான சாத்தாவின் கோவில் செய்த
காரிகையே சூனியத்தின் குணமே தென்னில்
சுருபமது பூனைபோல் நாய்போல் தோணும்
சுரம்பிடிக்கும் கண்குழியும் கண்பஞ் சாக்கும்
கருமநதி போல்(த்)தோணும் கைகால் காந்தும்
கண்மஞ்சள் பூத்திருக்கும் வெளுக்கு மேனி
குருவான நாக்கதுதான் குழறிப் பேசும்
குறிப்பறியா செவியோசை கேளா தாமே. 1

6. சொல்லுகிறேன் சொறித்தவளை தன்னிற் செய்த
சூனியத்தின் குணங்கேளு சூட்ச மாக
நல்லதொரு தேகமெல்லாம் வங்கு போலாம்
நாடியது மதகரியாம் சொரியுங் காந்தல்
செல்லாது ஊடாடி திரியொட் டாது
சிந்தையது பேதகமாய்க் குட்டம் போலாம்
வல்லவரே மதிமயக்க மாகு மாகும்
வந்துவிடும் பின்னுமதைக் கேளு கேளே. 72

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 10. அகத்தியரின் பெயரில் அமைந்துள்ள இந்நூல் பிற கருமான நூல்களிலிருந்து அதிகப் பாடல்கள் பெற்று வேறுபடுகிறது. 11. இல்லை.

IV. 1. R. 6222, R. 6146. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் மூவருட அட்டவணையில் R.923, R.1081ல் உள்ள பிரதிகளைப் போன்றதாகும். கடவுள் வாழ்த்துப் பாடலில் நமனந்தி என்பவரின் ஆணையாகச் சில செய்திகளை அறிய முடிகிறது. இறை அடியார்களின் மனம் கலங்குமாறு நடந்து கொண்டால் இந்நாட்டினுடைய சிறப்பு அழிந்து, வாசவன் கோயிலின் மதிலும் இடிந்து அழிந்து போகும் என்பதாம். இதிலிருந்து மருத்துவ நூல்களில் மருத்துவம் மட்டுமல்லாது சான்றோர்களின் அறிவுரைகளும் இடம் பெறுவது அறியத் தக்கதாகும். அகத்தியர் கருமானம் என்ற இந்நூல் ஆ.கீ.சு. நூலக மூவருட சுவடி விளக்க அட்டவணை R.923, R.1081 ஆகிய எண்களில் உள்ள பிரதிகளைப் போன்றதாகும்.

## அகத்தியர் கருமானம்

I. *1.* **82.** *2.* அ. R. 6146. ஆ. T.R. 2593. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சூனியத் திறவுகோல். ஆ. Akattiyar cūṉiyat tiṟavukōl இ. சூனியத் திறவுகோல் என்கிற க்ருமானச் சூத்திரம். *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 13.* *5.* 28 x 4 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* மிகவும் சிதைவு. *12. 26;* இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *7* வரிகள். *14.* விருத்தம். *15.* இறுதி. *16.* குறை. *17. 60* பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரித்தலையும், மந்திரம் செய்யும் முறையையும் கூறும் நூல். 2. மருத்துவம் மற்றும் மந்திரம். 3. வரிசை எண் *80* போன்றது.

4. —.

5. கருமானச் சாத்தாவின் கோவில் வைத்த
காரிகையே சூனியத்தின் குணமே தென்னில்
சுருபமது பூனைபோல் நாய்போல் காணும்
சுரம்பிடிக்கும் குழியும் கண்பண்ஞ் சாகும்

கருமந்திப் போல்(க்)காணும் கைகால் காந்தும்
கண்மஞ்சள் பூத்திருக்கும் வெளுக்கு மேனி
குருவான நாக்கதுதான் குழறிப் பேசும்
குறிப்பறிய செவியோசை கேளா தாமே. 1

6. கூட்டிய யெண்ணை தானும் குளிரவே வடித்துக் காய்ச்சி
நாட்டமாய்ச் சிரசில் தேய்த்துச் செவியதனில் நன்றாய் வாறு
மேட்டியாய் யிருந்தி டாதே விட்டிட புகைதான் கேளு
காட்டில்வாழ் பன்றி விட்டைக் கருமயி லிறகு தானே. 60

7. —.

8. மூலம். 9. பிழைகள் மிகுதி. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்துள்ளது. 11. இல்லை.

IV 1. R 4546, R 6222. 2. —. 3. இல்லை.

V 1. இல்லை.2. —. 3. இல்லை.

VI. வில் பூட்டு தந்திரம், தச வில்பூட்டு, மூளையடி சூத்திரம், தேங்காய் சூத்திரம், அதிசாரத்துக்கு சூனிய மந்திரம், அடைப்புச் சூனிய மந்திரம் போன்றவை எல்லாம் பில்லி, சூனியம் தொடர்பாகவே உள்ளன என்பது தெரிய வருகின்றது.

## அகத்தியர் கலிபுனைச் சுருட்டு

I. 1. **83**. 2. அ. R. 4895. ஆ. T.R. 2133. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலிபுனைச் சுருட்டு வினையம். ஆ. Akattiyar kalipuṉaic curuṭṭu viṉaiyam இ. அகஷ்த்தியர் கலிபுனைச் சுருட்டு வினையம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 11; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 17 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வசியம் முதலான அட்டகர்மங்கள் பற்றிக் கூறும் நூல். 2. மந்திரம் .3. வசியம், மாரணம், தம்பனம், மோகனம், உச்சாடனம், பேதனம், வித்துவேசனம் முதலான எட்டு வகைக் கர்மங்களுக்கு மந்திரங்கள், தந்திரங்கள், யந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

4. —.

5. கானான புனைச்சுருட்டுக் கனவனு மில்லாமல்
தான் செனிக்கும் யமைப்பிலிரு சட்டியிலே வாங்க
வேனான மயக்கி மதி மசக்கிமுறை வேரும்
மிகுந்தமன துருக்கியுடன் பூருகை செய்யும்
தானான ராமமலைத் தேவாங்குக் கண்ணு
மகழுகின்ற குளியம்மி கானயத்தி லூத்திப்
பானான மதியதனில் அரைத்து ருட்டிச் சிமிழில்
பத்திரமாய் நீவைத்துப் பதனஞ் செய்யே. 1

6. வைத்தந்தத் தீருநீறால் மாரண சக்கரமு
மந்திரமுஞ் சொல்லிவிடு பேநீ னுங்குடச்
சத்துமடா நிசமதுதான் மாரணம் ஆகும்
சுருக்கிதுபோ லொன்றுமில்லை தொல்லுலகில் தானுங்
கத்தியென்ன முன்பின்னென்று சேவித்தால்தென்ன
காசினியில் கருவோட செய்தால் பலிபலிக்கும்
மெத்தொழிலு மாடுமிந்த இருத யாப கோரேளி
மெய்யான சத்தியமாம் யினிநூல் முற்றே. 17

7. குருபாதமே துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பிழைகள் மிகுதி. பரிபாசைச் சொற்கள் பயின்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்துள்ள இந்நூல் சக்கரங்கள், யந்திரங்களைப் பெற்று விளக்கம் செய்கிறது. 11. இல்லை.

IV 1. இல்லை. 2. —. 3.இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3.இல்லை.

VI. புனைசுருட்டு என்னும் நூலில் உள்ள சில மந்திரங்களால் பிறருக்குத் துன்பம் வருவதன் பொருட்டு ஏவல் செய்யும் பழக்கம் இருந்துள்ளது என்பதும் அதனால் புனைசுருட்டு மந்திரம் நாளடைவில் இழிவு ஏற்படுத்தும் சொல்லுக்கு ஆவதாயிற்று. (சொல் ஆராய்ச்சி இன்பம்)

இச் சுவடிக்கட்டில் அகத்தியர் கலிபுனைச் சுருட்டு என்ற இந்நூலுடன் சர்வ சங்கிரகப் பட்சிணி, சடாட்சரக் கோவை, புவனைத் தியானம், திரிபுரை அந்தாதி, திரிபுரை மாலை, வாலை சரஸ்வதி மந்திரம், நாடிப் பரீட்சை முதலிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் கலைஞானம் 8

I. *1.* **84**. *2.* அ. R. 268 (d). T.R. 252. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் கலைஞானம் *8.* ஆ. Akattiyar kalaiñāṉam 8. இ. அகஸ்திய சுவாமிகள் கலைஞானம். *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* M.R. Ry K. அரங்கசாமி அய்யங்காரிடமிருந்து கி.பி. *1915-16* ஆம் ஆண்டில் பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி. *1915-16.*

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 2.* *5.* 35 x 3.செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* சிறு சிதைவு. *12.* 4 ; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *6* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 8* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* உடம்பில் தோன்றும் நோய்களுக்கு மருந்துகள் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* அகத்தியர் கலைஞானம் எட்டு என்ற இந்நூல் பல தெய்வங்களை வணங்கி, ஞானம், மருத்துவம் தொடர்பான சில செய்திகளைக் கூறுகிறது.

*4.* —.

5. ஆதிசத்தி சிவமான சோதி காப்பு
அண்டமெனும் பூரணத்தி னறிவே காப்பு
சோதியெனும் வாலைமனோன் மணியின் காப்பு
சொல்லடங்கா விண்ணொளியின் சுடரே காப்பு
நீதியுள்ள சற்குருவின் பாதங் காப்பு
நீயென்றும் நானென்றும் நின்றோன் காப்பு
சாதியெனும் சிவசற்றி சிவந்தான் காப்பு
தற்பரற்றின் பொருள்காப்பு தாள்காப் பாமே. 1

6. ஒன்றான சுண்ணமதில் காரஞ் சாரம்
உடன்ரசத்துத் தளவாங்கி அங்கி பூட்டி
மன்றான மணல்மரவில் புடத்தைப் போட்டு
மைந்தனே எடுத்துப்பா ரிறுகி நிற்கும்
கன்றான மணிதனையே யெடுத்துக் கொண்டு
கருத்துறவே நாவிலொன்று ரவியாய்ச் சேர்த்து
விண்ணான மணிதனிலே பகுத்துக் கொண்டு
விளங்கவே சேர்த்துருக்கப் பத்து மாற்றே. 8

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந் துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. சில பாடல்களில் த்த என்பது ற்றவாகவும், ற, ர வேறுபாடு இல்லாமலும் வந்துள்ளன. 11. இல்லை.

IV. 1. D. 238. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சுண்ணம் பலவகைப்படும். இந்நூலில் பத்துமாற்றுச் சுண்ணம் தயாரித்தல் பற்றியும் பேசப்படுகிறது.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. சட்டைமுனி சூத்திரம் இருநூறு.
b. தட்சிணாமூர்த்தி பரிபாஷை ஐந்நூறு.
c. தட்சிணாமூர்த்தி வழலை முப்பது.
e. அகத்தியர் பரிபாஷை ஐந்தாங்காண்டம்.
f. போகர் நாலாங் காண்டம்.
g. அகத்தியர் முன்னூல் எண்பது.
h. அகத்தியர் பரிபாஷை.
i. அகத்தியர் பூரண சூத்திரம்.
j. சுந்தரானந்தர் சூத்திரம் இருநூற்றைந்து.

# அகத்தியர் கலைஞானம் 12

I. 1. **85**. 2. அ. R. 4882. ஆ. T.R. 2131. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞானச் சுருக்கம் 12. ஆ. Akattiyar kalaiñāṇac curukkum 12. இ. நூற்றிருபதுக்குச் சுருக்கம் 12. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 29 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞான மார்க்கங்களைப் பற்றியும், இரசவாத முறைகளைப் பற்றியும் கூறும் நூல். 2. ஞானம் மற்றும் இரசவாதம். 3. இந்நூல் யோகம், ஞானம், ஆகியவைகளைக் கடைபிடிக்கும் முறைகளையும், முப்பு, வழலை, வகார மார்க்கம் ஆகியவைகளைச் செய்யும் முறைகளையும் கூறுகிறது.

4. ஹரி ஓம் நன்றாக.

5. தாயான மனோன்மணியாள் பாதம் போத்தி
சாத்திரமோ ராயிரத்தி யிருநூ றுக்குள்
தோயாத கருவொன்று மில்லை யில்லைச்
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகு மதையடக்கிநூற் றிருபதுவுஞ் சொன்னேன்
கனிபோல யிந்தநூல் பன்னிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி யண்டபிண்டம் வளமை கேளே. 1

6. தானென்ற அண்டபிண்டங் குருவே செய்யத்
தவம்வேணுஞ் சிவம்வேணுந் தயவும் வேணும்
மானென்ற அக்கினியா முப்புவைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்

நானென்ற ஆணுவத்தை முடுக்க வேணும்
நலமான சிவயோகம் நாட்ட வேணுந்
தேனென்ற சற்குருவைக் காக்க வேணுஞ்
சித்தியாம் பன்னிரெண்டுஞ் சிறக்க முற்றே. 12

7. குருவே துணை.

8. மூலம். 9. பாடபேதங்கள் மிகுந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் பயின்றுள்ளன. சான்று: ஆணவம் என்பது ஆணுவம் என வந்துள்ளது. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்துள்ளது. அகத்தியர் கலைஞானம் 1200 இன் சுருக்கமாக அகத்தியர் கலைஞானம் 120 விளங்குகிறது. அதன் சுருக்கமாக இந்நூல் திகழ்கிறது. 11. இல்லை.

IV. 1. R. 3633, R. 3693, R. 3693, R. 6214 (e), R. 267. (i), R. 280 (a), R. 289 (b) 2. த.ச.மா.நூ.எண்கள் 120 (a), 226 (c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, தாமரை நூலகம், சென்னை, 1995. 3.இல்லை.

VI. அகத்தியர் முப்பு வழலைச் சூத்திரம் 12 என்ற பெயரிலும் இது அழைக்கப்படுகிறது. த.ச.ம. நூலகத்தில் சுவடி எண் 469 (b)ல் கும்பமுனி சாமியின் பாடல் 12 என்ற எண்ணிலும் இந்நூல் காணப்படுகிறது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் கலைஞானம் 12 என்ற இந்நூலுடன் அகத்தியர் கலைஞானம் 120, கொங்கணர் சூத்திரம், சட்டைமுனி சூத்திரம் 25, மச்சமுனி சரக்குச் சுத்தி ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் கலைஞானம் 12

I. 1. **86**. 2. அ. R. 3633. ஆ. T.R. 1782. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 12 ஆ. Akattiyar cūttiram 12. இ. அகத்தியர் நூல் 12. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 20 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை

ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞான மார்க்கங்களைப் பற்றியும், இரசவாத முறைகளைப் பற்றியும் கூறும் நூல். 2. ஞானம் மற்றும் இரசவாதம். 3. வரிசை எண் 85 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக.

5. தாயான உன்மனத்தாய் பாதம் போத்தி
சாத்திரமோ ஆயிரத்தி யிருநூ றுக்குள்
தோயாத கருவொன்று மில்லை யில்லைச்
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகு மிதைக்குறுக்கி யிருனூறுஞ் சொன்னேன்
கனிபோல யிந்தநூல் பன்னிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி யண்டபிண்டம் வளமை கேளே. 1

6. தானென்ற அண்டபிண்டக் குருவே செய்யத்
தவம்வேணுஞ் சிவம்வேணுந் தயவும் வேணும்
மானென்ற அக்கினியா முப்புவைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்
நானென்ற ஆணவத்தை முடுக்க வேணும்
நலமான சிவயோகம் நாட்ட வேணுந்
தேனென்ற சற்குருவைக் காக்க வேணுஞ்
சித்தியாம் பன்னிரெண்டுஞ் சிறக்க முற்றே. 12

7. அகத்தியர் நூல் பனிரெண்டு முற்றும்.

8. மூலம். 9. உன்மனத்தாய் என்பது பாடபேதம். மனோன்மணியாள், உமையாள்தன், உன்மனையாள், மவுனத்தாய், மனைத்தாயி என்பனவும் பாடபேதங்கள். 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியர் 1200, அகத்தியர் 120 ன் சுருக்கமாக இருக்கலாம். 11. இல்லை.

IV. 1. R. 4882, R. 3693, R. 6214(e), R. 267 (i), R. 280 (a), R. 289 (b). 2. த.ச.ம.நூ.சு.எண்கள் 120 (a), 226 (c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, தாமரை நூலகம், சென்னை 1995. 3. இல்லை.

VI. வகாரமார்க்கம் என்பது இரும்பு, செம்பு போன்ற உலோகங்களைப் பொன்னாகச் செய்யும் முறை, இதனை வகாரவித்தை என்றும், வாதவித்தை என்றும், வகார வேலை என்றும் கூறுவர். இச் சுவடிக்கட்டில் அகத்தியர் கலைஞானம் 12 என்ற இந்நூலுடன் அகத்தியர் பெருங்குழம்பு, அகத்தியர் சூத்திரம் 1, அகத்தியர் ஞானம் 5, அகத்தியர் வாக்கியம் 6, அகத்தியர் முப்பு தீட்சை 16, அகத்தியர் ஞானம் 16 ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் கலைஞானம் 12

I. 1. **87.** 2. அ. R. 3693. ஆ. TR 1800. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 12. ஆ. Akattiyar cūttiram 12.. இ. அகத்தியர் நூல் 12. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 4. 5. 13 x 13 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 8 பக்கங்கள்; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 6 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞான மார்க்கங்களைப் பற்றியும், இரசவாத முறைகளைப் பற்றியும் கூறும் நூல். 2. ஞானம் மற்றும் இரசவாதம். 3. வரிசை எண் 85 போன்றது.

4. —.

5. தாயான உன்மனத்தாய் பாதம் போற்றி
சாத்திரமோ ஆயிரத்தி யிருநூ றுக்குள்
தோயாத கருவொன்று மில்லை யில்லைச்
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகு மிதைக் குறுக்கி யிருனூறுஞ் சொன்னேன்

கனிபோல யிந்தநூல் பன்னிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி யண்டபிண்டம் வளமை கேளே. 1

6. பாரப்பா பிண்டத்தைச் சொல்ல வென்றால்
பாரமில்லைச் சாரமில்லை(ப்) பான மில்லை
பேரப்பா பெண்ணில்லை(ப்) பெண்ணான பெத்த
பிள்ளையில்லை(க்)கருவில்லை(ப்) பீச மில்லை
கூரப்பா வகைவகைகள் தூர மான
குருதியில்லைக் கும்பிடுகலக் குளைபூ டில்லை
வாரப்பா பரசீவ செந்து மில்லை
மதுவில்லை மலமில்லை வகையைக் கேளே. 6

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள் மிகுதி. அந்தாதி அமைப்பில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 3633, R. 4882, R. 6214 (e), R. 267 (i), R. 280 (a), R. 289 (b). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை, தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இந்நூல் 'அகத்தியர் நூல் 12' என்றும், 'அகத்தியர் சுருக்கம் 12' என்றும் வழங்கப்படுகிறது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் கலைஞானம் 12 என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 16, அகத்தியர் வைத்தியம் 1500 ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் கலைஞானம் 12

I. 1. **88**. 2. அ. R. 6214 (I). ஆ. T.R. 2627. இ. —. ஈ. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 12. ஆ. Akattiyar cūttiram 12. இ. அகஷ்த்தியர் சூஷ்த்திரம் 12. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 7; இருபக்கங்களி

லும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள் .

ஆ. —.

III. 1. யோக, ஞான மார்க்கங்களைப் பற்றியும், இரசவாத முறைகளைப் பற்றியும் கூறும் நூல். 2. ஞானம் மற்றும் இரசவாதம். 3. வரிசை எண் 85 போன்றது.

4. —.

5. தாயான உமையாள்தன் பாதம் போற்றி
சாஷ்த்திரமோ ஆயிரத்தி யிருநூ றுக்குள்
தோயாத கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை ஒன்று
காயாகு மதைக்குறுக்கி இருநூறு சொன்னேன்
கனிபோலே யிந்தநூல் பனிரண் டுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி அண்டபிண்டம் வளமை கேளே. 1

6. தானென்ற அண்டபிண்டங் குருவைச் செய்யத்
தவம்வேணும் சிவம்வேணும் தயவு வேணும்
வானென்ற அக்கினியா முப்பைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்
நானென்ற ஆணவத்தை மொடுக்க வேணும்
நலமான சிவயோகம் நாட்டம் வேணும்
தோனென்ற சற்குருவைக் காக்க வேணும்
சித்தியாம் பனிரெண்டுஞ் சிறக்க முற்றே. 12

7. முற்றும்.

8. மூலம். 9. வடமொழி எழுத்துக்கள் வந்துள்ளன. அந்தாதி அமைப்பில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 3633, R. 3693, R. 267 (i), R. 4882, R. 280 (a), R. 289 (b). 2. 3. -.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை, தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இந்நூலுக்கு ' அகத்தியர் கலைஞான சுருக்கம் 12' என்றும், 'அகத்தியர் 12' என்றும் பெயர்கள் உள்ளன. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் கலைஞானம் 12 என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 1 முதல் அகத்தியர் சூத்திரம் 11 வரையிலான பதினோரு நூல்கள் உள்ளன.

## அகத்தியர் கலைஞானம் 12

I. 1. **89**. 2. அ. R. 267(i). ஆ. T. R. 251. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞானச் சுருக்கம் 12. ஆ. Akattiyar kalaiñāṉac curukkam 12. இ. அகத்தீசர் குளிகை 12 4. —. 5. —. 6. வையாபுரி. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 4 இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான மார்க்கங்களையும் இரசவாத மார்க்கங் களையும் பற்றிக் கூறும் நூல். 2. இரசவாதம் - ஞானம். 3. வரிசை எண் 85 போன்றது.

4. —.

5. தாயான வுன்மனையாள் பாதம் போற்றி
சாஸ்திரமோ ஆயிரத்தி இருநூ றுக்குள்
தோயாத கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகி மதைக்குறுக்கி நூறு சொன்னேன்
கனிபோலே யின்நூல்தான் பனிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகின்றேன் வகார மார்க்கம்
மதிவிரவு யண்டபிண்ட வழலை கேளே. 1

6. தானென்ற அண்டபிண்ட கருவைச் செய்யத்
தவம்வேணுஞ் சிவம்வேணுஞ் தானம் வேணும்
வானென்ற அக்கினி முகப்பைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்

நானென்ற ஆணவத்தை யொடுக்க வேணும்
நலமான சிவயோகம் நாட்ட வேணுந்
தேனென்ற சற்குருவைப் பார்க்க வேணும்
சித்தியாம் பன்னிரெண்டு சிறக்க முற்றே.

7. முற்றிற்று முற்றும் திருச்சிற்றம்பலம்.

8. மூலம். 9. பாடபேதங்கள் உள்ளன; அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. வையாபுரி. அகத்தியர் பன்னிரண்டு நிறைவேறினது முற்றும்.

IV. 1. R. 3633, R. 3693, R. 6214(e), R. 280(a) R. 4882, R. 289 (b). 2. த.ச.ம.நூ.எண்கள். 120 (a), 226 (c). 3. -.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை, தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இந்நூலுக்கு 'அகத்தியர் வாத சூத்திரம் 12' என்றும் பெயரிருப்பதால் இந்நூல் இரசவாத வித்தையைப் பற்றியும் கூறுகிறது எனலாம்.

## அகத்தியர் கலைஞானம் 12

I. 1. **90**. 2. அ. R. 280(a.1). ஆ. T.R. 263. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞானச் சுருக்கம் 12. ஆ. Akattiyar kalaiñāṉac curukkam 12. இ. அகஸ்தியர் அருளிய சுருக்கம் 12. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 32 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 6; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12. பாடல்கள்.

ஆ. —. 5592

III. 1. யோக ஞான மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. ஞான யோகம். 3. வரிசை எண் 85 போன்றது.

4. அகஸ்தியர் அருளிச் செய்த சுருக்கம் 12.

5. தாயான மவுனத்தாய் பாதம் போற்றி
சாஸ்திர மோ யிருநூற்று ரைந்துக் குள்ளே
தோயாத கருவொன்றும் மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகி கனிபோல இருநூறு சொன்னேன்
கனிபோல யிந்தநூல் நானூ றுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி அண்டபிண்டம் வளமைக் கேளே. 1

6. தானென்ற கருவினுட விபரஞ் சொல்லத்
தவம்வேணும் சிவம்வேணும் தயவு வேணும்
வானென்ற அக்கினியாம் முப்பைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்
நானென்ற ஆணுவத்தை யொடுக்க வேணும்
நலமான சிவயோகம் னாட்ட வேணும்
கோனென்ற சற்குருவைக் காக்க வேணுஞ்
சித்தியாம் பனிரெண்டு சிறக்க முற்றே. 12

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுறுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 3633, R 3693, R 6214 (l), R 267 (i) R. 4882, R. 289 (b). 2. த.ச.ம.நூ.எண். 120 (a), 226 (c). 3. -.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை, தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இந்நூல் 'அகத்தீசர் குளிகை 12' என்றும் பெயர் பெறுவதால், இது இரசவாதக் குளிகை பற்றியும் பேசுவதாக அறிய முடிகிறது.

# அகத்தியர் கலைஞானம் 12

I. *1.* **91.** *2.* அ. R. 280 (b.1). ஆ. T.R. 263. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் கலைஞானச் சுருக்கம் *12.* ஆ. Akattiyar kalai ñāṉac Curukkam 12. இ. அகஸ்திய னாயனார் அருளிச் செய்த வாத சூத்திரம் *12. 4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* 4. 5. 32 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* பனை ஓலை. *9.* நரம்பு இல்லாதது. *11.* நன்று. *12.* 7; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 7 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17.* 12 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* ஞான யோக மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். *2.* ஞான யோகம். *3.* வரிசை எண் 85 போன்றது.

*4.* அகஸ்திய னாயனார் அருளிச்செய்த வாத சூத்திரம் *12.*

*5.* தாயான மனத்தாயி பாதம் போற்றி
சாஸ்திரமோ ஆயித்து இருநூ றுக்குள்
தோயாத கருவான்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகி மிதைக்குறிக்கி யிறநூறுஞ் சொன்னேன்
கனிபோலே யிந்தநூல் பனிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்க
மதியிரவி அண்டபிண்டம் வளமை கேளே. 1

*6.* தானென்ற அண்டமென்ற கருவைச் செய்ய
தவம்வேணும் சிவம்வேணும் தயவு வேணும்
தானென்ற அக்கினியா முப்பைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்
நானென்ற ஆணுவத்தை யொடுக்க வேணும்
நலமாகச் சிவயோகம் நாட்ட வேணும்
தேனென்ற சற்குருவைக் காக்க வேணும்
சித்தியாம் பன்னிரெண்டு சிறக்க முற்றே. 12

*7.* அகஸ்தீச னாயன் துணை யுண்டாகவும்.

8. மூலம். 9. அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 3633, R. 3693, R. 6214 (I), R. 267(i) R. 280(a), R. 4882. 2. த.ச.ம.நூ.எண்கள் 120(a), 226 (c). 3. -.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை, தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. யோக முறைகள், ஞான மார்க்கம், சில மருத்துவ முறைகள், இரசவாத வித்தை, முப்பு, சகல கலைகள் போன்ற பொருண்மைகளைக் கூறும் பல நூல்கள் 'கலைஞானம்' எனும் பெயரில் வழங்கப்பட்டிருப்பது அறிய முடிகிறது.

## அகத்தியர் கலைஞானம் 30

I. 1. **92**. 2. அ. R.9052 (b). ஆ. T.R. 3288. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 30. ஆ. Akattiyar 30. இ. அகத்தியரருளிச் செய்த முப்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவில்லாதது. 4. 10. 5. 35 x 2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 20; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 30 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரிய சில முப்புப் பொருள்களைத் தயாரித்தலைக் கூறும் நூல். 2. முப்பு - இரசவாதம். 3. அகத்தியர் முப்பது என்ற இந்நூலில் முப்பு, குரு முடிக்குங் காலம், அண்டபிண்டம், அண்டசக்தி, அம்பிகாயோகம், சிவ உப்பு, சிவதீட்சை, முப்பு நிறம், நடுவின்பெயர், அடியுப்பின் பெயர், முப்புச் சுண்ணம், பஞ்சபூத உப்பு, ஆதி, நடு, முடி ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன.

4. ஹரி ஓம் நன்றாக.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை போற்றி
அடிமுடியா மைங்கோல நந்தி காப்பு
நீதியாம் வாரணத்தின் முதலே காப்பு
நிர்மலமாம் சராசரத்தின் வடிவே காப்பு
பாதிமதி அணிந்தசிவன் தாளே காப்பு
பத்திமுத்தி சித்தவெளி நலனே காப்பு
ஓதியநிரு வாணியுட பாதங் காப்பு
ஓங்கார மூலவட்டத் தொளியே காப்பு. 1

6. ஆமப்பா .... யின்னீத்தில் துருசு வெள்ளை
அலவெள்ளைச் சுண்ணத்தால் அரைத்து நீத்தி
ஓமப்பா பறித்தாட்டி பூசிப் பாரு
ஓகோகோ சொர்ணமது சுண்ண மாச்சு
நாமப்பா சொல்லுகிறேன் தாம்புரத்தில் குடுக்க
நாட்டோர்க்குப் பிழைப்பதற்கு வழியும் முண்டாம்
காமப்பா யதையெடுத்து வெள்ளிக் கீயக்
கனகமாங் கருமூன்று பத்து முத்தே. 30

7. வகார முகிந்தது சிவமயம்.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடல்கள் உள்ளன. ற்ற > த்த ஆக வந்துள்ளது. சான்று : முற்றே > முத்தே, நீற்றி > நீத்தி. 10. அகத்தியர் பேரில் பாடப் பெற்ற நூல். முப்புவில் 'வகார மார்க்கம்' மட்டும் பேசும் நூல் இது. 11. இல்லை.

IV 1. இல்லை. 2. சி.ம.மை.ஆ.நி.எண்1019 (j) த.ப.க. எண்கள் 1194, த.சு.ம.நூ.எண் 121 (g), 321 (b) 469 (f). 3. இல்லை.

V.1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் முப்பு சூத்திரங்கள்', தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இந்நூல் 'அகத்தியர் வகார சூத்திரம் 30' என்ற பெயரிலும் 'அகத்தியர் மூப்பு 30', 'அகத்தியர் கை பாகம் 30' என்ற பெயர்களிலும் வழங்கப்படுகிறது. மேலும் 'அகத்தியர் 30' என்ற பெயரில் சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிறுவனத்திலும் ஒரு நூல் உள்ளது. அகத்தியர் மட்டுமின்றி இராமதேவர் முப்பு சூத்திரம் 31, உரோமரிஷி முப்பு சூத்திரம் 30 என்பன இவ்வகையில் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

# அகத்தியர் கலைஞானம் 120

I. 1. **93**. 2. அ. R. 4881. ஆ. T.R. 2131. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞானச் சுருக்கம் 120. ஆ. Akattiyar kalaiñāṉac curukkam 120. இ. அகஷ்த்தியர் 1200 க்குச் சுருக்கம் நூற்றிருபது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 24. 5. 29 x 4 செ. மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 48; இருபக்கங் களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 120 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞான முதலிய மார்க்கங்கள், இரசவாதம் மற்றும் மருத்துவச் செய்திகளும் கூறும் நூல். 2. ஞானம், இரசவாதம், மருத்துவம். 3. மூப்புவின் கரு, கேசரி, இரவி, மதி துருசுச் சுன்னம், அண்டமெழுகு, கேசரியின் மூலம், வழலை பற்பம், நாத விந்து, மெழுகு, கெந்தித்தயிலம், அண்டவித்து விபரம், இரசமணி, வசியம், திலதம், அஞ்சனம், மறைப்பு, சூடன்வைப்பு, பூர மெழுகு, வெள்ளி முறை, திலதமை, சன்னிக்கு ஆக்கிரணம், விபூதி, கருவழலை, நாகரச மெழுகு, நாதவிந்து மகிமை, கற்பத்துக்குப் பத்தியம், நவக்கிரகம், அனுக்கிரகம், சவுக்காரம், மூன்று மூலிகை, கற்பம், வாதம், வைத்தியம் ஆகிய முறைகள் சொல்லப்பட்டுள்ளன. மேலும் சித்து ஆவதற்குரிய மார்க்கம், இரசவாதம், வைத்தியம், ஜாலம், அஷ்டகர்மம் முதலியனவும், அவை செய்தற்கான மருந்துகள் மெழுகு வகைகள், தைலங்கள் முதலிய பல செய்திகளும் உள்ளன.

4. ஹரி ஓம் நன்றாக.

5. ஆதிசத்தி சிவமான சோதி காப்பு
அண்டமெனும் பூரணத்தின் அறிவே காப்பு
சோதியெனும் வாலைமனோன் மணியாள் காப்பு
சொல்லடங்கா மின்னொளியின் சுடரே காப்பு

நீதியுள்ள சற்குருவின் பாதங் காப்பு
நீயென்றும் நானென்றும் நின்றோன் காப்பு
சாதியெனுஞ் சிவசத்தி சத்திசிவ மான
தற்பரத்தின் பொருள்காப்புத் தாய்காப் பாமே. 1

6. திறந்ததொரு தமர்வாசல் குள்ளே நீயுஞ்
செலுத்தடா வாசிதனை ரவியில் மைந்தா
பறந்ததொரு வாசியது பதிவு மாகும்
பதிவான தீபவொளி கண்ணில் காணுங்
கறந்ததொரு பால்போலே அமுர்த மூறுங்
கனிவான அமுர்தமதைத் தினமுங் கொள்ளு
சிறந்ததொரு பூரணத்தைத் தினமுங் கொண்டு
சிவமான மவுனத்தில் சேர முத்தே. 120

7. தெட்சணாமூர்த்தி துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடப் பேதங்கள் காணப்படுகின்றன. 10. இந்நூல் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 182 (a), D. 1875, D.1876. 2. த.ச.ம. நூ., சுவடி எண்கள் 235 (e), 367 (d) 3. இல்லை.

V. 1. இல்லை. 2. -. 3. -.

VI. 'அகத்தியர் கலைக்கியானச் சுருக்கம் 120' 'அகத்தியர் சகல கலைஞானபீடச் சுருக்கம் 120' எனும் பெயரிலும் இந்நூல் வழங்கப்பெறுகின்றது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் கலைஞானம் 120 என்ற இந்நூலுடன் அகத்தியர் கலைஞானம் 12, கொங்கணர் சூத்திரம், சட்டைமுனி சூத்திரம் 25, மச்சமுனி சரக்குச் சுத்தி முதலிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் கலைஞானம் 120

I. 1. **94**. 2. R. 182 (a). ஆ. T.R. 166 இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞான சூத்திரம் 120. ஆ. Akattiyar kalaiñāna cūttiram 120. இ. அகஷ்த்தியர் கலைஞான சூஷ்த்திரம் நூற்றிருபது. 4. —. 5. —. 6. வெங்கிடராயன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. சென்னை திருவல்லிக்கேணி காதிர் பைக் சாகிபுவிடமிருந்து பெறப்பட்ட சுவடி. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 33. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. ஓரம் சிதைந்துள்ளது. 12. 66; இருபக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 120 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞான மார்க்கங்களும், இரசவாதம் மற்றும் மருத்துவச் செய்திகளும் கூறும் நூல். 2. ஞானம், இரசவாதம், மருத்துவம். 3. வரிசை எண் 93 போன்றது.

4. —.

5. ஆதிசத்தி சிவமான சோதி காப்பு
அகண்டமெனும் பூரணற்றி னறிவே காப்பு
சோதியெனும் வாலைமனோன் மணியின் காப்பு
சொல்லடங்கா மின்னொளியின் சுடரே காப்பு
நீதியுள்ள சற்குருவின் பாதங் காப்பு
நீயென்றும் நானென்றும் நின்றோன் காப்பு
சாதியெனும் சிவசத்தி சிவந்தான் காப்பு
தற்பரற்றின் பொருள்காப்பு தாள்காப் பாமே. 1

6. திறந்ததொரு தமர்வாசல் குள்ளே நீயுஞ்
செலுத்தடா வாசிதனை ரவியில் மைந்தா
பறந்ததொரு வாசியது பதிவு மாகும்
பதிவான தீபவொளி கண்ணிற் காணுங்
கறந்ததொரு பால்போலே அமுர்த மூறுங்
கனிவான அமுர்தமதைத் தினமுங் கொள்ளு
சிறந்ததொரு பூரணத்தைத் தினமுங் கொண்டு
சிவமான மவுனமதில் சேர முத்தே. 120

7. பொதிகைக் கரசன் பொன்னடி போற்ற
மதிநிதியு முண்டாம் மானிலற்றி - லதிகமிகும்
மாதவங்க ளுண்டாம் மாத ருண்டாம்
போதமண முண்டாம் புகழ்ந்து.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. அப்பு நாயக்கர் குமாரன் வெங்கிடராயன் எழுதின கலைக்கியானம் சூற்றிரம் நூற்றியிருபதுங் கலைக்கியான சூற்றிரம் 1200 ஆக சூத்திரம் உட்பட .

IV. 1. R. 4881, D. 1875, D. 1876, R. 182 (a). 2. த.ச.ம.நூ. சுவடி எண்கள் 235 (e), 3676 ( ) 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. 'கருமானம்', 'கலைஞானம்', 'சகல கலைக் கியானம்' என்னும் பெயர்கள் இதுபோன்ற நூல்களுக்கு வழங்கப் பட்டிருத்தலைக் காண முடிகிறது. இச்சுவடிக்கட்டில் உள்ள நூலில் b. அகத்தியர் கலை ஞானம் ஆயிரத் திருநூறு மட்டும் உள்ளது.

## அகத்தியர் கலைஞானம் 120

I. 1. **95**. 2. அ. D. 1875. ஆ. T.D. 736. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சகல கலை ஞானபீடச் சுருக்கம் நூற்றிருபது. ஆ. Akattiyar cakala kalai ñāṉapīṭac curukkam 120. இ. தெட்சிணாமூர்த்தி அருளிச்செய்த சகல கருமான சாலத்திரட்டு ஆயிரத்திருனூறுக்குச் சூத்திரம் 120. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ.,சென்னை-5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 31.5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. ஓரளவு சிதைவு. 12. 61; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. இறுதி ஏட்டின் மறுபக்கம் எழுதப்பெறவில்லை. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 120 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞான மார்க்கங்கள், இரசவாதம் மற்றும் மருத்துவ முறைகளைக் கூறும் நூல். 2. ஞானம், இரசவாதம், மருத்துவம். 3. வரிசை எண் 93 போன்றது.

4. —.

5. ஆதிசத்தி சிவமான சோதி காப்பு
அண்டமெனும் பூரணத்தி னறிவின் காப்பு
சோதியெனும் வாலைமனோன் மணியின் காப்பு
சொல்லடங்கா விண்ணொளியின் சுடரே காப்பு
நீதியுள்ள சற்குருவின் பாதங் காப்பு
நீயென்றும் நானென்றும் நின்றோன் காப்பு
சாதியெனுஞ் சிவசத்தி சத்தி சிவமான
தற்பரத்தின் பொருள்காப்பு தாள்காப் பாமே. 1

6. திறந்ததொரு தமர்வாசற் குள்ளே நீயும்
செலுத்தடா வாசிதனை ரவியால் மைந்தா
பறந்ததொரு வாசியது பதிவு மாகும்
பதிவான தீபவொளி கண்ணிற் காணும்
கறந்ததொரு பால்போலே யமுத மூறும்
கனிவான வமுர்தமதைத் தினமுங் கொள்ளு
சிறந்ததொரு பூரணத்தைத் தினமுங் கொண்டு
சிவமான மவுனமதிற் சேர முற்றே. 120

7. கலைக்கியானம் ஆயிரத்திருனூறுக்குச் சுருக்கம் னூத்திருபது முற்றும். சிவமயம்-ஸ்ரீ ராமசெயம்.

8. மூலம் 9. பிழைகள் மலிந்த நடை. பேச்சு, வழக்குச் சொற்கள் உள்ளன. 10. நூல் முதலில் தட்சணாமூர்த்தி இயற்றியதென்று எழுதப்பட்டுள்ளதால் அகத்தியர்க்கு இப்பெயர் வழங்கியது போலும். 11. இல்லை.

IV. 1. R. 4881, R. 182 (a), D. 1876, R. 182 (a). 2. த.சு.ம. நூ. சுவடி எண்கள் 235(e), 367 (d) 3. இல்லை.

V. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இரண்டாவது பாடலால் நூற் தலைப்பு தெரிகிறது. அகத்தியருக்குத் தட்சணாமூர்த்தி என்ற பெயரும் வழக்கி லிருந்தது என்பதற்கு இதன் ஏட்டுத் தலைப்பான 'தெட்சணாமூர்த்தி அருளிச் செய்த சகல கருமான சாலத் திரட்டு 1200-க்குச் சூத்திரம் 120' என்பது ஆதாரமாகும்.

# அகத்தியர் கலைஞானம் 120

I. 1. **96**. 2. அ. D. 1876. ஆ. T.D. 737. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சகலகலை ஞான பீடச் சுருக்கம் நூற்றிருபது. ஆ. Akattiyar cakala kalai ñāṇa pīṭac curukkam 120. இ. அகத்தீஷ்ர் சுவாமி அருளிய அகத்தியர் சூத்திரம் நூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 17. 5. 29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. ஓரளவு சிதைவு. 12. 34; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. குறை. 17. 94 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம், ஞானம், மருத்துவம் மற்றும் இரசவாதம் தொடர்பான செய்திகளக் கூறும் நூல். 2. மருத்துவம், ஞானம், இரசவாதம், மருத்துவம். 3. வரிசை எண் 93 போன்றது.

4. —.

5. ஆதிசத்தி சிவமான சோதி காப்பு
அண்டமெனும் பூரணத்தி னருளே காப்பு
சோதியெனும் வாலைமனோன் மணியின் காப்பு
சொல்லடங்கா விண்ணொளியின் சுடரே காப்பு
நீதியுள்ள சற்குருவின் பாதங் காப்பு
நீயென்றும் நானென்றும் நின்றோன் காப்பு
நீதியுள்ள சிவசத்தி சிவந்தான் காப்பு
நீராஞ்சனத்தின் பொருள்காப்பு நீகாப் பாமே. 1

6. தானான கற்பமது கொள்ளும் போது
தக்கபுளி எண்ணையொடு கடுகு மாகா
வானான காயமுடன் உள்ளி யாகால்
. . . . முடனே வெந்தய மொன்று மாகா
தேனான கற்பமது கொள்ளும் போது
திண்மையுள்ள பதார்த்தமெல்லாஞ் சேரத் தள்ளிக்
கோனருளால்(க்) கொள்ளுவகை யறிந்து கொண்டால்
குருவான சதாசிவத்தைத் தெரிசிப் பாயே. 94

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. பிழைகள் மலிந்ததுள்ளன. 10. அகத்தியர் பேரிலமைந்த 1200 பாடல்கள் கொண்ட சகல கலைஞானம் என்ற நூல் பத்துப்பாட்டுக் கொருபாட்டு வீதத்தில் சுருக்கப் பட்டு 120 பாடல்களாக அமைந்துள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 938(c), R. 4881, R. 182 (a), D. 1875. 2. த.ச.ம.நூ. சுவடி எண்கள் 235(e), 367 (d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இத்துடன் உள்ள பிற நூல்கள் 1: சட்டை முனி நிகண்டு. 2. மச்ச முனி நிகண்டு. 3 அகத்தியர் ஜால நிகண்டு என்பன. இந்நூலில் பத்தியங்கள் மேற்கொள்வது பற்றியும் கூறப்பட்டுள்ளது.

## அகத்தியர் கலைஞானம் 1200

I. 1. **97**. 2. அ. R. 257. ஆ. T.R. 241. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞான சூத்திரம் 1200. ஆ. Akattiyar kalaiñāṉa cūttiram 1200. இ. அகத்தியர் கருமானம் ஆயிரத்திருநூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மைசூர் MR. RY. K. அரங்கசாமி அய்யங்காரிடமிருந்து கி.பி.1915-16ம் ஆண்டில் பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1915-16.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 167. 5. 29 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. ஓரளவு நன்று. 12. 334; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 11-13 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞான மார்க்கங்கள் மற்றும் இரசவாதம், மருத்துவ முறைகள் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம், இரசவாதம், மருத்துவம். 3. இந்நூல் சித்தர்களின் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம்

என்பவற்றைக் கூறுவதுடன் சாலம், இரசவாதம் பற்றிய செய்திகளையும், பல மருந்துகள் தயாரிக்கும் முறைகளையும் கூறுகிறது. மருந்துகளில் சுண்ண வகைகள், மெழுகு வகைகள், தைல வகைகள், கற்பம் மற்றும் பற்ப வகைகள், மை, வழலை, சவுக்கார வகைகள் போன்றன செய் முறைகளும், அவை தீர்க்கும் நோய்களும் குறிப்பிடப் படுகின்றன. மேலும் முப்புவின் கரு, கேசரி, இரவி, மதி துருசுச் சுன்னம், அண்டமெழுகு, கேசரியின் மூலம், வழலை பற்பம், நாத விந்து, மெழுகு, கெந்தித்தயிலம், அண்டவித்து விபரம், இரசமணி, வசியம், திலதம், அஞ்சனம், மறைப்பு, சூடன்வைப்பு, பூர மெழுகு, வெள்ளி முறை, திலதமை, சன்னிக்கு ஆக்கிரணம், விபூதி, கருவழலை, நாகரச மெழுகு, நாதவிந்து மகிமை, கற்பத்துக்குப் பத்தியம், நவக்கிரகம், அனுக்கிரகம், சவுக்காரம், மூன்று மூலிகை, கற்பம், வாதம், வைத்தியம் ஆகிய முறைகள் சொல்லப்பட்டுள்ளன. மேலும் சித்து ஆவதற்குரிய மார்க்கம், இரசவாதம், வைத்தியம், ஜாலம், அஷ்டகர்மம் முதலியனவும், அவை செய்தற்கான மருந்துகள் மெழுகு வகைகள், தைலங்கள் முதலிய பல செய்திகளும் உள்ளன.

4. ஓம் கும்ப முனியே நமகः.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போற்றி
சோதியெனுங் கமலமல ரமுர்த முண்டு
சுந்தரம்போல் வாதத்தி லெச்சங் காப்பு
நீதிபெற வயித்தியத்தி லிரண்டு லெட்சம்
நிலைத்ததொரு சூத்திரத்திற் கோடா கோடி
வாதியெனப் பேர்படைத்த பெரியோர்க் கெல்லா
மகிழ்ந்துமொரு கருக்குருவாய் வசனித் தேனே. 1

6. அறிவாக மனதடங்கி மவுன மாக
அப்பனே நூலெடுத்துப் பாரு பாரு
குறியான குருபதத்தில் குணமாய் நில்லு
குணமில்லார் தங்களிடங் கூறவேண்டாம்
பறியான தங்கமடா பிரும்ம மாச்சு
பாலகனே தங்கமென்றால் பூரணமே தங்கம்
நெறியான பூரணத்தைத் தினமும் நோக்கி
நேரான பராபரத்தில் சார்வாய் முத்தே. 1200

7. —.

8.மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. ற்ற என்பது த்த - ஆக வந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள பல கலைஞான நூல்களில் வாதம், வைத்தியம், ஞானம் என்பனவே வந்துள்ளன. 11. இல்லை.

IV. 1. R. 263, R. 182(b), R. 277, R. 4768, R. 6157, D. 1873, D. 1874. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 61, 62, 412(c), 448, 750, 772, 811, 1002. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் அமுத கலைஞானம் 1200,' தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. அகத்தியர் கலைஞானம் 1200 என்ற நூலினைச் சண்முக முதலியார் என்பவர் சென்னை விவேக விளக்க அச்சுகூடத்தில் 1884ல் பதிப்பித்துள்ளார். வாதத்தில் இலட்சம் பாடல்கள், மருத்துவத்தில் இரண்டு இலட்சம் பாடல்கள், சூத்திரமாக இலட்சத்திற்கு அதிகமான பாடல்கள் உள்ளன என்பது தெரிகின்றது.

## அகத்தியர் கலைஞானம் 1200

I. 1. **98**. 2. அ. R. 263. ஆ. T.R. 247. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞான சூத்திரம் 1200. ஆ. Akattiyar kalaiñāṇa cūttiran 1200. இ. அகஷ்த்தியர் கலைஞான சூஷ்த்திரம் ஆயிரத்திருநூறு. 4. —. 5. —. 6. வரதப்ப நாயக்கர். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மைசூர் MR. RY. K. அரங்கசாமி அய்யங்காரிடமிருந்து கி.பி.1915-16ம் ஆண்டில் பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1915-16.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 243. 5. 32 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 486; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டது. 13. பக்கத்திற்கு 8-10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம், ஞானம் மற்றும் இரசவாதம், மருந்து முறைகள் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம், இரசவாதம் மற்றும் மருத்துவம். 3. வரிசை எண் 97 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போற்றி
சோதியெனும் கமலமல ரமுர்த முண்டு
சுந்தரம் போல் வாதத்தி லட்சங் காப்பு
நீதிபெற வயித்தியத்தி லிரண்டு லட்சம்
நிலைத்ததொரு சூத்திரத்திற் கோடா கோடி
வாதியென பேர்படைத்த பெரியோர்க் கெல்லா
மகிழ்ந்துமொரு கருக்குருவாய் வசனித் தேனே. 1

6. அறிவாக மனதடங்கி மவுன மாக
அப்பனே நூலெடுத்துப் பாரு பாரு
குறியான குருபதத்தில் குணமாய் நில்லு
குணமில்லா தங்களிடம் கூற வேண்டாம்
பறியான தங்கமடா பிரம்ம மாச்சு
பாலகனே தங்கமென்றால் பூரணமே தங்கம்
நெறியான பூரணத்தைத் தினமும் நோக்கி
நேரான பராபரத்திற் சார்வாய் முத்தே. 1200

7. குரு கடாட்சம் உண்டாகவும்.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடபேதங்கள் நிறைந்துள்ளன. ற்ற என்பது த்தவாக எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. இந்நூலிற்குச் சகலகலைக்கியானம் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. 11. விஷ ஆவணி மாதம் 31 ஆம் தேதி குருவாரம் கிருஷ்ண பஷ்சம் திதிகை கூடின சுப தினத்தில் ராயவேலூரிலிருக்கும் துபாசி ஆவல் வரதப்ப னாயக்கர் எழுதிய அகத்தீசுவரர் சுவாமியார் அருளிச் செய்த சகலகலைக்கியானம் 1200ம் எழுதி நிறைந்தது முற்றும்.

IV. 1. R. 257, R. 182(b), R. 277, R. 4768, R. 6157, D.1873, D. 1874. 2. சி.ம.மை.நி.ஆ.நி. எண்கள் 61, 62, 148, 412(c), 750(b), 772, 811, 1002. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன், (பதி.), 'அகஸ்தியர் அமுத கலைஞானம் 1200,' தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இந்நூலில் 94 வது முதல் 97 வது வரையிலுள்ள மூன்று ஏடுகள் இரண்டு முறை எழுதப் பெற்றிருக்கின்றன.

## அகத்தியர் கலைஞானம் 1200

I. 1. **99**. 2. அ. R. 182 (b). ஆ. T.R. 166. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞான சூத்திரம் 1200. ஆ. Akattiyar kalaiñāna cūttiram 1200. இ. அகஷ்த்தியர் கலைஞான சூஷ்த்திரம் ஆயிரத்திருநூறு. 4. —. 5. —. 6. அப்பு நாயக்கர் குமாரன் வெங்கிடராயன் 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 110. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. ஓரம் சிதைந்துள்ளது. 12. 220; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞான மார்க்கங்கள், இரசவாத முறைகள் மற்றும் நோய்களைக் குணமாக்கும் முறையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 97 போன்றது.

4. அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை. அகத்திய நாயனார் அருளிச்செய்த கலைக்கியான சூத்திரம் 1200.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போத்தி
சோதியெனும் கமலமல ரமுர்த முண்டு
சுந்தரம்போல் வாதத்தி லட்சங் காப்பு
நீதிபெற வயித்தியத்தி லிரண்டு லெட்சம்
நிலைத்ததொரு சூத்திரத்திற் கோடா கோடி
வாதியெனப் பேர்படைத்த பெரியோர்க் கெல்லா
மகிழ்ந்துமொரு கருக்குருவாய் வசனித் தேனே. 1

6. அறிவாக மனதடங்கி மவுன மாக
அப்பனே நூலெடுத்துப் பாரு பாரு
குறியான குருபதத்தில் குணமாய் நில்லு
குணமில்லார் தங்களிடங் கூற வேண்டாம்
பறியான தங்கமடா பிரும மாச்சு
பாலகனே தங்கமென்றால் பூரணமே தங்கம்
நெறியான பூரணத்தைத் தினமும் நோக்கி
நேரான பராபரத்திற் சார்வாய் முத்தே. 1200

7. —.

8. மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்கள் வந்துள்ளன. ர-ற, ள-ழ வேறுபாடு இல்லாது கையாளப்பட்டுள்ளது; போற்றி என்பது போத்தி என்றும் முற்றே என்பது முத்தே என்றும் வருவது காண்க. பாட பேதங்கள் காணப்படுகின்றன. பாடல்கள் அந்தாதி அமைப்புடையன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. அகத்திய மாமுனி சுவாமிகளருளிச் செய்த கலைக்கியான சூத்திரம் யெழுதி நிறைந்தது. தேவிசகாயம் நன்றாகவும் ...தற்கு அப்பு னாயக்கர் குமாரன் வெங்கிடராயன் கை யெழுதினது.

IV. 1. R. 257, R. 263, R. 277, R. 4768, R. 6157, D. 1873, D. 1874 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன், (பதி.), 'அகஸ்தியர் அமுத கலைஞானம் 1200,' தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இந்நூலின் இடைப்பகுதியில் பல ஏடுகள் சிதில மாயிருக்கின்றன. நூல் முற்றும் உள்ளது. இந்நூலில் இரசவாதத்திற்கான கருக்குருக்கள் விளக்கமாகக் கூறப் பெற்றுள்ளன.

## அகத்தியர் கலைஞானம் 1200

I. 1. **100**. 2. அ. R. 277. ஆ. T.R. 261. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞான சூத்திரம் 1200. ஆ. Akattiyar kalaiñāna cūttiram 1200. இ. அகஷ்த்தியர் கலைஞான சூஷ்த்திரம் ஆயிரத்திருநூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. செங்கல்பட்டு மாவட்டம்

வில்லியம்பாக்கம் MR. MY. T. சீனிவாச வரதாச்சாரி யாரிடமிருந்து —. கி.பி. 1915 - 16-ம் ஆண்டு வாங்கப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி. 1915 - 16.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 229. 5. 36 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 458; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞானம் மற்றும் இரசவாத, மருந்து முறைகளைக் கூறும் நூல். 2. ஞானம், இரசவாதம், மருத்துவம். 3. வரிசை எண் 97 போன்றது.

4. —.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போத்தி
சோதியெனும் கமலமல ரமுர்த்த முண்டு
சுந்தரம்போல் வாதத்தி லட்சங் காப்பு
நீதிபெற வயித்தியத்தி லிரண்டு லெட்சம்
நிலைத்ததொரு சூத்திரத்திற் கோடா கோடி
வாதியெனப் பேர்படைத்த பெரியோர்க் கெல்லா
மகிழ்ந்துமொரு கருக்குருவாய் வசனித் தேனே. 1

6. அறிவாக மனதடங்கி மவுன மாக
அப்பனே நூலெடுத்துப் பாரு பாரு
குறியான குருபதத்தில் குணமாய் நில்லு
குணமில்லார் தங்களிடங் கூற வேண்டாம்
பறியான தங்கமடா பிரம மாச்சு
பாலகனே தங்கமென்றால் பூரணமே தங்கம்
நெறியான பூரணத்தைத் தினமும் நோக்கி
நேரான பராபரத்திற் சார்வாய் முத்தே. 1200

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாட பேதங்கள் காணப்படுகின்றன. 10. இந்நூல் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இந்நூலின் மற்றொரு பிரதி தட்சணாமூர்த்தி பெயராலும் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 257, R. 263, 182 (b), R. 4768, R. 6157, D. 1873, D. 1874. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் அமுத கலைஞானம் 1200,' தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் அமைந்த சில நூல்களில் சகல கலைத்தியானம் 1200 என்பதற்குப் பதிலாகச் சகலகருமானம் 1200 என வருவது காண்க.

## அகத்தியர் கலைஞானம் 1200

I. 1. **101**. 2. அ. R. 4768, ஆ. T.R. 2104, இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞான சூத்திரம் 1200. ஆ. Akattiyar kalaiñāna cūttiṟm 1200. இ. அகஷ்த்தியர் சகல கலைக்கியானம் 1200. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. எல். பரமசிவம் பிள்ளை, காவரைப்பட்டி. 10. 1953-54.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 349. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 798; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1199 பாடல்கள் .

ஆ. —.

III. 1. யோகம், ஞானம், இரசவாதம், மருந்து முறைகளைக் கூறும் நூல். 2. ஞானம், இரசவாதம் மற்றும் மருத்துவம். 3. வரிசை எண் 97 போன்றது.

4. —.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போற்றி
சோதியெனுங் கமலமலர் அமுர்தங் கொண்டு
சுந்தரம்போல் வாதத்தில் லட்சங் காப்பு

நீதிபெற வயித்தியத்தில் ரெண்டு லக்ஷ்சம்
நிலைத்ததொரு சூஷ்த்திரத்தில் கோடா கோடி
வாதியெனப் பேர்படைத்த பெரியோர்க் கெல்லாம்
மனமகிழ்ந்து கருக்குருவாய் வசனித் தேனே. 1

6. அறிவாக மனதடங்கி மவுன மாக
அப்பனே நூலெடுத்துப் பாரு பாரு
குறியான குருபதத்தின் குணமாய் நில்லு
குணமில்லா தவர்களிடம் கூற வேண்டாம்
பறியான தங்கமடா பரப்பிரம்ம மாச்சு
பாலகனே தங்கமென்றால் பூரணமே தங்கம்
நெறியான பூரணத்தைத் தினமும் நோக்கு
நேரான பராபரத்தின் சார்வாய் முற்றே. 1199

7. தெட்சணாமூர்த்தி துணை, வாலையானந்தி துணை.

8. மூலம். 9. அந்தாதி யில் பாடல்கள் அமைந்துள்ளன. வடமொழி எழுத்துகள் பயின்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 257, R. 263, R. 277, R. 182(b), R. 6157, D. 1873, D. 1874. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் அமுத கலைஞானம் 1200,' தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. அகத்தியர் கலைஞானம் 1200 என்ற இந்நூல் ஆ.கீ.சு. நூலக மூவருடச் சுவடி விளக்க அட்டவணை R.182ஆம் எண்ணின் பிரதியைப் போன்றதாகும்.

## அகத்தியர் கலைஞானம் 1200

I. 1. **102**. 2. அ. R. 6157. ஆ. T.R. 2600. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞான சூத்திரம் 1200. ஆ. Akattiyar kalaiñāṉac cūttiram 1200. இ. அகஷ்த்தியர் சகல கலைக்கியானம் 1200. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 60. 5. 31 x 3

செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 120; இரு பக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 367 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம், ஞானம், இரசவாதம் மருந்து முறைகளைக் கூறும் நூல். 2. ஞானம், இரசவாதம் மற்றும் மருத்துவம். 3. வரிசை எண் 97 போன்றது.

4. —.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போத்தி
சோதியெனுங் கமலமல ரமுர்த முண்டு
சுந்தரம்போல் வாதத்தில் லட்சங் காப்பு
நீதிபெற வயித்தியத்தில் ரெண்டு லெட்சம்
நினைத்ததொரு சூத்திரத்தில் கோடா கோடி
வாதியெனும் பேர்படைத்த பெரியோர்க் கெல்லாம்
மனமகிழ்ந்து கருக்குருவாய் வசனித் தேனே. 1

6. உறுதியுள்ள நாகமதின் கட்டுச் சொல்வேன்
ஓகோகோ வெடியுப்புங் காரஞ் சேர்த்து
பருதிமதி தன்னாலே வங்கம் நீத்திப்
பக்குவமாய் மூன்றுமொன்றாய்க் கல்வத் தாட்டி
திருமதியின் நீராலே ஆட்டி மைந்தா
சிக்கினவே நாதமதுக் கங்கிப் பூட்டிக்
குருநிதியைத் தியானித்துப் புடத்தைப் போடு
குருவான நாகமது குருவு மாமே. 367

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடபேதங்கள் மிகுதி. பேச்சுவழக்குச் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியர் தன் மைந்தனை விளித்துப் பாடுவது போல் அமைந்துள்ளது. புலத்தியரையே இவ்வாறு விளித்துக் கூறுவது வேறு பல நூல்களிலுள்ள அமைப்பு ஆகும். 11. இல்லை.

IV. 1. R. 182(b), R. 257, R. 263, R. 277, R. 4768, D. 1873, D. 1874. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் அமுத கலைஞானம் 1200,' தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இந்நூல் சித்தர்களின் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றையும் பல மருந்துகள் தயாரிக்கும் முறைகளையும் கூறுகிறது. மருந்துகளில் சுண்ண வகைகள், மெழுகு வகைகள். தைலவகைகள், கற்பவகைகள், பற்ப வகைகள், வழலை வகைகள், சவுக்கார வகைகள், மை வகைகள் போன்றன செய்முறைகளும் அவை தீர்க்கும் நோய்களும் குறிப்பிடப்படுகின்றன.

## அகத்தியர் கலைஞானம் 1200

I. 1. **103**. 2. அ. D. 1873. ஆ. T.D. 734. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சகல கலைஞானபீடம் ஆயிரத்திருநூறு. ஆ. Akattiyar cakala kalai ñāṉapiṭam 1200. இ. தெட்சிணாமூர்த்தி யருளிச் செய்த சகல கலைக்கியானம் ஆயிரத்திருநூறு. 4. —. 5. —. 6. வெள்ளவேடு வைத்தியர் - முதலியார் பவ ஆண்டு மார்கழி 12 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 316. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிதைவு. 12. 631; இறுதி ஓலையில் ஒருபக்கமே எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6/7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம், ஞானம், இரசவாதம், மருத்துவம், ஜாலம் போன்ற செய்திகளை இந்நூல் கூறுகிறது. 2. மருத்துவம். 3. வரிசை எண் 97 போன்றது.

4. —.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோன்மணியைத் தொழுது போற்றிச்
சோதியெனுங் கமலமல ரமுர்த முண்டு
சுந்தரம்போல் வாதத்தி லெட்சங் காப்பு
நீதிபெற வைத்தியத்தில் ரெண்டு லட்சம்
நிலைத்ததொரு சூஷ்த்திரத்தில் கோடா கோடி
வாதியெனப் பேர்படைத்த பெரியோர்க் கெல்லாம்
மகிழ்ந்துமே கருக்குருவை வசனித் தேனே. 1

6. அறிவான மனதடங்கி மவுன மாக
வப்பனே நூலெடுத்துப் பாரு பாரு
குறியான குருபதத்தில் குணமாய் நில்லு
குணமில்லார் தங்களிடங் கூற வேண்டாம்
பரியான தங்கமடா பரப்பிரம்ம மாச்சு
பாலகனே தங்கமென்றால் பூரணமே தங்கம்
நெறியான பூரணத்தைத் தினமும் நோக்கி
நேரான பாதத்திற் சாத்துவாய் முற்றே. 1200

7. அகத்தீஸ்பர சுவாமியாரருளிச் செய்த சகல கலைக் கியான பீடம் யெழுதி நிறைந்தது முற்றும். ஆதிமூல சகாயம். குருவே துணை தேவி சகாயம்.

8. மூலம். 9. பிழைகள் மலிந்துள்ளன; அந்தாதி அமைப்பு. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. அகத்தியருக்குத் தட்சிணாமூர்த்தி என்ற பெயரில் இந்நூல் பாடப்பெற்றுள்ளதாக இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 11. பவ வருசம் மார்கழி மாதம் 12 ஆம் தேதி ஞாயத்துக் கிழமை ரெண்டு மணிக்கு வெள்ளவேடு வயித்தியர் முதலியார் சகல கலைக்கியான பீடம் எழுதி முடிந்தது. அகத்தீஸ்பர சுவாமியாரருளிச் செய்த சகல கலைக்கியான பீடம் யெழுதி முடிந்தது முற்றும். ஆதிமூலசகாயம். குருவே துணை தேவி சகாயம்.

IV. 1. R. 182 (b), R. 257, R. 263, R. 277, R. 4768, R. 6157. D. 1874. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் அமுத கலைஞானம் 1200,' தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. ''சகல கலைக்கியானம்'' என்றும் ''சகல கலைக்கியான பீடம்'' என்றும் ஏடுகளில் வருவதைச் ''சகலகலை ஞானம்'' எனக் கொள்ளுவது மரபுபோலும். 'கலைக் கியானம் 'எனில் அறுபத்து நான்கு கலைகள் என வைத்திய மூலிகை அகராதி குறிக்கிறது. இங்குப் பேசப்படும் இம் மருத்துவ நூலில் அறுபத்து நான்குவகைச் செய்திகள் பேசப்படுவனவாகக் கொள்ளலாம். சில ஏடுகளில் 'சகல கருமானம்' என்ற பெயரும் இடம்பெறுகிறது.

## அகத்தியர் கலைஞானம் 1200

I. 1. **104.** 2. அ. D. 1874. ஆ. T.D. 735. இ. — ஈ. — 3. அகத்தியர் சகல கலை ஞானபீடம் ஆயிரத்திருநூறு. ஆ. Akattiyar cakala kalai ñāṉapīṭam 1200. இ. அகத்தியர் சகல கலைக்கியானம் 1200; அகத்தீசுவரர் சுவாமிகள் அருளிச் செய்த சகலகருமானம் ஆயிரத்தியிருனூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை - 5. 9. கோவிந்தன். 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 212 + 1. 5. 39 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. முன்னும் பின்னும் இரு நரம்பு வெற்றோலைகள்; எஞ்சியன நரம்பு இல்லாதவை. 11. ஓரளவு சிதைவு. 12. 424; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம், ஞானம், இரசவாதம், மருத்துவம், ஜாலம், போன்ற செய்திகள் கூறும் நூல். 2. ஞானம், இரசவாதம், மருத்துவம் 3. வரிசை எண் 97 போன்றது.

4. —.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அன்பான மனோமணியைத் தொழுதுபோற்றிச்
சோதியெனுங் கமலமல ரமுதகுடம்(ங்) கெண்டு
சுந்தரம்போல் வாதத்தி லெட்ஷங் காப்பு

நீதிபெற வயித்தியத்தில் ரெண்டு லெக்ஷசம்
நிலைத்தவொரு சூஷ்த்திரத்தில் கோடா கோடி
வாதியென்ற பேர்படைத்த பெரியோர்க் கெல்லாம்
மனமகிழ்ந்து கருக்குருவாய் வசனித் தேனே. 1

6. அறிவாக மனதடங்கி மவுன மாக
அப்பனே நூலெடுத்துப் பாரு பாரு
குறியான குருபதத்தில் குணமாய் நின்று
குணமில்லார் தங்களிடம் கூற வேண்டாம்
பறியான தங்கமடா பரப்பிரம்ம மாச்சு
பாலகனே தங்கமென்றால் பூரணமே தங்கம்
நெறியான பூரணத்தைத் தினமு னோக்கு
நேரான பராபரத்தில் சார்வாய் முத்தே. 1200

7. —.

8. மூலம். 9. சொற்பிழை, எழுத்துப் பிழை மலிந்த பாடல்கள். வடமொழி எழுத்துகள் பயின்றுள்ளன. முற்றே என்பது முத்தே என வருதல் காண்க. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். பல உட்தலைப்புகளில் எழுதப் பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 182(b), R. 257, R. 263, R. 277, R. 4768, R. 6157, D. 1873. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் அமுத கலைஞானம் 1200,' தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இறுதி ஓலையில் சில உப்புகளின் பெயர்கள் உள்ளன. அவை அமரியுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, கரியுப்பு என்பன.

## அகத்தியர் கழங்கு 60

I. **1.105.** 2. அ. R. 145 (f). ஆ. T.R 129. இ.—. ஈ. —. 3. அ. அகத்தியர் கழங்கு 60. ஆ. Akattiyar kalaṅku 60. இ. அகஸ்தியர் கழங்கு அறுபது. 4. —. 5. —. 6. காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 14. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 28; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை 16. முழுமை 17. 60 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பில் ஏற்படும் எல்லாவிதமான நோய்களையும் அவற்றைத் தணிக்கும் மருந்துகளையும் இந்நூல் கூறுகிறது. 2. மருத்துவம். 3. செயநீர், உப்புக்கட்டு, உப்புச் செந்தூரம், கெந்தகக் கழங்கு, செம்பு சுத்தி, இலிங்கக்கட்டு, நாகக்கட்டு, காரீயக்கட்டு, துருசிச் செந்தூரம், துருசிச் சுன்னம், வெண்கண்டரி, அரிதாரச் செந்தூரம், துருசுச் செந்தூரம், வெடிப்புப்புச் சுண்ணம், பாஷாணக் கட்டு, அயச்செம்பு, துருசிக் குரு, காரீயச் செந்தூரம், இரச மெழுகு, தாம்பிரபற்பம், வசியம் முதலிய செய்திகளை இந்நூல் கூறுகின்றது.

4. —.

5. ஆதியென்ற பூரணமாம் கண்டத் துள்ளே
ஆத்தாளே தொழுதுநின்ற ஐங்கரனைப் போற்றி
சோதியென்ற அறுனூறும் பெருநூல் தன்னில்
சூஸ்திரந்தான் அறுபதுக்குள் சுருக்கி வைத்தேன்
சோதியென்ற கருக்குருவும் வெளிய தாக்கி
திறந்திட்டேன் கைபாகம் மருந்தின் பாகம்
வீதியென்ற கெவுனத்தின் ஓட்டம் போலே
விளைந்தமணி யின்னூல்தான் சொல்லக் கேளே. 1

6. வழியான சுடர்கோடி காந்தி மீறும்
மதியிரவி ஒன்றான மார்க்கந் தோணும்
சுழியான முனைவடக்க கமல மாது
துரியமென்ற சக்கரந்தான் சுற்றி ஏறி
சுழியான மனமுமொன்றாய்ப் பத்தி பற்றி
கூர்மதரம் மெஞ்ஞான அதீத முத்து
வழியான கண்டமென்ற சோதி யெல்லா
வெளியான சூஸ்திரத்தின் விபர முற்றே. 60

7. குருபாதம் துணை.

8. மூலம். 9. பாடல்களில் வடமொழி எழுத்துகள் வந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நூல் 'அகத்தியர் குருசெயநீர் 60' என்றும் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. 11. சர்வசித்து வருஷம் வையாசி மாதம் 2ம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதியது.

IV. 1. இல்லை. 2. சி. ம. மை. ஆ. நி. எண் 453-d. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. அ. தி. கந்தசாமி பிள்ளை (பதி.) ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம், சென்னை, 1881; எஸ். பி. ராமச்சந்திரன், பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய சில்லறைக் கோவை (முதல்பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் குரு செயநீர் செங்கை 60 எனும் பெயரிலும் வழங்கப்படுகிறது. இச் செயநீரால் காரம், சாரம் முதற்கொண்டு 64 சரக்கும் முடிந்து போகும் என்று அறியப்படுகிறது.

## அகத்தியர் கற்பம் 10

I. 1. **106.** 2. அ. R. 280(m). ஆ. T.R. 263. 3. அகத்தியர் கற்பமுறை சூத்திரம் 10. ஆ. Akattiyar karpamurai cūttiram 10. இ. அகஸ்தியர் கற்பமுறை சூத்திரம் பத்து. 4. —. 5. —. 6.—. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை–5. 9. காதிர் பைக் சாகிப் திருவல்லிக்கேணி, சென்னை. 10. 1915–16.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 24 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 7; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7-9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 9 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் சில நோய்களைப் பலவித கற்பங்கள் மூலம் போக்கும் வழிமுறைகளைக் கூறும் நூல்.

2. மருத்துவம். 3. அகத்தியர் கற்பம் என்ற இந்நூலில் முதற் பாடலில் கருநெல்லிப் பற்பம், வெண்சாரைக் கற்பம் செய்வதற்கான முறைகளையும், முதற் கடவுளான பராபரனை வணங்கிக் கற்ப வகைகளையும் இந்நூல் கூறுகின்றது. அமுக்குராக் கற்பம், ஆதண்டைக் கற்பம், ஆதளைக் கற்பம், ஆலம்பலக் கற்பம், சிவப்புக் கற்றாழைக் கற்பம், குமரிக் கற்பம், கொன்றைக் கற்பம், சித்திரமூலக் கற்பம், சீந்திக் கற்பம், தூதுவளைக் கற்பம் போன்ற பலவிதக் கற்ப வகைகள் செய்யும் முறையும் பயனும் இந்நூல் கூறுகின்றது. தூதுவளை இலையோடு தக்கோலம், ஜாதிக்காய், வாலுளுவை ஆகியவற்றின் விதைகளைச் சேகரித்து மேலும் கொடிவேலி யின் வேர், நிலப்பனையின் கிழங்கு, பொன்கொன்றைப் பூ, ஐங்கோல விதை இவற்றையும் சமபாகம் சேர்த்துக் கொண்டு நன்றாக இடித்துப் பொடியாக்கி ஒரு மண்டலம் காசிடை உண்ண வேண்டும். இதற்கு அனுபானம்: முள்பன்றி நெய். இதற்குப் பயன்: சிவனுடைய உடலைப் போன்று நிலைத்து நிற்கும் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்தியர் கற்பமுறை சூஸ்திரம் பத்து.

5. கற்பமென்ன வெகுதூரம் போக வேண்டாம்
கல்மலைகள் குவடுகளி லலைய வேண்டாம்
சர்ப்பமென்ற னாகத்தொடு தலையி னின்று
சாகாத கால்கண்டு மலையி லேறி
நிற்பயென்று மனமுறுத்து மனதி னின்றால்
நிசமான கருனெல்லி வெண்சாரைக் காணுஞ்
சொற்பமென்று விட்டுவிட்டா லலைந்து போவாய்த்
துரியமென்ற பராபரத்திற் சென்று கூடே. 1

6. உணர்வென்ன சந்திரனி லேறிப் பாரு
ஓடியங்கே தலையென்ற வெழுத்தி னில்லு
அணுவென்ன மலையாகுஞ் சிவமே யுச்சி
அகாரமென்ன பதியுமென்ன சூக்ஷ்ம மாகும்
கணுவென்ன விற்புருவங் கண்ட வீதி
கைலாய மென்றதென்ன பரத்தின் வீடு
துணுவென்ன சூரியன்றன் னெருப்பைக் கண்டு
தூனென்ற பிடரியிலே தூங்கு தூங்கே. 9

7. —.

8.மூலம். 9. ர, ற வேறுபாடில்லாதும், பேச்சு வழக்குச்சொற்கள் கலந்தும் பாடல்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்த இந்நூல் இரசவாதத்தில் ஒரு வகையைச் சார்ந்தது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. கற்ப வகையில் காயகற்பமும் ஒன்று. இதை யோகம் செய்வோர் உண்டு பல்லாண்டு காலம் உயிர் வாழ்ந்து ஞானசித்தியை எய்துவர் என நூல்கள் கூறுகின்றன.

## அகத்தியர் காயசித்தி 40

I. 1. **107.** 2. அ. R. 197(f). ஆ. T.R. 181. 3. அ. அகத்தியர் காயசித்தி வழலைச் சூத்திரம் 40. ஆ. Akattiyar kāyacitti vaḻalaic cūttiram 40. இ. அகஸ்த்திய சுவாமியார் காயசித்தி வழலைச் சூஸ்திரம் நாற்பது. 4.—. 5. —. 6. சுப்பி செட்டியார். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 10. 5. 24 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 20; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 40 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சித்தியடைவதற்குரிய வழலை மார்க்கங்களைக் கூறுவது. 2. மருத்துவம். 3. சவுக்காரம் செய்முறை, சவுக்காரத் தீ எரிப்புப்பாகம், வெடியுப்பு, செயநீர், சத்தியின் பரிபாஷை பெயர் போன்றவை முதலில் கூறப்படுகின்றன. மதியுப்பு, இரவியுப்பு, வாதம் சித்தியாக, பூசைசெய்யும் தேவதைகள், தேசி நீரைவிட்டால் சரக்குகள் கட்டாது கருங்காரமும் நீராகாது என்றும் சரக்குகள் கட்டிமெழுகாகும் என்றும் கூறப்படுகிறது. தாம்பிரம் சுத்தி முதலானவைகட்கு குழித்தயிலம் ஸ்ரீவசியத்தில்

இம்முறைதான் உறுதியானது என்று வலியுறுத்தப்படுகிறது. வையித்தியம் 11 வைத்தியம் 5, வையித்தியம் 100 ல் கருவெல்லாம் வெளியாகும் என்று இந்நூல் கூறுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக.

5. பூரணமாய் நின்றதோ மனத்தின் வீதி
புகழான வாதத்தின் வழலைப் போக்கும்
வாரணமாய்த் தத்துவம்தான் தொண்ணூற் றாறும்
வழங்குமாம் பொன்மூலம் மைந்தா பார்க்கும்
ஆரணமாய் அரன்எனக்கு உபதே சித்தார்
அறைகிறேன் பெரியோர்கள் பாதம் போற்றி
காரணமாய் இந்நூல்நாற் பதுவும் சொல்ல
கந்தனொடு கணபதியும் காப்புத் தானே. 1

6. காணலாம் சிதம்பரத்தின் நடனம் அப்பா
கண்டதனால் முத்தியது சித்தி யாகும்
பூணலாம் பொன்னோடு வெள்ளி செம்பொன்
புகழாகச் சொல்லுவாள் பூரணத் தாலே
ஊணலாம் கருக்குருவும் காணும் அப்போ
உத்தமனே சிவன்சொல்வார் நந்தி சொல்வார்
வீணலா இந்நூல்வெ ளியாய்ச் சொன்னேன்
வேதைகரு யிந்நூல்நாற் பதுவும் முற்றே. 40

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்புப் பெற்றுள்ளன. பேச்சுமொழிச் சொற்கள் வந்துள்ளன; பிழைகள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். அரன் நந்திக்குக்கூற, நந்தி அகத்தியர்க்குக் கூறியதாக இந்நூல் அமைந்துள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அணிமா, மகிமா முதலிய சித்திகள் மூலம் உடம்பை நெடுநாள் இருக்கச் செய்யலாம் என்று சித்தர்கள் நம்பினர்.

# அகத்தியர் காவியம் 1200

I. 1. **108.** 2. அ. R. 5849. ஆ. T.R. 2504. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் காவியம். ஆ. Akattiyar kāviyam. இ. —. ஈ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. P. தாமோதரன், ஓடையக்குளம் அஞ்சல், பொள்ளாச்சி. 10. 1955-56.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 179. 5. 33 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 358; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவச் செய்திகளும் இரசவாதச் செய்திகளும், யோக, ஞான மார்க்கங்களும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் காவியம் என்னும் இந்நூல் 1200 பாடல்கள் கொண்டுள்ளது. தாதுமூலம், வாத, பித்த, சிலேத்தும நாடிகளின் குறி, அவற்றின் இயல்பு, வாதம் மீறினால் ஏற்படுகின்ற நோய்கள், இவற்றைக் குணப்படுத்த மேற்கொள்ள வேண்டிய தற்காப்பு முறைகள், சுகசன்னி, மூலரோகம், பித்த வாத மேகங்களின் குணங்கள், பித்த சூலை, மார்பு சூலை முதலியவை பாதித்தால் ஏற்படும் உடல்மாற்றங்கள், கெர்ப்ப வாய்வுக்குரிய கிருமிகள், பலவகைச் சூத்திரமுறைகள், செந்தூரம், கியாழம் தயாரிப்பு போன்ற மருத்துவச் செய்திகளும் இரசவாதம் தொடர்பான சில செய்திகளும் இதில் கூறப்பெற்றுள்ளன. எண்வகை யோகங்களாவன: இயமம், நியமம், ஆதனம் அல்லது ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி. இவற்றுள் இயமம் என்பது மனம் பரம்பொருளின் நினைவில் கூடுவதாகும். இவ் இயமத்திற்குப் பத்து விதிமுறைகள் உள்ளன. நியமம் என்பது விதிமுறைகளைத் தவறாது கடைப்பிடித்தலாகும். ஆதனம் என்பது பயிற்சி ஆகும். பயிற்சிகள் எண் வகைப்படும். அவை பதுமாசனம், பத்திராசனம், குக்குடாசனம், சிம்மாசனம், கோமுகாசனம்,

சொத்திராசனம், வீராசனம், சுகாசனம் என்பன. பிராணாயாமம் என்பது மூச்சைக் கட்டுப்படுத்துதல் என்று பொருள்படும். பிரத்தியாகாரம் என்பது அம் மூச்சைத் திசை திருப்பும் பயிற்சி ஆகும். தாரணை என்பது மூச்சை நிலை நிறுத்துதல் ஆகும். தியானம் என்பது ஒரு முகச் சிந்தனை. சமாதி என்பது மூச்சை நிறுத்தி முக்தி அடைதல் ஆகும். இவை இந்நூலில் பேசப் படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை.

5. ஓமென்ற மூலகண பதியே காப்பு
உண்மையென்ன நடுமனையை யுகந்து நின்று
ஆமென்ற அமுதகலை உள்கொண் டேதான்
அடங்கியந்த மனோன்மணியின் அருமை யாலே
ஊமென்ற உளமதனை மவுன மாக
உருப்பெற்றுக் கருப்பெற்று உறுதி பெற்றுத்
தாமென்ற மதியதனை இரவியிற் தாக்கிச்
சச்சுதா நந்தமென்ற ஆதி காப்பாம். 1

6. முத்தான சிவமதுவே ஆற்றுமா வாகும்
முழங்கிநின்ற நாதமடா சோதி யாகும்
சித்தான சித்ததுதான் அறிவா நந்தம்
சின்மயமாய் நின்றதுவே விந்து வாகும்
வித்தான வித்ததுதான் ஒளிகண் பார்வை
வேதாந்த பூரணமே தானத் தாகும்
பத்தான சிவதீட்சை தன்னி லேதான்
பத்தியுடன் தன்னறிவாய் பதிவாய் முத்தே. 1200

7. முற்றும். எழுதி முடிந்தது முற்றும். சிவமயம்.
மும்மணியின் விபரம், சகல செய்கைக்கி விபரம்.

8. மூலம். 9. பாடல்களில் பிழைகளும் பேச்சு வழக்குச் சொற்களும் காணப்படுகின்றன. ற/ர, ழ/ள வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்த நூல். 11. பரிதாபி வருடம் ஆனி மாதம் 24 ம் தேதி ரங்கமுத்தூருமணியம் அண்ணாமலை செட்டியார் குமாரன் சுப்பி செட்டியார் அகத்தியர் காவியம் எழுதினது. யாராவது எடுத்தால் குடுத்து விடவும், அப்படிக் கொடாத வரையில் அகத்தியசாமி கோபம்வந்து சாபம் பிடிச்சி நசிஞ்சி போவார்கள்.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர் காவியம் 1200', இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடம், சென்னை, 1896. 3. இல்லை.

VI. இந்நூல், குறிப்பாகப் பெண்கள் வைத்தியம் தொடர் பான ஓர் அரிய நூலாகும்.

## அகத்தியர் குருநாடி 245

I. 1. **109**. 2. அ. R. 6067. ஆ. T.R. 2545. 3. அ. அகத்தியர் குருநாடி சூத்திரம் 245. ஆ. Akattiyar kurunāṭi cūttiram 245. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 60. 5. 22 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 120; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம் 15. இல்லை. 16. முழுமை. 17. 247 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் நாடிபார்க்கும் விதம், நாடி இருப்பிடம் பற்றிய செய்திகளைக் கூறுகின்றது. 2. மருத்துவம். 3. இந்நூல் உடம்பில் ஏற்படும் நோய்களுக்குக் காரணமான வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்றுவகை தோசங்களின் அளவுகளைக் கண்டறிவதற்கான நாடி பார்க்கும் முறையை விளக்கிக் கூறுவதாகும். அந்நாடிகளில் மேலோங்கி நிற்கும் தோசத்தின் குணம் அதற்குரிய பரிகாரம் முதலியவற்றை இந்நூல் எடுத்தியம்புகிறது. அன்னம், கோழி, மயில் போல நடப்பது வாதநாடி எனவும், ஆமை, அட்டை போல் நடப்பது பித்தநாடி எனவும், தவளை, பாம்பு போல் நடப்பது சிலேத்தும நாடி எனவும் கூறுகிறது. குருநாடி என்பது பித்தத்துக்கும் வாதத்துக்கும் இடைப்பட்டது. சிரசு சூலை குணம், பீனிச குணம், சயரோகக் குணம், குன்ம குணம், நீரிழிவு குணம், குருநாடி குணம், வாசிநிலை குணம், பித்த குணம், சூட்டு குணம், சோகை குணம், காதடைப்பு, தசைநாடி, குருநாடி, பூதநாடி, பற்றுக்குக் குணம் முதலான

செய்திகள் இடம்பெறுகின்றன. நாடி நிதானம், வாதபித்தச் சிலேத்தும நாடி, நோய் விபரம், கிராணி நிதானம், சன்னி நிதானம், சுரோணிதவாத நிதானம், மூர்ச்சை நிதானம், கிருமி நிதானம் முதலிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை.

5. ஓங்காரங் கொண்டெழுந்த பிரணவத்தின் செய்கை
ஊறுணர்ந்து சூஷ்த்திரம் உரைத்த வாறு
ஆங்காரங் கொண்டதொரு மனத்தைத் தேர்ந்து
அருவுருவ சூரூவமெனும் அந்த நேர்மை
பாங்கான நாடிநரம் பான வாறு
பழமறைதா னாராய்ந்து பாடி வைத்தேன்
நீங்காத கணபதியுங் கந்தன் தானும்
நிசமாக வந்துதவுங் காப்புத் தானே. 1

6. ஒருநூலா யடக்கிவைத்து விபர மாக
ஓகோகோ தேர்ந்துசொன்னேன் உலகோர் மெய்க்க
குருநாடி போலேஒரு நூலுரு சொல்லான்
குறிப்பறிந்து இன்னூலைக் கூர்ந்து பார்த்தோர்
பெருநூலைத் தேடியங்கே அலைய வேண்டாம்
பின்னுமொரு சாஷ்த்திரத்தில் யிதுபோ லில்லை
இருநூத்தி நாற்பத்தி அஞ்சு தானே
ஏணிவைத்துக் குடுத்தாப்போல் யிருக்கு முத்தே. 247

7. சிவமயம். தேவி சகாயம். இந்த நாடி சாஷ்த்திரம் எழுதி முகிந்தது முற்றும். வேலுண்டு வினையில்லை.

8. மூலம். 9. அந்தாதியில் அமைந்த பாடல்கள்; வடமொழி எழுத்துகளும், பேச்சுவழக்குச் சொற்களும் வந்துள்ளன. 10. மருத்துவ முறைகளில் நாடிகளைப் பார்த்து நோயறியும் நிலையைச் சில நூல்கள் கூறுகின்றன. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ச.ம.நூ. எண்கள் 175, 3860, 451, சி.ம.மை.ஆ.நி. எண்கள் 135 (c), 831 (a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. அகத்தியர் குருநாடி சூத்திரம் 245, பி. இரத்தின நாயகர் & சன்ஸ், சென்னை, 1972. 3. இல்லை.

VI. சித்த மருத்துவத்தில் நாடி பார்த்து, நோய் அறிந்து, மருந்து கொடுக்கும் முறையே இன்றும் உள்ளது. அகத்தியர்

குருநாடி சூத்திரம் 245 -ல் 4 பதிப்புகள் வந்துள்ளன. அகத்தியர் குருநாடி சூத்திரம் 100 என்னும் நூலும் வெளிவந்துள்ளது. பதினெண் சித்தர் நாடி சூத்திரம் எனும் நூல் பல பதிப்புகள் வெளியாகியுள்ளது. நாடிகளில் அசாத்திய நாடி, சாத்திய நாடி, வாத நாடி, பித்த நாடி, சிலேத்தும நாடி, தசநாடி என்பன முக்கியமானவை. நாடிகள் பதினாறு வகை என்று வைத்திய மூலிகை அகராதி என்ற நூல் கூறுகிறது. அவற்றுள் சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகிவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி என்பனவற்றின் வகைகள் அறியப்பட்டுள்ளன. சுழிமுனை ஆதாரமாறினு மூடுருவி பின்னி நிற்பது. காந்தாரியானது நாபியிற் போன்றிச் சத்தம் ஏழுக்கும் ஏழு நாடியாய்க் கண்டத்து உறுவது. அத்தி, சிகிவை இரண்டும் பத்து நாடியுற்றுக் கண்ணில் நிற்பன. அலம்புடை, புருடன் இரண்டும் செவியின் ஊற்று இருபது நரம்புற்றிருப்பன. புகுநாடி உறைந்து குய்ய பற்றி நிற்பது சங்கினி உபத்தத்தைப் பற்றி இருப்பது.

## அகத்தியர் குருநூல் 600

I. *1.* **110.** *2.* அ. D. 2326. ஆ. T.D. 906. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் குருநூல் வைத்தியம் அறுநூறு. ஆ. Akattiyar kurunul vaittiyam aṟanūṟu. இ. அகஸ்த்தியர்த் தண்டகம் அறுநூறு) *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை – 5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* 23. *5.* 25 x 3 செ.மீ. *6.* ஒரு துளை. *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* சிதைவு. *12.* 46; ஆ. இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 7 வரிகள். *14.* விருத்தம் *15.* 18 வது ஓலை இல்லை. *16.* குறை *17.* 89 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* இந்நூல் அஞ்சனம், பற்பம், செயநீர், கல்பகம், ஞானம் போன்ற செய்திகளைக் கூறுகின்றது. *2.* மருத்துவம்.

3. அகத்தியர் பெயரில் அமைந்த மருத்துவ நூல் ஒன்றில் இருந்து திரட்டப் பெற்ற சிலபாடல்களைக் கொண்டுள்ள இந்நூலில் மருத்துவம், வழலை, சித்தர்களுக் குரிய அஞ்சனம், பற்பம், செயநீர், கல்பகம் போன்றவற்றுடன் ஞானம் பற்றியும் கூறப்பெற்றுள்ளது. மேலும், வழலைப்புடம், அப்பிரகச் சுத்தி செந்தூரம், காந்த செந்தூரம், காந்த செந்தூரம், சிந்தாமணி மாத்திரை, ஆனந்த வயிர வளமாத்திரை, சஞ்சீவி மாத்திரை, தங்க பற்பம், வெள்ளி பற்பம், முத்து பற்பம், பவள பற்பம், வங்க பற்பம் போன்ற மருந்து செய்முறைகள் கூறப்படுகின்றன. மேகராசாங்கத் தயிலம், மகா சந்தனாதித் தயிலம், பெருங்கமலாதித் தயிலம், வில்வாரித் தயிலம், வேப்பெண்ணெய்த் தயிலம் போன்ற தயில வகைகளும் கூறப்படுகின்றன. பஞ்ச தீபாக்கினி இலேகியம், கண்டங்கத்திரி இலேகியம், பாண்டுக்குக் கரிசாலை இலேகியம், குண்டாக்கினி இலேகியம் முதலிய இலேகிய வகைகளின் செய்முறையும் பயனும் இந்நூலில் கூறப்படுகின்றன.

4. —.

5. கருணைதரு மைங்கரனைக் காப்பு வாணி
கலந்துயிந்த சூத்திரந்தான் கருவாய்ப் பாடத்
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத்
தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பாடக்
குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாக்கு
குருபேர் சொன்னநீதி மருந்துங் கூடும்
பெருமைமிக கீர்த்தியுண்டாம் சித்தர்க் கெல்லாம்
பெருனூலைக் குறுக்கியிந்த அறுநூறு தானே. 1

6. அறையான யரிதாரம் னாடிகெந்திய முத்தர்
சாதிலிங்கம் பொரிக்கார மிந்துப்பூ
முறையான கடுகு திரிகடுகு கா.....
முலைப்பாலின் வகைக்குருவா ருகளஞ் சாய்தூக்கி
பறையாகு தானிருனாள் அரைத்த பின்பு
பச்சை ..... னாசி சார்தனில் பத்த வாட்டி
நிறையாகப் பயறளவாய் யுருட்டிக் கொண்டு
நிழலுலத்திக் குழிகை யெல்லாம் .. . 89

7. —.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் அமைந்த பாடல்களில் பாடபேதங்கள் உள்ளன. 10. அகத்தியர் பேரிலமைந்த சகல கலை ஞானம் 1200 இன் சுருக்கம் இந்நூல். அகத்தியர் தண்டகம் என்றும் பெயர் பெறுகிறது. 11. இல்லை.

VI. 1. D. 2420. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இத்துடன் வேறு மூன்று நூல்களுமுள்ளன. அவற்றுள், "சித்தர் பன்னூற் பாடற்றிரட்டு" (D. 2327) என்ற நூல் 82 ஏடுகளில் உள்ளது. அதில் இரசவாதம் குறித்த பல சித்தர்கள் பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் அகத்தியர் பெயரில் அமைந்த நூல்களிலிருந்து திரட்டப் பெற்றவை வருமாறு :

1. அகஸ்த்தியர் முன் வயித்தியம் 80 பின் 3
2. அகஸ்த்தியர் வயித்திய முப்பு 50 முன் 8
3. அகஸ்த்தியர் கல் சுன்னம் 16 முன் 29
4. அகஸ்த்தியர் பல்லிகல் சுன்னம் 16 முன் 32
5. அகஸ்த்தியர் வல்லாரை 600 பின் 34
6. அகஸ்த்தியர் வல்லாரை 216 முன் 36
7. அகஸ்த்தியர் வகாரம் 200 முன் 40-110
8. அகஸ்த்தியர் வகாரம் 12 முன் 48
9. அகஸ்த்தியர் ஞான காவியம் 1000 முன் 59
10. அகஸ்த்தியர் பரிபூரணம் 400 முன் 62
11. அகஸ்த்தியர் வாதமுப்பு 30 முன் 98
12. அகஸ்த்தியர் வல்லாரை 600 முன் 98
13. அகஸ்த்தியர் கலைக்கியானம் 1200 பின் 100

எனும் நூல்களிலிருந்து திரட்டப் பெற்ற சில பாடல்கள் உள்ளன. இந்த நூலுக்குப்பின் 16 ஆம் எண்ணிடப் பட்ட ஓர் ஓலை பூபதிமாத்திரையின் விபரம் என எழுதப்பட்டுத் தனியாக உள்ளது. அதில் 45, 46, 47 ஆகிய மூன்று பாக்கள் உள்ளன. அது வேறு கையெழுத்தில் உள்ளது.

# அகத்தியர் குருநூல் 600

I. *1.* **111.** *2.* அ. D. 2420. ஆ. T.D. 946. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் குரு நூல்வைத்தியம் *600.* ஆ. Akattiyar kurunūl vaittiyam 600. இ. அகஸ்தியர் பாடிய வைத்தியம் அறுநூறு. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை – *5.* *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 80. 5.* 49 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* சிதைவு. *12. 160;* இரு பக்கங்களிலும் எழுதப் பெற்றுள்ளது. *13.* பக்கத்திற்கு *4* வரிகள். *14.* விருத்தம் *15.* இல்லை. *16.* முழுமை. *17. 531* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* சித்தர்களுக்குரிய ஞானம், மருத்துவ மார்க்கம், பற்ப வகைகள், லேகிய வகைகள், தயில வகைகள் போன்றவற்றைக் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* வரிசை எண் *110* போன்றது.

4. —.

5. கருணைதரு மைங்கரனே காப்பு வாணி
கலந்திருந்த சூத்திரந்தான் கருவாயப்பா
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டு
தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பாட
குருமகிமை சத்தியுண்டாம் ஞானம் வாய்க்குங்
குபேரனென நிதிமருந்துங் கூடுங் கூடும்
பெருமைமிகக் கீர்த்தியுண்டாஞ் சித்தர்க் கெல்லாம்
பெருநூலைக் குறுக்கியிந்த அறுநூறிற் றானே. 1

6. பின்பு சொல்வார் பூரணத்தின்
பிலக்கும் வாசித் தாரணையும்
நம்பி நூல்க ளுள்ளதெல்லாம்
நலமாய்ப் பாரு மெனத்தருவார்
அம்பதா யிரத்தி யிருநூறு
அழகாஞ் சூத்திரம் நூற்வாதம்
கன்பாம் வயித்திய மறுநூறு
காணுஞ் சூத்திர மன்பதுண்டே. 530

7. உண்டா மறுநூறு வயித்தியத்துள்
கொடுக்குஞ் சூத்திர மன்பதுண்டு
பண்டாங் குருவோ நூற்றன்பதில்
பாரும் வழலைப் போக்கன்ப துண்டு
வேண்டாம் நூல்க ளிதுபோதும்
விடாதே நூல்க ளொருத்தருக்குங்
கண்டா யிந்நூற் வெளிவிடாதே
கடைசி யெழுதி முகிந்ததுவே. 531

8. மூலம். 9. அந்தாதி அமைப்புடன் விளங்கும் பாடல்களில் பிழைகள் மலிந்துள்ளன. பிரதி வேறுபாடு, பாட வேறுபாடுகள் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூலில் எண்சீர் விருத்தங்கள், அறுசீர் விருத்தங்கள் பயின்றுள்ளன. 11. குருபாதந் துணை. இதற்கு மேல் பாதி முழுதும் பிழையாயிருந்ததினால் அதிலிருந்தபடி யெழுதி வைத்து வேறுபிரதி கிடைத்தால் திருத்தப்படும். வினாயகர் துணை.

IV. 1. D. 2326. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்தச் சுவடியுடன் அகத்தியர் வைத்தியச் செந்தூரம் 300 (D. 2419), வைத்திய சிந்தாமணி வெண்பா நாலாயிரம், தாதுநிதானம், அகத்தியர் வைத்தியம் 150, இரசவர்க்கம் பதார்த்த குண சிந்தாமணி எனும் நூல்கள் உள்ளன. D. 2326 ஆம் சுவடியும் 'அகத்தியர் குருநூல் வைத்தியம் 600' என்றே உள்ளது. அகத்தியர் தண்டகம் என்றும் இந்நூல் பெயர் பெறுவதாகத் தெரிகிறது.

## அகத்தியர் குரு வியாதி 80

I. 1.**112**. 2. அ. R. 192 (b). ஆ.T.R. 176. இ.—. ஈ.—. 3. அ. அகத்தியர் குருவியாதி அம்மை விவரம் 80. ஆ. Akattiyar kuru viyati ammai vivaram 80. இ. அகஸ்திய நாயனார் அருளிச் செய்த குரு வியாதி அம்மை விபரம் 80.4. —. 5. —. 6. காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 11. 5. 33 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. 2 மரக்கட்டை 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று 12. 22; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம் 15. இல்லை. 16. முழுமை. 17. 82 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அம்மை நோய் பற்றியும் அதை நீக்க மருந்தும் கூறப்படுகின்றன. 2. மருத்துவம். 3. அகத்தியர் குருவியாதி அம்மை விவரம் என்ற இந்நூல் கோடைகாலத்தில் வெப்பக் காற்றினால் தான் அம்மை நோய் உண்டாகும் என்று கூறுகிறது. அந்நோய் பதினொரு வகைகளில் தோன்றும் என்றும், அப்பதினொரு வகைகளின் பெயர்களும் அம்மை வந்தால் நீக்குவதற்குரிய முறைகளும் இந்நூலில் கூறப் படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்த்திய நாயனார் அருளிச் செய்த குருவியாதி அம்மை விவரம் 80.

5. பூரணமாய் நிறைந்துநின்ற சோதி பாதம்
போற்றிசெய்து உமைபாதத்தைப் புகழ்ந்தங் கேத்தி
மாரணமாய் நிருவாணி பாதம் போத்தி
கருணைபெற அகஸ்தியமுனி தம்மைப் போற்றி
ஆரணமாம் வல்லோர்கள் பாதம் போற்றி
யழகான வசூரிகுண மவிழ்தம் சொல்வேன்
வாரணமாய் வரலாறு விரித்து நன்றாய்
வகையுரைக்கக் கெணபதிதன் மகிழ்ந்தங் கேத்தே. 1

6. தானென்ற மசூரிகையதின் குணமுஞ் சொன்னோந்
தருவான வஞ்சனமு மவிழ்ந்தஞ் சொன்னோந்
தேனென்ற சாத்திய மசாத்தியந் சொன்னோம்
திறமான பத்தியத்தி நிதானஞ் சொன்னோம்
வானென்ற மறுமுள்ளி யினிதான் சொன்னோம்
வகையாகக் கிசாயமது மகிழ்ந்து சொன்னோம்
கானென்ற சித்தருக்கு மூலத் தோர்க்குங்
கருத்தாகச் சொல்லிவிட்டேன் மசூரிகை முற்றே. 82

7. சிவ சண்முகன் மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ர- ற, ள-ழ என்ற எழுத்துக்கள் வேறுபாடில்லாது அமைந்துள் ளன. 10. அம்மை நோய் வசூரி என்றும் வைசூரி என்றும் அழைக்கப்பெறும். ஆனால் இந்நூல் 'மசூரிகை' எனவும் 'குருவியாதி' எனவும் கூறுதல் காணத்தக்கது. 11. பிரபவ வருடம் மாசி மாதம் 10ந் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகஸ்திய நாயனார் அருளிச் செய்த அம்மை சாஸ்திரம் எழுதி நிறைவேறியது.

IV. 1. இல்லை 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. பன்னெடுங் காலமாக அம்மை நோய் இருந்து வருவதும், அந்நோய் பல காரணங்களால் ஏற்படுகிறது என்பது பற்றியும் பல கதைகள் நம்மிடையே வழங்குகின்றன. ஆனால் இம்மருத்துவ நூல் வெயில் காரணமாக அம்மை நோய் வருகிறது என்பதை அறிவியல் அடிப்படையில் கூறுகின்றது.

## அகத்தியர் குழம்பு

I. 1. **113**. 2. அ. R. 5834. ஆ. T.R. 2501. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குழம்பு. ஆ. Akattiyar kulampu இ. —. ஈ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 34 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 12; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம் 15. இல்லை. 16. முழுமை. 17. 25 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அகத்தியர் குழம்பு செய்முறை உபயோகம் அனுபான பேதங்கள் முதலியவை கூறப்படுகின்றன. 2. மருத்துவம். 3. அகத்தியர் குழம்பு என்னும் இந்நூலில், குழம்பில் சேரும் சரக்குகள், அவற்றின் சக்தி முறைகள், குழம்பு செய்முறை,

துணை மருந்துகள் தயாரிக்கும் முறை ஆகியனவும், நோய் தீரும் முறைகளும் கூறப்படுகின்றன. மேலும், இதில் கற்பத்துக்கு மருந்து, சூதகவாய்வு, நெஞ்சுவலி, விஷத்துக்கு, வழலை, மேகக்கட்டு, அமுர்த கந்தனாதித் தயிலம் முதலியன பேசப்படுகின்றன. அகத்தியர் குழம்பு ஓர் மருந்துப் பொருளாகும். இம்மருந்தானது பெருங்காயம், சடுகு, இந்துப்பு, ரசம், வெங்காயம், மனோசிலை, அரிதாரம், நேர்வாளம், ஓமம், கருஞ்சீரகம் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சுரம், குளிர்சுரம், இருமல், பாண்டு, மகோதரம், பெருவயிறு நீராமை, சோகை, சன்னி, சூலை, குட்டம், வாதம் முதலிய பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் மருந்தாக இக்குழம்பு பயன்படுகிறது. நாகப்பாம்பு கடி விஷத்துக்கு நாவற்கொழுந்து, மிளகு, இரண்டு வராகனெடை வெற்றிலைச்சாறு, மூன்று பணவெடை அகத்தியர் குழம்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கொடுத்தால் விஷம் தீரும். தேளின் விஷத்துக்கு எருக்கந்துளிரிலையில் குழம்பில் ஒரு பணவெடை சேர்த்துக் கொடுத்தால் விஷம் தீரும். விஷபாண்டு, வீக்கம் ஆகியவை தீர நொச்சிச்சாறு, சுக்கு, திப்பிலி, மிளகு கூட்டிக் குழம்பில் ஒரு பணவெடை சேர்த்துக் கொடுத்தால் இந்நோய்கள் குணமாகும்.

4. —.

5. பருவதந் தன்னில் வாழும் பரமனா ருருளி னாலே
பொறுமையா யுலகில் வாழு புண்ணிய சனங்க ளுக்கு
உறுபல வியாதி வந்தா லுண்மையாய்த் தீரு மென்று
பெரும்பல முனிவர் தாமும் பேசிய மருந்து கேளே. 1

6. கேளீ ரந்த வகையெல்லாங்
கிளியாப் பேதி மிகவானால்
பாளே மயங்கா வசம்புதட்டி
பாங்காய்க் கசாய வதத்திலே
சூளா வெண்ணைப் பாக்களவுச்
சுருக்காய்ப் போட்டுக்குடுப்பீராய்
மீளாப் பேதி யுள்ளதெல்லாம்
மின்னே தீரு மெய்யிதுவே. 25

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பு கொண்டவை; பாடபேதங்கள் மிகுந்துள்ளன. 10. அகத்தியர் குழம்புடன் அனுபானங்களைச் சேர்த்துக் கொள்வது மரபு. 11. இல்லை.

IV. 1. R. 5814, R. 4713, R. 4508, R. 3629, R. 3607. 2. த.ப.க. எண். 491, த.ச.ம.நூ. சுவடி எண்கள் 594, 595, 745 (e), சி.ம.மை.ஆ.நி.எண் 235 (k), உ.த.நி.எண்கள் 257 : 477, 509 : 770, 549 : 892. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்தியர் குழம்பு', சே. பிரமா & ப.வெ. நாகராசன். தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1986; சித்த மருத்துவமணிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் குழம்பு என்ற தலைப்பில் தமிழ் பல்கலைக் கழகத்தில் 10 பாடல்கள் உள்ள சுவடியும், 7 பாடல்கள் உள்ள சுவடியும், 9 பாடல்கள் உள்ள சுவடியும் உள்ளன. திருவனந்தபுரம் கீ.சு.நூ., திரு. வேங்கடவன் கீழ்த்திசை ஆய்வு நிறுவனம் ஆகிய இடங்களிலும் இப்பெயர்களில் சுவடிகள் உள்ளன. இவை தவிர அரிதான பலநூல்களிலும் 'அகத்தியர் குழம்பு' பற்றிய செய்தி இருக்கிறது. ஆனால் ஒவ்வொன்றும் வேறுபாடான பாடல்கள் கொண்டவை. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் குழம்பு என்ற இந்நூலுடன் அகத்தியர் கரும சூத்திரம் கடைக்காண்டம் 300, தொடுகுறி சாத்திரம், பிரம்மமுனி வைத்திய சூத்திரம் 300, உரோமரிஷி வசிய சூத்திரம் 500, தன்வந்திரி சூத்திரம் 31, கற்பூர சிலாசத்து பற்ப முறை முதலிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் குழம்பு

I. 1. **114**. 2. அ. R. 5814. ஆ. T.R. 2496. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குழம்பு. ஆ. Akattiyar kulampu. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 8; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது.

13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. குறை. 17. 23 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகைச் சரக்குகளைக் கொண்டு குழம்பு தயாரித்தலும், அதன் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 13 போன்றது.

4. —.

5. பருவதந் தன்னில் வாழும் பரமனா ரருளி னாலே
பொறுமையா யுலகில் வாழும் புண்ணிய சனங்க ளுக்கு
உறுபல வியாதி வந்தால் உண்மையாய்த் தீர்க்க வென்று
பிரபல முனிவர் தாமும் பேசிய மருந்தி தாமே. 1

6. கேளா யிந்த வகைக்கெல்லாங்
கிழியே பேதி மிகவுண்டாம்
பாளே மயங்க வேண்டாங்காண்
பாங்காய் வசம்பு குடிநீரில்
சூளா வெண்ணைப் பாக்களவு
சுருக்காய்ப் போட்டுக் கொடுப்பீரேல்
மீளாப் பேதி யுள்ளதெல்லாம்
விரும்பியான் சென்னேன் மெய்யிதுவே. 23

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள்மிகுந்தும் அந்தாதி அமைப்பிலும் பாடல்கள் உள்ளன. 10. இந்நூல் அகத்தியர் பெருங்குழம்பு என்றும் பெயர் பெறும். 11. இல்லை.

IV. 1. R. 5834, R. 4713, R. 4508, R. 3629, R. 3607. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்தியர் குழம்பு', சே. பிரேமா & ப.வெ. நாகராசன், தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1986; சித்த மருத்துவமணிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் குழம்பிற்கு அனுபானம்: அகத்தியர் குழம்புடன் சுக்கு சேர்த்து உண்டால் சுரம் தீரும். இக் குழம்புடன் கடுக்காய்ச் சாறு சேர்த்துக் கொடுத்தால் இருமல்

தீரும். பசுவின் வெண்ணெய்யுடன் இக்குழம்பைச் சேர்த்து உண்டால் இரத்த மூலம் தீரும். (வைத்திய மூலிகை அகராதி) இச் சுவடிக்கட்டில் அகத்தியர் குழம்பு என்ற இந்நூலுடன் வைத்திய வசனம் என்ற நூலும் உள்ளன.

## அகத்தியர் குழம்பு

I. 1. **115**. 2. அ. R. 4713. ஆ. T.R. 2078. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குழம்பு. ஆ. Akattiyar kulampu. இ. அகஷ்த்தியர் குழம்பு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 22 x 2 செ.மீ 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகைச் சரக்குகளால் குழம்பு தயாரித்தலும் அதன் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 113 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக .

5. பருவதந் தன்னில் வாழும் பரமனா ரருளி னாலே
பொறுமையா யுலகில் வாழும் புண்ணிய சனங்க ளுக்கு
உறுபல வியாதி வந்தால் உண்மையாய்த் தீரு மென்று
பொருபல முனிவர் றானும் பேசிய மருந்து கேளே. 1

6. விதியால் மருந்து யிதுவல்லால்
வேறே தேட வேண்டாங்காண்
பதியாய் நூலா யிரத்துடனே
பகரும் வியாதி யிதுவெல்லாம்
மதியா யிதற்குக் குறிப்பறிந்து
வகையாய் அனுபா னங்கள்செய்ய
துடியாய்த் தீரு மென்றுசொல்லி
சொன்னார் மகாமுனி சொன்னாரே. 10

7. சிவபாதம்.

8. மூலம். 9. பாட்பேதங்கள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 5834, R. 5814, R. 4508, R. 3629, R. 3607. 2. த.ப.க.எண்கள் 566, 1037. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்தியர் குழம்பு', சே. பிரேமா & ப.வெ. நாகராசன், தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1986; சித்த மருத்துவமணிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் குழம்பிற்கு அனுபானம்: கண் வீங்கினால், கற்றாழைச் சோற்றை வடிகட்டிய தயிர், சந்தனம் இவைகளோடு சேர்த்துக் கட்ட வேண்டும். பரு, பிளவாழை, அரையாப்புப் புண்கள், சிலந்தி இவைகட்கு உமிழ் நீரிலிழைத்துப் பூச வேண்டும். முலைக்குத்துப் புண்ணுக்கு மேற்படி அனுபானத்தில் கொடுக்கலாம். (வைத்திய மூலிகை அகராதி) இச் சுவடிக்கட்டில் அகத்தியர் குழம்பு என்ற இந்நூலுடன் அகத்தியர் தண்டகம், அகத்தியர் சூத்திரம் 50, தட்சிணாமூர்த்தி வைத்திய சூத்திரம் 16, அகத்தியர் வைத்திய பூரண சூத்திரம் 50 முதலிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் குழம்பு

I. 1.116. 2. அ. R. 4508. ஆ. T.R. 1989. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குழம்பு. ஆ. Akattiyar kulampu. இ. அகஷ்த்தியர் குழம்பு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 20 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 4; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. ஏட்டு எண் 1,6 தவிர மற்றவை காணப்பெறவில்லை; 5 ஆம் பாடல் முதல் 23 ஆம் பாடல் வரையுள்ள பாடல்கள் இல்லை. 16. குறை. 17. (1 முதல் 4, 24 முதல் 27 வரை) 8 பாடல்கள் மட்டும் உள்ளன.

ஆ. —.

III. 1. பலவகைச் சரக்குகளால் குழம்பு தயாரித்தலும், அதன் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 113 போன்றது.

4. —.

5. பருவதந் தன்னில் வாழும் பராபர னருளி னாலே
பொறுமையா யுலகில் வாழும் புண்ணிய சனங்க ளுக்கு
உறுபல வியாதி வந்தால் தீருமென் றுண்மை யாகப்
பெருபல முனிவர் தாமும் பேசிய மருந்து கேளே. 1

6. தானென்ற நாடி கீழே தாண்டியே வாங்கு மாகில்
தானென்ற உயிர்தான் மாளுஞ் சாதக மின்னங் கேளு
தானென்ற மூன்று நாடி தன்வசங் குறைந்து பின்னும்
தானென்ற வாத பித்தந் தம்பித்து அய்ய மீறில்
தானென்ற திடங்கொண் டாலுஞ் சாவது தின்ண மாமே. 27

7. — .

8. மூலம். 9. அந்தாதியுடனும் பாடபேதங்களுடனும் பேச்சு வழக்குச் சொற்களுடனும் பாடல்கள் அமைந்துள்ளன. இறுதிப் பாடல் 5 அடிகளைக் கொண்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 5834, R. 5814, R. 4713, R. 3629, R. 3607. 2.—. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. 'அகத்தியர் குழம்பு', சே. பிரேமா & ப.வெ. நாகராசன், தமிழ் பல்லைக் கழகம், தஞ்சாவூர், 1986; சித்த மருத்துவமணிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் குழம்பிற்கு அனுபானம்: நொச்சி, சுக்கு இவைகளோடு இக்குழம்பைச் சேர்த்துக் கொடுத்தால் பலவித வாய்வுகளும் தீரும். கபால வலிக்கு, குழம்பூட்டிய திரிப்புகை பூட்ட வேண்டும். (வைத்திய மூலிகை அகராதி). இச் சுவடிக்கட்டில் அகத்தியர் குழம்பு என்ற இந்நூலுடன் சுந்தரானந்தர் கேசரி வித்தை, அழுகணிச் சித்தர் பாடல், தட்சிணாமூர்த்தி வாலை 30, உரோம ரிஷி பாடல் 16,

அகத்தியர் சூத்திரம் 30, நந்தி வாத சூத்திரம் முதலிய பல்வேறு நூல்களும் உள்ளன.

## அகத்தியர் குழம்பு

I. 1. **117**. 2. அ. R. 3629. ஆ. T.R. 1782. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பெருங்குழம்பு 16. ஆ. Akattiyar perunkulampu 16. இ. அக்ஷ்த்தியர் சுவாமியார் அருளிச் செய்த பெருங்குழம்பு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 20 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 9; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 17 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவிதச் சரக்குகளால் குழம்பு செய்தலும், அதன் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 113 போன்றது.

4. —.

5. பருவதந் தன்னில் வாழும்
பரமனார் அருளி னாலே
பெருமையோர் கிணேசன் கந்தன்
போற்றினேன் மலர்கள் தூவி
ஒருமையாய்ச் சனங்க ளுக்கு
உண்மையாய் நோய்கள் வந்தால்
அருமையாய் திறக்கும் நல்ல
அகஷ்த்திய ருரைப்ப தாமே. 1

6. சித்தனென்று சொல்வதற்கு விபரங் கேளு
சிவயநம வயநமசி வநம சிவய
உத்தமனே மசிவயந நமசிவய வென்று
ஒருலஷ்சம் செபித்திடவே முதலே சாபம்

சத்தரிஷி சாபங்கள் நிவர்த்தி யாச்சு
சத்தசர் சரங்களெல்லாம் தனக்குள் ளாகும்
வித்தகனாய்ப் பேர்பெற்று வாழ்ந்திருப் பாய்யினி
மேலான பெருங்குழம்பு முத்து. 17

7. சிவமயம் முற்றே.

8. மூலம். 9. அந்தாதி அமைப்புடனும் பாடபேதங்கள் மிகுந்தும் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. பெருங்குழம்பு, சிறு குழம்பு என இப்பொருண்மையில் இருநூல்கள் உள்ளன. 11. இல்லை.

IV. 1. R. 5834, R. 5814, R. 4713, R. 4508, R. 3607. 2. —. 3. —.

V. 1. இல்லை. 2. 'அகத்தியர் குழம்பு,' சே. பிரேமா & ப.வெ. நாகராசன், தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1986; சித்த மருத்துவமணிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் குழம்பிற்கு அனுபானம்: நீர்ச்சுருக்கு, நீர்க் கல்லடைப்பு இவைகட்குத் தாழைவிழுது சேர்க்க வேண்டும். குழம்பு ஊட்டித் திரி செய்ய வேண்டிய விதம் வருமாறு: குழம்பு அரைத்த அம்மியில் தூய பழைய வஸ்திரத்தைப் புரட்டி உருட்டித் திரிசெய்து புகைபிடித்தால் தலையிடி குணமாகும். (வைத்திய மூலிகை அகராதி) இச் சுவடிக்கட்டில் அகத்தியர் குழம்பு என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 1, அகத்தியர் ஞானம் 5, அகத்தியர் வாக்கியம் 6, அகத்தியர் சூத்திரம் 12, அகத்தியர் முப்பு தீட்சை 16, அகத்தியர் ஞானம் 16 முதலிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் குழம்பு வாகடம்

I. 1. **118**. 2. அ. R. 3607. ஆ. T.R. 1780. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குழம்பு வாகடம். ஆ. Akattiyar kuḻampu vākaṭam. இ. அகத்தியர் குழம்பு வாகடம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 19 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகைச் சரக்குகளால் குழம்பு தயாரித்தலும், அதன் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 113 போன்றது.

4. —.

5. சருவே சுரனார் லோகம் சகலமும் படைத்த நாளில்
பொறுமையா யுலகுக் கெல்லாம் புண்ணிய சனங்க ளுக்கு
உறுபல வியாதி வந்தால் தீருமென் றுண்மை யாகப்
பெருபலன் யிதுவே யென்னப் பேசினான் முனிவன் தானே. 1

6. விதியால் மருந்து யிதுவல்லால்
வேறே தேட வேண்டாங்காண்
பதியாய் நூலா யிரத்துடனே
பகரும் வியாதி யிதுவெல்லாம்
மதியா யிதற்குக் குறிப்பறிந்து
வகையாய் அனுப்பா னங்கள்செய்ய
துதியாய்த் தீரு மென்றுசொல்லி
சொன்னார் மகாமுனி சொன்னாரே. 10

7. அகத்தீசுரர் குழம்பு வகை முற்றும். குரு முன்னிற்க.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்புடனும் பேச்சு வழக்குச் சொற்கள் கலந்தும் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நூல் குழம்பு வாகடம் என்றும் பெயர்பெறுகின்றது. 11. இல்லை.

IV. 1. R. 5834, R. 5814, R. 4713, R. 4508, R. 3629. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் குழம்போடு எருக்கில் வேம்பில், கடுகிற்பாதி எடுத்து அரைத்துக் கண்ணிலிட்டால் கண் அவிந்து போகும் என்றும் இதுபோன்ற தவறான அனுபானம் சேர்க்கக் கூடாது என்றும் வைத்திய மூலிகை அகராதி என்னும் நூல் கூறுகிறது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் குழம்பு வாகடம் என்ற இந்நூலுடன் அகத்தியர் வைத்திய வாகடம் 50, அகத்தியர் சூத்திரம் 36, அகத்தியர் சூத்திரம் 205, அகத்தியர் வாகடத் திரட்டு முதலிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் குளிர்ச்சியெண்ணெய்

I. 1. **119**. 2. அ. R. 1883 (b). ஆ. T.R. 1059. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குளிர்ச்சியெண்ணை. ஆ. Akattiyar kulircci yeṇṇai. இ. அகத்திய மாமுனிவர் குளிர்ச்சியெண்ணை. 4. —. 5. —. 6.—. 7. —. 8. அ.கீ.ச.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ.1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 25 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9: பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 4; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 5 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் வியாதிகளுக்குக் குளிர்ச்சி யெண்ணெய் தயாரித்தல் முறையைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. ஆவின்பால், சாம்பிராணி பலம் 2, கிச்சிலிக்கிழங்கு, மிளகு இவற்றைச் சேர்த்து ஆட்டி, பாலும், தேனும் எண்ணெய்யும் குழப்பி, அடுப்பில் வைத்து மெழுகுபதத்தில் சூடேற்றி, மறுபாண்டத்தில் இறுத்து, தலைமுழுகினால் மேகம், பித்தம், தலைக்குத்தல், கண்ணெரிச்சல் முதலிய நோய்கள் குணமாகும்.

4. அகஸ்திய மாமுனி யருளிச் செய்த குளிர்ச்சியெண்ணை.

5. பூரணமா யறுமுகவன் பாதம் போற்றிப்
புலத்தியனே தைலமதைப் புகழ்கி றேன்கேள்
காரணமாய்க் காரெள்ளு யெண்ணை வாங்கு
கற்றாளைச் சாறுபடி யொன்று கேளு
வாரணமா யிளநீரு படிதா னாகும்
வகையுடனே நெய்ச்சிட்டி படிசா றாகுந்
தாரணியில் ஈவாரைப் படிச்சா றாகுந்
தனியுடனே காணிச்சாறு படியும் வாங்கே. 1

6. ஏகமாய்த் தைலமதை முழுகு வோர்க்கு
எவ்வர்ணம் பொன்மேனி பொன்வர்ண மாகும்
போகமே அதிகமடா பலமுண் டாகும்
புண்ணியனே நேத்திரத்தின் குத்தல் போகும்
சோகமாஞ் செவினோவுஞ் சிதறிப் போகுஞ்
சிறப்பாக வசீகரமுஞ் செயலு முண்டாம்
தாகமாய்ப் பண்டிதர்க்குத் தயவு கூர்ந்து
தருமமா யுரைத்திட்டேன் தரவு முற்றே. 5

7. முற்றும் சிவமயம்.

8. மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்கள் விரவியுள்ளன. ர,ற வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பேரில் பாடப்பெற்ற நூல். புலத்தியருக்குக் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன், (பதி.) 'பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய சில்லறைக் கோவை' (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் குளிர்ச்சி எண்ணை 5 என்பது, சஞ்சீவி யெண்ணை 5, மேகத் தெண்ணை 5 எனும் பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. குளிர்ச்சி என்பது மருத்துவத்தில் தைலம் (தயிலம்) என்றும் அழைக்கப்படுகிறது. எண்ணெய் வகைகளாவன: விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், கடுகெண்ணெய், தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய், வெள்ளரி விதை எண்ணெய், வாதுமை

எண்ணெய், சிற்றாமணக்கு எண்ணெய், கிராம்பு எண்ணெய், பேய்க் கொம்மட்டி விதை எண்ணெய், மீனெண்ணெய், குருக்கத்தி விதை எண்ணெய், கயாபுதி எண்ணெய், சிறுகனல் எண்ணெய், சாதிபத்திரி எண்ணெய், சாதிக்காய் எண்ணெய், புன்னை எண்ணெய், புன்கெண்ணெய், நேர்வாள எண்ணெய், சிலா எண்ணெய், குசும்பாப்பூ எண்ணெய், மாயெண்ணெய், மண்ணெண்ணெய், பிரமதண்டு விதை எண்ணெய், காட்டுக் குருந்து எண்ணெய், கற்பூரத்தயிலம் செந்துருக்கம் விதை எண்ணெய். (வைத்திய மூலிகை அகராதி)

## அகத்தியர் குறுநூல்

I. *1.* **120.** *2.* அ. R. 3726. ஆ. T.R. 1817. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் குறுநூல். ஆ. Akattiyar kurunul. இ. அகத்தியர் குறுநூல் கடைக்காண்ட சூத்திரம் வயித்தியம். *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை – *5.* *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவின்மை. *4. 96. 5.* 32 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிதைவு. *12. 192* பக்கங்கள்; இரு பக்கங்களிலும் எழுதப் பெற்றுள்ளது. *13.* பக்கத்திற்கு *9* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 627* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* பூநீறால் நோய்களைக் குணமாக்கும் முறைகளைக் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* அகத்தியர் குறுநூல் என்னும் இந்நூல் அப்பிரகச் செந்தூரம், மண்டூர பற்பம், இஞ்சித்திரட்டுப்பால், காந்த செந்தூரம், தங்க பற்பம், வங்கபற்பம் போன்ற பலவகை மருந்துகள் செய்யும் விதமும் பயன்பாடும் கூறுகின்றது. மேக வியாதி, மேக நீர், ஆகிய நோய்களையும், வயிற்றுக் கழிச்சல், இரத்தக் கழிச்சல், கோழை நோய், காசநோய், நெஞ்சடைப்பு, நெஞ்சுடை வாதம் போன்ற நோய்களையும் அப்பிரகச் செந்தூரம் போக்கும் என்று இந்நூலில் கூறப்படுகிறது. மண்டூர பற்பமானது அஸ்திர

சுரத்தையும், ஐயம் சுவாசம், சோவை, விடபாகம், வீக்கம் போன்றவற்றை நீக்கி உடம்பில் இரத்தம், தாது என்பவற்றைச் சேர்க்கும். அதுபோல் வங்க பற்பம், தங்கபற்பம் என்பன உடம்பிற்கு வன்மை தரும் என இந்நூல் கூறுகிறது.

4. —.

5. சிதைவு.

6. சிதைவு.

7. முற்றும். தேவி துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ர,ற, ள, ழ முதலிய எழுத்துக்கள் வேறுபாடு இல்லாது உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் குறுநூல் என்ற இந்நூலுடன் அகத்தியர் 16, அகத்தியர் சூத்திரம் 48, அகத்தியர் வைத்திய சூத்திரம் 205, அகத்தியர் பூரண சூத்திரம், அகத்தியர் 100, அகத்தியர் சூத்திரம் 150, அகத்தியர் சூத்திரம் 50 முதலிய நூல்களும் அமைந்துள்ளன.

## அகத்தியர் கேசரி வித்தை

I. 1. **121**. 2. அ. R. 6113. ஆ. T.R. 2569. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கேசரி வித்தை. ஆ. Akattiyar kecari vittai. இ. அகஷ்த்தியர் கேசரி வித்தை. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 49. 5. 33 x 3 செ. மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 98 ; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. முழுமை. 16. குறை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்யும் முறை மற்றும் காயகல்பம், பற்பம் முதலானவை தயாரிக்கும் முறை பற்றிக் கூறும் நூல். 2. இரசவாதம் மற்றும் மருத்துவம். 3. அகத்தியர் சாலத்திரட்டு 1200ல் முதல் காண்டமாக அமைந்திலங்குவது கேசரி வித்தை 300 என்னும் வைத்திய நூலாகும். சித்தர்கள் இரசவாதம் செய்யும் முறையும், காயகல்பம், இலேகியம், பற்பம் போன்றவை தயாரிக்கும் முறையும் இந்நூலில் கூறப்படு கின்றன. தாழ்ந்த உலோகங்களைத் தங்கமாக்குவது இரசவாதமாகும். இரசவாதம் செய்வதற்கு முன், பலவகைச் சரக்குகளைக் கொண்டு வாதத்திற்கான அடிப்படைப் பொருள்களான முப்பு, வழலை, கருக்குருக்களைச் செய்து கொள்ளவேண்டும். காயகற்பம் என்பது உடம்பை நீண்ட நாள் வைத்துக் கொள்வதற்கு உட்கொள்ளப்படும் மருந்து ஆகும். இரசவாத வித்தை செய்யும்போது ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரிக்க வேண்டும் என்று வலியுறுத்தப் படுகிறது. இரசவாத மருந்தை ஈனாப் பசுவின் சாணத்தில் இட்டால் தங்கமாகும் என இந்நூல் கூறுகிறது. இரசவாதத்திற்குரிய பொருள்கள் தயாரிக்கப்பெற்ற பின்பு அவற்றை வைத்தே காயகற்பத்தையும் உருவாக்கலாம். இவ்வாறு உருவாகும் காயகற்பம் நீண்ட வாழ்நாளைத் தரவல்லது என்று இந்நூல் கூறுகிறது.

4. —.

5. திருவரு ளொற்றைக் கொம்பன் சீரடி போற்றி னாளும்
கருவுரு வான மோன காகுத்தன் பதமே சித்தி
சருவமு மதுவாய்த் தோன்றி சாஷ்த்திரம் மாந்த மூலம்
திருசன முதலாய் யெட்டும் கேசரி வித்தை தானே. 1

6. காண்டமுடன் கர்மசூத் திரமுன் னூறு
கண்டீரே கர்மகாண் டந்தான் முன்னூறு
தூண்டு வயிற்றியசெந் தூர முன்னூறு
துலங்குமிந்த முதற்காண்ட முன்னூ றோடே
ஆண்டதுகை ஆயிரத்து யிருநூறும் பாரு
அரனாணை யாறுக்கு மீய்ந்தி டாதே
தாண்டவங்க ளாடுமடா யிதுமுன் னூறுஞ்
சத்தியமா முதற்காண்டந் தான்முத் தாமே. 300

7. சாலத்திரட்டு முதல் காண்டம் வயித்திய முன்னூறு முற்றும். குரு பாதந் துணை.

8. மூலம். 9. அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. வடமொழி எழுத்துகள் பயின்று வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இந்நூலின் இறுதிப் பாடலிலிருந்து கர்ம சூத்திரம் 300, கர்ம காண்டம் 300, வைத்திய செந்தூரம் 300 எனும் இவற்றுடன் 300 பாடல்கள் அடங்கிய கேசரி வித்தையின் முதற் காண்டத்தையும் சேர்த்து மொத்தம் 1200 பாடல்களாகச் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ச.ம.நூ.எண் 426 (b), ஆ.நி.எண் 386 (b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் கேசரி வித்தை என்ற இந்நூலினைப் போன்றே கொங்கணர், கமலானந்தர், இராமதேவர் முதலான சித்தர்களும் கேசரி வித்தை நூல்கள் பாடியுள்ளனர். அகத்தியர் கேசரி நூல் என்ற பெயரில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஒரு சுவடி உள்ளது. இதில் 100 பாடல்கள் உள்ளன. அகத்தியர் கேசரி நூல் சாலத்திரட்டு என்ற பெயரில் 8 இதழ்கள் கொண்ட ஒரு சுவடி நூல் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் உள்ளது. இவ்விரு நூல்களிலிருந்தும் இங்குக் கூறப்படும் அகத்தியர் கேசரி வித்தை என்ற நூல் மாறுப்பட்டுள்ளது. அகத்தியர் கேசரி 100 என்ற பெயரில் 426 - c, 570, 1103-c, 749-i என்ற எண்கள் கொண்ட சுவடி நூல்கள் சென்னை சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலைய நூலகத்தில் உள்ளன.

## அகத்தியர் சகலகலைக்கியானம் 11

I. 1. **122**. 2. அ. R. 2530. ஆ. T.R. 1385. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சகலகலைக்கியான சூத்திரம். ஆ. Akattiyar cakala kalaikkiyāṉa cūttiram. இ. அகத்தியர் சகலகலைக்கியானம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 25 x 3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 8; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 11 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சகல கலைக்கியான சூத்திரம் 11 என்ற இந்நூலில் முதலாவதாகக் குப்பைமேனி என்ற செடியின் குணம் கூறப்படுகிறது. அதைப் பயன்படுத்திப் பல்வேறு நோய்களான பவுத்திரம், குன்மம், வயிற்றுவலி, வயிற்றுக் கோளாறுகள், வாயுக் கோளாறுகள், சொறி, சிரங்கு முதலான நோய்கள் குணமாதல் பாடப்பெற்றுள்ளது. நம் வயிற்றில் இருக்கும் நாக்குப் பூச்சிகள் ஒழியவும், பூரான் கடித்தால் அதன் விடம் நீங்கவும், தேள் கடித்தால் அதன் விடம் நீங்கவும் இக் குப்பைமேனிக் கீரை பயன்படுத்தப்படுவதாகக் கூறப் படுகின்றது. மேலும் நம் உடம்பைச் சுத்தம் செய்து யோகப் பயிற்சி செய்வதற்கான முறைகளையும் இந்நூல் கூறுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக குருவாழ்க, குருவே துணை. அகத்தியர் சகலகலைக்கியான சூத்திரம்.

5. பாரப்பா மூலிகையின் விபரந் தன்னைப்
பக்குவமாய்ச் சொல்லுகிறேன் மைந்தா மைந்தா
ஆரப்பா அறிவார்கள் மேனிப் போக்கு
ஆதியென்ற மேனியிலே குப்பை மேனி
காரப்பா மேனிதனைச் சமூலம் வாங்கிக்
கருத்துறவே நின்றுலத்தி வைத்துக் கொண்டு
சாரப்பா சுத்தஜலம் தண்ணில் போட்டு
சிவாசிவா இறுத்துவிடு பத்துமுறை தானே. 1

6. சிறந்ததொரு தமர்வாசல் குள்ளே நீயும்
செலுத்தடா வாசிதனை உள்ளே மைந்தா
பறந்ததொரு வாசியது பதிவு மாகும்
பதிவான தீபவொளி தன்னிற் காணும்

கறந்ததொரு பால்போலே அமுர்த மூறும்
கைகண்ட அமுர்தமதைத் தினமுங் கொள்ளு
சிறந்ததொரு பூரணத்தைத் தினமுங் கொண்டு
சிவமான அமுர்தத்திற் சேர முற்றே. 11

7. பொதிகைமுனி.

8. மூலம். 9. பாடல்கள் முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கிலும், அந்தாதி அமைப்பிலும் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. இந்நூல் அகத்தியர் அமுத கலைக்கியானம் 1200 என்ற நூலின் சுருக்கமாக இல்லாமல் மருத்துவ நூலாக இருப்பது குறிப்பிடத் தக்கது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. 'அகத்தியர் சகல கலைக்கியானம்' என்பது 'சகல கலை ஞானம்' என்றும் கொள்ளப் பெறும் என்று சில வைத்திய நூல்கள் குறிப்பிடுகின்றன. (சகல கலை) ஞானம் எனும் தலைப்புகளில் அமைந்த பல நூல்களிலிருந்தும் இந்நூல் பாடல்களால் வேறுபடுகின்றது.

## அகத்தியர் சட்சுவிதம் 10

I. 1. **123**. 2. அ. R. 3688. ஆ. T.R. 1798. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சட்சுவிதம் 10 (சூத்திரம்). ஆ. Akattiyar caṭcuvitam cūttiram - 10. இ. அகஷ்த்தியர் சட்சுவிதம் பத்து. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 32 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 4; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பை நோயின்றி வைத்துக் கொள்வதற்கான யோக மார்க்கத்தைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம். 3. அகத்தியர் சட்சுவிதம் சூத்திரம் 10 என்ற இந்நூலில் முதல்

பாடல் இவ்வுடம்பை அறுகோணமாக உருவகித்துச் சிவபெருமானைத் துதிக்கும் முறையைக் கூறுகின்றது. இவ்வுலகில் நீடுழி காலம் நிலையாக வாழ வேண்டுமானால் சிவயோகம் செய்ய வேண்டும். சிவா என்னும் இரண்டெழுத்தைத் திருப்பிச் சொன்னால் வாசி என்றாகும். இந்த வாசியை இலயம் செய்வதே வாசியோகம். இடைகலை, பிங்கலையின் நடனத்தை உன்னிப் பார்ப்பதே சிவயோகம். இதைச் செய்பவனே சிவயோகி. தீப தரிசனத்தைப் பார்ப்பவன் சரம்பார்ப்போன். சரம் பார்க்கத் தெரியாதவன் சிவயோகம் செய்யத் தகுதியற்றவன். இவ்வாறு இந்நூல் பல செய்திகளைச் சொல்லிச் செல்கின்றது.

4. ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

5. மூலமெனும் நடுமூலம் அறுகோ ணத்தில்
முப்பாழி லாடிய(ப்)பொற் பாத மெல்லாந்
சீலமெனுந் தூக்கிநின்ற பாத முண்டு
சிறுவாசல் சிற்றுவழி மயிர்நுனிபோ லப்பா
ஆலவிட முண்டஅரன் பாதந் தானு
அங்கெனவே யிருத்திநடு வங்கென் றேற்றி
ஞாலவழி யொன்பதுவா சலும டைத்து
நடுவழியி லேயிடைபின் கலையை யேற்றே. 4

6. பன்னிரண்டு முமைகூறு மனமகிழ்ச்சி யெல்லாம்
பதினாறுஞ் சிவன்கூறு மனமூர்க் கந்தானும்
உன்னிதமாகக் கண்டபடிசூத் திரத்தில் சொன்னோம்
உற்றபிள்ளை கண்டுமனந் தெளிந்து(ப்)பிறப் பறுப்பாய்
வன்னிநடு வனையுமுச்சி யாக கிராண
மற்றிசந்தொட் டடைந்திருந்து விட்டுவிடந் தன்னில்
பன்னியிருந் தவர்கள்பரா பரம தாகிப்
பகலிரவு மற்றிடத்தே யிருப்பார் முற்றே. 10

7. அகத்தியர் சூத்திரம் பத்து முற்றும்.

8. மூலம். 9. பாடல்களில் பரிபாஷைச் சொற்கள் அதிகம் வந்துள்ளன. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூல் 'அகத்தியர் சூத்திரம் 10' என்றும் பெயர் பெறும். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. சட் என்றால் ஆறு. சுவிதம் என்றால் உடம்பை நோயின்றி வைத்தல் எனலாம்.

## அகத்தியர் சரக்கு

I. 1. **124**. 2. அ. D. 1870. ஆ. T.D. 731. இ. R. 6333. ஈ. —. 3. அ. அகத்தியர் சரக்கு. ஆ. Akattiyar carakku. இ. அகஸ்தியர் அருளிச்செய்த சரக்கு னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. (முதலில் ஒரு ஓலையில் நூல் பெயர்மட்டும் உள்ளது). 4. 15+1. 5. 32 x 3 செ.மீ. 6. இருதுளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12; 29 1 முதல் 29 ஆம் பக்கம் வரை எழுதப்பட்டுள்ளது. 30 ஆம் பக்கம் வெற்றிடம். 1 முதல் 8 வரையிலான இதழ்களில் 7,6 வரிகள் அமையுமாறு பெரிய கையெழுத்து; 9 முதல் 14 வரை 6,7,8,9 வரிகள் அமையுமாறு சிறிய கையெழுத்து; இறுதிப் பக்கத்தில் 2 வரி மட்டும். 13. பக்கத்திற்கு 6 முதல் 9 வரிகள் 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 72 பாடல்கள்.

ஆ. 1. 33 x 21 செ.மீ. 2. 23 . 3. பக்கத்திற்கு 26 வரிகள். 4. நன்று. 5. 23.8.1956. 6. K. சாரதா. 7. —. 8. 1956 ல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III. 1. இந்நூல் வைத்திய சரக்குகளின் குணங்கள் இன்னின்ன என்று கூறுகிறது. 2. மருத்துவம். 3. இந்த நூல் சில வைத்திய சரக்குகளின் குணங்கள்பற்றிக் குறிப்பிடுவதாகும். இச் சரக்குகள் நோய் தீர்க்கும் மருந்துகளாகும். சுக்கு, மிளகு, திப்பிலி என்பன மருத்துவ சரக்குகளில் ஒரு வகையின. அவற்றின் குணமும், பிறவகையினவான உப்பு, வழலை போன்றவற்றின் குணங்களும் கூறப்பெற்றுள்ளன. சுக்குவின் பல்வேறு குணங்களும் அவை தீர்க்கும் நோய்களும், மிளகுவின் வகைகளும், அவற்றின் குணங்களும் நோய் தீர்க்கும் மருந்துகளும், திப்பிலியின் பல்வேறு இயல்புகளும், அவை தீர்க்கும் நோய்களின் குணங்களும் பேசப்பட்டுள்ளன.

4. —.

5. பார்த்திட்ட சுக்குனால் சருவ ரோகம்
பண்பாகும் பண்பாகு மிளகு வாதம்
யேத்திட்ட திப்பிலிதான் சிலேஷ்டுமத்துக் காதி
யெளிசான மூலந்தான் சுரத்துக் காதி
காத்திட்ட கரியதிப் பிலியி னாலே
கனமான சன்னிதனக் காதி யாகும்
சேத்திட்ட செவியந்தான் திமிருக் காதி
சித்திரமூ லந்தனக்குச் சுரங்கள் போமே. 1

6. அழுத்தமா மவன்தனக்கு ஆண்மை யாகும்
அதிகமாம் வரகுக்கு ஆண்மை குன்றும்
செழுத்தமாந் திவன்தனக்குச் சீரண மாகும்
செழுமொச்சைப் பயறுக்கு வாத முண்டாம்
பிழித்தமா மணிப்பயறு பித்தம் போக்கும்
பெறுகறுப்புக் கடலைக்குக் காய சித்தாம்
பழுத்தஅன்ன முளுந்துக்குப் பாங்கா மேனி
பலபடவே சத்தறியான் உப்பைக் கட்டே. 72

7. —.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. பேச்சுவழக்குச் சொற்கள், எழுத்துப் பிழைகள் மிகுந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்தது. புலத்தியரிடம் கூறுவது போலுள்ளது. பதார்த்த குணசிந்தாமணி என்ற பெயரில் 16வது இதழிலிருந்து வேறு நூல் தொடங்குகிறது. நூறு எனத் தலைப்பில் இருந்தாலும் 72 பாட்டுகளுடன் நூல் முடிகிறது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ப. க.எண் 988, 1157. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. மொத்தம் 64 சரக்குகள். அவற்றுள் 9 சரக்குகள் தாதுவாகவும், தற்செயலாயும் உருவானவை. 55 வைப்பு சரக்குகள் கையால் செய்யப்படுபவை. உப்பு, விந்து, வெடியுப்பு, கன்றுப்பு முதலியன ஆண் சரக்குகளாம். புளிச்சுரோணிதம் அதாவது படிகாரம், பழம், புளி முதலியன பெண் சரக்குகளாம். உப்பெல்லாம் ஆண்சரக்காகவும், பெண் சரக்கு எல்லாம் புளிப்பாகவும் உள்ளன. சுரோணிதத்தில் விந்து

சேர்ந்து திரண்டு வருவதுபோலப் புளிப்பான சரக்கிலே உப்புச் சரக்கு சேர்ந்து திரண்டு கட்டிப் போவதால் ஆண்சரக்கு, பெண்சரக்கு என்று பெயர்பெற்றன.

| உப்புச் சரக்கு | புளிப்புச் சரக்கு |
|---|---|
| வெடியுப்பு | படிகாரம் |
| கல்லுப்பு | பழம்புளி |
| சூடன் | துரிசு |
| கடல்நுரை | கற்சுனைநீர் |
| சூதம் | கெந்தி |
| காந்தம் | காடி |
| இரும்பு | எரியாலம் எண்ணெய் |
| பேதி | பொன்னம்பர் |
| தொட்டிப்பாஷாணம் | புளியரணை, புளிநரளை |
| மாங்கிச பேதி | கல்மதம் |
| வீரம் | புளியாரை |
| அப்பிரகம் | காய்ச்சுறுக்கு |
| கௌரி | புளிமாங்காய் |
| வெள்ளைப்பாஷாணம் | பனங்கள்ளு |
| வைக்கிராந்தம் | நிமிளை |
| தங்கம் | மனோசிலை |
| சாரம் | வெங்காரம் |
| பச்சைக் கற்பூரம் | இந்துப்பு |
| வீரம் | நாகம் |
| கல்லுப்பு | இலிங்கம் |
| சிலாசத்து | செம்பு |

**திப்பிலி:** இதைப்போன்றே வாயு, குன்மம், வாந்தி, குடல்வலி போன்றவற்றுக்கும், தலையிடி, முகவலி, வாந்திபேதி, பல்வலி இவற்றுக்கு சுக்கு ஏற்றது.

**மிளகு:** அரோசி, அபஸ்மாரம், கழுத்தின்நோய், காசம், காது நோய், காமாலை, கிராணி, குய்யரோகம், குன்மம், கோணுகிறவலி, சந்நியாசம், சிலேட்டுமம், சீதசுரம், பாண்டுபித்தம், மந்தம், மாதர் குன்மம், மூலம், மேகம், வாதம் இவற்றுக்கேற்றது.

**திப்பிலி:** திப்பிலியானது அரோசகம்; ஆசனநோய், இருமல், இரைப்பு, ஈளை, ஊதைசயப்பிணி, காதுநோய், குளிர், குன்மம், சகலதோசம், சந்நியாசம், சிரப்பிணி, சுரம், தொண்டைநோய், நாசிநோய், பாண்டு, பித்தபீலிகம், மூர்ச்சைபிடக்கம், விழிநோய் இவை தீர்க்கவும், தாதுவிருத்தி செய்யவும் கூடியது.

**சுக்கு:** வாயு, குன்மம், வாந்தி, குடல்வலி, சுரமின்றி வரும் மற்ற வலிகள் இவைகளை எல்லாம் நீக்க சுக்கு அரை அவுன்சில் கொதிக்கும் நீர் விட்டு, வடிகட்டி, அதை உட்கொண்டுவரின் நோய்கள் தீரும். தலை நோவுக்கும் முக வலிக்கும் சுக்கை அரைத்துத் தடவினால் வலி போகும். வாந்தி பேதிக்குச் சுக்கை அரைத்து நீரில் கலக்கிக் குடித்து வரலாம். பல் வலி மற்றும் வாயினுள்ளே வரும் நோய்களுக்கெல்லாம் சுக்குத் துண்டை வாயினுள் ஒதுக்கிக் கொண்டால் வலிபோகும்.

**நல்ல மிளகு:** குளிர்சுரம் அல்லது முறைக் காய்ச்சலுக்கு நல்ல மிளகு 40, கிறெயின் காயும், 20 கிறெயின் சுழற்சிக்காயின் பருப்பு, 10 கிறெயின் இவைகளைத் தேன்விட்டு ஒன்றாயிடித்து 3 மாத்திரை செய்து, சுரம் விட்டிருக்கிற பொழுது தினம் இரண்டு அல்லது மூன்று தரம் 2 மாத்திரை வீதம் விழுங்கவேண்டும். இந்த மாத்திரைகளைக் கொடுக்குமுன் எப்பொழுதும் வயிற்றைச் சுத்தி பண்ணிக்கொள்ள வேண்டும். படர்தாமரைக்கு நல்ல மிளகின் தூள் 2 அவுன்சு, நெய் 4 அவுன்சு இவை இரண்டையும் நன்றாயரைத்துத் தினந்தோறும் இரண்டுமுறை படர்தாமரை யின்மேல் நன்றாய்த் தேய்க்க வேண்டும். மேக வெள்ளைக்கு வால் மிளகு கிடையாவிட்டால் நல்ல மிளகு தேனிலரைத்து ஒரு தரத்துக்கு 10 கிறெயின் வீதம் தினம் மூன்று வேளை சாப்பிட வேண்டும். (வைத்திய மூலிகை அகராதி).

## அகத்தியர் சவுக்காரத் திறவுகோல்

I. 1. **125.** 2. அ. R. 192 (m). ஆ. T.R.176. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சவுக்காரத் திறவுகோல். ஆ. Akattiyar cavukkārat tiṟavukōl. இ. அகஷ்த்தியர் சவுக்காரத் திறவுகோல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 4. 5. 28 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 8; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிப்பதற்கு அடிப்படையாக அமையும் சவுக்காரத்தின் பண்புகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. பூநீறு 2 படி, கற்சுண்ணம் 2 படி எடுத்து இவற்றைப் பொடி செய்து கொள்ள வேண்டும். இக் கலவையுடன் சூடன், நவச்சார சுண்ணம், வெடியுப்பு இவற்றைச் சேர்த்து இடித்து அவற்றுடன் சிறிது நீரை விட்டுக் கலக்க வேண்டும். பிறகு அதனைச் சூரிய ஒளியில் காயவைத்து அதன் தெளிவை (மேலாக நிற்கும் நீர்) இறுத்து மீண்டும் ஒருமாத காலம் அதனைச் சூரிய ஒளியில் வைத்தால் வெண்மையான வெள்ளையுப்பு கிடைக்கும். மேலும் இதை பீங்கானில் போட்டு இரண்டு மாதம் சூரிய ஒளியில் வைக்க சிவந்த வெண்மையில் அவ்வுப்பின் நிறம் மாறும். இதுவே சவுக்காரம் என்றழைக்கப்படும். இதைக் கொண்டு முப்பு தயாரித்தல் மிகவும் எளிதாகும். இம் முப்புவினால் தயாரிக்கப்படும் மருந்தை உண்போர் ஞானியாவர் என்றும் ஆசிரியர் கூறுகிறார்.

4. —.

5. ஆதிநடு மூலத்தின் வெளிக்குள் ளான
வைங்கரனை யடிதொழுது அரனைப் போற்றி
சோதிமணி வடிவான தேவி சொல்ல
சூத்திரந்தான் பதினாறுஞ் சுருக்கிப் பாட
வேதியர மாயிரத்திரு னூறு சூஸ்திரம்
விளங்கியதோர் சவுக்கார குருவாஞ் சூஷ்ஷம்
நீதியாம் முன்னூலுக் கின்னூல் சூத்திரம்
முக்கியமாய்ப் பதினாறுந் திறவு கோலே. 1

6. பகருவான் மூலிகையின் போக்கு ஞானம்
பண்பான சவுக்கார மஷ்ட்ட சித்தி
பகருவான் குளிகையொடு எல்லாஞ் சித்தி
பாராவிட்டாற் சிற்றியில்லை வாதிகளே சொன்னேன்

பகருவான் விட்டகுறை வந்தோர்க் கல்லால்
பதினெண்பேர் னூல்பாற்று வகைதோ ணாதே
பகருவான் நிலைநின்று வாசி பூதிப்
பலிக்குமடா சூத்திரந்தான் பதினாறு முற்றே. 16

7. —.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பு; பேச்சுமொழிச் சொற்கள் மிகுந்துள்ளன. சித்தி என்பது சிற்றி என்றும், பார்த்து என்பது பாற்று என்றும் வருதல் காண்க. 10. இந்நூலின் முதல் பாடல் மூலம், சவுக்காரத் திறவுகோலின் என்பதின் விரிவாக 'அகத்தியர் சவுக்காரம் - 1200' என்னும் நூல் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது. சவுக்காரம் செய்யும் முறைகளை அகத்தியர் புலத்தியருக்குக் கூறுவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. 11. இல்லை.

IV. 1. R 280 (e - 1). 2. சி.ம.மை.ஆ.நி.எண் 302 (h). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. 'அகத்தியர் சவுக்காரத் திறவுகோல் 16' என்னும் இந்நூலை விடவும் சுற்று விரிவான செய்திகளைக் கொண்டு அகத்தியர் முப்பு சூத்திரம் - 26 என்னும் மற்றொரு நூலும் காணப்படுவது குறிப்பிடத்தக்க தாகும். இந்நூலின் படிகள் 'அகத்தியர் சவுக்காரம்' என்ற பெயரில் தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்திலும், சென்னை சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்திலும் சுவடிகளாகக் காணப் படுகின்றன.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. அகத்தியர் வைத்திய பரிபூரணம் நானூறு.
b. அகத்தியர் அம்மை சாஸ்திரம்.
c. நந்தீசுவரர் மதிகைப்பா நூறு.
d. நந்தீஸ்வரர் கைத்தாள சூத்திரம் ஐந்து.
e. நந்தீஸ்வரர் கைத்தாள சூத்திரம் எட்டு.
f. நந்தீஸ்வரர் கைப்பா ஐந்நூறு.
g. வைத்திய அகராதி.
h. அகத்தியர் ஞானம் மூப்பத்தாறு.

i. தன்வந்திரி நாடி சாஸ்திரம்.

j. வாகட சுரநூல்.

k. வைத்திய சாஸ்திரம்.

l. அகத்தியர் பின்னூல் என்பது.

n. இராம தேவர் கேசரி ஐம்பது.

o. கருவூரார் சூத்திரம் நூற்றுப்பதினாறு.

p. நாடி சாஸ்திரம்.

## அகத்தியர் சவுக்காரத் திறவுகோல்

I. *1.* **126.** *2.* அ. R. 280 (e-1). ஆ. T.(R) 263. இ.—. ஈ.—. *3.* அ. அகத்தியர் சவுக்காரத் திறவுகோல் *16.* ஆ. Akattiyar cavukkārat tiṟavukōl 16. இ. அகத்தீச னாயனார் செய்த திறவுகோல் சூஸ்திரம் *16.* *4.*—. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.*—. *10.*—.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* *5.* *5.* 28 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* நன்று. *12.* *9;* இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *7* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17.* *16* பாடல்கள்.

ஆ.—.

III. *1.* முப்பு தயாரிப்பதற்கு அடிப்படையாக அமையும் சவுக்காரத்தின் பண்புகளைக் கூறும் நூல். *2.* மருத்துவம். 3. வரிசை எண் 125 போன்றது.

*4.* அகஸ்தீச நாயனார் செய்த திறவுகோல் சூஸ்திரம் *16.*

5. ஆதிநடு மூலத்தின் வெளிக்குள் ளான
அய்ங்கரனை அடிதொழுது அரனைப் போற்றி
சோதிமணி வடிவான தேவி சொல்ல
சூஸ்திரந்தான் பதினாறு சுருக்கிச் சொன்னேன்
வேதமாம் ஆயிரத்திரு னூறு சூஸ்திரம்
விளங்கியதோர் சவுக்காரக் குருவாஞ் சூட்சம்
மூதியா முன்னூலுக் கின்னூல் சூஸ்திரம்
முக்கியமாம் பதினாறுந் திறவு கோலே. 1

6. பகருவான் மூலிகையும் போக்கு ஞானம்
பண்பான சவுக்காரம் மஷ்ட்ட சித்தி
பகருவான் குளிகையொடு யெல்லாஞ் சித்தி
பாராட்டால் சித்தியில்லை வாதிகளே சொன்னேன்
பகருவான் விட்டகுறை தவத்தோர்க் கெல்லார்
பதினெண்பேர் னூல்பார்த்தும் வகைதோ ணாது
பகருவான் நிலைநின்று வாசி யூதி
பலிக்குமடா சூஸ்திரந்தான் பதினாறு முத்தே. 16

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பிரதிபேதம், பாடபேதம் நிறைந்துள்ளன. 10. இந்நூற் பொருளைத் தேவி அகத்தியருக்குச் சொல்ல அவை அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.192(m). 2. சி.ம.மை.ஆ.நி.எண் 302(h). .உ.த.நி.எண் 199 : 403. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. திறவுகோல் என்றால் அடைத்திருப்பதைத் திறப்பது என்று பொருள்படும். இங்குச் சவுகாரத்தைத் திறப்பது என்று பொருள் கொள்ளலாம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள சுவடியில் இந்நூல் 'அகத்தியர் சூத்திரம் 16' என்ற பெயரில் காணப்படுகிறது.

## அகத்தியர் சவுக்காரத் திறவுகோல்

I. 1. **127.** 2. அ. R. 7880. ஆ. T.R. —. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 14. ஆ. Akattiyar cūttiram 14. இ. அகஸ்தியர் சூஸ்த்திரம் பதினாலு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 15 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறுசிதைவு. 12. 9; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு செய்வதற்குரிய அடிப்படையான முறைகளைப் பற்றிக் கூறும் நூல். 2. இரசவாதம். 3. அகத்தியர் சூத்திரம் 14 என்ற இந்நூலில் குறிப்பிட்டகாலத்தில், குறிப்பிட்ட இடங்களில் மண்ணின் அடியிலிருந்து விளையும் பூநீறு என்பதை எப்படிப் பெறவேண்டும் என்பது குறித்து ஆசிரியர் தெளிவுபடக் கூறுகின்றார். அதுபோலவே வெடியுப்பு என்பதைப் பெறும் முறையினையும், கற்சுண்ணம் பெறும் முறையினையும், பூநீறு, வெடியுப்பு, கற்சுண்ணம் ஆகியன முப்பு தயாரிப்புக்கு எவ்வளவு அளவு தேவைப்படும் என்பதையும் கூறுகின்றார். மேலும் இம்மூன்று பொருள் களோடும் சூடன், நவச்சாரம் முதலியன சேர்த்து அவற்றைச் சூரிய ஒளியில் காய்ச்சி எடுக்கும் முறையையும் கூறுகின்றார்.

4. அகஸ்த்தியர் பதினாலு சூத்திரம்.

5. ஆதிநடு மூலத்தில் வெளிக்குள் ளான
னைங்கரனை ..... ..... ..... போற்றி
சோதிமணி வடிவான தேவி சொல்ல
சூஸ்த்திரந்தான் பதினாலு சுருக்க மாகி
வேதமதாய் யாயிரத்தி யிருநூறு சூஸ்திரம்
விளங்கியதோர் சவுக்காரம் குருவாஞ் சூட்சங்
நாதியாம் முன்னூறுக் கின்னூல் சூஸ்திரம்
முக்கியமாய்ப் பதினாலுந் திறவு கோளே. 1

6. பகருவான் மூவிகையு ஞானந் தானும்
பண்பாகச் சவுக்காரம் மட்ட சித்தி
பகருவான் குளிகையொடு யெல்லாஞ் சித்தி
பாராட்டால் சதியில்லை நாதிகளே சொன்னேன்
பகருவான் விட்டகுறை தவத்தோர்க் கெல்லாம்
பதினெண்பேர் நூல்(ப்)பார்த்தும் வகைதோணாது
பகருவான் நிலைநின்று வாசி யூதிப்
.. குமடா சூஸ்திரம் பதினாலு முற்றே. 14.

7. தெட்சிணா மூர்த்தியார் மந்திரம் பதினாலு.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியாக, ஆடுஉ முனனிலையில், வடசொற்கள் அமைந்து காணப்படுகின்றன. மேலும்

பாடல்கள் ஒலிமாற்றங்களுடன் பேச்சு வழக்கு நடையில் பிரதி செய்யப்பட்டுள்ளன. 10. இந்நூலுக்குரிய அடிப்படைக் கருத்துக்கள் முப்பு பற்றிய அளவில் மட்டும் அகத்தியர் 1200, அகத்தியர் சவுக்கார குரு 300 ஆகிய நூல்களிலிருந்து தொகுத்துச் செறிவுடன் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 11. இல்லை.

IV. 1. R.I92 (m). 2. சி.ம.மை. ஆ.நி. எண்கள் 1041 c, 353 d, 1046 d, ஆ.நி.எண் 509 c. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை 1995. 3. இல்லை.

VI. இந்நூலுக்குத் 'தட்சணாமூர்த்தியார் மந்திரம் 14' என்ற பெயரும் உண்டு என்பதும், இது 14 பாடல்கள் பெற்றிருந்தாலும் 16 பாடல்கள் பெற்ற நூல் போன்றே அமைந்திருப்பதும் அறியத் தக்கன.

## அகத்தியர் சால நிகண்டு 200

I. 1. **128**. 2. அ. D. 1880. ஆ. T. D. 737. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சால நிகண்டு ஆ. Akattiyar cāla nikaṇṭu 16. இ. சால நிகண்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 23. 5. 28 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 46; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 203 பாடல்கள்.

ஆ. —.

III. 1.சாலங்களுக்குரிய கருக்களும் அவற்றைச் செய்யும் முறைகளும் கூறப்பெற்றுள்ளன. 2 சாலம் - மருத்துவம். 3. இந்நூல் தந்திரசாலம், இந்திராசலம், செப்பிடு வித்தை போன்றவற்றை வகைப்படுத்துகின்றது. தந்திரங்கள் அல்லது இந்திரசாலங்கள் பலவகையின: அவற்றில் பல தந்திரங்கள்

இந்நூலில் கூறப்பட்டுள்ளன. பாட்டுக் கொன்றாகத் பல கரு தந்திர சாலங்கள் விளக்கப்படுகின்றன. சாலங்களுக்குரிய கருக்களாகப் பல பெயர்கள் கூறப் படுகின்றன. நிகண்டாக நூறு தந்திரங்களுக்குரிய பெயர்கள் தரப்படுகின்றன. மேலும், தாது விருத்திக்கான மருந்துகள், வசியத்திற்கான மை வகைகள், அழிஞ்சில் தைலம், குளிகை, தும்பைக் கற்பம், மாரணம், மந்திரம், நண்டுவளை மண் முதலியன கூறப்பட்டுள்ளன. நயனக்கேடு ஈடு, தண்டு சுருங்க, பெருக்க, ஐங்காயம், மாரணமை, அஞ்சனம், வாடை, திலதம், கருவகை, பெரும்பாடு, பாவை வித்தை, குட்டி சாத்திர பூசை முதலியனவும் கூறப்படுகின்றன.

4. —.

5. உன்னிய பொதிகை வாழும்
ஒருமுனி யருளை யோதி
யின்னிலை நிகண்டு பாடித்
தந்திர சாலமிரு நூறு
பன்னிய பாசை தோணப்
பண்டித வேத னாவுக்
கன்னியு முமையும் யீசன்
கந்தனுங் காப்புத் தானே. 1

6. பாரினி லிந்த முறைப்படி பாத்து
தேறுநீ பாவஞ் செய்யவும்...
ஆறிநீ பாரு அறுபத்தி னாலும்
நேரிரு நூறு நிகண்டது முற்றே. (203)

7. அகத்தியர் நயினார் சால நிகண்டு முகிந்தது முத்தும். குருபாதமே கெதி.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பு; பிழைகள் மலிந்தது. பாடபேதங்கள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. நிகண்டு அமைப்பைப் பெற்றது. 11. இல்லை.

IV. 1. R.938.(c), R. 6143. 2. சி.ம.மை.ஆ.நி. எண் 55(b), த.ச.ம.நூ.எண்கள் 248(c), 743(i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சுவடிக்கட்டில் இந்நூலுடன் உள்ள பிற நூல்கள்: சட்டை முனி நிகண்டு, மச்சமுனி நிகண்டு, அகத்தியர் சகல கலைக்கியான பீடச் சுருக்கம் என்பன. தந்திரங்களை விநோத சாலம், விசித்திர சாலம் போன்று வகை செய்யலாம். சாலத்திற்கு மேலாகச் செகசாலம் விளங்குகின்றது. வினோத காந்த சாலம் என்பது மற்றொன்று. உலோகத்தை முறிக்கும் சாலம், சங்கிலி உருவும் சாலம், நீரில் விளக்கு எரிக்கும் சாலம், தேங்காய் உடைக்கும் சாலம், நெருப்பை வாயில் வைக்கும் சாலம், இரத்தம் கொட்டும் சாலம், முட்டை வெடிக்கும் சாலம், வாயில் அக்கினி உண்டாகும் சாலம், பறவை பறக்கும் தந்திரம், பழம் உண்டாகும் தந்திரம், நீரில் மிதக்கும் சாலம் முதலியனவும், கண்பற்றிய தந்திரங்கள், உடல் பெருகவும் சுருங்கவுமான தந்திரங்கள், பல வகை மை தொடர்பான தந்திரங்கள், பாவை வித்தைகள் போன்றனவும் தந்திரங்களில் அடங்கும்.

## அகத்தியர் சால நிகண்டு 200

I. *1.* **129.** *2.* அ. R. 938 (c). ஆ. T.R. 758. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சால நிகண்டு. ஆ. Akattiyar cāla nikaṇṭu. இ. அகஷ்த்தியர் சால நிகண்டு *200. 4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 52. 5.* 26x3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* சிறு சிதைவு. *12. 103;* இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *2* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 203* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* சாலங்களுக்குரிய கருக்களும் அவற்றைச் செய்யும் முறைகளும் கூறப்பட்டுள்ளன. *2.* சாலம் - மருத்துவம். *3.* வரிசை எண் *128* போன்றது.

*4.* —.

5. உன்னிய பொதிகை வாழும்
ஒருமுனி யருளை யோதி
முன்னிலை நிகண்டு பாடித்
தந்திர சாலமிரு நூறு

பன்னிய பாஷை தோணப்
பண்டித வேத னாவுக்
கன்னியு முமையு மீசன்
கந்தனுங் காப்புத் தானே. 1.

6. பாரினி லிருந்த முறைப்படி பார்த்து
தேறநீ பாவஞ் செய்யவும் வேண்டாம்
ஆறிநீ பாரு அறுபத்தி னாலும்
நேரிரு நூறு நிகண்டது முற்றே. (203)

7. அகத்தியர் நயினார் சால நிகண்டு முகிந்தது முத்தும்.
குருபாதமே கெதி.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அடைந்துள்ளன. பிழைகள் மலிந்த நடை. 10. இந்நூல், அகத்தியர் சாலத்திரட்டு 1200 லும் வேறானது. நிகண்டு அமைப்பைப் பெற்றது. 11. இல்லை.

IV. 1. D. 1880, R. 6143. 2. சி.ம.மை.ஆ.நி. எண் 55 (b), த.ச.ம.நூ.எண்கள் 248 (c), 743 (i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. 'அகத்தியர் சாலநிகண்டு 200' என்னும் இந்நூலின் படிகள் பிறசுவடி நூலகங்களிலும் இதேபெயரில் காணப்படுகின்றன. சரசுவதி மகால் நூல்நிலையத்தில் சுவடிஎண் 743 (i) லும் சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தில் எண் 55-b என்ற எண்ணிலும் அவை உள்ளன.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. சித்தராரூடம்.
b. ஞான மதியுள்ளான்.

## அகத்தியர் சால நிகண்டு 200

I. 1. **130.** 2. அ. R. 6143. ஆ. T.R. 2590. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு நிகண்டு 200. ஆ. Akattiyar cālattirattu nikaṇṭu 200. இ. அகஷ்த்தியர் சாலத்திரட்டு நிகண்டு. 4. —. 5. —. 6. குத்தாலிங்கம். 7.—. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 44. 5. 21x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு.12. 88; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது.13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 203 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சாலங்களுக்குரிய கருக்களும் அவற்றைச் செய்யும் முறைகளும் கூறப்பட்டுள்ளன. 2. சாலம் - மருத்துவம். 3. வரிசை எண் 128 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

5. உன்னிய பொதிகை வாழு
மொருமுனி யருளை யோதி
முன்னிய நிகண்டு பாடி
யிந்திர சால நூலைப்
பன்னிய பாஷை தோணப்
பண்டித வேத னாகிக்
கன்னியு முமையு மீசன்
கணபதி காப்புத் தானே. 1

6. பாரினி லிந்த முறைப்படி பார்த்துத்
தேறுநீ பாவஞ் செய்யுவும் வேண்டாம்
மாறிநீ பாரு அறுபத்து னாலும்
நேரிரு நூறு நிகண்டது முற்றே. 203

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்புடன். பேச்சுவழக்குச் சொற்கள் கலந்தும் உள்ளன. 10. இந்நூல் அகத்தியர் இந்திரசாலம் 1200 லும் வேறானது. நிகண்டு நூலாகவும் திரட்டு நூலாகவும் உள்ளது.11. பிரபவா வருஷம் கார்த்திகை மாதம் 6 ம் தேதி புதன்கிழமை 15 நாழிகைக்கு எழுதி முகிந்தது. சங்கரலிங்கத்து மகன் குத்தாலலிங்கம். குருபாதமே கெதியுண்டாகவும்.

IV. 1. D. 1880, R 938 (c). 2. சி.ம.மை.ஆ.நி.எண் 55 (b), த.ச.ம.நூ.எண்கள் 248 (c),743 (i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்திரசாலம் 1200 பாடல்களில் உள்ள நான்கு காண்டங்களில் ஒரு காண்டம்

பல்வகைத் தந்திரங்களைப் பற்றியது. அதைப் போன்றே அகத்தியர் இந்திரசாலத் திரட்டு என்ற நூல் 1200 பாடல்களைக் கொண்டுள்ளது. இவ்விரு நூல்களிலிருந்து மாறுபட்டதாக அகத்தியர் சால நிகண்டு 200 என்பது விளங்குகின்றது.

இச் சுவடிக்கட்டில் அகத்தியர் சால நிகண்டு 200 என்ற இந்நூலுடன் அகத்தியர் பரிபூரணம், அகத்தியர் மாந்திரீகம் 89 முதலான நூல்களும் உள்ளன.

## அகத்தியர் சிதம்பர அட்டகர்மம் 16

I. 1. **131**. 2. அ. R. 280 (b). ஆ. T.R. 263. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சிதம்பர அஷ்ட கர்மம். ஆ. Akattiyar citampara aṣṭakarmam. இ. அகத்தீசர் சிதம்பர அஷ்ட கர்மம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. 1915-16ல் சென்னை திருவல்லிக்கேணி காதிர் பைக் சாகிபிடமிருந்து பெறப்பட்டது.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 24x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 17; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7-9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. உரைநடைப் பகுதியும் 16 பாடல்களும் உள்ளன.

ஆ. —.

III. 1. அட்ட கருமம் செய்வதற்கான மந்திரங்களைக் கூறும் நூல். 2. அட்டகருமம். 3. அகத்தீசர் சிதம்பர அஷ்டகருமம் என்ற இந்நூலில் 16 விருத்தப்பாடல்களும் இடையிடையே உரைநடையும் அமைந்துள்ளன. முதலாவதாக, அட்டகரும மாந்திரீகங்களான ஆகர்சணம், உச்சாடனம், தம்பனம், பேதனம், மாரணம், மோகனம், வசியம், வித்துவேசனம் ஆகியவற்றைச் சிவயோகத்திற்கு ஆதாரமான மூலத்தைத் தொழுது அதனுடன் கலந்த நிலைகளை இந்நூல் விளக்குகின்றது. ஓங்காரத்திலிருந்து வெளிப்பட்ட உகாரமே நாதமெனும் சக்தியாகவும், அகாரமே சிவமாகவும், வாலை என்பதே சிகாரமாகவும் கூறப்படுகின்றன. மகாரமென்பது

அகர, உகரம் சேர்ந்ததாம்; வகார மென்பது தீட்சையின் முடிவாம். இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விளங்குவது ஓங்காரமாம்; ஓங்காரமே ஆதியாம்; ஆதியை அறிந்தவர்களும், மூலத்தை அறிந்தவர்களும் பரமஞானியாவார்கள் என்பது இந்நூலின் கருத்துக்களாகும்.

4. அகத்தீசர் சிதம்பர அஷ்ட கர்மம்.

5. நிந்தனை யில்லா நிருதிகம்பனம் நகாரம்
நிசமான தாமரையின் மணிப்பலகை யாலாம்
சிந்தனை யில்லா மகாரமோ களங்குபேரன்
சிறந்தசிவ மணிமுள்கு பலகையுமோ அலநி
அந்தமுத லக்கினியில் மாரணந்தான் சிகாரம்
அழகான நாவிமணிப் பலகையுமோ அத்தி
வந்தியில்லா வாயுவிலுச் சாடணம் வகாரம்
மணிசிந்தப் பலகையிலா மகிழ்ந்துசிவம் பண்ணே. 1

6. பாருங்காண் பதினாறு கோணத் துள்ளே
பாங்கான முக்கோணம் பரிவா யிட்டு
ஆருங்கா ணறியாத யகாரஞ் சித்தி
அதினடுவே ரீங்கார மாறி யிட்டுச்
சேருங்காண் பதினாறு யெழுத்ததனி லிட்டுத்
தெரிசனையா மதின்மேலே வட்ட மிட்டுத்
தீருங்காண் திருநீற்றை மெய்யி தென்று
சிதம்பரமாம் சக்கரத்தை மொழிவேன் பாரே. 16

7. பதினாறு கோணத்தில் நிற்குமெழுத்து ஓம், ஆம், ஹ்ரீம் இறீயும் சிறீயும் ஐயும் கிலியும் சவ்வும் அவ்வும் உவ்வும் மவ்வும் சிவாயநமஃ ஆயிரத்துக்கு நடுவே அஷ்டதளம் நிற்பது. நடுவே முக்கோணம்; நடுவே விந்து வட்டம், விந்துக்குள்ளே அஷ்டதளத்திலும் இடுவது எழுத்து. ஐயும் கிலியும் சவ்வும் சிவய நம!

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. மந்திரச் சொற்கள் மிகுதியாகக் கையாளப் பட்டுள்ளன. சக்கரங்களும் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. மந்திரங்களையும் சிவம் தொடர்பான அட்ட கருமங்களையும் கூறுவதால் சிதம்பர அட்டகருமம் எனப் பெயர் வழங்கப்படுகின்றது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அட்டசித்திகள், அட்டாங்க யோகங்கள், அட்ட மங்களங்கள், அட்டதிக்குகள் - என எண்வகைகளைப் போல கருமங்களும் பெயர்பெறுகின்றன. ஆயினும் சிவத்தின் மந்திர சொற்களும் கூட இருந்தால் அக்கருமங்களுக்கு மேலும் வலு ஏற்படுகிறது என்பதை இந்நூல் உணர்த்துகிறது.

## அகத்தியர் சிந்தாதியெண்ணை 8

I. 1. **132** 2. அ. R. 1883 (a). ஆ. T.R. 1059. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சிந்தாதி யெண்ணை 8. ஆ. Akattiyar cintāti yeṇṇai 8. இ. அகத்திய மாமுனியருளிய சிந்தாதி யெண்ணை 8. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 25x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 8; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 4 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள் .

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் வியாதிகளுக்கு எண்ணெய் தயாரித்துப் பயன்படுத்தும் முறையும் பயனும் கூறும்நூல். 2. மருத்துவம். 3. கவுசை ரோகம், சூலைரோகம், சொறிசிரங்கு, பெரும்பாடு, கிரந்தி, மேகம், வெட்டை, நாவடைப்பு, வாய்ப்புண், கண்ணெரிச்சல், ஊதுவாய்வு முதலான பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் சிந்தாதி எண்ணெய் தயாரிப்பு முறையினை இந்நூல் கூறுகிறது. காயம், உள்ளி, வாளம், வெண்காரம், காட்டெருமைப்பால், கடுக்காய், இந்துப்பு, சீரகம், திப்பிலி, சுக்கு, தேங்காய்ப் பால், வேலிப் பருத்திச் சாறு முதலியவற்றை வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்துக் கல்வத்திலிட்டு மை போலாட்டிக் குழப்பிக் கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு சிந்தாதி எண்ணெய் தயாரிக்கப்படும் முறையும் அது சில நோய்களைக் குணப்படுத்தும் முறையும் கூறப்படுகின்றன.

4. அகஸ்திய மாமுனிவர் வாலை. இதில் சிந்தாதி யெண்ணை 8. குளிர்ச்சி யெண்ணை 5. சிந்தாதி எண்ணை 8.

5. சீர்சிறந்த உடல்தனிலே கவுசை ரோகஞ்
சிரசுகளிற் குடியிருந்த மைற்ற ரோகம்
பார்தனிலே விழுந்தெழுந்த சூலை ரோகம்
பம்பரம்போ லாடுகின்ற நீராம்பல் கட்டி
நீரிழிந்த கற்கூடு நிர்மலத்தின் கட்டு
நேரான சொறியோடு ரணங்கள் தானும்
பேர்பெரிய பெரும்பாடு நாவ டைப்பு
பின்னுமொரு கிரந்தியொடு மேகந் தானே. 1

6. பேரிட்ட சிந்தாதி யெண்ணை தன்னைப்
புலத்தியனே பூசைசெய்து பூரணமாய் வாங்கு
நேரிட்ட சிறியோர்க்குப் பெரியோர்க்கு மாகும்
நிலையாயப் பத்தியங்கள் நீகூட் டாதே
வாரிட்ட யிந்நூலை வெளிவி டாதே
வாங்காதே தோஷத்தை வாங்கி டாதே
காட்டிட்ட பண்டிதர்கள் கருத்தாய்ப் பார்த்து
கண்டுகொள்ளு யிவ்வெட்டுக் கடாஷ்ச முற்றே. 8

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. சில சொற்களில் வடமொழி எழுத்துக்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. அகத்தியர் புலத்தியருக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. அகத்தியர் நூல்களில் சிந்தாதி எண்ணெய் தவிர பிற எண்ணெய்கள் பற்றித் தனிநூல்கள் உள்ளன. அவை:

1. அகத்தியர் மேகத்தெண்ணெய் 5
2. அகத்தியர் குளிர்ச்சி யெண்ணெய் 5
3. அகத்தியர் மேகத் தெண்ணெய் 14

முதலிய நூல்களாகும். இந்நூலில் சிந்தாதி எண்ணெய் பெரியவர்களுக்கும், சிறியவர்களுக்கும் பத்தியமில்லாமல்

பயன்படுத்த உதவும் என்பதும், இந்நூற்செய்திகள் வெளியே சொல்லக்கூடியன அல்ல எனக் குறிப்பிடுவதும் காண்க. மக்களுக்குப் பயன்பெறும் மருந்துப் பொருள்களை (இரகசியமாக) மந்தனமாக வைத்ததன் காரணமாகவே சில மருந்து செய்முறைகள் நம்மிடமருந்து மறைந்து விட்டன.

## அகத்தியர் சுத்தஞானம் 9

I. *1.* **133.** *2.* அ. R. 6089. ஆ. T.R. 2555. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சுத்த ஞானம் *9.* ஆ. Akattiyar cutta ñāṉam *9.* இ. அகஸ்த்தியர் சுத்தஞானம் ஒன்பது. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4.* 3. *5.* 25 x 3 செ.மீ. *6.* ஒரு துளை. *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* நன்று. *12.* 6 ; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 7 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17.* 9 பாடல்கள்.

ஆ. —.

III. *1.* ஞானமார்க்கம் பற்றிக் கூறும் நூல். *2.* ஞானம். *3.* அகத்தியர் சுத்த ஞானம் ஒன்பது என்ற இந்நூலின் முதல் பாடலில் 'சத்தியமே பராபரமே ஒன்றே தெய்வம்' அதுவே அனைத்து உயிர்களுக்கும் தலைவன் என்று கூறப்படுகிறது. புத்தியுள்ள புண்ணியோர்கள் இப்பூமியில் கோடியில் ஒருவருண்டு. அவர்தான் பரம ஞானி. அவர்கூறும் சுழிநிலை அறிந்தால் மோட்சம் கிடைக்கும் என்றும் இந்நூல் கூறுகிறது. மோட்சம் பெறுவதற்கு மோகமுடன், பொய், களவு, கொலை செய்யக்கூடாது, கோபம் கொள்ளக்கூடாது, புண்ணியம் செய்யவேண்டும், பல நல்ல நூல்களைப் படிக்க வேண்டும், ஒருவனென்றே தெய்வத்தை வணங்கவேண்டும். நல்ல உத்தமனாய் இருக்கவேண்டும். இவை போன்று பல அறிவுரைகளை இந்நூல் பகருகின்றது.

*4.* ஹரிஓம் நன்றாக அகஸ்தியர் சுத்த ஞானம் ஒன்பது.

*5.* சத்தியமே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலருக்குஞ் சிவனுயிர் தானாச்சு
புத்தியினா லறிந்தோர்கள் புண்ணி யோர்கள்
பூதலத்துக் கோடியிலே ஒருவ னுண்டு

பத்தியினால் மனமொருங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனதைவிடார் பரம ஞானி
சத்தியே யறிவதில்லை சூட்சம் சூட்சம்
சுழிக்கிலே நிலையறிந்தால் மோட்சந் தானே. 1

6. சத்தியமே வேணுமடா மனுட ரானார்
சண்டாள ராகாது தவறா காது
நீதிநெறி தவறாதே நெறிமற வாதே
நிஷ்டையுடன் சமாதிவிட்டு நிலைபெ றாதே
புத்திகெட்டுத் திரியாதே பொய்சொல் லாதே
புண்ணிய மறவாதே பூசை மறவாதே
கத்தியே சள்ளிட்டு தரிக்கமி டாதே
கர்மியென்றும் நடவாதே காலே முற்றே. 9

7. அகஸ்தியர் அருளிச்செய்த சுத்த ஞானம் ஒன்பதும் முற்றிற்று.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ர- ற, ள-ழ வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11.இல்லை.

IV. 1. இல்லை. 2. த.ப.க. எண் 509. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), 'அகத்தியர் ஞானம் 9' 'அகத்தியர் வாதசௌமியம் என்னும் சௌமிய சாகரம் 1200', தாமரை நூலகம், சென்னை, 1993. 3. இல்லை.

VI. நீதி நூல்கள் போன்று மானிடர்க்கு அறிவுரைகளைக் கூறிச்செல்வதால் இந்நூல் இப்பெயர் பெற்றுள்ளது. ஞானத்திற்கும் சுத்த ஞானத்திற்கும் உள்ள தொடர்பு மானிடர்க்கும் ஞானிகளுக்குமுள்ள தொடர்பாகும். சிவ தத்துவம் ஐந்தனுள் சுத்த ஞானமும் ஒன்று. ஞானம் அதிகமிருந்து கிரியை குறைந்திருந்தால் அது சுத்த ஞானம் எனப்படுகிறது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் சுத்த ஞானம் 9 என்ற இந்நூலுடன் அகத்தியர் பூரணச் சந்திரோதய வாலை 200 என்ற நூலும் உள்ளது.

## அகத்தியர் சுருக்கம்

I. 1. **134**. 2. அ. R. 4152. ஆ. T.R. 1845. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சுருக்கம். ஆ. Akattiyar curukkam. இ. அகத்தீசர் சுருக்கம் 217. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 24. 5. 26 x 3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனைஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 48 ; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 217 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வாததோசம், சுரதோசம், திரிதோசம் முதலான பல்வேறு தோசங்களுக்கான மருந்து செய்முறைகளை இந்நூல் விரித்துக் கூறுகின்றது. 2. மருத்துவம். 3. அகத்தியர் சுருக்கம் என்ற இந்நூல் வாததோசம், திரிதோசம், சுரதோசம் போன்ற தோசங்கள் தீருவதற்கு 'திரிநேத்திர மை' என்னும் மருந்து வேண்டுமென கூறப்படுகிறது. இந்த மை செய்யும் முறை: அரன்விந்து விராகன் 2, வெடிதேங்காய், சுட்டக்கரி விராகன் 2, கடல்வித்து விராகன்-2 இவைகளை எடுத்துச் சுத்தி செய்து கல்வத்தில் இட்டு ஆட்ட வேண்டும். நாடிகளின் நிலையைக் கொண்டு நோய்களின் தன்மைகளை அறிந்து குணப்படுத்தும் முறையையும் கூறுகிறது. சுரங்களின் நிலைகள், அவற்றிற்குக் கசாயங்கள், சன்னி, பற்பல வாதரோகங்களுக்கு மருந்துகள், போன்ற பல செய்திகளும் கூறப் பட்டுள்ளன. மேலும், சிவந்த கரப்பான், வங்குநோய், செவ்வட்டை, படர் தாமரை முதலான பல்வேறு நோய்களுக்கான மருந்துகளும் கூறப்படுகின்றன. மாதுளங்க வில்வாதி இலேகியம், சற்பங்க வில்வாதி இலேகியம், கலிங்காதி இலேகியம், மாதுளங்காதி சூரணம், அக்கினியாதி சூரணம், காந்தலிங்காதி சூரணம், இராமபாணத் தயிலம், உத்தமாங்கத் தயிலம், சற்பகண்டத் தயிலம், வில்வாதித் தயிலம், குக்கிலக் கிருதம் முதலான மருந்துகளைத் தயாரிக்கும் முறைகளையும், ஈளை, இருமல் முதலான பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் முறைகளையும் இந்நூல் கூறுகிறது.

4. —.

5. சுரத்தின்மேல் வரும்வாத தோஷத் தோடு
சுரதோஷம் திரிதோஷம் பிறதோஷ முற்று
வரும்தோஷ மெல்லா மொழிவ தற்கு
உரைக்கிறேன் திரிநேத்திர மைதா னப்பா
விரித்தசடை அரன்விந்து விராகன் ரெண்டு
வெடிதேங்காய் யோடுசுட்டக் கரிதான் ரெண்டு
கரித்தகடல் வித்ததனைச் சுத்தி செய்து
கனக்கவே விராகன்ரெண்டு கலவத் தாட்டே. 1

6. உலத்தி யிடித்துப் பொடிபண்ணி
யுடனே சீலை வடிகொண்டு
பிலத்தே வெருகடி தான்கொள்ளப்
பேரும் வியாதி யினிக்கேளு
சிலத்த குடம் வங்குநோய்
சிவந்த கறப்பான் செவ்வட்டை
யுலத்துங் கரப்பான் படர்தாமரை
யுற்ற குறைநோ யிவையெல்லாந்
திலத்து நுதலாய்த் தீருமெனத்
தெளிந்தே முனிவன் சொன்னாரே. 217

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் சுருக்கம் எனும் இந்நூல் அகத்தியர் வைத்திய காவிய நூலின் சுருக்க நூலாகும். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. -—. 3. இல்லை.

VI. இந்நூலினைப் போன்றே தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்திலும், சித்தமருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தி லும் சுவடிகள் காணப்படுகின்றன. இறுதிப் பாடல் 5 அடி விருத்தமாக உள்ளது.

# அகத்தியர் சூத்திர நிகண்டு 16

I. *1.* **135.** *2.* அ. D. 1877. ஆ. T.D. 738. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சூத்திர நிகண்டு *16.* ஆ. Akattiyar cūttira nikaṇṭu 16. இ. அகத்தியர் சூத்திர னெகுண்டு பதினாறு. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* ஓட்கட்டு. *2.* தமிழ். *3.* ஓரளவு தெளிவு. *4. 3. 5.* 34 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* சிதைவு. *12. 6;* இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. *13.* பக்கத்திற்கு *9* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* குறை. *17. 16* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* இரசவாதம், யோகம், மருத்துவ முறைகள் என்ப வற்றைக் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* இந்தச் சுவடிநூல் கருக்கிடையும் குருக்கிடையும் கூறுவதோடு பல்வேறு உலோகங் களிலிருந்தும், மூலிகைகளிலிருந்தும் பொடிகள்செய்து இரசவாத மூலம் தங்கம் உருவாக்கும் முறைபற்றியும், பல மருந்து செய்முறைகள் பற்றியும் கூறுவதாகும். ஆயினும் *16* பாடல்களே உள்ளதால் வெறும் இரசவாதச் செய்திகள் மட்டுமே இந்நூல் கொண்டுள்ளது. சில பெயர்களின் பட்டியலும் இடம் பெற்றுள்ளது.

*4.* —.

*5.* ஆதியாம் பராபரமே குருவே அய்யா
அகண்டசரா சரமான நிர்க்குணமே அய்யா
பேதியாம் நின்மலமே சூஷ்சா சூஷ்சம்
பெரிதான கணபதியும் வல்லபையும் காப்பு
நீதியாம் நிகண்டொருநூற்றுப் பதினாறுக் குள்ளே
நிகழ்த்தினேன் கருக்கிடையுங் குருக்கிடையும் நன்றாய்ச்
சொன்னேன்
வாதிகள்தா னின்னூலைக் கண்ணில் காட்டார்
வகுத்திட்டே நிகண்டுனூல் நன்றாய்ப் பாரே. 1

6. சித்தான வுடம்பதுதான் தெளிவுண் டாகுந்
தேகசித்தி யோகசித்தி ரண்டு மாகும்
முத்தான முத்தரென்று பேரு மீய்வார்
முனிசித்தாள் கெவுனசித்தாள் காட்சி யாகும்
பத்தான பத்தனெனப் பூமியிலே சுளத்த தாகும்
..... ..... ..... .....
..... ..... ..... .....
கோடான கோடிவித்தை யாட லாமே. 16

7. —.

8. மூலம். 9. பிழைகள் மலிந்தது. பேச்சுநடை. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன; பாடவேறுபாடுகள் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றது. நிகண்டு எனப் பெயரியது. ஆயினும் சில சொற்களின் அகராதியும் உண்டு. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சுவடியில் 3 வெற்றோலைகள் உள்ளன. இந்தச் சுவடிக் கட்டில் 1 முதல் 3 ஓலைகளில், அகத்தியர் சூத்திர நிகண்டு 116-ம், 4 முதல் கொங்கணர் கலை ஞான சூத்திரம் 200 என்ற நூலும் உள்ளன. அகத்தியர் நிகண்டு, அகத்தியர் வைத்திய நிகண்டு, அகத்தியர் சூத்திர நிகண்டு என்பன போன்று பெயர்பெறும் இந்நூல் அகராதிபோன்ற அமைப்பைப் பெறாது மருந்துப் பெயர்களின் பட்டியல் கொண்டிருப்பதால் நிகண்டு எனும் பெயர் பெற்றது.

## அகத்தியர் சூத்திரம்

I. 1. **136**. 2. அ. R. 4189. ஆ. T.R. 1849. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம். ஆ. Akattiyar cūttiram. இ. அகஸ்தியர் சூஸ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 22 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 18 ; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு

*9* வரிகள். *14.* உரைநடை. *15.* நடுவில். *16.* குறை. *17. 162* வரிகள்.

ஆ. —.

III. *1.* உடம்பில் ஏற்படும் பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் மருந்து செய்முறையைக் கூறும் நூல். *2.* மருத்துவம். *3.* இந்நூல் பல்வேறு நோய்களுக்கான மருந்துகளாகக் கற்பம், செந்தூரம், பற்பம் ஆகியவற்றைத் தயாரிக்கும் முறையையும், அவை நோய்களைக் குணப்படுத்தும் நிலைகளையும் கூறுகிறது. செந்தூரம், சுன்னம், முப்பு போன்ற மருந்துகளைத் தயாரித்து, நோய்களைக் குணப்படுத்தும் செய்தியையும், பத்திய முறைகளையும் கூறுகிறது. செந்தூரப்போக்கு, வங்க பற்பம், செய நீர், குரு தியானம், மூலம், சுன்னம், முப்பு போன்றவற்றையும் கூறுகிறது.

***ரத்தகாசம் தீர பால்:*** முக்கால் வீசம் படிகாரத்தை *8* அவுன்ஸ் பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சி ஆறினபிறகு *3* அவுன்சு வீதம் தினம் மூன்று தடவை கொடுக்க இரத்தகாசம் குணமாகும். வங்கபற்பம், இரசபற்பம், தாம்பிரபற்பம் என்பவை சன்னி தோசம், குளிர்சுரம், கிரந்தி, மேகம், வெள்ளை போன்ற நோய்களைக் குணப்படுத்தும் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. —.

5. சங்கம்வேர் கொழுந்து, தைவேளை, நவச்சாரம், இணங்கன் சுன்னம், துரிசு, வெள்ளை, வீரம், பூரம், செவிகள்ளி சாற்றா லாட்டி நாகத்திற்குப் பூசி சீலைமண்செய்து கோழி புடமிட மாளும். மேற்படியில் நாகபற்பம் பலம் 1 பூரம் சவ்வீரம் கெந்தி லிங்கம், துருசு, வெள்ளை, வெண் சுண்ணம், வெண்காரம், வங்க பற்பம், நவச்சாரம் சீலை சூதம் மடை துரிசு இந்திரப்பூச்சி பழச்சாற்றாலாட்டி முன்போல் எரிக்க செந்தூர மாகும்.

6. ***வீரசெந்தூரம்:*** வீரம் வெள்ளாதாணைப் பாலில் ஊறப் போட்டு சிறு செருப்பிடை இலை அரைத்துப் பொதிந்து மேற்படி சமூலம் உலர்த்தித் துணியில் பற்பம் அதற்குள் மேற்படி கவசத்தை வைத்து மேற்படித் துணியை மூடி தீக் கொளுத்திப் போடவும்.

7. —.

8. மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் எழுதப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் நூல்களில் அதிகம் மருத்துவ சம்மந்தமான நூல்களேயாகும். அந்நூல்கள் செய்யுள்வகையில் பாடப் பெற்றுள்ளன. அவற்றிலிருந்து இது மாறுபட்டு உரை நடையில் எழுதப் பெற்றுள்ளது.

## அகத்தியர் சூத்திரம்

I. 1. **137**. 2. அ. R. 4150. ஆ. T.R. 1842. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம். ஆ. Akattiyar cūtt iram. இ. அகஸ்தீஷ்பரர் பாடல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஒரளவு தெளிவு. 4. 14. 3. 15 x 2 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 28; இரு பக்கங்களிலும்எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. பாட்டும் உரைநடையும். 15. இல்லை. 16. முழுமை. 17. 140 வரிகள்.

ஆ. —.

III. 1. பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறை களையும் வர்மத்தையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் பல்வேறு மருந்து செய்முறைகளும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும் கூறப்படுகின்றன. மட்டுமின்றி, கொண்டைக் கொல்லி வர்மம், திலத வர்மம், நச்சேத்திர வர்மம், கண்ணாடி வர்மம், செவிக்குத்தி வர்மம், நாடி வர்மம், வளவர்மம், தொண்டைக் குழியில் திமிழ் வர்மம், பிடரி வர்மம், சுழியாடி வர்மம், துடி வர்மம், தேசை வர்மம், அடப்பு வர்மம், பள்ள வர்மம், முண்டல் வர்மம், கூம்பு வர்மம், அத்தி சுருக்கி வர்மம் முதலான பல்வேறு வர்மங்களையும், அவ்வர்மங்கள் உடலில் எவ்வெவ் பாகத்தில் சார்ந்துள்ளன என்பதையும் விரிவாக இந்நூல் எடுத்துரைக்கிறது.

4. —.

5. நெத்தி புருவத்திலும் யேழு விரலுக்கு மீதே கொண்டைக் கொல்லி வர்மம் கடினம் செய்யப்படாது. நெத்தி புருவத்தில் ஒரு புளியிலைக்குத் தாளை திலதவர்மம் 2 வலத்தே கடைக்கண்ணில் ஒரு இறைக்கி அருக்க நச்சேத்திர வர்மம் 3 இடதுபுறம் ஒரு கிறைக்கி அருக்கல் - பொய்கவர்மம் 4 மூக்கு நடுவில் கண்ணாடிவர்மம் 5 மூக்கு முனையில் கொம்பேரி மூக்கன் 6. செவிக்குத்தி வர்மம்

6. ..... ..... ..... .....
..... ..... ..... .....
..... ..... ..... .....
அலையாதே ஆணியாகும் யிதுசூத்திரம் முப்பதுந்தான்
ஆரடா என்போலே சொல்லப் போறார்
அழகான நவமணிபோல் கண்ட முற்றே. 32

7. வர்மங்கொண்டால் சோதனை. மிளகு உரைத்துக் கண்ணிலிட கண்ணீர் வருகில் சீவனுண்டு. நீர் இல்லா விட்டால் சீவனில்லை என்றறியவும்.

8. மூலம். 9. பேச்சுவழக்குச் சொற்கள் பயின்றுள்ளன. பிழைகள் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. 11. வெள்ளைய நாடாருடைய ஏடு.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் வர்மம் சம்பந்தமான செய்திகளை விரித்துப் பேசுகிறது. வர்மம் பற்றிய நூல்களாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 'வர்ம சூத்திரம்' என்ற நூலினையும், ஆசியவியல் நிறுவனம் 'வர்மசூத்திரம்' என்ற நூலினையும் சுவடியிலிருந்து பதிப்பித்து வெளியிட்டுள்ளன.

## அகத்தியர் சூத்திரம்

I. 1. **138.** 2. அ. R. 3610. ஆ. T.R. 1780. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம். ஆ. Akattiyar cūttiram. இ. அகஷ்த்தியர் சூஷ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 17. 5. 19 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 34; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 119 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருந்துப் பொருள்களின் குணங்களும், நோய்தீர்க்கும் முறையையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல் பல்வேறு பதார்த்தப் பொருள்களின் மருத்துவக் குணங்களையும், அவை நோய்களுக்குப் பயன்படும் முறைகளையும் கூறுகிறது. சிறுபயிறு, பெரும் பயிறு, உளுந்து, கடலை, துவரை, மொச்சை, வயல் பயறு முதலான பயறு வகைகளின் குணங்களையும் மருத்துவப் பயன்களையும், மிளகு, திப்பிலி, இஞ்சி, ஈருள்ளி, கொத்தமல்லி, கார்கோலரிசி, ஓமம், வெந்தயம், கடுகு, நற்சீரகம், சதகுப்பை, திரிகடுகு, அதிமதுரம், இலவங்கம், கருஞ்சீரகம் ஆகியவற்றின் மருத்துவக் குணங்களையும், காய்ந்தநீர், முலைப்பால், சாரணைவேர், ஆடாதோடை, பன்றிநெய் முதலானவற்றின் குணங்களை யும், இம்மருந்துப் பொருள்கள் சேத்துமத்தால் வந்த இருமல், வாதத்தால் வந்த சுவாச காசம், கிரந்திப்புண், கல்லடைப்பு, சன்னிக்கு தோஷம் முதலான பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் முறைகளை யும் கூறுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக குரு முன்னிற்க.

5. சிறுபய றதனைக் கொண்டால் தீர்ந்திடும் பித்தஞ் சத்தி
மறுகுபே ருழலை காசம் வயறெறிப் பகலும் பின்னைப்
பொறுதியாய்ப் புத்தி சேரும் பூதலத் தோர்கட் கெல்லாம்
உறுதியாய் வருநோய்க் கெல்லாம் உப்பன கறியி தாமே. 1

6. பஞ்சமூலம் பொங்கும் பண்ணோய் கனவாய்வுவரும்
நெஞ்செரிப்பு மந்தமதை நீக்கிவிடும் - ஒஞ்சாதே
காச்சியிருந்த கடிய வாதம் வாய்வுக்
காச்சல்அறுங் குன்மம்போங் காண். 119

7. —.

8. மூலம். 9. பேச்சுமொழிச் சொற்கள் மிகுந்துள்ளன. 10. இந்நூல் பதார்த்த குணசிந்தாமணியைப் போன்றதாகும். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —.3. இல்லை.

VI. பதார்த்தங்களின் குணங்களையும் அப்பதார்த்தங் களால் பல்வேறு மருந்துகள் செய்யும் முறைகளையும் கூறும் நூலான பதார்த்த குண சிந்தாமணி போலன்றி இந்நூல் பல்வேறு பதார்த்தங்கள் போக்கும் நோய்களைக் கூறுவதன் மூலம் சிறப்படைகிறது. இச்சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் என்ற இந்நூலுடன் அகத்தியர் வைத்திய வாகடம் 50, அகத்தியர் குழம்பு வாகடம், அகத்தியர் சூத்திரம் 36, அகத்தியர் சூத்திரம் 205, அகத்தியர் வாகடத் திரட்டு, அகத்தியர் வைத்திய சூத்திரம் 150, அகத்தியர் பூரண சூத்திரம் 48, அகத்தியர் பச்சைவெட்டு 16, அகத்தியர் வைத்திய சூத்திரம் முதலான பல்வேறு நூல்களும் உள்ளன.

## அகத்தியர் சூத்திரம் 4

I. 1. **139**. 2. அ. R. 6214 (d). ஆ. T.R.2627. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 4. ஆ. Akattiyar cūttiram 4. இ. அகஸ்தியர் சூஸ்திரம் நான்கு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ. சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 2; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு ஏழு வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 4 பாடல்கள்

ஆ. —.

III. 1. இந்நூலில் பற்பம் செய்யும் முறைகள் கூறப்பட்டுள் ளன. 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் 4 என்ற இந்நூலில் சுன்னம், பற்பம் போன்ற மருந்துகள் செய்முறைகள் கூறப்படுகின்றன. சுன்னத்தை எடுத்து உமிழ் நீற்றால் ஆட்டி வில்லை செய்து வெயிலில் உலர்த்தி ஓடுரெண்டில் வைத்து

மூடி, சீலை செய்து, புடம்போட்டால் பற்பமாகும். இப் பற்பத்தைப் பக்குவமாக உண்டு வந்தால் தேகசித்தி கிடைக்கும். உடல்சுந்தரம்போல் அழகாக விளங்கும். மேலும், இப்பாடல்கள் வாசி, சித்தி, வாதம் பற்றியும் கூறுகின்றன.

4. அகஸ்த்தியர் சூஸ்திரம் நான்கு.

5. மதியான ரவிபத்து மாலை மாவு
மஞ்சான பதிரவியி லுலர்த்திக் கொண்டு
பதியான அதையெடுத்துப் பாண்டத் திட்டுப்
பண்பாக நடுவிலொரு தமரு மிட்டு
சதிராகக் குழித்தயில மிரக்கிக் கொண்டு
சட்சுதாந்த மென்றுமேத் துவிலே யிட்டு
சுதியான சரக்கெல்லா மித்தயிலந் தோய்த்துச்
சூரியனிற் காட்டிடவே சுன்ன மாமே 1

6. பற்பமடா சுரோணிதந்தான் ஆதி ஆதி
பகலொளியே காணுமடா ரவியி லப்பா
தற்பனஞ்செய் காயசித்தி சிவமே பண்ணு
சதாகோடி காலமட்டும் வேதை யாகும்
அற்பமென்றி ருந்தாக்கல் ஆகா தப்பா
அரனாணை மாலாணை சொன்னேன் சொன்னேன்
கற்பமுண்டா லுன்தேகஞ் சொர்ன மாகுங்
கற்பூர தீபவொளி நாலு முற்றே. 4

7. முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி யில் அமைந்துள்ளன. சில பாடல்கள் ர - ற, ள - ழ வேறுபாடுகள் இல்லாது எழுதப் பட்டுள்ளன. 10. அகத்தியர் பேரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இரசாதி பாசாணம், சொர்ணாதி உலோகம் அல்லது உபரசத்துடன் உலோகம், களங்கு, இவைகளையும், மூலிகைச் சாறு, காரசாரம், செயநீர் அல்லது திராவகம் முதலானவை

களையும் கொண்டு அரைத்துச் சீலை செய்து புடத்திலிட்டு வெண்மையாக எடுக்கும் நீறு பற்பமாகும். இச் சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் 4 என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 1, அகத்தியர் சூத்திரம் 2, அகத்தியர் சூத்திரம் 3, அகத்தியர் சூத்திரம் 14 முதலான பல்வேறு நூல்கள் உள்ளன.

## அகத்தியர் சூத்திரம் 7

I. 1. **140**. 2. அ. R. 6214 (g). ஆ. T.R.2627. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 7. ஆ. Akattiyar cūttiram 7. இ. அகஸ்தியர் சூஸ்திரம் ஏழு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ. சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 4; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 7 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சித்தர்களின் கொள்கைகளான ஞான மார்க்கம், யோக மார்க்கம் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம், யோகம். 3. இந்நூல் வாசி யோகம் பற்றியும், தம்பனம், மோகனம், மாரணம், வித்துவேசனம், உச்சாடணம், ஆகர்சனம், பேதனம், வசியம் என்னும் அட்டகர்மங்களைப் பற்றியும் எடுத்துரைக்கின்றது. அகாரம், உகாரம், மகாரம் இம்மூன்றும் அம் உம் மம் என்றும், ஐயும் கிலியும் சவ்வும் கூட்டிச்சேர்த்துச் சேவிக்க வேண்டும் என்றும் வாலைபூசை செய்யும் முறை பற்றியும் இந்நூல் கூறுகிறது.

4. —.

5. எட்டான பொருளதுவே அகார மாகும்
எண்ணிரெண்டாம் பொருளதுவே உகார மாகு
மட்டான பொருளதுவே மகார மாகும்
மைந்தனே யிம்மூன்றும் அம்உம் மம்மென

திட்டான ஐயும்கிலியும் சவ்வும் கூட்டிச்
சேத்ததுநீ சேவியடா வாலை தீட்சை
பொட்டான பொட்டதுவும் போட்டாப் போலே
பொறிகலைகண் ணுள்ளதெல்லாம் அடங்கும் பாரே. 1

6. எல்லோரும் பிழைக்கவல்லோ யிதனைச் சொன்னேன்
இதைப்பழித்தால் பாடிவிழுகும் பெருவயறு மாவான்
பொல்லாத நோய்கள்வரும் புழுத்துச் சாவான்
புலையனைப்போ லென்னாளும் திரிவான் மட்டை
நல்லநூலிது வென்று பார்த்தா யானால்
நாயனைப்போ லேயிருந்து நன்மை சேர்வாய்
சொல்லாத பேர்களுக்குப் பலிக்குஞ் சொன்னேன்
சூட்சமடா ஏழதுவும் சிறக்க முற்றே. 7

7. முற்றும்.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பிழைகள் உள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் விரவியுள்ளன. 10. அகத்தியர் பேரில் பாடப் பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூற் பொருளை நம்புவோர்க்கு எல்லா நன்மைகளும் விளையும் என்றும் நம்பாதோர்க்கு நோய்கள் ஏற்படுமென்றும் இந்நூலாசிரியர் கூறுகிறார். அத்துடன் இதன் பொருளை இரகசியமாக வைத்துக் கொள்வோர்க்கே இவை பலிக்கும் என்கிறார். இவ்வாறு நம்பிக்கை வளர்க்கப்படுகிறது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் 7 என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 8, அகத்தியர் சூத்திரம் 9, அகத்தியர் சூத்திரம் 10, அகத்தியர் சூத்திரம் 11, அகத்தியர் சூத்திரம் 12, அகத்தியர் சூத்திரம் 14 முதலிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் சூத்திரம் 9

I. 1. **141**. 2. அ. R. 6214 (i). ஆ. T.R.2627. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 9. ஆ. Akattiyar cūttiram 9. இ. அகஸ்தியர் சூஸ்திரம் ஒன்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 5; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 9 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பூசைமுறைகள் மற்றும் வசியம் பற்றிக் கூறும் நூல். 2. மந்திரம். 3. இந்நூல் கும்பமுனி முதலான பதினெண் பேர்களும் சிவன் மற்றும் சக்தியை வழிபட்ட செய்தியையும், கற்பமுறை, வாலை பூசை, வசியம், சிவயநமா, சுழிமுனை ஆகியவற்றைப் பற்றியும் எடுத்துரைக்கிறது. வசியம் செய்வதற்குரிய வசிய மருந்துகள் செய்யும் முறையும் இந்நூலில் கூறப்படுகிறது. பீர்க்கு, ஆமணக்கு இவற்றைப் பக்குவம் செய்து புடமிட்டுத் தைலம் வடித்துச் சுழிமுனையில் இட, நோய் குணமாகும் என்றும் கூறப்படுகிறது.

4. —.

5. பூரணமாய் நின்றசுழி முனையே காப்பு
பொதிகைமுனிக் கருள்கொடுத்தோன் பாதங் காப்பு
வாரணிந்த குவிமுலையாள் பாதங் காப்பு
மகாகோடி முனிசித்தர் பாதங் காப்பு
தாரணிந்த கரிமுகவன் பாதங் காப்பு
தப்பாமற் சொல்லுகிறேன் மகாலிங் கம்பார்
பேரணிபோல் முழங்கிவரும் ஒன்பதுக்குள்
பெருநூலுங் குருநூலுங் காப்புத்தானே. 1

6. வைத்தபின்பு நாலுபணந் தூக்கி வாங்கி
வளமான பேய்பீக்கி புல்லா மணக்குங்
கைத்திட்ட மாகவே முறை தப்பாமல்
கருகாமல் பூப்புடத்தில் தயிலம் வாங்கி
மைத்திட்டுப் போகாமல் சிவயநமா வென்று
நலமான சுழிமுனையிற் திலதம் போட
கைத்திட்ட மாகுமடா காண மாட்டார்
கண்டமுனி காளியொடு ஒன்பது முற்றே. 9

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி நடையில் அமைந்துள்ளன; பேச்சு வழக்குச் சொற்கள் விரவி வந்துள்ளன. 10. அகத்தியர் பேரில் பாடப் பெற்றுள்ள நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 797(i), 1014(f). 3.இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் சூத்திரம் 9 என்ற பெயரில் வேறு நூல்கள் பல இருப்பினும் அவற்றினின்றும் இது பூசை முறைகளைக் கூறுவதன் மூலம் வேறுபட்டு அமைகிறது. பதினென் சித்தர்கள் என்போர் காலந்தோறும் வேறு வேறு பட்டியல் களிட்டு அழைக்கப்படுகின்றனர். இச் சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் 9 என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 1, அகத்தியர் சூத்திரம் 216ல் சில, அகத்தியர் பூரண சூத்திரம் முதலிய பல்வேறு நூல்கள் உள்ளன.

## அகத்தியர் சூத்திரம் 10

I. 1.**142**. 2. அ. R. 6214 (j). ஆ. T.R.2627. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 10. ஆ. Akattiyar cūttiram 10. இ. அகஸ்தியர் சூஸ்திரம் பத்து. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவம் மற்றும் மந்திரம் முதலான செய்திகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல் வாதம், வழலை முதலியவை பற்றியும், பதினெண் பேர்கள் கண்ட வித்தை முறைகளையும், அண்டபிண்டம், பிண்டத் தயிலம், வசியம், தம்பனம், மாரணம் முதலான அட்டகர்மங்கள் பற்றியும், அவற்றின் இயல்பு பற்றியும் கூறுகிறது.

4. —.

5. சீர்கொண்ட வாதமது யெட்டு ரெண்டுஞ்
சிங்குவங்கா லெடுத்ததொரு ஆண்பெண் ணாட்சு
வார்கொண்ட அகாரம்ஆண் உகாரம் பெண்ணாம்
வாதமது பூமுலையாள் திரண்ட வுப்பூ

ஏர்கொண்ட நாதமது வழலை யாகும்
எண்ணியே ஈட்டின்விந்து ஆதி யாகும்
கார்கொண்ட கொடிமாவுங் கருவ தாகுங்
கன்னிபேர் ஆனதுவும் ஆதி யாமே. 1

6. பாரப்பா குருநந்தி சொன்ன வித்தை
பராபரந்தான் கேட்டெனக்குப் பகர்ந்த மார்க்கங்
காரப்பா பதினெண்பேர் கண்ட வித்தை
காரணமாம் வித்தையிது சொல்லி டாதே
ஆரப்பா யிப்படியே சொல்லப் போறார்
அகஷ்த்தியரிஷி சொன்னகரு விபரம் நன்றாய்
நேரப்பா பார்த்துமெள்ளச் செய்தா யானால்
நிசமான தொழில்பத்தும் நிசஞ்சொல் முற்றே. 10

7. முற்றும்.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. ல, ள வேறுபாடு இல்லாது வந்துள்ளது. மெல்ல - மெள்ள என்று வந்துள்ளது காண்க. 10. இந்நூல் 'அகத்தியர் 10' என்ற வேறு பொருண்மைகளுள்ள நூல்களினின்றும் வேறானது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூற்பொருளை நந்தி முனிவர் சொன்னதால் நந்தியைக் குருவாகக் கொண்ட 'நந்தி மருத்துவ மரபினர் உள்ளனர். இவர்கள் பதினெண் சித்தர்கள் என்றும், இம்மார்க்கத்தைப் பிற மார்க்கத்தினர்க்குக் கூறக் கூடாது எனும் குறிப்பையும் அறிந்து கொள்ளலாம்.' இச் சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் 10 என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 11, அகத்தியர் சூத்திரம் 12, அகத்தியர் சூத்திரம் 14 முதலான பல்வேறு நூல்கள் உள்ளன.

## அகத்தியர் சூத்திரம் 10

I. 1. **143.** 2. அ. R. 280 (d). ஆ. —. இ. R.No.308 (b). ஈ. T.R. 49. 3. அ. அகத்தியர் சூத்திரம் 10. ஆ. Akattiyar cūttiram 10. இ. அகஸ்தியர் சுவாமிகள் சூஸ்திரம் பத்து. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. கி.பி. 1914 – 15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 6; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. 1. 24 x 28செ.மீ. 2. 7 பக்கங்கள். 3. பக்கத்திற்கு 21 வரிகள். 4. தெளிவு. 5. 13.2.1916. 6. S.கிருஷ்ணசாமி அய்யர் 7. —. 8. கி.பி. 1916இல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III. 1. மருந்து தயாரிப்பும், முப்பு செய்யும் முறையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் 10 என்ற இந்நூல் முப்பு தயாரிப்பதற்கான வழிவகைகளை முதற்கண் கூறுகின்றது. இதில் பூமியில் நாதம் எவ்வாறு கிடைக்கும் என்றும் அதைப் பிண்டம் என்ற பரிபாஷையில் கூறி, பிண்டத்தை மாங்கீசத்தோடு எடுத்து வந்து பொரிகாரம் சுத்தி செய்து அதனுள் போட்டால் நாதம் கிடைக்கும் என்றும், அதில் பல சரக்குகளைப் போட்டு எரித்தால் முப்பு கிடைக்கும் என்று ஆசிரியர் கூறுகின்றார். மேலும் முப்புவோடு தொடர்புடைய செயநீர், வீரம், பூரம் துருசு, வெள்ளை, விந்து போன்ற பலவற்றின் குறிப்புகள் மிகவும் நுட்பமாக இதனுள் தரப்பட்டுள்ளன.

4. நன்றாக குருவாழ்க.

5. காணப்பா யெரியிலே வளர்ந்த பிண்டம்
கடிதான மாங்கீசத்தோ டெடுத்து வந்து
பூணப்பா பொரிகாரம் பொடித்துக் கொண்டு
பிண்டத்தை வாய்ப்பிளந் தினில் போட்டு
ஆணப்பா பெண்ணோடே கூடி னாப்போல்
அப்பனே நாதமங்கு யிறங்கும் பாரு
சாணப்பா லோகத்தாற் சட்டி யொன்று
சாதகமா யிணங்கனையு மதினுட் போடே. 1

6. ஆடலா மிதுகொண்டு கோடா கோடி
அளவிறந்த வித்தையெல்லா யிதற்கு ளாச்சு
ஓடலா மிதினாலே குளிகை செய்ய
துயர்த்தியுள்ள மலைகளெல்லா மேறிப் பாரு
நாடெலாந் திரிந்தாலு மிந்தப் போக்கு
நல்லமுறை யிதைப்போலே யெங்கு மில்லை
பாடல்போல் சொன்னதென்று யெண்ண வேண்டாம்
பத்துமே சூஸ்திரத்தின் பாத முற்றே. 10

7. தேவிசகாயம்.

8. மூலம். 9. முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கிலும், அந்தாதி முறையிலும் பாடல்கள் அமைந்துள்ளன. ஒலி மாற்றங்கள் (அதனில் → அதினில்) (மெழுகு → மெளுகு) (பார் → பாரு) வருதல் குறிப்பிடத்தக்கது. 10. முப்புவைத் தயாரிப்பதற்கு மிகவும் அடிப்படையாக அமைந்த இயற்கைப் பொருள்களின் பெயர்களையும் அவற்றின் பண்புகளையும் அறிந்து கொள்ள இவ்வேடு மிகவும் உதவியாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. R.9052. 2. ஆ.நி. எண். 509 d. உ.த.நி. எண் 199 : 404. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி.ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை. 1996. 3. இல்லை.

VI. முப்பு தயாரிப்பு, அதன் சூக்குமங்கள் ஆகியன குறித்துச் சித்தர்கள் என அறியப்படுவோர் அனைவரின் நூல்களிலும் செய்திகள் தரப்பட்டுள்ளன. இவ்வேட்டின் பிறிதொரு பிரதி ஆசியவியல் நிறுவனத்தில் 404 L. எண்ணில் காணப்படு கின்றது. மேலும் சி.ம.மை. ஆ. நிறுவனத்தில் இந்த ஏட்டின் பிற பிரதிகள் தெட்சணாமூர்த்தி முப்பூ 10, அகத்தியர் முப்பூ 10 ஆகிய பெயர்களிலும் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. 'அகத்தியர் தமிழ்வாகடம்' என்றே முப்புவுக்குப் பெயருள்ளது. இது பதினெண்வகைக் குட்டங்களையும் அவற்றைப் போக்கும் முறைகளையும் கூறுகிறது. (வைத்திய மூலிகை அகராதி)

# அகத்தியர் சூத்திரம் 10

I. 1. **144**. 2. அ. R. 9052. ஆ. T.R.3288. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 10. ஆ. Akattiyar cūttiram 10. இ. அகஸ்தியர் சுவாமிகள்சூஸ்திரம்பத்து. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. கடினம். 4. 3. 5. 35 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 5; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருந்து தயாரிப்பும் முப்பு தயாரிப்பும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 143 போன்றது.

4. அகஸ்திய ரருளிச் செய்த பத்து.

5. காணப்பா யெரியிலே வைத்த பிண்டம்
கனமான மாங்கீசந்தான் யெடுத்து வந்து
பூணப்பா பொரிகாரம் பொடித்துக் கொண்டு
பிண்டத்தின் வாய்பிளந்து அதினுள் போட்டு
ஆணப்பா பெண்ணோடே கூடி னாப்போல்
அப்பனே நாதமங்கு யிறங்கும் பாரு
சாணப்பா லோகத்தாற் சட்டி யொன்று
சாதகமா யிணங்கனையு மதினுட் போடே. 1

6. ஆடலா மிதுகொண்டு கோடா கோடி
அளவிறந்த வித்தையெல்லா யிதற்கு ளாச்சு
ஓடலா மிதினாலே குளிகை செய்ய
துயர்த்தியுள்ள மலைகளெல்லா மேறிப் பாரு
நாடெலாந் திரிந்தாலு மிந்தப் போக்கு
நல்லமுறை யிதுபோலே யெங்கு மில்லை
பாடல்போல் சொன்னதென்று நினைக்க வேண்டாம்
பாதமே சூஸ்திரத்தின் பாடல் முற்றே. 10

7. குருவே துணை.

8. மூலம். 9. பாட பேதங்கள் மிகுதி. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பேரில் அமைந்த நூல். 11. இல்லை.

IV. 1. R. 280 (d). J. 2. ஆ.நி.சுவடி எண் 509 d, சி.ம.மை. ஆ.நி.எண்கள் 1040( j), 1103 a, 1103 f. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. குன்மநோய் வகைகளாவன: சூலை குன்மம், வாத குன்மம், பித்த குன்மம், சிலேத்தும குன்மம், எரி குன்மம், சத்தி குன்மம், வன்னி குன்மம், சலி குன்மம். இவற்றை முப்பு நீக்கும்.

## அகத்தியர் சூத்திரம் 11

I. 1. **145**. 2. அ. R. 6214. ஆ. T.R.2627 இ. —. ஈ. —. 3.அ. அகத்தியர் சூத்திரம் 11. ஆ. Akattiyar cūttiram 11. இ. அகஷ்த்தியர் சூஷ்த்திரம் 11. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை– 5. 9.—. 10.—.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 11 பாடல்கள்.

ஆ.—.

III. 1. பூசை முறைகள் பற்றியும் பற்பம் செய்யும் முறை பற்றியும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல் சிவசத்தி பூசை முறைகள், வழலை மற்றும் பற்பம் செய்யும் முறைகள், அகாரம், உகாரம், பிண்டம், சுக்குலம், சுரோணி ஆகியவை பற்றியும், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு முதலிய உலோகங்களைப் பயன்படுத்திப் பற்ப மருந்துகள் செய் முறைகள் முறையையும் பதினொரு பாடல்களில் கூறுகிறது.

4. —.

5. ஆதிமுத லானகரு பிண்டங் காப்பு
ஆனந்த வல்லிகொடி மாவுங் காப்பு
சோதிருது வானபரை நாதங் காப்பு
சுந்தரியாள் புணர்ச்சியிலே வந்த காப்பு
நீதியிலே அண்டபிண்டங் கலந்த காப்பு
நினவாக வாசியினால் ஆறுங் காப்பு
பாதிமதி யானசிவன் பாதங் காப்பு
பரமகனார் கணபதியோ டாறுங் காப்பே. 1

6. தேவரா யிருந்துவந்த சடத்தி னுள்ளே
சதாசிவமாய் வந்தவிந்து ரசமு மாட்சு
மூவரா யிருந்துவந்த நாத சத்தி
மும்மூர்த்தி யாலறிந்து யிருவ ரானார்
ஆவரா யிருந்துமன மொன்றே யாகில்
அன்பதிலே யிருந்துவந்த பிண்டந்தா னப்பா
ஈவரால் முன்தயிலம் வெள்ளி செம்பில்
ஈயத்தில் இரும்புமுத லீய முற்றே. 11

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பிலும், பாட பேதங்கள் மிகுந்தும் வந்துள்ளன. 10. 'அகத்தியர் 11' என்ற பெயரில் பல நூல்கள் பாடப் பெற்றுள்ளன. அவை வெவ்வேறு பொருண்மைகள் குறித்தவை. இந்நூல் மற்ற நூல்களினின்றும் வேறானது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. சி.ம.மை.ஆ.நி.எண். 7971 (I). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் வந்த நூல்களில் பெருநூல் ஒன்றின் சுருக்கமாக இந்நூல் திகழ்கிறது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் 11 என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 216ல் சில, அகத்தியர் பூரண சூத்திரம், அகத்தியர் சூத்திரம் 1 முதல் அகத்தியர் சூத்திரம் 12 வரையிலான பல்வேறு நூல்கள் அமைந்துள்ளன.

# அகத்தியர் சூத்திரம் 12

I. *1.* **146**. *2.* அ. R. 175 (b). ஆ. T.R. 159. இ. —. ஈ. —. *3.*அ. அகத்தியர் சூத்திரம் *12*. ஆ. Akattiyar cūttiram 12. இ. அகஸ்தியர் சுவாமியாரருளிச் செய்த சூஸ்த்திரம் பன்னிரெண்டு. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை – 5. *9.* சென்னை திருவல்லிக்கேணி காதிர் பைக் சாகிப்பிட மிருந்து *1915-16*இல் பெறப்பட்ட சுவடி. *10. 1915-16.*

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* நன்று. *4. 3. 5.* 27 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிறுசிதைவு. *12. 6;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *9* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 12* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* இந்நூல் வகாரத்தின் இயல்புகளையும் யோக மார்க்கத்தையும் கூறுகின்றது. *2.* யோகம். *3.* அகத்தியர் சூத்திரம் *12* என்ற இந்நூலில் கடவுள் வாழ்த்து இடம் பெறாமல் நேரடியாக நூல் தொடங்குகின்றது. முதலாவதாக வகார மார்க்கம், தசவாய்வு, வாசியோக முறைகள் கூறப்படுகின்றன. வகாரமார்க்கம் சொல்வேன் என்றும் ஓங்காரத்திலிருந்து வெளிப்பட்ட உகாரமே நாதமெனும் சக்தி, அகாரமே சிவம், வாலை என்பதே சிகாரம், மகாரமென்பதே அகர உகாரம் சேர்ந்ததாம் எனவும் கூறுகிறார். வகாரமென்பது தீட்சையின் முடிவாம். இவை யெல்லாவற்றிற்கும் ஆதாரமாக விளங்குவது ஓங்காரமாம். ஓங்காரமே ஆதியாம் என்றும் இந்நூல் கூறுகின்றது. அடுத்து, தன்னை அறிதலே தலைவனை அறிதலாம். தனக்குள் சந்தேகமற சிவயோக மென்ற வாசி மூலத்தை அறிந்து, அதன்படி செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது. மற்றும் திராவகங்கள் காயசித்தி பெறக்கூடிய முப்புவின் இயல்புகள் போன்றன கூறப்படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக. அகத்தியர் சூத்திரம் *12.*

5. நேசிப்பாய் பத்தான வகாரத் தாலே
நிர்மலமாய் திசவாய்வு வுண்டாச் சப்பா
வாசிப்பா யானாக்கால் யோக மெய்து
மகத்தான வகாரமென்ற வழியே சொல்வேன்

ஆசிப்பா யகாரமதி லுகாரங் கூட்டி
யப்பனே மகாரமென்ற வாறே தொக்கம்
வீசிப்பாய் மகாரமென்ற மவுன போக
வித்தையடி யோங்கார மூல மாச்சு. 17

6. மாட்டினேன் கஷ்டம்விட்டுச் சொன்னேன் பாரும்
மக்களே யிதைவிட்டால் வாத மில்லை
காட்டினேன் கருக்கிடையுங் குருக்கிடையுங் காணுங்
கைமுறையுந் தவறாமற் காணச் சொன்னேன்
ஆட்டினேன் சுன்னத்தால் மேற்கு மாகு
மப்பனே பனிரெண்டி லடக்கி னேனே. 12

7. முற்றும். குரு கடாட்சம், அகஸ்தியர் சுவாமியார் ரட்சிக்க வேண்டும்.

8. மூலம். 9. நடைதாழ்ந்தது, பிழைகள் அதிகம். ர-ற, ல-ழ-ள வேறுபாடில்லாது உள்ளது. 10. அகத்தியர் பேரில் பாடப் பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இரசவாதத்தில் வகாரமும் ஒன்று. யோகம் 27 வகைப்படும்; அவை வருமாறு : விஷ்கம்பம், பிரீதி ஆயுஷ்மான், சௌபாக்கியம், சோனம், அதிகண்டம், சுகர்மம், திகதி , சூலம், கண்டம், விருத்தி, புருவம், வியாகாதம், அரிஷ்ணம், வச்சிரம், சித்தி, விதிபாதம், வரிவின் பரீகம், சிமம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிரமம், ஆத்திரம், வைதிருதி. (வைத்திய மூலிகை அகராதி) அகத்தியர் சூத்திரம் 12 என்ற இந்நூலானது 'அகத்தியர் சூத்திரம் 12' (R.6214-I) என்ற நூலினின்றும் வேறானது.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. உரோமரிஷி சுருக்கம் பதினாறு.

c. அகத்தியர் சூத்திரம் பன்னிரெண்டு.

d. சூரியானந்தர் சூத்திரம் பதிமூன்று.

e. போகர் சூத்திரம் பதினாறு.

f. சட்டைமுனி பூரண சூத்திரம் இருபத்தைந்து.

g. தட்சிணாமூர்த்தி ரஸமணி பதினான்கு.

h. அகத்தியர் வழலை முப்பது.

i. அகத்தியர் யோகம் பதினாறு.

j. அகத்தியர் மெய்ச்சுருக்கம் ஐம்பத்தொன்று.

k. மகா காரண பஞ்சாக்கரம்.

l. சட்டைமுனி தர்க்கம்.

m. ஆத்தி சூடி வெண்பா.

## அகத்தியர் சூத்திரம் 13

I. 1. **147**. 2. அ. D. 2304. ஆ. T.D. 901. இ. 6305. ஈ. —. 3.அ. அகத்தியர் சூத்திரம் 12. ஆ. Akattiyar cūttiram 13. இ. அகத்தியர் ஆயிரத்து யிருநூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 22 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. கட்டை. 9. நரம்பு இல்லாதது. 10. பனை ஓலை. 11. ஓரளவு சிதைவு. 12. 11; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 13 பாடல்கள்.

ஆ. 1. 30 x 24 செ.மீ. 2. 5. 3. பக்கத்திற்கு 24 வரிகள். 4. தெளிவு. 5. 12.7.1956. 6. K. சாரதா. 7. சந்திரமௌலீஸ்வரன், J. வஜ்ரவேலு. 8. 1956இல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III. 1. யோகம், இரசவாத முறைகள் கூறுவது. 2. இரசவாதம். 3. அகத்தியர் 1200 என்ற நூலின் சுருக்கமாக 13 பாடல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது என முதல் பாடலிலிருந்து தெரிகிறது. வாதம் ஐந்து வகைப்படும் என்றும், உலகுக்குப் பத்தும், பெரியோர்க்கு 64, சித்தருக்கு 96, முனிவருக்கு 100, ஞானிகளுக்கு 1000 இவ்வாறு அவற்றின் எண்ணிக்கையைக் கூறுகின்றார். கெந்தி 1, பூரம் 1, வீரம் 1, கெவுரி 1, சூதம் 1, பச்சை 1 எனும் இவற்றைச் சரியாக எடைக்கு எடை எடுத்து, வாலுகை நீரைச்சேர்த்து, துருசு சேர்த்து, வெள்ளி, செம்பு இவற்றையும் சேர்த்துப் புடம் போட்டால் இரசவாதம் சித்திக்கும். இனி யோக நிலை கூறப்படுகிறது. மனோன்

மணியின் சோதிகண்டவர்க்குப் பலப்பல வாதம் சித்தியாகும் என்றும், அவ்வாறு கண்டவர்கள் பூலோக ஞானியாவார் என்றும் இந்நூலில் கூறப்படுகிறது.

4. —.

5. ஆதியென்னும் பூரணத்தா யருளே போத்தி
அறைகிறேன் ஆயிரத்திரு நூறுக் குள்ளே
சோதியென்றும் வாதத்தின் சூஷ்ஷந் தன்னை
சுருக்கமுடன் பதிமூன்றில் குருவைச் சொல்வேன்
பேதியிலே பேதியப்பா சத்திப் பேதி
பெருமையினை மாணாக்கர் பேசக் கேளு
சாதியிலே வாதமது அஞ்சு மாச்சு
சாத்துகிறேன் வெளியாகச் சாத்தக் கேளே. 1

6. பாங்கான மனோன்மணியின் சோதி கண்டால்
பலபலவாம் வாதமெல்லாம் அவர்க்கே சித்தி
தூங்காம லாடற்றில் தூங்கு தூங்கு
சொட்டர்களே மாய்கைவந்து கொல்லும் பாரு
தேங்காமல் மவுனத்தின் ரியேத்தி
தெண்டிரையில் சஞ்சார மாதி மேவி
பூங்காகும் மதமடக்கி அஞ்சும் பேர்க்குப்
பூலோக ஞானியென்று வாழ்வார் முற்றே.

7. அகத்தியர் சூஷ்த்திரம் - 13.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்புடன் உள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள், பிழைகள் மலிந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடபெற்றது; 1200 பாடல்களின் சுருக்கம் அகத்தியர் சூத்திரம் 13 என அமைந்துள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. 27 வகை யோகங்கள் முறையே பின்வருமாறு பலன் தருபவை: கம்பம், பிரியம், வாழ்க்கை, புண்ணியம், நலம், மாகண்டம், அறம், துணை, சூலம், கண்ணியம், ஆக்கம், நிலை, அரவு, எக்களிப்பு, வேல், வல்லமை, கொலை, தாழ்வு, காட்சி, திறம், புகழ், நூல், தெளிவு, பிரம்மா, இந்திரியம், பேய். (வைத்திய மூலிகை அகராதி)

# அகத்தியர் சூத்திரம் 14

I. 1. **148**. 2. அ. R. 6214 (m). ஆ. T.R. 2627. இ. —. ஈ. —. 3.அ. அகத்தியர் சூத்திரம் 14. ஆ. Akattiyar cūttiram 14. இ. அகஷ்த்தியர் சூஷ்த்திரம் 14. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 30 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 7; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல்வகை மருந்துகள் தயாரிக்கும் முறையைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல் திராவகம் தயாரிக்கப்படும் முறையையும், கற்பூரச் சுன்னம், முப்பு, வழலை முதலிய பலவகை மருந்துப் பொருள்கள் தயாரிக்கப்படும் முறையையும், அம்மருந்துகள் குணப்படுத்தும் நோய்களைப் பற்றியும் கூறுகிறது. வாதியின் இலட்சணம், பூநீறு தீட்சை, சூடன் நீறு, கல்சுண்ண உப்பு முதலியவை இந்நூலில் பேசப்பட்டுள்ளன.

4. —.

5. பொன்னான திராவகமாங் குருமு ரைக்கில்
புகழ்வில்லை பதினெண்பேர் சித்த ரெல்லாம்
பன்னான சூடன்நமச் சாரம்மே மச்சாரம்
பாரன்ன பேதிவகை பலந்தா னொன்று
தன்னான சீனமது பலந்தா னொன்று
சாதகமா யிணங்களொடு பலந்தா னெட்டு
மின்னான மந்திரமோ படிநா லுக்குள்
வழங்கவே மருந்தெல்லாம் பொடித்துப் போடே. 1

6. கட்டியதோர் வில்லைதன்னை ரவியிற் போடு
காய்ந்தபின்பு சுன்னத்தி லெரித்து வாங்கு
வட்டியதோர் புரியட்டம் பூரணத் தினொடு
வளைந்தரசாய்ச் சுழிமுனையில் நந்தி மூலர்

பட்டதினாற் பரனிதுவே சூஷ்த்திர மானார்
பலிக்குமடா வாதமொடு வாசி யோகம்
விட்டகுறை பூரணத்தைப் பாட போய்நான்
வேதாந்த வாதத்தை வெளிவிட் டேனே. 14

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியிலும், பாடபேதங்கள் கொண்டும் சில சொற்கள் பரிபாஷையில் உள்ளன. அமைந்துள்ளன. 10. இந்நூல் அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. அகத்தியர் புலத்தியருக்குக் கூறுவதாக உள்ளளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலினைப் போன்று பிறிதொரு பிரதி தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் சுவடி எண் 121 (i) ல் அகத்தியர் சூத்திரம் 14 என்ற பெயரிலும், மற்றொரு பிரதி அகத்தியர் பூரணசூத்திரம் 14 என்ற பெயரிலும் காணப்படுகின்றன. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் 14 என்ற இந்நூலுடன் அகத்தியர் பூரண சூத்திரம், அகத்தியர் சூத்திரம் 1 முதல் அகத்தியர் சூத்திரம் 12 வரையிலான பல்வேறு நூல்கள் உள்ளன.

## அகத்தியர் சூத்திரம் 15

I. 1. **149**. 2. அ. R. 4748. ஆ. T.R. 2097. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 15. ஆ. Akattiyar cūttiram 15. இ. அகஷ்த்தியர் சூஷ்த்திரம் 15. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 31x2 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 10; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 15 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல்வேறு மருந்து செய்முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல் பல்வகை மருந்துகளான பற்பம், மெழுகு, தயிலம் முலைானவை தயாரிக்கப்படும் முறை யினைக் கூறுகின்றது. இம்மருந்துகள் செய்யத் தேவையான பொருள்களாக வெண்காரம், அண்டத்தோல், கள்ளிப்பால், பூநீறு, சாரம், நாகம், கெந்தகம், செம்பு, வெள்ளி ஆகியன கூறப்படுகின்றன.

4. —.

5. பிறழாம லகுவிலே சொல்லக் கேளு
பேரான வெண்காரம் பலந்தா னொன்று
மருளாமல் அண்டத்தோல் பலந்தா னொன்று
மாட்டிரெண்டுக்கு சதிரக் கள்ளிப் பாலாட்டி
திரளாமல்மத் திரண்டதொரு பூணீர் பவலிந்
தாகனான்று சோதிலேசாரமொரு பலந்தா கரீயம்
அரலாம லரைக்கையிலே மெழுகு மாகும்
நாலுமப்பி தனைநாக மொருபலந்தான் ரெண்டே. 1

6. மறிக்கிறேன் அஞ்சாக மூணு மாக
மக்களே யெட்டாக நாலு மாக
பிரிக்கிறேன் யேழாக ஒன்ப தாக
பேரான கெந்தகத்தின் செம்பைத் தானே
முறிக்கிறேன் செம்பெடுத்து செம்பி லீய்ந்து
மூட்டப்பா வெள்ளியிலே அஞ்சு மாத்து
வெறிக்கிறேன் செம்பெடுத்து .. யீயம்
நேராக நாலஞ்சு மாத்துந் தானே. 15

7. முற்றும். சற்குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பிழைகள் மிகுதி. 10. இந்நூல் காப்புப்பாடல் ஏதுமின்றி இருப்பதால் அகத்தியர் வைத்திய நூல் ஒன்றின் சுருக்கமாக இருக்கவேண்டும் என அறியமுடிகின்றது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. மெழுகு பின்வரும் நோய்களைக் குணப்படுத்தும்: அரைப்பு, ஐயம், உதடு வெடிப்பு, தாது நஷ்டம், தீப்புண், தேள்விடம், பக்கவாதம், புண்வாயு, இரணம். (வைத்திய மூலிகை அகராதி) இச் சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் 15 என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 48, அகத்தியர் சூத்திரம் 46, அகத்தியர் சூத்திரம் 25 ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் சூத்திரம் 16

I. 1. **150.** 2. அ. R. 280 (q). ஆ. T.R. 263. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 16. ஆ. Akattiyar cūttiram 16. இ. அகஸ்திய சுவாமியார் செய்த 16. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. காதிர்பைக்சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. 1914-15.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 24 x 2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 11; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 17 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக மார்க்கத்தைப் பற்றிக் கூறும் நூல். 2. தத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் 16 என்ற இந்நூலில் யோக மார்க்கத்தின் கூறுகளான பிரணாயாமம், மூன்றெழுத்தின் பெருமை, ஐந்தெழுத்தின் பெருமை போன்றவை கூறப்பட்டுள்ளன. பிரணாயாமம் என்பது சுவாசப் பயிற்சியாகும். உள்ளே இழுக்கும் உயிர்க் காற்றான பிராணவாயு எனப்படும் சுவாசத்தை உள்ளுக்கு நிறுத்துதல், வெளியிடுதல் ஆகிய காற்று நடமாட்டத்தை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு ஒழுங்கு முறைப் படுத்தும் பயிற்சியாகும். இப்பயிற்சி செய்யும் போது மாயை, பொய், கோபம் மூன்றையும் தள்ள வேண்டும். ஐந்தெழுத்து மந்திரமான நமசிவய என்ற எழுத்தை இடைவிடாது சிந்தித்தல் வேண்டும். அ.உ.ம என்ற மூன்றெழுத்துக்களோடு கூடிய ஓம் என்னும் தூலப் பிரணவமானது பரு உடலுக்கு இன்பத்தைத் தரும் மொழியாகும். வேதங்களால் பாதுகாக்கப் பெற்ற விந்து நாதமாகிய இச் சூக்குமப் பிரணவம் பராசக்தியின் வடிவமாகும்

சந்தோசத்தைத் தருகின்ற இருவிழிகளையும் நெறித்து ஒளியை உண்டாக்கும் கிரியை மூலம் சூக்குமப் பிரணவத்தை அறிவதே வேதாந்த வழி முறையாகும். ஓம் என்னும் ஓங்காரத்துள்ளே உபதேசத்துக்குரிய ஒருமொழி உதிக்கும். அது உருவம், அருவம் ஆகியவற்றைத் தன்னுள் கொண்டு பல பேதங்களுடன் விளங்கும். அவ்வகையில் ஓம் என்னும் பிரணவத்தை அறிவதன் மூலம் மேன்மை மிக்க முக்தியும், சித்தியும் பொருந்தும் என்று இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்திய சுவாமி யருளிச் செய்த 16.

5. பூரணமாய் நின்றதொரு அய்யர் பாதம்
போத்தி(ற்றி)டுவா யென்னாளு புவியின் மீதே
கா(ற)ரணமாய் நின்றதொரு ஆயி தன்னைக்
கண்மூக்கு மத்தியிலே கருதிப் பாரு
ஆரணமா மாகாசம் பூமி லோகம்
அடுக்கடுக்காய் நின்றதொரு அறையைக் காண
வாரணத்தின் முகத்தோன்தன் பாதந் தன்னை
மனதில்வைத்து யென்நாளு மகிழ்ந்திட் டேனே. 1

6. பூசிப்பாய் தீபமொடு தூபங் காட்டி
போக்கோடே யெழுத்தாலே அர்ச்சனையே செய்து
நேசிப்பாய் வுபச்சாரம் அனேகஞ் செய்து
நிஷ்ட்டையுடன் தாய்ப்பதத்தை நினைவில் வைத்து
வாசிப்பாய் நோதிரங்கள் கோடா கோடி
மனோண்மணியே மாதாவே மலையின் கண்ணே
யோசிப்பாய் மந்திரங்கள் அனேகங் கோடி
உத்தமியாள் பாதபூசை உகந்த தானாள்
ஆசிப்பாய் அதின்பிறகு ஆத்தாள் தந்தால்
ஆனந்த பூரணத்தின் னருள தாமே. 17

7. முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்புடன் உள்ளன. ர-ற, ள-ழ போன்ற எழுத்துக்கள் வேறுபாடு இல்லாமல் கையாளப் பட்டுள்ளன. 'ற்ற' என்பது 'த்த' என வந்துள்ளது. 10. இராச யோகத்துக்குரிய எண்வகைத் தொகுப்புக்களான இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி எனப்படும் எட்டு நிலைகளின் தன்மைகளை

அறிவதன் மூலம் சித்தர்கள் யோக மார்க்கத்தை அறிவர். 11. இல்லை.

IV. 1. R. 254 (e). 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 342 (d), 474 (c), 378 (b), 751 (r), த.ச.ம.நூ. சுவடி எண் 700 (f). 3. இல்லை.

V. 1. இல்லை 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் சுருக்கம் - 16 என்றபெயரில் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் சுவடி 700/ ல் உள்ளது. இந்நூல் 'அகத்தியர் ஞானம் - 17 என்றும் வழங்கப்படுகிறது.

## அகத்தியர் சூத்திரம் 16

I. 1. **151**. 2. அ. R. 254 (r). ஆ. T.R. 238. இ. —. ஈ. —. 3.அ. அகத்தியர் ஞானம் 17. ஆ. Akattiyar ñāṉam 17. இ. அகத்தியர் ஞானம் பதினேழு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 10; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 17 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக மார்க்கத்தைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம். 3. வரிசை எண் 150 போன்றது.

4. —.

5. பூரணமாய் நின்றதொரு அய்யர் பாதம்
போத்தியே யென்னாளும் புவியின் மீதே
காரணமாய் நின்றதொரு ஆயி தன்னை
கண்மூக்கு மத்தியிலே கருதிப் பாத்து
ஆரணமாம் ஆகாசம் பூமி லோகம்
அடுக்கடுக்காய் நின்றதொரு அறையைக் காண
வாரணத்தின் முகத்தோன்தன் பாதந் தன்னை
மனதில்வைத்து யென்னாளும் மகிழ்ந்திட் டேனே. 1

6. பூசிப்பாய் தாபமொடு தீபங் காட்டிப்
போக்கோடே யெட்டெழுத்தால் அர்ச்சனை செய்து
நேசிப்பாய் உபசாரம் அனேகஞ் செய்து
நிஷ்டையுள்ள தாய்பதத்தை நினவில் வைத்து
வாசிப்பாய் தோத்திரங்கள் கோடா கோடி
மனோன்மணியே மாதாவே மலையின் கண்ணே
ஆசிப்பா யதன்பிறகு ஆத்தாள் தந்த
ஆனந்த பூரணத்தின் அருள்தான் முற்றே(த்தே).17

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 'ற்ற' என்னும் எழுத்துக்கள் 'த்த' ஆக எழுதப் பெற்றுள்ளன. 10. அகத்தியர் பேரில் பாடப்பெற்ற நூல். 11. இல்லை.

IV. 1. R. 280 (b). 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள். 342 (d), 378 (b), 474 (c), 751(r), த.ச.ம.நூ. எண் 700 (f) 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. —.

VI. இந்நூல் அகத்தியர் ஞானம் 17 என்று குறிக்கப் பெற்றாலும் அகத்தியர் ஞானம் 16 என்றே அமையும். அதிகமாக ஒரு பாடல் இடம் பெற்று விட்டதால் அகத்தியர் ஞானம் 17 என்று குறித்திருப்பர் போலும். யோகத்தின் முதிர்ச்சியில் ஞானம் வந்தடையும். அதனாலேயே இந்நூலிற்கு 'அகத்தியர் ஞானம்' எனத் தலைப்பு இடப்பெற்றுள்ளது.

## அகத்தியர் சூத்திரம் 16

I. 1. **152**. 2. அ. R. 7878. ஆ. T.R. —. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 16. ஆ. Akattiyar cūttiram 16. இ. அகஸ்தியர் சூஸ்திரம் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை – 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 15 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறுசிதைவு. 12. 8; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் நோய்களுக்கு மருந்துகள் செய்முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் முதலாவதாகக் கணபதியை வணங்கி 16 பாடல்களைப் பாடுவதாகவும், இதில் அண்டம், பிண்டம் எல்லாம் சேர்த்துச் சீராகப் பாடுவது இந்நூல்தான் என்றும் இதுவே பூரண சூத்திரத்துக்காக நந்தீசர் சொன்ன வாக்கியம் என்றும் கூறப்படுகின்றது. அடுத்து ஐவனப்பூ செந்தூரம் செய்முறை கூறப்படுகின்றது. மருதோன்றி எனப்படும் ஐவனப் பூச் சாற்றில் சாதிலிங்கத்தைச் சுருக்கிட்டால் மணிபோல் கட்டியாகும் அதில் அயப்பொடி இரண்டெடை யுடன் வெங்காரமும், மனோசிலையும் கால் பங்கு சேர்த்து மருதோன்றிச் சாற்றில் அரைத்துப் பின் ஐந்து முறை உருக்கி அரைக்கும்போது நாகம் போன்று சத்தாகும். அதில் ¼ பங்கு நாகம் சேர்த்தும் இத்துடன் தங்கம், இரசம், மனோசிலை, வெண்காரம், கந்தகம் சேர்த்து அரைத்தால் செந்தூரமாகும். இதை நாற்பது நாட்கள் தேனுடன் உண்டுவந்தால் கைகள் மலைபோல் உறுதியாகும். உடல் வெப்பம் குறைந்து குளிர்ச்சியாகும். உடல் உறுதியாகும் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. அகஸ்தியர் சூஸ்திரம் பதினாறு.

5. ஆதியென்ற மூலகண பதியின் பாதம்
ஆடினதோர் சூஸ்திரந்தான் பதினா றப்பா
தேடியே யண்டபிண்ட மெல்லாஞ் சேத்து
சீராகப் பாடியதோ யென்னூ லப்பா
பாடியதோர் பூரணசூஸ் திரத்துக் காகப்
பரிவாகப் பாடிவிட்டேன் சூஸ்திர னூலை
நாடியே நந்தீசர் சொன்ன வாக்கியம்
நன்றான மூலகண பதிகாப் பாமே. 1

6. தேடினேன் யேகமுகை திட்டாந் .....
திறமான பூச்சுண்ணம் மன்ப தாகுந்
தேடினேன் பாழான முதல்பதி னொன்றுந்
தந்திரான பூக்கண்ட யிடைக்கிச் சேர்த்து
ஆடியே வில்லைதட்டிக் காயப் போட்டு
அதின்பின்பு மணலிட்டு எரிசா மந்தான்
சூடினேன் செந்தூரங் குப்பி சேர்த்து
சுகமாக அன்பதிலே கைமுறையைக் காணே. 14

7. குருகடாச்சம் உண்டாகவும் தேவி சகாயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்புடன் உள்ளன. வடமொழி எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ர-ற, ள, ழ வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பேரில் பாடப் பெற்றுள்ளது. அகத்தியருக்கு நந்தீசர் கூறியதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. இல்லை. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் சூத்திரம் 16 என்ற இந்நூல் அகத்தியர் பரிபூரண சூத்திரம் 400 என்ற நூலின் சுருக்கமாக இருக்கலாம். 16 பாடல்கள் பெற்ற சில நூல்களில் மருத்துவச் செய்திகளும் சில நூல்களில் யோக, ஞான மார்க்கங்களும் காணக் கிடைக்கின்றன. பிற நூல்களினின்றும் வேறுபடுகிறது.

## அகத்தியர் சூத்திரம் 36

I. 1. **153**. 2. அ. R. 3608. ஆ. T.R. 1780. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 36. ஆ. Akattiyar cūttiram 36. இ. அகத்தீசுரர் சூத்திரம் முப்பத்தாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 14. 5.19 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 26; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 36 பாடல்கள் .

ஆ. —.

III. 1. மேகம், குட்டம் போன்ற பல்வகை நோய்களுக்கு மருந்து தயாரிக்கும் முறைகளைக் கூறுகிறது. 2. மருத்துவம். 3. இந்நூலில் செம்பு வெள்ளை, நாக வெள்ளை, காந்த வெள்ளை, தங்க வெள்ளை, தாம்பிரபற்பம், நாகபற்பம், செயநீர், உலோகபற்பம், காந்த பற்பம், உலோக செந்தூரம், காந்த செந்தூரம், தங்க செந்தூரம் முதலான பலவகை மருந்துகள் செய்முறைகளும் அவற்றால் தீரும் நோய்களும் அனுபானமும் (துணை மருந்து) கூறப்படுகின்றன. ஒவ்வொரு மருந்தும் செய்யும்போது முதலில் சுத்தி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. உதாரணமாகச் செம்புவெள்ளை

செய்யும் முறை: தாமிரம் 4 பலம் குகையில் போட்டு உருக்கும்போது, அண்டம் 2 பலம், நவச்சாரம் 2 பலம், காரம் ½ பலம் பொடிசெய்து அதில் போடவேண்டும். வங்கங்குத்தி ஓட்டில் ஊத கழங்கு போலாகும். இதனைக் குகையில் வைத்துப் புடம்போட உருகும். அப்போது தாளகம் போட்டு 15 தரம் நீற்றவேண்டும். காரம் ¼ பலம் போட்டு எலுமிச்சைச் சாற்றால் அரைத்துப் பயறளவு உண்டைசெய்து புடம்போட வெண்கலம் போல் வரும். இதனைத் தூளாக்கி எடைக்கு எடை வீரம்போட்டு அரைக்க மெழுகு போலாகும். சூதம் ½ பலமும், வெள்ளை அரைக்கால் பலமும், பூரமும் போட்டு வில்லைதட்டிக் கெசப்புடம் போட வெள்ளை யாகும். இது சாப்பிட 18 வகை குட்டம், மேகம் தீரும். பசும்பாலில் கருப்பட்டி சேர்த்துச் சாதம் சாப்பிடவேண்டும் என்றும் கூறப்படுகிறது.

4. வயித்தியம் முப்பத்தாறுக்குக் காப்பு.

அருள்விளைந்து அகண்டபரி பூரணமாய் நின்ற
ஆதியந்தத் தப்பரத்தப் பரத்தைப் போற்றித்
துருவாய் முன்னூற்றில் வயித்திய வாதஞ்
சொல்லிவிட்டேன் அதைச்சுருக்கி முப்பத் தாறாய்க்
கருவடக்க மில்லாமல் வயித்தியம் வாதங்
கைமுறையாய்ப் புடவெள்ளை பாடி னேன்யான்
ஒருமனதாய் வாதிகளே யிதனைச் செய்யில்
உலகத்தோர் நோய்களெல்லாம் ஓடும் பாரே.

5. பாரப்பா செம்பினுட வெள்ளை கேளு
பரிவாகத் தாம்பிரத்தைக் குகையில் வைத்துச்
சேரப்பா பதினாலு பலமே போடு
சேர்ந்துருகும் போதினிலே மருந்து கேளு
காரப்பா அண்டமது பலமே ரெண்டு
கட்டுநவ சாரமதில் ரெண்டு போடு
சீரப்பா கல்வத்தில் தூள தாக்கிச்
சிறந்ததொரு பொடிமேலே காரம் போடே. 1

6. ஆமப்பா யிந்திடவே வயித்தியம் பாரு
அட்டதிசை மெய்க்கவுன்னை வாழ்த்தும் லோகம்
நாமப்பா வயித்தியத்தில் மருந்த தெல்லாம்
நலமாகக் குறுக்கிவைத்தேன் முப்பத் தாறில்

வாமப்பா யிந்தவகை மருந்தெல்லாம் வைத்தால்
வயித்தியன்பே ருரைக்கையிலே நோய்க ளோடுந்
தாமப்பா எட்டுரண்டு இருபத் தஞ்சுந்
தடையறவே வாசிக்கச் சித்தி யாமே. 36

7. அகத்தீசுரர் பாடல் வயித்தியம் முப்பத்தாறும் எழுதி முகிந்தது முற்றும். குரு பாதந்துணை.

8. மூலம். 9. அந்தாதியில் இப்பாடல்கள் அமைந்துள்ளன; பேச்சுவழக்குச் சொற்கள் மிகுந்துள்ளன. 10. இந்நூல் 'அகத்தியர் செந்தூரம் 300 க்குச் சூத்திரம் 36' என்ற பெயரிலும் வழங்கப் படுகிறது. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல்களில் பெரும்பான்மையான நூல்கள் சுருக்க நூல்களாக விளங்குகின்றன. 11. இல்லை.

IV. 1. R. 6140, R. 4681, R. 6145, R. 3402. 2. சி.ம.மை. ஆ.நி. எண் 162 (a), ஆ.நி. எண் 527 (f), உ.த.நி. எண் 487 : 743. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய சில்லறைக் கோவை', தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலானது அகத்தியர் சூத்திரம் 36, அகத்தியர் பற்பம் 36, அகத்தியர் வைத்தியம் 36 ஆகிய பெயர்களில் வழங்கப்படுகிறது. மேலும் இந்நூல் 'செந்தூரம் 300 க்குச் சூத்திரம் 36' என்னும் தலைப்பில் தாமரை நூலகம் வெளியிட்டுள்ள 'அகத்தியர் ஞான அமுதம்' என்னும் நூலிலும், 'கருக்கிடைச் சூத்திரம் 36' என்ற தலைப்பில் அந்நூலகம் வெளியிட்டுள்ள 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை' என்னும் நூலிலும் வெளிவந்துள்ளது. தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்திலும், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்திலும் இந்நூல் சுவடிநிலையில் காணப்படுகிறது. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் சூத்திரம் 36 என்ற இந்நூலுடன் அகத்தியர் வைத்திய வாகடம், அகத்தியர் குழம்பு வாகடம் முதலான பல்வேறு நூல்கள் உள்ளன.

# அகத்தியர் சூத்திரம் 36

I. *1.* **154**. *2.* அ. R. 6140. ஆ. T.R. 2589. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் சூத்திரம் *36*. ஆ. Akattiyar cūttiram 36. இ. அகத்தியர் முனி முப்பத்தாறு. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 8.* 5.27 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* மிகவும் சிதைவு. *12. 16;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு 8 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 36* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* மேகம், குட்டம் போன்ற பல்வகை நோய்களுக்கு மருந்து தயாரிக்கும் முறைகளைக் கூறுகிறது. *2.* மருத்துவம். *3.* வரிசை எண் *153* போன்றது.

4. அருள்விளைந்து அகண்டபரிபூ ரணமாய் நின்ற
ஆதியந்தத் தப்பரத்தப் பரத்தைப் போற்றித்
துருவதாய் முன்னூற்றில் வயித்திய வாதஞ்
சொல்லிவிட்டேன் அதைச் சுருக்கி முப்பத் தாறாய்க்
கருவடக்க மில்லாமல் வயித்தியம் வாதங்
கைமுறையாய்ப் புடவெள்ளை பாடி னேன்யான்
ஒருமனதாய் வாதிகளே யிதனைச் செய்யில்
III. 1. சித்தர்களின் தத்துவக் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றுள் ஞான மார்க்கம் பேசும் நூல் இது. 2. ஞானம். 3. வரிசை எண் 210 போன்றது.

4. சிந்தையுறு ஞானந் தெரியவுரை பாடகுமரி
வந்த பஞ்சபூத வாழ்க்கையே - செந்தமிழ்நற்
காவியந்தா னாயிரத்தில் கல்லாப் பொருள் நூறு
தேவியெனும் பூரணியே சீர்.

5. பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றுந் திகிரிஎன்றும் படைத்த வாறுங்
காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாறுங்
கற்பமுண்ட ரிஷிகள்சா காத வாறும்
வாரணமாய்ப் பறவையாய் நாற்கால் சீவன்
மானிடர்க ளூருகின்ற குலத்தின் வாறும்
பார்தலமாய் விருட்சமாய்ப் பல்ல தாகிப்
பாதாள சாகரமும் படைத்த வாறே. 1

6. வெளியோடே வெளிசேரு மீறுந் தண்ணீர்
விதமான அப்புடனே சேர்ந்து போகும்
ஒளியோடே தேயுவதில் சேர்ந்து போகு
முத்தமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரும்
மழியாத வாயுவிலே வாய்வு சேரு
மஞ்சுமொன்றாய்க் கூட்டினாலாற் பினாவாகும்
வழியோடே யிவ்வண்ண மறிந்து கொண்டு
மானிடரே யோகசித்தி ஞான முற்றே. 101

7. அகஸ்த்தியர் ஞானம் முகிந்தது முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. உவமைகள் நிறைந்த செழுமையான இலக்கிய நடை பிரதிசெய்த பிழைகளும் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் அமைந்த ஞான தத்துவப் பாடல்கள். 11. இல்லை.

IV. 1. R. 9, R. 254 (i), R. 255 (a), R. 943(j), R. 678, R. 4200, R. 4775, R. 6099, D. 1830, D. 1881, D. 2315. 2. த.ச.ம.நூ.எண்கள் 690 a, 708. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்த நூலுடன் வருண குலாதித்தன் மடல் என்ற நூலும், விருத்தாசல புராணம், சோழதேச பூர்வீக ராஜசரித்திரம் ஆகிய நூல்களும் உள்ளன.

## அகத்தியர் ஞானம் 100

I. 1. **220.** 2. அ. D. 1881. ஆ. T.D. 741. இ. —. ஈ. —.3.அ. அகத்தியர் ஞானம் 100. ஆ. Akattiyar ñāṉam 100. இ. அகஷ்த்தியர் ஞானம் 100. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 34 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. நன்று. 12. 10; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி இல்லை. 16. குறை. 17. 26 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சித்தர்களின் தத்துவக் கொள்கைகளான சரியை, கிரினீய, யோகம், ஞானம் எனும் நான்கனுள் ஞானமார்க்கமும், சித்தியும் உத்திகளும் கூறும் நூல். 2. ஞானம். 3. வரிசை எண் 210 போன்றது.

4. சிந்தையுறு ஞானம் தெளிந்தே யுரைப்பதற்கு
வந்த பஞ்சபூத வாழ்க்கையே - செந்தமிழால்
காவியந்தா னாயிரத்தில் கல்லா யொருனூறும்
தேவியெனும் பூரணியே செப்பு.

5. பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றுந் திகிரியென்றும் படைத்த வாறும்
காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாறும்
கற்பமுண்ட ரிஷிகள்சித்தர் சாகா வாறும்
வாரணமாய்ப் பறவையொடு நால்கால் சென்மம்
மானிடர்கள் ளூருகின்ற குலத்தின் வாறும்
பார்தலமாய் விருட்சமாய்ப் புல்ல தாகி
பாதாள சாகரமும் படைத்த வாறே. 1

6. வாலைதனை யறிந்தவர்க்கு மூன்றெழுத்தே னாட்டம்
மகத்தான சித்தர்களும் சொல்லா சொல்லார்
வேலையிலே முதலெழுத்து அங்கென் றேசொல்
மிறுகடர் நடுவெழுத்து நடுவ தாக
மூலமிதை யறிந்தாக்கால் வாத சித்தி
முக்கியமுள்ள சித்தருக்கும் சித்த னாவாய்
ஆலயத்துள் தத்துவங்கள் தொண்ணூத் தாறும்
அடவாகத் தோணுமல்லால் செய்தி கேளே. 26

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. சிலபிழைகள்; ற/ர வேறுபாடு இல்லை; மிகை எழுத்துக்கள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற 1000 ஞானப்பாடல்களில் 100 பாடல்கள் ஈண்டு நூலாகச் சுருக்கிச் செய்யப்பட்டுள்ளன. 11. இல்லை.

IV. 1. R. 9, R. 254 (k), R. 255 (a), R. 943 (j), R. 678, R. 4200, R, 4775, R. 6099, D. 1830, D. 1881, D. 2315, D. 1829, D 1830, T.R. 9(a), 254 (i), 255, 261 (e). 2. த.ச.ம.எண்கள் 690 a, 708. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சுந்தரானந்தத் தண்டகம், சல்லியநூல் என்பவை இதனுடன் இணைந்துள்ளன. 'அகத்தியர் ஞானம் 100' என்ற இந்நூலின் பல படிகளில் ஏட்டின் தொடக்கப் பாடலாகச் 'சிந்தையுறு ஞானம்' எனும் தொடக்க அடி உள்ள வெண்பா பல பாட பேதங்களுடன் காணப்படுகின்றது. பல்வேறு இடங்களில் காணப்பெறும் இந்நூற்படிகளில் பாடல்கள் அதிக மாறுபாடின்றி எழுதப்பட்டிருப்பது தமிழ்ச் சித்த மருத்துவத்தின் பழமையையும் மருத்துவர்களின் பழமையையும் பறை சாற்றுகின்றது.

# அகத்தியர் ஞானம் 100

I. *1.* **221.** *2.* அ. D. 2315. ஆ. T.D. 904. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் ஞானம் *100.* ஆ. Akattiyar ñāṉam 100. இ. அகஸ்த்தீசர் ஞானம். *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* சிறிது தெளிவு. *4. 22. 5.* 24x4 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* தாழிப்பனை ஓலை. *10.* நரம்பு இல்லாதது. *11.* சிதைவு. *12. 41;* இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *11* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 100* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* சித்தர்களின் தத்துவக் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றுள் ஞான மார்க்கத்தையும் சித்தி பெறும் உத்திகளையும் கூறும் நூல். *2.* ஞானம். *3.* வரிசை எண் *210* போன்றது.

4. —.

5. பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றுந் திகிரி என்றும் படைத்த வாறுங்
காரணமாய் தேவியெங்கும் நிறைந்த வாறுங்
கற்பமுண்ட ரிஷிகள் சாகாத வாறும்
வாரணமாய்ப் பறவையாய் நாற்கா லசவன்
மானிடங்க ளுருகின்ற குலத்தின் வாறும்
பார்தலமாய் விருட்சமாய்ப் பல்ல தாகிப்
பாதாள சாகரமும் படைத்த வாறே. 1

6. வெளியோடே வெளிசேரு மீறுந் தண்ணீர்
விதமான அப்புடனே சேர்ந்து போகும்
ஒளிவோடே தேயுவதில்(ச்) சேர்ந்து போகு
முத்தமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரும்
மழியாத வாய்வுவிலே வாய்வு சேரு
மஞ்சுமொன்றாய்க் கூட்டினா லாற்பினா வாகும்
வழியோடே யிவ்வண்ண மறிந்து கொண்டு
மானிடரே யோகசித்தி ஞான முற்றே. 101

7. —.

*8.* மூலம். *9.* பாடல்கள் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளன. பாடபேதங்கள் காணப்படுகின்றன. *10.* அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. *11.* இல்லை.

IV. *1.* R. 9, R. 254 (k), R. 255 (a), R. 943 (j), R. 678, R. 4200, R. 4775, R. 6099, D. 1830, D. 1881, D. 2315, D. 1829, D 1830, T.R. 9(a), 254 (i), 255, 261 (e). *2.* த.ச.ம.நூ.எண்கள் 690 a, 708. *3.* இல்லை.

V. *1.* இல்லை. *2.* —. *3.* இல்லை.

VI. இத்துடன் அகத்தியர் பூரணசூத்திரம் *216* (D. 2314) என்ற நூலும் உள்ளது. இந்த நூல் T.R. 9 (a) இல் உள்ளது போன்றிருந்தாலும், இந்நூலில் ஏட்டின் தொடக்கப் பாடலான ''சிந்தையுறு ஞானந் தெரியவுரை பாடுதற்கு'' என்று தொடங்கும் ஒரு வெண்பா இடம்பெறவில்லை. ஈற்றுச் செய்யுளின் இறுதியடியில் பாதி எழுதாமல் விடுபட்டுள்ளது. இறுதியாக 'அகஸ்த்தியனாதர்' என்று எழுதப்பட்டுள்ளது.

## அகத்தியர் ஞானம் 1000

I. *1.* **222.** *2.* அ. R. 4205. ஆ. T.R. 1862. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் ஞான காவியம் *1000*. ஆ. Akattiyar ñāṉa kāviyam 1000. இ. அகஸ்த்திய சுவாமிகள் ஞானகாவியம் *1000*. *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 272*. *5.* 23 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிதைவு. *12. 544*; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *7* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 1200* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* ஞானம், தியானம், மந்திரம் ஆகிய செய்திகளைக் கூறும் நூல். *2.* ஞானம் மற்றும் மந்திரம். *3.* அகத்தியர் ஞானகாவியம் *1000* என்னும் இந்நூல் ஒன்பது சருக்கங்களில் ஞானம், தியானம், மந்திரம் முதலிய பல்வேறு பொருண்மை

களில் பாடப்பெற்றுள்ளது. முதல் சருக்கத்தில் அகத்தியருக்குப் பீசம் குறித்துச் சிவன் உபதேசித்த செய்திகள், பஞ்ச பூதத்தின் இயல்புகள், ஆறாதாரத் தத்துவங்கள், குண்டலினி யோக நெறிமுறைகள் ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன. இரண்டாம் சருக்கத்தில் தியான முறைகளாகாச் சரசுவதி பூசை, சிவபூசை, சக்திபூசை முதலானவையும், தியான முறைகளில் ஆறாதார இடங்களின் சிறப்புகள், ஓம் எனும் மந்திரம், தர்ப்பண மந்திரம், மவுன மந்திரம், சூரிய செயம் ஆகியன கூறப்படுகினறன. அறுகோண யந்திரத்தை நினைத்துத் தியானிக்கும் முறை, சரவணபவ மந்திரத்துடன் சுப்பிரமணியர் பூசை சக்கரம், வீரபத்திரன் பூசை, சூரிய பூசை, சந்திர பூசை, அட்டசித்து பூசை இவற்றிற்கான சக்கரங்களின் நிலைகள் மூன்றாஞ் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளன. நான்காம் சருக்கத்தில் வசியம், மோகனம், உச்சாடனம், தம்பனம், பேதனம், ஆகர்சணம் போன்ற அட்டகர்ம செயல்களை எவ்விதம் செய்வது? அவற்றின் உட்பிரிவுகள் யாவை? என்பவற்றைப் பற்றியும் கூறுகிறது. ஐந்தாம் சருக்கத்தில் அஷ்டகர்மத்தில் காணப்படும் வசியம் முதலானவற்றின் உட்பிரிவுகள் விளக்கப்படுகின்றன. அவ்வகையில் வராகி தெய்வத்தை அழைத்துச் செய்யப்படும் வராகித் தம்பனம், மயேசுர தெய்வத்தைக் கொண்டு செய்யும் மயே சுரபேதனம், சியாமளாதேவியை அழைத்துச் செய்யும் வித்துவேசணம், சவுந்திரியைப் பூசித்துச் செய்யும் மாரண வித்தை மற்றும் அஷ்டநாக பூசை, சிதம்பர பூசை, வாலைச் சக்கரம் முதலியன இதனுள் பேசப்படுகின்றன. ஆறாம் சருக்கத்தில் நவக்கிரக பூசை, வயிரவன் சக்கரம், அஞ்செழுத்து மந்திர மகிமை அதனைத் தியானிக்கும் முறை, பஞ்சபூத விளக்கம், வல்லபை தியானம் முதலியன பேசப்படுகின்றன. ஏழாம் சருக்கத்தில் வெடியுப்பு நீற்றின் குணம், அயச் செந்தூரம் சுத்திமுறை, இதைச் சுண்ணமாக்கும் முறை ஆகியன கூறப்படுகின்றன. காயகற்ப முறைகளைச் சிறப்பாகக் கூறும் இயலாக எட்டாம் சருக்கம் உள்ளது. செஞ்சாரைக்கற்பம், முப்புச்சுன்னம், முப்பு செந்தூரம் முதலியன இதனுள் கூறப்படுக்கின்றன. ஒன்பதாம் சருக்கம் வீரபத்திர தீட்சை, செந்தூரங்களில் திலதம் செய்யும் முறை, அகத்தியர் கூறிய உபதேசங்கள், அகத்தியர் தீட்சை முறைகள் ஆகியன இதனுள் கூறப் படுகின்றன.

4. —.

5. ஆதியந்த பூரணமாஞ் சுழியாய் நின்று
அமர்ந்த சுழிமுனை கணபதியே போற்றி
நாதிமறை யானயரனு மைக்குச் சொன்ன
ஞானகருக்குருவினிட ரவியே போற்றி
நீதிமதி ரெசகற்பூ ரகமாய் நின்ற
நிகழ்ந்தபதி பாச உபநிடதமே போற்றி
சாதிபல வுயிரெரும்பு சிவமே யான
சச்சுதா னந்த பரிபூரணம் போற்றி. 1

6. பார்ப்போர்க்கு நவமூலஞ் சருக்க மாச்சு
பாடினோம் அன்பதாஞ் சருக்கந் தன்னில்
ஆர்ப்போர்களா யிரந்தான் மவுன பீடம்
அருளினோம் தொளாயிரத்திரு பத்து நாலு
சேர்ப்போர்க ளிதின்கோர்வைச் செல்வத் தோர்கள்
சிவசிவா அகஷ்த்தியனுட செய்வாக் காலே
தேர்ப்போர்கள் ஒன்பதாஞ் சருக்க மாச்சு
செகசோதி சூட்சடா தார முற்றே. 1000

7. —.

*8.* மூலம். *9.* பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. *10.* இந்நூல் சித்த மருத்துவ முறைகளையும், யோக, ஞான முறைகளையும், அக்காலத்திய மாந்திரீக முறைகளையும் ஒருசேர அறிந்து கொள்ளும் வகையில் விரிவாகச் செய்திகளைத் தருவதாகக் காணப்படுகிறது. *11.* இல்லை.

IV. *1.* R. 199 (n), R. 932. *2.* சி.ம.மை.ஆ.நி. எண்கள் *419* c, *1081* a. *3.* இல்லை.

V. *1.* இல்லை. *2.* வே. கந்தசாமி முதலியார் (பதி.), அகத்தியர் ஞான காவியம் *1200*, இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடம், சென்னை, *1876*. *3.* இல்லை.

VI. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் ஞானம் *1000* என்ற இந்நூலுடன் அகத்தியர் தண்டகம் *100* என்ற நூலும் உள்ளது. 'அகத்தியர் *1000*' என்ற பெயரில் வேறு நூல்களாக, *1.* அகத்தியர் நாலுகாண்ட வைத்திய காவியம் *1000*, *2.* அகத்தியர் வாதகாவியம் *1000*, *3.* அகத்தியர் பூரண காவியம் *1000*, *4.* அகத்தியர் மந்திர காவியம் *1000*, *5.* அகத்தியர் வைத்திய காவியம் *1000* முதலிய நூல்கள் காணப்படுகின்றன.

# அகத்தியர் ஞானம் 1000

I. *1.* **223.** *2.* அ. R. 199 (n). ஆ. T.R. 183. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் ஞான காவியம் *1000*. ஆ. Akattiyar ñāṉakāviyam 1000. இ. அகஸ்தியர் ஞானகாவியம் ஆயிரம். *4.* —. *5.* —. *6.* காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன். *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை - 5. *9.* —. *10.* —.

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* நன்று. *4. 71. 5.* 31 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிதைவு. *12. 142;* இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *12* வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 1002* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* ஞானம், தியானம், மந்திரம் ஆகிய செய்திகளைக் கூறும் நூல். *2.* ஞானம் மற்றும் மந்திரம் *3.* அகத்தியர் வரிசை எண் *222* போன்றது.

4. கற்பூர வண்ணமான கரிமுகன் அடியைப் போற்றி
பொற்பூர ஆனைதொந்திப் புணர்முகச் செந்தூரம் போற்றி
சற்பொருள் வேதங்கூர்ந்த சங்கரர் புதல்வா போற்றி
அற்பனாம் சிறியேன் யுந்தன் ஐங்கரன் தாளே போற்றி.

5. ஆதியந்த பூரணமாஞ் சுழியாய் நின்று
அமர்ந்த சுழிமுனை கணபதியே போற்றி
நாதிமறை யானயரனு மைக்குச் சொன்ன
ஞானகருக்குருவினிட ரவியே போற்றி
நீதிமதி ரெசகற்பூ ரகமாய் நின்ற
நிகழ்ந்தபதி பாச உபநிடதமே போற்றி
சாதிபல வுயிரெரும்பு சிவமே யான
சச்சுதானந்த பரிபூரணம் போற்றி. 1

6. பார்ப்போர்க்கு நவமூலஞ் சருக்க மாச்சு
பாடினோம் அன்பதாஞ் சருக்கந் தன்னில்
ஆர்ப்போர்களா யிரந்தான் மவுன பீடம்
அருளினோம் தொளாயிரத்தரு பத்து நாலு

சேர்ப்போர்க ளிதின்கோர்வைச் செல்வத் தோர்கள்
சிவசிவா அகஷ்த்தியனுட செய்வாக் காலே
தேர்ப் போர்கள் ஒன்பதாஞ் சருக்க மாச்சு
செகசோதி சூட்சடா தார முற்றே. 1000

7. சொன்னவர் ஞானச் சிந்தை சுந்தர மைந்தா வுண்டு
இன்னமோர் வாரு னக்கு யியம்பிடா திதிலு ரைத்தேன்
கன்னயக் கபால மூர்த்தி கடுஞ்சின வாணி யன்பும்
நின்னர சாக வாழ்நி கழ்த்திய வளமாம் வாழ்வாய். 1002

*8.* மூலம். *9.* பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பாடபேதங்கள் காணப்படுகின்றன. *10.* அரன் உமைக்குக் கூற உமை அகத்தியர்க்குக் கூறியதாக இம் மருத்துவ மரபு கூறப்படுகிறது. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. *11.* சிவகுருனாதன் ரட்சிக்கவும். விரோதிகிருது வருடம் புரட்டாசி மாதம் *28*(ஆம்) தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதின அகஸ்திய சுவாமிகள் அருளிச் செய்த ஞானகாவியம் ஆயிரமும் எழுதி நிறவேறியது.

IV. *1.* R. 4205, R. 932. *2.* சி.ம.மை.ஆ.நி.எண்கள் 419c, 1081a. *3.* இல்லை.

V. *1.* இல்லை. *2.* வே. கந்தசாமி முதலியார் (பதி.), 'அகத்தியர் ஞான காவியம் *1000*,' இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடம், சென்னை, *1876*. *3.* இல்லை .

VI. இந்நூல் முதல் சருக்கம் *101* பாடல்களிலும், இரண்டாவது சருக்கம் *102* பாடல்களிலும், மூன்றாம் சருக்கம் *101* பாடல்களிலும், நான்காம் சருக்கம் *100* பாடல்களிலும், ஐந்தாம் சருக்கம் *100* பாடல்களிலும், இவ்வாறு சருக்கங்களுக்கு *100* பாடல்களுக்கு மேல் பாடப் பெற்றுள்ளது. ஆக மொத்தம் *924* பாடல்கள் உள்ளன. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் ஞானம் *1000* என்ற இந்நூலுடன் அகத்தியர் இரசமணிச் சூத்திரம் *14*, அகத்தியர் ஆறாதாரம் *8* ஆகிய நூல்களும் உள்ளன.

# அகத்தியர் ஞானம் 1000

I. 1. **224.** 2. அ. R. 932. ஆ. T.R. 752. இ. R.No. 5668. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞான காவியம் 1000. ஆ. Akattiyar ñāṉa kāviyam 1000. இ. அகஸ்தியர் ஞான காவியம் ஆயிரம். 4. —.5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ, சென்னை - 5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. நன்று. 4. 114. 5. 37 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறுசிதைவு. 12. 228; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 11 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை 17. 1054 பாடல்கள்.

ஆ. 1. 30 x 23 செ.மீ. 2. 363 பக்கங்கள். 3. பக்கத்திற்கு 24 வரிகள். 4. தெளிவான கையெழுத்து. 5. 19-7-1955 முதல் 11-9-1955 வரை. 6. R. வேங்கடராமானுஜன் & V. நாகலக்ஷ்மி. 7. R. சந்திரமௌலீஸ்வரன் R. கிருஷ்ணமாச்சாரி. 8. கி.பி. 1955-56 இல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III. 1. ஞானம், தியானம், மந்திரம் ஆகிய செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம் மற்றும் மந்திரம். 3. வரிசை எண் 222 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக அகஸ்திய சுவாமிகள் அருளிச் செய்த ஞான காவியம் ஆயிரமென்றறிக.

5. ஆதியந்த பூரணமாஞ் சுழியாய் நின்று
அமர்ந்த சுழிமுனை கணபதியே போற்றி
நாதிமறை யானயரனு மைக்குச் சொன்ன
ஞானகருக்குருவினிட ரவியே போற்றி
நீதிமதி ரெசகற்பூ ரகமாய் நின்ற
நிகழ்ந்தபதி பாச உபநிடதமே போற்றி
சாதிபல வுயிரெறும்பு சிவமே யான
சச்சுதானந்த பரிபூரணம் போற்றி. 1

6. பார்ப்போர்க்கு நவமூலஞ் சருக்க மாச்சு
பாடினோம் அன்பதாஞ் சருக்கந் தன்னில்
ஆர்ப்போர்களா யிரந்தான் மவுன பீடம்
அருளினோம் தொளாயிரத்திரு பத்து நாலு

சேர்ப்போர்க ளிதின்கோர்வைச் செல்வத் தோர்கள்
சிவசிவா அகஷ்த்தியனுட செய்வாக் காலே
தேர்ப்போர்கள் ஒன்பதாஞ் சருக்க மாச்சு
செகசோதி சூட்சடா தார முற்றே. 1000

7. தேவிசகாயம் பத்தாவது ... முடிந்தது முற்றும்.

8. மூலம். 9. அந்தாதியில் அமைந்துள்ளன. பாடபேதங்கள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் ஞானகாவியம் 1000 என்று பெயரிருந்தாலும் 1054 பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலைப் பாடியவர் / எழுதியவரின் ஈடுபாட்டை இம்மிகைப் பாடல்களிலிருந்து அறியலாம். 11. விகாரி வருஷம் ஆனிமாதம் 14 (ஆம் தேதி) சோமவாரம் நாள் காலம் உதையல் காலத்தில் ... முதலியாருக்குப் புட்டு .... காவியம் முடிந்தது முற்றும்.

IV. 1. R. 932, R. 4205. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலில் உரைநடைப்பகுதி வந்துள்ளது. இறுதியில் அட்டவணை இடம் பெற்றுள்ளது. உரைநடைப் பகுதியில் எண் வகை உதட்டு நோய்கள், காது நோய்கள், அவற்றுக்குத் தயிலங்கள், கண் நோய்கள், அவற்றுக்கான மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

## அகத்தியர் ஞானவுலா

I. 1. **225.** 2. அ. R. 150 (d). ஆ. T.R. 150. இ. R. No. 1025. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானவுலா. ஆ. Akattiyar ñāṉavulā. இ. அகஸ்தியர் ஞானவுலா. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு .2. தமிழ். 3. நன்று. 4. 17. 5. 23 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு .8. பிளைவுட். 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறுசிதைவு. இறுதி ஏடு பாதி இல்லை. 12. 34; ஆ. இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. கலி வெண்பா . 15. இல்லை. 16. முழுமை. 17. 20 பாடல்கள்.

ஆ. 1. 26 x 23 செ.மீ. 2. 20 பக்கங்கள். 3. பக்கத்திற்கு 20 வரிகள். 4. நல்ல கையெழுத்து. 5. —. 6. —. 7. —. 8. கி.பி. 1931-32 இல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III. 1. யோகம், ஞானம், புத்தி, சித்தி தொடர்பான செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் பெயரால் அமைந்த இந்நூல் ஞானமார்க்கத்தில் நிற்பதற்குரிய நெறிமுறைகளை வரன் முறைப்படுத்திக் கூறுகிறது. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், விசுத்தி, ஆஞ்ஞை எனப்படும் ஆறாதராங்களின் மூலம் புத்தியைச் செலுத்தி, ஞானம் பெறும் நிலைகளைக் கூறுகின்றது. நெஞ்சிடத்து எவ்விதம் ஞானம் பெறுதல் வேண்டும் எனக்கூறும் இந்நூலில் உலாவின் இலக்கணம் பெரிதும் சிதைந்து வந்துள்ளது.

4. ஹரிஓம் நன்றாக குருவேதுணை. அகஸ்தியர் ஞான வுலா.

5. பூரணமாம் ஞானப் புதையல் வெளியாகத்
தாரணியி லைம்புலனே தானாகுங் -காரணச்
சத்தி யுடலாகிச் சம்பு வயிராகி
யெத்துயிர்க்கு நிற்கு மிது.

ஞானம் புத்தி சித்தி

ஐந்துபுலனு மலரிருக்கு மாரிடமும்
எந்தவுயிர்க்கு மிருக்குங்கே - ளிந்த வழி

தப்பாது ஞானத் தடமாகு மஞ்செழுத்தா
வுப்பா லுலகமெல்லா மானதே - மெய்ப்பான

அங்கென் றொருசொல் லாணாச்சு ஒன்று வஸ்... தி
லிங்கிதமா யாண்பெண் ணிரண்டாச்சு — யெங்கு

மணிப்பூரம் பேச்சாச்சு வாரிந்த ஞா.ந்
துணிவாக வந்தநிலை தோற்றித் தினமனதில்.....

6. கட்டின வண்டமிதிற் கட்டாங் கலசமிட்டுக்
கிட்டுடனவேய் கிளிஞ்சி சுண்ணம் - கட்டியதோர்

கட்டிதனிலே திருகு கள்ளிப்பால் சாரணைவேர்
கெட்டியாய் பூநீளுலகி னடியே - திட்டெனவே

தீதனிலே வாட்டச் செயநீராம் வாள
துரிகைத் தேக்கிடச் சுத்தவெள்ளைச் சுண்ணாம்பாம்

தீதனிலே காய்ச்சி யண்டநீரிற் கவசமிடு கல்லாவ

வன்மாலேயுமே பழுக்கும் வாதமே ரதி ஞான
வுலாவுண்மையது நூல்காட்ட வெண்ணாது
நன்மைபெருஞ் சித்தருக்கு ஞானபர தேசிகனார்
தன்னிருதாள் முத்தி யிருநூறு முற்றும். 200

7. அகஸ்தியர் ஞானவுலா முற்றும்.

8. மூலம் 9. பாடல்கள் உலா அமைப்பில் அமைந்துள்ளன. ர-ற, ழ-ள வேறுபாடு இல்லாமலும், பேச்சு நடையிலும் அமைந்துள்ளது. 10. பாட்டுடைத் தலைவன் மீது ஏழு பருவத்துப் பெண்கள் (பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்) காதல் கொள்வதாக அமைத்துப் பாடும் சிற்றிலக்கிய வகையாக இந்நூல் கொள்ளப்படுகிறது. அவ்வகையில் சிவபெருமான் உலா வருவதை உருவக நிலையில் அமைத்துப் பாடிய சேரமான் பெருமாள் நாயனாரின் திருக்கைலாய ஞானவுலா தமிழ் இலக்கியத்தில் எழுந்தமுதல் உலாவாகக் காணப்படுகிறது. அம்மரபைப் பின்பற்றி அகத்தியர் ஞானவுலா என்ற இந்நூல் அமைவது குறிப்பிடத் தக்கது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. சி.ம.மை.ஆ.நி. 797 p. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரால் சிற்றிலக்கிய வகையில் அமைந்த அகத்தியர் பள்ளு 200, அகத்தியர் வைத்தியக் கும்மி, பிற நொண்டி நூல்கள் என்பன போன்று அகத்தியர் ஞானவுலா என்பதும் ஒன்றாகும். ஆயின் இலக்கிய உலா நூல்களில் அமையும் உலா இலக்கணம் சிதைந்து காணப்படுகிறது. மருத்துவ நூல்களுக்கு இலக்கியத் தரம் கிட்ட வேண்டுமென்ற காரணத்தால் இவ்வாறு பெயர்களை வைத்திருக்கலாம்.

இச்சுவடிக்கட்டில் உள்ள நூல்கள் பின்வருமாறு:

a. கலைஞானச் சுருக்கம்.

b. அகத்தியர் கருக்கிடைச் சூத்திரம் - 12.

c. அகத்தியர் யோகம் - 16.

த. 5592

# அகத்தியர் தண்டகம் 100

I. *1.* **226.** *2.* அ. R. 164( a). ஆ. T.R. 148. இ. —. ஈ. —.*3.* அ. அகத்தியர் தண்டகம். ஆ. Akattiyar tantakam. இ. அகஸ்தீசுவரர் தண்டகம். *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* சென்னை திருவல்லிக்கேணி காதிர் பைக் சாகிபிடமிருந்து *1914-15*ல் பெறப்பட்டது. *10.* கி.பி. *1914 - 15.*

II. அ. *1.* உட்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 8. 5.* 20 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* பிளைவுட். *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* நன்று. *12. 16* ; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. *13.* பக்கத்திற்கு *9* வரிகள். *14.* விருத்ததம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 103* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* இரசவாதத்திற்குரிய மருந்துகளை கூறுவது. *2.* இரசவாதம். *3.* அஷ்டகருமங்களான வசியம், மோகனம், தம்பனம், உச்சாடணம், ஆகர்ஷணம், வித்து வேஷணம், பேதனம் மாரணம் ஆகிய வற்றைச் செய்யும் முறைகள் பற்றியும் அவற்றிற்குத் தேவையான பொருட்கள் பற்றியும், திலதம் எனப்படும் பொட்டு, அஞ்சனம் செய்யும் முறைகள் பற்றியும் கூறுகின்றது. மேலும் யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது. துரிசி வாங்கும் முறை திலதம் போடும் முறை, வித்தைகள் செய்வதற்குரிய திலதம் மற்றும் அஞ்சனம், கரு ஆகியனவும் கூறப்படுகின்றன. மேலும் பெண் வசியம், ஆண்வசியம் போன்ற வசியப் படுத்துவதற்கான முறைகளும், உருமாற்றம் செய்யும் முறைகளும் இதனுள் கூறப்படுகின்றன. குட்டநோய்க்கு மருந்து. காமரூபியைப் பிடித்துக் குழவிக்கூட்டில் வைத்துக் கொன்று பாலில் பதமாக்கி எடுத்து மருந்து செய்தல், செத்தவனைப் பிழைக்க வைக்கும் வித்தை, அதற்குத் தேவையான மாந்திரீகப் பொருட்கள், ஆறு, கடல்களில் வாழும் நண்டு மூலம் கொண்டுவந்து நெய்யில் வறுத்து மை செய்யும் முறை, வெள்ளெருக்குப் பூக் கொண்டுவந்து தண்டக் கரு எடுக்கும் முறை, வெண் முட்டைக்கரு கொண்டுவந்து மாந்திரீகம் செய்யும் முறை போன்ற செய்திகள் விரிவாகப் பேசப்படுகின்றன.

4. அகஸ்த்தீசுவரர்.

5. அந்தணர் பாதம் போற்றி
யறிவுடன் வாழ்வோர்க் கெல்லாம்
சந்ததம் பூமி மீது
சாத்திய தெண்ட கந்தான்
யெந்தனார் பிள்ளை யெல்லாம்
யதுவறிந்துள்ளேகொண்டு
நந்தபின் பிறர்வில் லாதார்
பெரியவ ராகுந் தானே. 1

6. ஆனோன் சிவனே யடிதொழு தேற்றி
மானே பார்ப்பதி மக்களு மானோம் 102

வீணா யிருந்து விஞ்சுவர் கண்டாய்
மானே தண்டகம் நாடுமுறை முற்றே. 103

7. திருச்சித்தம்பலம் தேவிசகாயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் ஆடு 2 முன்னிலையில் அறிவுரை கூறும் பாங்கில் அமைந்துள்ளன. கேள்-கேளு, பூஜை - பூசை, பணிந்த - பனிந்த போன்ற நிலையில் எழுத்துக்கள் மாற்றம் அடைந்து காணப்படுகின்றன. 10. தண்டகம் என்ற பெயரில் அகத்தியர், இராமதேவர், கொங்கணர், திருமூலர், ஆகியோர் நூல்கள் இயற்றியுள்ளனர். அகத்தியர் தண்டகம் 100 என்ற இந்நூலானது அட்ட கர்மங்கள் பற்றியும் இரசவாதம் செய்யும் முறை பற்றியும், வசியம் பற்றியும் விளக்குகின்றது.

IV. 1. R. 255 (c), R. 278 (a), R. 4206, D. 1882, D. 1883, D. 2310. 2. சி.மா.மை.ஆ.நி.எண்கள் 420 l, 460 c, 751v, 178 f., 1351,0, 1088 a, 1112 c., 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. தாண்டக யாப்பை முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர் திருநாவுக்கரசர். இவருக்குத் தாண்டக வேந்தர் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. தேவாரத்தில் திருநெடுந்தாண்டகம் என்பது இவரால் பாடப்பட்டதாகும். இந்நூலில் சில விருத்தங்களுக்குப் பின் 2 சீர் அடிகள் இறுதி வரை வந்துள்ளளன.

இச்சுவடிக்கட்டுடன் பஞ்சபட்சி சாஸ்திரம் (R.No.164b.) என்ற நூலும் உள்ளது.

# அகத்தியர் தண்டகம் 100

I. 1. 227. 2. அ. R. 255 (c). ஆ. T.R. 239. இ. —. ஈ. —. 3.அ. அகத்தியர் தண்டகம். ஆ. Akattiyar tantakam. இ. அகஸ்தியர் பொதிகை சுவாமியார் தண்டகம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 10. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 20; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 103 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரிய மருந்துகளைச் சேர்ப்பதைப் பற்றி வகையைக் கூறுவது. 2. இரசவாதம் 3. வரிசை எண் 226 போன்றது.

4. அகஸ்தியர் பொதிகை சுவாமியார் தண்டகம்.

5. அந்தணர் பாதம் போற்றி
யறிவுடன் வாழ்வோர்க் கெல்லாம்
சந்ததம் பூமி மீது
சாத்திய தண்ட கந்தான்
யெந்தனா பிள்ளை யெல்லாம்
யதுவறிந் துள்ளே கொண்டு
நந்தபின் பிறவில் லாதார்
பெரியவ ராகுந் தானே. 1

6. ஆனோன் சிவனை அடிதொழு தேத்தி
மானே பார்வதி மக்களு மானோம் 102

வீணா யிருந்து விஞ்சுவர் கண்டாய்
மானே தண்டகம் நாடுமுறை முற்றே. 103

7. —.

8. மூலம். 9. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 164 (a), R. 278 (a), R. 4206, D. 1882, D. 1883, D. 2310. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 420 l, 460 c, 751 v, 178 f, 1351 o, 1888 a, 1112 c. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. தண்டகம் என்பது வட மொழியில் அமைந்த செய்யுள் வகையாகும். இது தாண்டகம் எனவும் வழங்கப்படும். சிற்றிலக்கிய வகையில் கும்மி, பிள்ளைத் தமிழ், வெண்பா, சதகம் போன்ற இலக்கிய வகைகள் மருத்துவ நூல்களின் பெயரிகளிலும் இடம்பெற்று வருவதைப் போன்று தண்டகம் என்ற 'பா' அமைப்பும் மருத்துவ நூல்களின் பெயர்களில் வழங்கி வந்துள்ளமை அறியப்படுகின்றது.

## அகத்தியர் தண்டகம் 100

I. 1. **228.** 2. அ. R. 278 (a). ஆ. T.R. 262. இ.—. ஈ.—. 3.அ. அகத்தியர் தண்டகம். ஆ. Akattiyar tantakam. இ. அகஸ்தியர் தண்டகம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. கி.பி.1915-16.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 7. 5. 25 x 4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 14; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 103 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரிய மருந்துகளை கூறுவது. 2. இரசவாதம். 3. வரிசை எண் 226 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்த்தியர் தண்டகம்.

5. அந்தணர் பாதம் போற்றி
யறிவுடன் வாழ்வோர்க் கெல்லாம்
சந்ததம் பூமி மீது
சாத்திய தண்ட கந்தான்
யெந்தனார் பிள்ளை யெல்லாம்
யதுவறிந் துள்ளே கொண்டு
நந்தபின் பிறவில் லாதார்
பெரியவ ராகுந் தானே. 1

6. ஆனோன் சிவனை அடிதொழு தேற்றி
மானே பார்வதி மக்களு மானோம் 102

வீணா யிருந்து விஞ்சுவர் கண்டாய்
மானே தண்டகம் நாடுமுறை முற்றே. 103

7. அகஸ்த்திய சுவாமி துணை. தண்டகம் சம்பூரணம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. IV. 1. R. 164 (a), R. 4206, D. 1882, D. 1883, D. 2310. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 420 l, 460 c, 751 v, 178 f, 1351 o, 1888 a, 1112 c. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. தாண்டக யாப்பு கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலேயே தமிழுக்கு அறிமுகப் படுத்தப்பட்டதாகும். ஏறத்தாழ இக்காலங்களில் அல்லது அதற்குப் பின்னால் வாழ்ந்த தமிழ்ச் சித்தர்கள் இத்தாண்டகப் பாடல்களைப் படித்து அதனை அடியொற்றி மருத்துவ நூல்களையும் தாண்டக யாப்பில் பாடியிருக்கலாம். அவ்வகையில் கொங்கணர், போகர், மச்சமுனி, உரோமரிசி, புலிப்பாணி போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். இச் சுவடிக்கட்டில் அகத்தியர் தண்டகம் என்ற இந்நூலுடன் அகத்தியர் சூத்திரம் 100 என்ற நூலும் உள்ளது.

## அகத்தியர் தண்டகம் 100

I. 1. **229.** 2. அ. R. 4206. ஆ. T.R. 1862. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தண்டகம் 100. ஆ. Akattiyar tantakam 100. இ. அகத்தியரருளிச் செய்த தண்டகம் நூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 23 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. நடு, இறுதி. 16. குறை. 17. 15 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரிய மருந்துகளைச் செய்யும் முறையைக் கூறும் நூல். 2. இரசவாதம். 3. வரிசை எண் 226 போன்றது.

4. —.

5. அந்தணர் பாதம் போத்தி
அறிவுடன் வாழ்வோர்க் கெல்லாம்
சந்ததம் பூமி தன்னில்
சாத்திய தண்ட கந்தான்
எந்தநற் பிள்ளை யெல்லாம்
இதுவறிந் துள்ளேகொண்டு
பைந்தமிழ் பிறவில் லாதார்
பெரிய வர்க்குந் தானே. 1

6. காலையில் நேரந் தன்னில்
கன்னிகை மார்ப முக்கை
ஏலவே வாங்கி வந்து
யதையொரு வுருவாய்ச் செய்து
மாலெனு மெழுத்தை யோதி
வசமாவா யென்று சொல்ல
பாலெனும் மொழியாள் தானும்
பச்சமும் உன்மீ தப்பா. 15

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 164 (a), R. 255 (c), R. 278 (a), D. 1882, D. 1883, D. 2310. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 420 l, 460 c, 751 v, 178 f, 1351 o, 1888 a, 1112 c. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் தண்டகம் என்ற நூல் (R. 278 (a)) கி.பி. 1968-69 இல் புத்தாக்ககத் தாள் சுவடியாகச் (R.8086) செய்யப்பட்டுள்ளது. 26.3.1968இல் N. நாராயணசாமி பிள்ளையால் கையெழுத்துப் படி எடுக்கப்பட்டுள்ளது. இத்தாள் சுவடியின் அளவு 30 x 24 செ.மீ; 22 பக்கங்களில் பக்கத்திற்கு 24 வரிகள் படி எடுக்கப் பெற்றுள்ளன. இந்நூலில் 103 பாடல்கள் உள. இச் சுவடிக்கட்டில் அகத்தியர் தண்டகம் 100 என்ற நூலுடன் அகத்தியர் ஞான காவியம் 1000 என்ற நூலும் உள்ளது.

# அகத்தியர் தண்டகம் 100

I. *1.* **230.** *2.* அ. D. 1882. ஆ. 742. இ. —. ஈ. —. *3.* அ. அகத்தியர் தண்டகம். ஆ. Akattiyar tantakam. இ. அகஸ்திய சாமியார் அருளிச் செய்த தண்டகம். *4.* —. *5.* —. *6.* —. *7.* —. *8.* அ.கீ.சு.நூ., சென்னை-5. *9.* —. *10.* —.

II. அ. *1.* தனிக்கட்டு. *2.* தமிழ். *3.* தெளிவு. *4. 11.* *5.* 29 x 3 செ.மீ. *6.* இரு துளைகள். *7.* கயிறு. *8.* மரக்கட்டை. *9.* பனை ஓலை. *10.* நரம்பில்லாதது. *11.* சிதைவு. *12. 22;* இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. *13.* பக்கத்திற்கு 5-6 வரிகள். *14.* விருத்தம். *15.* இல்லை. *16.* முழுமை. *17. 102* பாடல்கள்.

ஆ. —.

III. *1.* இரசவாதத்திற்குரிய மருந்துகளைக் கூறும் நூல். *2.* இரசவாதம். *3.* வரிசை எண் *226* போன்றது.

4. அந்தணர் பாதம் போற்றி
அறிவுடன் வாழ்வோர்க் கெல்லாம்
சந்ததம் பூமி மீதில்
சாத்திய தண்ட கந்தான்
யெந்தநற் பிள்ளை யெல்லாம்
யதுவறிந் துள்ளே கொண்டு
பைந்தமிழ்ப் பிறவில் லாதார்
பெரியவ ராகுந் தானே.

5. கரிமுகக் கடவுளைக் காரிகை மைந்தனை
விரிகடல் வாயனை வேதவே தாந்தனை
அரிதிரு மருகனை ஆதி சோதியைப்
பரிவுடன் தொழுவோர் பாதம் போற்றுவோம். 1

6. ஆனோம் சிவனை அடிதொழு தேத்தி
மானோபார்வதி மக்களு மானோம். 101
வீணாயிராதே விஞ்சுவர்க் கண்டாய்
நாமே தண்டகம் நாடுமுறை முற்றே. 102

7. குருபாதம் தேவி சகாயம் சரஸ்வதி அம்மன் துணை உண்டாகவும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ஓரளவு பிழைகள் நிறைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. பா வகைப்பிரிவான தண்டகம் என்பது தலைப்பில் வந்துள்ளது. 11. இல்லை.

IV. 1. D 1883, R.164 (a), D. 2310, R. 258 (e), R.278 (a), R.4206. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 420 l, 460 c, 751 v, 178 f, 1351 o, 1888 a, 1112 c. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் தண்டகம் எனும் வசிய, மந்திர சாலங்கள் பற்றிக் கூறுவதாகும். இதில் அஞ்சனம், வசியம், உருமாற்றம், மருந்தீடு அட்டகர்மம் முதலியவை சொல்லப்பட்டுள்ளன. வசியம் என்பது மந்திர தந்திரங்களால் வேறுபடும் என்றும், இதற்கான மை அல்லது அஞ்சனத்தைப் பலவித மூலிகைகள், கருக்கள் போன்றவற்றால் செய்து, அதை வெற்றிலையில் வைத்து உள்ளே உட்கொள்ளுமாறு செய்யலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. வசியம் பலவகைப்படும். அவை லோக வசியம், இராச வாசியம், பெண்ணை வசப்படுத்துவது, ஆணை வசப்படுத்துவது, விலங்குகளை வசப்படுத்துவது, சிறுதெய்வங்களையும், பூதங்களையும், பிசாசுகளையும் வசியப்படுத்துவது எனப் பலவகைப்படும்.

## அகத்தியர் தண்டகம் 100

I. 1. **231.** 2. அ. D.2310. ஆ. T.D. 901.இ. —. ஈ. —.3.அ. அகத்தியர் தண்டகம். ஆ. Akattiyar tantakam. இ. அகத்தீஷரருளிய தண்டகம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. கி.பி.1915-16.

II. அ. 1. உட்கட்டு . 2. தமிழ். 3. தெளிவு. 4. 15. 5. 21 x 3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனைஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 29; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு ஏழு வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 101 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரி ய மருந்துகளைக் கூறும் நூல். 2. இரசவாதம். 3. வரிசை எண் 226 போன்றது.

4. —.

5. அந்தணர் பாதம் போற்றி
அறிவுடன் வாழ்வோர்க் கெல்லாம்
சந்ததம் பூமி மீதில்
சாத்திய தண்ட கந்தான்
யெந்தநற் பிள்ளை யெல்லாம்
யதுவறிந் துள்ளே கொண்டு
பைந்தமிழ்ப் பிறவில் லாதார்
பெரியவ ராகுந் தானே. 1

6. ஆனோஞ் சிவனை அடிதொழு தேத்தி
மானே பார்வதி மக்களும் மானோம்
வீணே யிராத விஞ்சுவாய் கண்டாய்
நானே தண்டகம் நாடுமுறை முற்றே. 100

7. சிவாயநம. அகத்தியருளிய தண்டகம் நூறு முற்றும். சஷ்சுதானந்த குருவே துணை. தேவி சகாயம்.

8. மூலம். 9. பாட பேதங்கள், எழுத்துப் பிழைகள் உள்ளன. 10. அகத்தியர் பேரில் பாடப்பெற்றது. வசியம் தண்டகத்தில் ஒன்று. அட்டகர்மங்களில் ஒன்றுமாம். 11. இல்லை.

IV 1. R.104 (a), D 1882, R. 255 (e), D. 1883, R.238 (a), R.4206. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 420 l, 460 c, 751 v, 178 f, 1351 o, 1888 a, 1112 c. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. வசியத்தோடு தொடர்புடைய மோகனம் என்பதுவும், பிறரைக் கவர்தலுக்காகச் செய்யப்படுவது. இதற்கும் சில பறவைகளின் மூட்டைக்கருக்களுடன் மூலிகைகள் கொண்டு மை செய்யப் பயன்படுகின்றது. இவற்றைப் போன்று பேதனம், மாரணம் என்பவை வசியத்தோடு தொடர்புடையன ஆகும். தண்டகத்தில் வசியமும் வந்துள்ளது. சுந்தரானந்தர் பெயரிலும் தண்டகநூல் பாடப்பெற்றுள்ளது.

## அகத்தியர் தண்டகம் 100

1. **232.** 2. அ. D. 1883. ஆ. T.D. 623. இ. —. ஈ. —. 3.அ. அகத்தியர் தண்டகம் 100. ஆ. Akattiyar tantakam 100. இ. அகஸ்த்திய நாத ரருளிச் செய்தத் தண்டகம் நூறு. 4. —. 5. —. 6. ஆணைக்குளத்து தாவீது வாத்தியார். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பெக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. கி.பி. 1915-16.

II. அ. 1. உட்கட்டு .2. தமிழ். 3.தெளிவு. 4. 36 . 5. 27 x 3 செ.மீ.6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 72; இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 6, 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை . 17. 101 பாடல்கள்.

ஆ. 1. 30 x 25 செ.மீ. 2. 36 பக்கங்கள். 3. பக்கத்திற்கு 24 வரிகள். 4 தெளிவு. 5. 10-4-1956 முதல் 13.5.56 வரை. 6. M.R.சிவப்பிரகாசம் பிள்ளை, ந. வஜ்ரவேலு. 7. —. 8. கி.பி. 1956 இல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III. 1. இரசவாதத்திற்குரிய மருந்துகளைக் கூறும் நூல். 2. இரசவாதம். 3. வரிசை எண் 226 போன்றது.

4. குருபாதம் போற்றி.

5. ஆதிபரா பரமேரு தென்பு றத்திலே
அருள்பெருகும் பிரமகுரு பாதம் போத்தி
நீதியெனு மனோன்மணியின் கிருபை யாலே
நினைவாலே நினைவறிந்து நினைவைக் கண்டு
சோதியெனுங் கமலமல ரமுர்தங் கொண்டு
தும்பிமுகத் தைங்கரனைத் தொழுது போற்றிச்
சாதியெனுஞ் சராசரங்க டழைக்க வேதான்
சமரச மாய்த் தண்ட கத்தைச் சாற்றி னேனே. 1

6. முத்திகொண்டு மோனமதாய்த் தண்ட கத்தை
முக்காலும் மவுனமதாய்ப் பார்க்க வேணும்
புத்திகொண்டு பார்த்ததினால் பரத்தின் வீடு
பரிவாக அதனிலொரு தீபங் காணும்

புத்தியுடன் தீபமொளி வெளியி லேதான்
பூரணமாய் வாசிதனைப் பூட்டிப் பாரு
சித்தியுடன் தூபமதில் தீபஞ்சென்று
திடமாகுந் தேகமதில் முதலா முற்றே. 101

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பாட பேதங்கள், பிழைகள் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றுள்ளது. இந்நூலில் விருத்தப் பாக்களே பயின்று வந்துள்ளன. 11. 1855 ஜனவரி மாதம் 18 ஆம் தேதி அகஸ்த்திய நாதரருளிச் செய்த தண்டகம் நூறும் அயிதர் சாயபுக்கு ஆனைக்குளத்து தாவீது வாத்தியாரா லெழுதி குடுக்கப்பட்டது. சுக்கிரவாரம் 12 மணிக்கி யெழுதி முடிந்தது. முற்றும்.

IV 1. D 1882, R.164 (a), R.2552, D. 2310, R.278 (a), R. 4266. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 420 l, 460 c, 751 v, 178 f, 1351 o, 1888 a, 1112 c. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. வசியத்தோடு தொடர்புடைய மோகனம் என்பதுவும், பிறரைக் கவர்தலுக்காகச் செய்யப்படுவது. இதற்கும் சில பறவைகளின் முட்டைக்கருக்களுடன் மூலிகைகள் கொண்டு மை செய்யப் பயன்படுகின்றது. இவற்றைப் போன்று பேதனம், மாரணம் என்பவை வசியத்தோடு தொடர்புடையன ஆகும். தண்டகத்தில் வசியமும் வந்துள்ளது. சுந்தரானந்தர் பெயரிலும் தண்டகநூல் பாடப்பெற்றுள்ளது.

## அகத்தியர் தத்துவம் 315

1. **233.** 2. அ. R. 3721. ஆ. T.R. 1816. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தத்துவம் 315. ஆ. Akattiyar tattuvam 315. இ. அகஸ்த்திய சுவாமியார் தத்துவம். 4. —.5. —. 6. காளத்தி செட்டியார்குமாரன்சுப்பன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. காதிர் பைக் சாகிப், திருவல்லிக்கேணி, சென்னை. 10. 1915-16.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 82. 5. 29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 163; இரு பக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு எட்டு

வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 315 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகைத் தத்துவ விளக்கங்களையும், பலவகைக் கற்பங்கள் தயாரிக்கும் முறைகளையும் கூறும் நூல். 2. தத்துவம் மற்றும் மருத்துவம். 3. அகத்தியர் தத்துவம் என்னும் இந்நூல் 315 எண்சீர் விருத்தப்பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூல் மூன்று அதிகாரங்களில் நூறு நூறு பாடல் களாகப் பாடப்பெற்றுள்ளது. முதலாவது அதிகாரத்தில் (வாத காண்டம்) தசகாரியம் என்று சொல்லப்படும் தத்துவ ரூபம், தத்துவதரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், சிவதரிசனம், சிவயோகம் என்ற ஆன்மா அனுபவநிலைகளை அறிவதற்கான யோக நிலைகளையும், கருவூரார், கொங்கணர், சட்டைமுனி, சுந்தாரனந்தர், கமலமுனி, கோரக்கர், மச்சமுனி, திருமூலர், போகர், பிரமேந்திரர், நந்சீசர், பிரமமுனி, உரோமரிசி, இடைக்காடர் முதலிய சித்தர்களின் மறைப்பு தத்துவங் களையும் கூறுகிறது. ஞானத்தின் பெருமை, மெய்ஞ்ஞானிகள் பொய்யுரையார், மனதடக்கல்முதலான பொருள்களில் நூற்கருத்துக்கள் அமைகின்றன. சாரக்கட்டு, வொங்காரக்கட்டு, வெடியுப்புக் கட்டு, தங்கச் சுன்னம், நாக சுன்னம், கடுங்காரச் செயநீர் போன்ற பல மருந்து செய்முறைகள், மருந்து சுத்திசெய் முறைகள் ஆகிய வற்றையும் எடுத்துரைக்கின்றது. மேலும் பதினெண் சித்தர்கள் சொன்ன தத்துவத்தை வெறும்பொய் என்று நினைக்கமல் முறையாகப் படித்து அதன்படி நடந்தால் சிவயோகம் உடைய சித்தராவீர் என்றும் கூறுகிறது. இரண்டாவது அதிகாரத்தில் (தத்துவ காண்டம்) சைவம், பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வைரம் முதலிய ஆறு அகச்சமயங்களின் 36 தத்துவங்களையும் நியமம், வைசேடிகம், வைணவம், மீமாம்சம், காங்கியம், பிரபாகரம் முதலிய ஆறு புறச்சமயங்களையும் இவற்றின் தத்துவம் 24 பற்றியும் எடுத்துரைக்கின்றது. சமணம், புத்தம் இவைகளுக்குத் தத்துவம் 15, வேறானவர்களுக்குத் தத்துவம் 28, பொதுவான தத்துவம் 96 இவற்றை எல்லா மக்களும் பின்பற்றலாம் என்றும் கூறுகிறது. மூன்றாவது அதிகாரத்தில் (ஞானகாண்டம்) உலகத்தேற்றம், உட்கருவி-36 (பூதம்-5, ஞானயேந்திரியம்-5,

கன்மேந்திரியம்-5, சந்தாதி விசயம்-5, சிவதத்துவம்-5, வித்யாதத்துவம்-7, அந்தக் கரணம்- 2, ஆத்மதத்துவம்-2, ஆக 36), புறக்கருவி-60 (மண்ணின்கூறு-5, செல்கூறு-5, தேயுவின் கூறு-5, வாயுவின் கூறு-5, வான்கூறு-5, ஆக 25, நாடி-10, வாய்வு-10, மேலானவசனாதி-5, குணம்-3, ஆங்காரம்-3, வாக்கு-4 ஆக 60) ஆகியவை எடுத்துரைக்கப்படுகின்றன. மேலும் வல்லாரைக் கற்பம், மிளகுக் கற்பம், பஞ்சமூலிகைக் கற்பம், வேம்புக் கற்பம் முதலான மருந்து செய்முறை களையும், இரசவாத முறைகளையும் இந்நூல் கூறுகிறது.

4. அத்துவித ஞானமெனும் தத்துவ ஞானத்தைச்
சித்தி பெறுவார் அறிவார் பித்தர் அறியாரே...
தத்துவநூல் தன்னைஅறிந் தெத்தொழிலும் செய்வர்
தத்துவசம யங்கள்பல வித்தை அறிவாரே

5. தானென்ற ஞானத்தின் பெருமை கேளு
தலைகீழாய்ப் பஞ்சாக்கினி யிடையில் நின்று
கோனென்ற கோடிகற்பம் செய்தவப் பலமும்
கூறுசுவ மேதியாகம் நூறு கோடி
தேனென்ற செய்பலமும் மூவ ருக்கு
செகமதில்நூற் கற்பம்அர் சித்த பலமும்
ஊனென்ற கணம்ஞான நிஷைட்டசெய் பலத்துக்
கொவ்வாது யென்றுமறை உரைக்கும் கேளே. 1

6. உண்டபின்பு குளிகைசெய்து சாரணைக் கெல்லாம்
உறுதியாய் என்மகனே எல்லாம் தீர்த்து
விண்டபின்பு ஆயிரத்தெட் டண்டம் பார்த்து
விளையாடி பேரின்பம் தெரிசித் தேற்றி
கண்டபின்பு பொதிகைக்கென் னிடத்தே வந்து
காஷாயம் என்கையால் வாங்கிக் கட்டி
தொண்டரோடு கூடியேசு கத்தில் வாழ்வீர்
சுகமான காயசித்தி சுறுக்காய் முற்றே. 315

7. சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

8. மூலம் 9. அந்தாதி அமைப்பிலும் பாடபேதங்கள் மிகுந்தும் இந்நூல் விளங்குகிறது. 10. தத்துவம் என்பதற்கு உண்மை, அதிகாரம், சுபாவம், பலம், புத்தி, இயல்பான அமைப்பு, பொருள்களின் குணம், பரமாத்மா, வலிமை, இயற்கை எனப்

பல பொருள்கள் வழங்கப்படுகின்றன. ஆன்மாவின் தத்துவ நிலைகளை அறிவதற்காகச் சித்தர்களும் யோகிகளும் யோக முறைகளைக் கற்று, அவர்கள் பெற்ற ஞானத்தின் மூலம் உலக இயக்கம், உயிர்களின் வகைகள், அவற்றின் தன்மைகள் ஆகியவற்றைச் சமயங்களின்மேல் ஏற்றிக் கூறித் தத்துவங்களாக ஆக்கிக் கொண்டனர். மேலும் மனிதர்கள் நீண்ட நாட்கள் இம்மண்ணுலகில் நோயின்றி நல்லறிவு பெற்று வாழப் பலவகைக் கற்பங்கள், மருந்துகள் முதலியவற்றைச் செய்து பயன் படுத்தும் முறைகளையும் கூறிவந்தார்கள், இவையே அகத்தியர் ஞானம், அகத்தியர் தத்துவம் போன்ற நூல்கள் காட்டும் செய்திகளாகும். 11. விசுவாவசு வருடம் மார்கழி மாதம், 5 ம் தேதி காளத்தி செட்டியார் குமாரன் சுப்பன் எழுதிக்குடுத்த அகஸ்திய சுவாமியார் தத்துவம் எழுதி நிறவேறியது. தேவி சகாயம்.

IV. 1. R. 2265. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 1370, த.ச.ம.நூ. எண் 387 (b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'அகஸ்தியர் தீட்சாவிதி முதலியநூல்கள்' தாமரை நூலகம், சென்னை, 1993 3. இல்லை.

VI. தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இந்நூல் 'அகத்தியர் தத்துவம் - 308' (எண் 387 b) என்றபெயரிலும், சித்தமருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தில் 'அகத்தியர் தத்துவக் கொள்கை 306' என்ற பெயரிலும் காணப்படுகிறது.

## அகத்தியர் திரட்டு 60

1. 1. **234.** 2. அ. R. 2267. ஆ. T.R. 1285. இ. —.ஈ. —. 3. அ. அகத்தியர் திரட்டு 60. ஆ. Akattiyar tiraṭṭu 60. இ. அகஷ்த்தியர் சுவாமிகள் திரட்டு அறுவது. 4. —.5. —. 6. —. 7. —. 8. அ.கி.சு.நூ., சென்னை-5. 9. —.10. —.

II. ஆ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 25. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 50; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 65 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் விதமும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பலதிரட்டு அறுபது என்ற இந்நூலில் தங்க வெள்ளை, வங்கபற்பம், சூதபற்பம், சூத செந்தூரம், தாம்பிரபற்பம், தாளக பற்பம், நாகபற்பம், பவளபற்பம், கிளிஞ்சி பற்பம், அண்டச் சுண்ணம், துருசு சுண்ணம், இரச குளிகை, இரவி தெரிசனம், வெடியுப்பு, செயநீர், செயநீர்பாகம், இலிங்கக் கட்டு, கருவங்கக்கட்டு, கெந்திபற்பம், அயச் செம்பு, வழலை செந்தூரம், சூதகக்கட்டு, கள்ளிப் பால் தண்ணீர் பண்ண. மால தேவி பற்பம் பண்ண வகை, நாகக்கட்டு, தாளகபற்பம், வெள்ளீயம் நீர் வாங்க போன்ற மருந்துசெய் முறைகள் கூறப்படுகின்றன.

4. அகஷ்த்தியர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பலதிரட்டு அறுபது.

5. ஆதியந்த மில்லாத பொருளைப் போற்றி
அறையிறேன் புலத்தியனே அய்யா கேளு
வேதையுடன் வையித்தியமு மறவு நீக்கி
விள்ளாத கருவையெல்லாம் விளக்க மாக
னாதமென்ற பெருவெளியில் விந்துண் டாக்கி
நாலாறு ஆதார மதிலுண் டாக்கிச்
சாதியென்ற சாதியெல்லா மதிலுண் டாக்கித்
தத்துவங்க ளாகினின்று உணர்ந்து பாரே. 1

6. கொடுந்திட்ட கிளைக்கோவைக் கிழங்கு தானும்
கொடிதோரும் முள்ளங்கி கிழங்குப் போலே
கிடைக்குமதைத் துவைத்து நன்றாய்ச் சாறு வாங்கி
கீர்த்தியுள்ள வெள்ளீய முருக்கிச் சாய்ப்பாய்
நடத்திடுவாய் இருவத்து நூறு திரஞ்
சாயப்பா நல்லவெள்ளி(போலவே) நீரை வாங்கும்
புடந்தனிலே போகாது வெள்ளி மார்க்கம்
பொய்யல்ல சொன்னதெல்லாம் நிசந்தப் பாதே. 65

7. முடிந்தது முற்றும். குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் கலந்துள்ளன. ள-ழ,ர-ற வேறுபாடில்லாது அமைந்துள்ளது. 10. திரட்டு என்பது ஆசிரியர் தான் எடுத்துக் கொண்ட தலைப்புக்கு அரண் சேர்க்கும் வகையில் உள்ள கருத்துகள் அமைந்த பகுதிகளைப் பல நூல்களிலிருந்து திரட்டி நூல் செய்வதாகும். குறிப்பாகப் பாலவாகடத் திரட்டு என ஒரு நூலிருந்தால் அதில் அகத்தியர், போகர், மச்சமுனி போன்ற பல சித்தர்கள் எழுதிய நூல்களில் குழந்தை மருத்துவத்தை மட்டும் எடுத்துப் பொதுவாகப் பாலவாகடத் திரட்டு என்ற பெயரில் நூல் செய்வதாகும். பலதிரட்டு என ஒரு நூல் இருந்தால் மருத்துவம் தொடர்பான பல மருத்துவ முறைகளைப் பல நூல்களில் இருந்து திரட்டித் தருவதாகும். இவ்விரண்டாம் அடிப்படையில் அமைந்ததே திரட்டு 60 என்ற இந்நூலாகும். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. திரட்டு என்ற பெயர் அடிப்படையில் பலதிரட்டு, கொங்கணர் பலதிரட்டு, மச்சமுனி பலதிரட்டு, யூகிமுனிவர் பலதிரட்டு எனப் பல சித்தர்கள் பெயரிலும், பாலவாகடத் திரட்டு, வாகடத்திரட்டு, மாட்டுவாகடம், பிள்ளைப்பிணி வாகடம் எனப் பெயர்கள் இல்லாமல் பொருண்மை அடிப்படையிலும், திரட்டு 80, திரட்டு 100, என்று எண் அடிப்படையிலும் மருத்துவச் சுவடிகள் பல இடங்களில் காணப்படுகின்றன. மேலும் பக்தி இலக்கிய அடிப்படையில் அகத்தியர் தேவாரத் திரட்டு என்பதும் நோக்கத்தக்கது.

## அகத்தியர் திரட்டு 80

1. 1. **235.** 2. அ. R. 2497. ஆ. T.R. 1367. இ. —.ஈ.—. 3. அ. அகத்தியர் திரட்டு 80. ஆ. Akattiyar tiratt̤u 80. இ. அகஸ்தியர் நாயன் திரட்டெண்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கி.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. ஆ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு.4. 14. 5. .29 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 28; இரு

பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6-7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 81 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம்.. 3. அகத்தியர் நாயன் திரட்டு எண்பது என்ற இந்நூலில் வாதத்துக்குத் தயிலம் தயாரித்தலும், பித்தவகைக்கு அவிழ்தம் மற்றும் தயிலம், சிலேற்பன வியாதிக்கு நெய், முழுகுவதற்குத் தயிலம், மூல வியாதிக்குச் சூரணம், கிராணி வகைக்கு, தலைமுழுக எண்ணெய், காமாலை வகைக்கு மருந்து, கபால வியாதிக்குச் சூரணம், இரத்த தோசத்துக்கு அவிழ்தம், இரத்த பித்தம், வாந்தி, காசம் முதலியவற்றுக்குக் கசாயம், சன்னிக்கு அவிழ்தம், சுரஞ் சன்னி வகைக்கு வலிப்பு வகைக்கு இலேகியம், தூவாலை யெண்ணெய், கரப்பான் வகைக்கு எண்ணெய், அரையாப்பு, கண்டமாலை, பவுத்திரம், விப்புருதி, இவற்றுக்குத் தயிலம், நேத்திர வியாதிக்கு மாத்திரை, தலைமுழுக எண்ணெய், மாந்த வகைக்குக் கசாயம், கனவகைக்கு எண்ணெய். சில தோசத்துக்குத் தயிலம், கசாயம், சன்னி தோசத்துக்குக் கசாயம், கர்ப்பக் கோளுக்கு எண்ணெய், மேகனீர் வகைக்கு எண்ணெய், மேக வியாதிக்குத் தயிலம், புண், புரை சகலத்துக்கும் பொடி மருந்து, நீரடைப்புக்கு இரத்த பிரமியம், சலபிரமியம், பாண்டு, காமாலை வகைக்கு இலேகியம், சுரக்கசாயம் முதலிய மருந்து வகைகள் இந்நூலுள் சொல்லப் படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக அகஸ்தியர் நாயன் திரட்டெண்பது.

5. வாதந்தா னெண்பதாகும் வருகின்ற பக்க வாதம்
சீதமாம் நடுக்கு வாதஞ் சேர்ந்திடு முடக்குவாதம்
சூதமாஞ் சந்து வாதம் தோன்றிடு முகத்தில் வாதம்
பேதமாம் வாதம் தீரப் பெருத்ததோர் மருந்து கேளே. 1

6. அழவு ரை ணிடு நேரமுமே அவந்திலொறு மண்டல மதனில்
மிழவு செய்யுங் கைய்காலில் பெறுத்த மேகப் கருப்பூவை
பழகு குட்ட மேல்(த்)தடிப்பு பரங்கி கிரந்தி சூலை முதல்
விழவாய்ப் போகு மென்றெண்ணி விதித்த வோரெண்பது
முற்றே. 81

7. அகத்தியர் மகாமுனி திரட்டென்பது யெழுதி நிறைந்தது. முற்றும் பதினெண் பேர் கிருபை மேலும் உண்டாக. சர்குரு ரட்சிக்க தேவி சகாயம்.

8. மூலம். 9. பாடல்கள் எளிய நடையில் அமைந்துள்ளன. ர-ற, ள-ழ வேறுபாடில்லாது பேச்சு வழக்கில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இரசவாத மருந்துகளாலே மேகநோயைச் சார்ந்து இராமலோ வாதநோய் ஏற்பட்டால் அந்நோய் தீர ஒரு வேளைக்கு 30 கிறெயின் வெடியுப்பை 8 அவுன்ஸ் சுடுகஞ்சித் தண்ணீரிற் கலக்கி, இவ்விதம் மூன்று முறை கொடுக்க வேண்டும். (வைத்திய மூலகை அகராதி)

## அகத்தியர் தீட்சை விதி 200

1. 1. **236.** 2. அ. D. 1816. ஆ. T.D. 716. இ. —.ஈ. —.3. அ. அகத்தியர் தீட்சை விதி. ஆ. Akattiyar tīṭcai viti. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. ஆ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 55. 5. 25 x 2 செ.மீ. 6. இருதுளைகள். 7. கயிறு. 8. வர்ணக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிறு சிதைவு. 12. 110; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 201 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மானிடர்கள் நோயின்றி வாழ்வதற்குரிய சித்தர்கள் கூறிய கருத்துக்கள் அமைந்துள்ள நூல். 2. தீட்சை மருத்துவம் 3. இந்நூலில் முதலாவதாக வாசியோகம் எனும் சிவயோகம் கூறப்படுகின்றது. பன்னிரண்டு இராசிகளில் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் இந்த யோகப் பகுதியில் கூறப்படுகின்றன. மீனம், கன்னி, தனுசு, மேடம், துலா, சிம்மம் ஆகியவைப்பற்றி முதலில் கூறப்படுகின்றது. பின்பு இப் பன்னிரண்டு இராசிகளில் பிறந்தவர்களின் பலன்களை 27 நட்சத்திரங்களுடன்

இணைத்துப் பார்க்கும் நிலை கூறப்படுகிறது. கற்பம் உண்ணுவதற்கான காலம் அடுத்த நிலையில் கூறப்படுகிறது. துலாம் இராசிக்காரர்கள் சிவன் மந்திரங்களைச் செபிக்க குளிகைசித்தி, வாத சித்தி எல்லாம் பெற்று, பத்து விதத் தீட்சைகள் பெற்ற சிவயோகி யாவார்கள். கன்னிமுதல் மீனத்தோர்கள் கொள்கையில் வணிகரைப் போல் கூர்ந்த புத்தி உள்ளவர்கள்; வாசி யோகத்தில் சிறந்து விளங்குவார்கள். தேவியின் பூசையில் அதிக நாட்டம் இல்லாத இவர்கள் மயக்கம் இல்லாமல் காயசித்தி செய்தால் பலன் கிடைக்கும் என்று இந்நூல் கூறுகிறது. தனுசு இராசியில் பிறந்தவர்கள் தாயைப் போற்றுவார்கள். பலவகைச் சித்திகளைக் கைக்கொள்வார்கள். குருவை வணங்குவார்கள். நல்ல சாத்திரங்கள் பல தேடி மக்களுக்குப் போதிக்கும் குணம் நிறைந்தவர்களாக இருப்பார்கள். மேற்கூறிய இராசிகள் அல்லாத 7 இராசிகளில் பிறந்தவர்கள் வெறும் வீண் பேச்சு மட்டும் பேசுவார்கள். அவர்களுக்கு எதுவும் கிட்டாது. எனவே அவர்கள் இதைச் செய்ய இயலாநிலை அடைகின்றார்கள் என்றும் நூலாசிரியர் கூறுகிறார். குணங்களை அறிய செவ்வாய், புதன், வியாழன், திங்கள் ஆகிய நாட்களில் கற்பங்கள் சாப்பிடலாம் என்றும் அவ்வாறு கற்பம் உண்ணும் போது 10 வித தீட்சைகளைக் காதில் கேட்கவேண்டும் என்றும், முடியாவிட்டால் 5 வித தீட்சைகளையாவது கேட்க வேண்டும் என்றும், எதுவும் கேட்காவிட்டால் கற்பம் உண்டபயன் கிட்டாது என்றும் இந்நூல் கூறுகிறது. இவ்வாறு கற்பம் உண்டு உடலைத் தூய்மை செய்த பிறகு பிராணாயாமம் செய்ய வேண்டும் என்றும், இதைச் செய்தால் இறவாநிலை பெறலாம் என்றும், இதில் மிகவுயர்ந்த நிலை யோகமார்க்கமாகிய வாசியோகம் தான் என்றும், இதைச் செய்தால் இவ்வுலகத்தில் சித்த நிலை பெறலாம் என்றும் கூறி, பிராணாயாமம் செய்யும் முறையையும் கூறுகிறது. பிராணாயாமம் என்பது சுவாசப் பயிற்சியாகும். உள்ளே இருக்கும் சுவாசத்தை உள்ளுக்கு நிறுத்துதல் வெளியிடுதல் ஆகிய காற்று (சுவாச) நட மாட்டத்தை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு ஒழுங்கு முறைப்படுத்தும் பயிற்சியே பிராணாயாமம் என்கிறது. சுவாசத்தை உள்ளுக்கு இழுத்தல் பூரகம் என்றும், வெளியிடும் சுவாசத்தை இரேசகம் என்றும், உள்ளுக்கு நிறுத்தி

வைக்கப்படும் சுவாசம் கும்பகம் என்றும் கூறப்படுகின்றன. பிராணாயமம் செய்யும் போது வயிறு காலியாக இருக்க வேண்டும். இடதுநாசித்துவார சுவாசத்துக்கு இடகலை அல்லது சந்திரகலை என்றும், வலது நாசித் துவார சுவாசத்துக்குப் பிங்கலை அல்லது சூரிய கலை என்றும், உள்ளுக்குச் சுவாசத்தை நிறுத்திச் செய்யும் போது நினைவினைச் சுழிமுனையில் நிறுத்த வேண்டுமென்கிறது. அடுத்த நிலையில் காந்த செந்தூரம் செய்யும் முறையும் அவற்றை அயச் செந்தூரம் செய்யும் முறையும் அவற்றை உட்கொள்ளும் முறையும் கூறப்படுகின்றன. நாற்பத்து முக்கோண சக்கரத்தின் விதி முறைகள் தொடர்ந்து கூறப்படுகின்றன. வாசியை வசியம் பண்ணுவதற்கான நிலைகள், சாப நிவர்த்தி, பராபரை தீட்சை, வாலை தீட்சை, புவனை தீட்சை, சாமளை தீட்சை, சுப்பிரமணியர் தீட்சை, சிவ தீட்சை, சக்தி தீட்சை முதலான தீட்சை முறைகளும் குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் பலகாரங்கள், பால், பழம், மாமிசம், தேன், நெய் முதலியன வைத்துப் படைத்து, தங்கள் சாபத்தை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. முதண்ட இலேகியம் செய்யும் முறையும் செய்த இலேகியத்தை மவுன சக்திப் பூசையில் வைத்து வழிபட்டு, காலை மாலை இரு வேளை சாப்பிட்டுப் பிராணாயம் செய்து வந்தால் தூய்மையான யோகசித்தி கிடைக்கும் என்றும் இந்நூல் கூறுகிறது. இறுதியாக வழலை மார்க்கம் என்னும் முப்பு செய்யும் முறையுடன் நூல் முற்றுப் பெறுகிறது.

4. —.

5. வானைத் தாவிய பொதிகை
மகத்தான ரிஷியுடைய வாக்கு நேர்மை
பானைத் தாவிய பூசை
பரிவான சிவயோகப் பண்போர் கேளு
மீனைத் தாவிய ராசி
விளங்கி நின்ற கன்னிமுதல் வில்லு மேஷஞ்
சேனைத் தாவிய துலாத்தின்
சென்மராசிக் கருவைச் செப்பி னேனே. 1

6. பணிமாறுங் காலத்தே மணியி னோசை
பாங்கான செகண்டி னாத வோசை
பணிமாறுங் காலத்தே மவுன தோத்திரம்
பத்தியுறு வாலை கையில் லேகியத்தைச் சிவந்து

பணிமாறுங் காலத்தே சகல சித்தும்
பரிவாகத் தாவென்று கையில் வாங்கிப்
பணிமாறுங் காலத்தே பணிந்து தெண்டம்
பண்ணுவாய் பூசைவிதி தீட்சை யாமே. 201

7. குமரன் துணை .

8. மூலம். 9. பிழைகள் மலிந்த நடை; பாடபேதங்கள் உண்டு. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றது. தீட்டை, தீட்சை, தீட்சா எனவும் அழைக்கப் பெறும். 201 ஆம் பாட்டு யமக வகையில் பாடப்பெற்றுள்ளது. 11. பிலவங்க வருசம் ஆடி மாதம் 23 ஆம் தேதி அகத்தியர் தீட்சைவிதி எழுதி முகிந்தது. முற்றும்.

IV. 1. D.1817, D. 1818, D. 1884, D. 1885, D. 1886. 2. உ.த.நி.எண் 352:585. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலுடன் D. 1887, D. 1888, D. 1889 எண்ணிட்ட நூல்களும் உள்ளன. தீட்சைகள் பத்துவகை: 1. சக்தி தீட்சை 2. சிவதீட்சை 3. வாலை தீட்சை 4. சரியை தீட்சை 5. கிரியை தீட்சை 6. யோக்தீட்சை 7. ஞான தீட்சை 8. நவக்கிரக தீட்சை 9. உலோக தீட்சை 10. சித்தர்தீட்சை என்பன. இவை மானிடர்க்குரியன.

